ஏழாவது
இதழ்
2009



ISSN 1391 - 9156

சமூக
பண்பாட்டு
விசாரணை

# பனுவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக, பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவன அங்கத்தவர்களும், பட்ஹித மற்றும் பனுவல் தொகுப்பாசிரியர்கள் குழுவும்:

**தா.சனாதனன்.**
*பிரதான தொகுப்பாசிரியர் - பனுவல் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*

**சசங்க பெரேரா.**
*பிரதான தொகுப்பாசிரியர் - பட்ஹித (கொழும்புப் பல்கலைக்கழகம்)*

**ஆனந்த திஸ்ஸ குமார**
*(கொழும்புப் பல்கலைக்கழகம்)*

**ரமணி ஜயதிலக**
*(கொழும்புப் பல்கலைக்கழகம்)*

**இந்திகா புலன்குலம**
*(நீதி மற்றும் சமூக நிதியம்)*

**அசோக டீ சொயிசா**
*(களனிப் பல்கலைக்கழகம்)*

**குமுது குசும் குமார**
*(கொழும்புப் பல்கலைக்கழகம்)*

**நலின் சுவாரிஸ்**
*(சுயாதீன எழுத்தாளர்)*

**ரஞ்சித் பெரேரா**
*(சமூக விஞ்ஞானிகள் சங்கம்)*

**மொழி ஆசிரியர்**
**க.அருந்தாகரன்**
*(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*

**உதவி**
**சாமிநாதன் விமல்**
*(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*

பனுவல், சமூக பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனத்தால் வருடந்தோறும் வெளியிடப்படுகிறது. இது தீர்த்த சர்வதேசக் கலைஞர்களின் கூட்டிணைப்பின் வெளியீட்டுச் செயற்பாட்டின் ஒரு பகுதியாகும்.

**நிதி அனுசரணை : ஹீவோஸ் நிறுவனம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனுவல்

சமூக
பண்பாட்டு
விசாரணை

ஏழாவது இதழ்
2009

சமூக பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான
கொழும்பு நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை: இலங்கை ரூபா 300/-

© கட்டுரைத் தொகுதி ஒன்று என்ற வகையில் அனைத்து உரிமைகளும் சமூக பண்பாட்டு விசாரணைக்கான கூட்டிணைப்பைச் சார்ந்தது. 2009.

© சகல மூலக் கட்டுரைகளினதும் உரிமை அந்தந்தக் கட்டுரைகளின் மூல ஆசிரியர்களுடையதாகும். 2009.

© சகல மொழிபெயர்ப்புகளினதும் உரிமை மொழிபெயர்ப்பாளர் களுடையதாகும். 2009.

வெளியீட்டு உரிமைகள் தொடர்பான சட்டரீதியான நிலைமைகள், கருத்துகளின் பரிமாற்றத்துக்கும், உரையாடலுக்கும் தடைகள், இடையூறுகள் ஏற்படக் காரணமாகலாம். எனவே, வெளியீட்டுரிமை தொடர்பான கருத்தியல் ரீதியான நம்பிக்கையொன்று சமூக பண்பாட்டு விசாரணைக்கான கூட்டிணைப்பிடமில்லை. எனவே, இதில் உள்ளடக்கப்படும் எந்தவொரு கட்டுரையையும் கலந்துரை யாடலுக்கு எந்த முறையிலும் பயன்படுத்த அனுமதி உண்டு.

**விற்பனை உரிமை :**

குமரன் புத்தக இல்லம்,
361, 1/2 டாம் வீதி,
கொழும்பு -12.
தொ.பே.இல: 011 2421388
மி.அஞ்சல்: kumph@sltnet.lk

03, மெய்கை விநாயகர் தெரு,
குமரன் காலனி,
வடபழனி,
சென்னை 600026.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


**நுழைவாயில்** 01

பனுவல் ஆசிரியர் குழு

**யாழ்ப்பாணத்தில் சாதியம்** 06

மைக்கல் பாங்ஸ்

தமிழில்: சாமிநாதன் விமல்

தா. சனாதனன்

**யாழ்ப்பாணச் சமூகத்தின் புலப்பெயர்வு, பணவருவாய் மற்றும் சாதி, வகுப்பு, மத அடையாளங்களின் இயங்குநிலைகள்** 28

பரம்சோதி தங்கேஸ்

**இடைக்காலத் தமிழகத்தில் கைவினைஞர்களின் சமூக, பொருளாதார, வாழ்க்கை: ஒரு வரலாற்றுப் பார்வை** 61

விஜயா இராமசாமி

**சிங்கள சாதியத்தின் இயல்பு** 77

பிறைஸ் ரயன்

தமிழில் : சாமிநாதன் விமல்

க.அருந்தாகரன்

**பனுவல் நூல் திறனாய்வு** 100

கலகக் குரலில் கரைந்த தேசம் எனும் மதிப்பீடு

– இரா.திருநாவுக்கரசு

**கலைச் சொற்கள்** 109



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில்

**பனுவல் ஆசிரியர் குழு**

சமகால தென்னாசியப் பண்பாடு பற்றிய விசாரணையில் பிற சமூக நிறுவனங்களைப் போலவே சாதியத்திற்கும் தலையாய இடமுண்டு. தென்னாசியாவில் சாதியம் பற்றிய கருத்தாடலானது பொதுவாகச் "சுத்தம்" "அசுத்தம்" என்ற இந்துப் பாகுபாட்டினடிப்படையில் நோக்கப்பட்டு வருகிறது. எனினும் இந்திய துணைக் கண்டத்தினுள்ளும், இந்து மதத்தினுள்ளும் காணப்படும் பிரதேச ரீதியான மற்றும் காலரீதியான தெளிவான பல விலகல்கள் பல ஆய்வாளர்களால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இலங்கையில் தமிழ், சிங்கள மொழிபேசும் மக்களிடம் நிலவும் சாதிமுறைமையும் இவ்வாறு இந்திய/இந்து பொது முறைமையில் இருந்து விலகல்களைக் காட்டும் அதேவேளை நிலவுடைமை சம்பந்தப்பட்ட ஒரு கட்டமைப்பாக எடுத்துக் காட்டப்படுகிறது.

ஐரோப்பிய காலனித்துவ காலகட்டத்தின் முன், இந்தியத் துணைக்கண்டம் மற்றும் இலங்கைத் தீவிற்குமிடையே நிகழ்ந்த பல்வேறுபட்ட குடிப்பெயர்வுகள் ஒருவகை யில் இந்தச் சாதிச் சட்டகத்தை வடிவமைத்துப் பல புதிய அடுக்குகளை உருவாக்கி, சில பண்பு களை வலிமையாக்கியும் சிலவற்றை மெலினப்படுத்தியும் வந்துள்ளதாக எடுத்துக் காட்டப்படு கிறது. காலனிய காலகட்டத்தில் நிகழ்ந்த குடித்தொகைக் கணக்கெடுப்புகள், பட்டியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தல்கள் அடையாளங்களின் காண்பிய ரீதியான ஆவணப்படுத்தல்கள் இன, மத அடையாளங்களைப் போலவே சாதி அடையாளத்தையும் அதன் முன்னைய திரவத் தன்மையிலிருந்து திண்ம நிலைக்கு மாற்றியுள்ளன. அந்தவகையில் காலனியத் தலை யீடானது சாதிய பிரக்ஞையை மீள்வடிவமைப்புச் செய்தது என்பதுடன் தொடர்ந்து அதிகாரத் திற்கு வந்த உள்ளூர் அரசுகளின் ஆட்சி – நடைமுறைகளில் அவை பகுதியாக்கப்பட்டன.

எனவே நவீன சாதி அடையாளம் என்பது அரச ஆவணங்கள், தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கிடையிலான ஊடாட்டத்திலிருந்து தோன்றுவதாக வாதிடப்படுகிறது. சாதிச் சான்றுப் பத்திரம் வழங்கும் முறையும், சாதி ரீதியான இட ஒதுக்கீடும் ஒருவகையில் சுதந்திர இந்தியாவில் சாதிக்கு சட்டபூர்வமான அந்தஸ்தை வழங்கியுள்ளது. இலங்கையைப் பொறுத்த வரையில் அரச நிர்வாக நடைமுறைகளில் இனம் அல்லது மதம் பெற்றிருந்த இடத்தினைச் சாதி பெற்றிருக்கவில்லை. எனினும் சிங்கள மக்கள் தமது பெயர்களுடன் சாதிப் பெயர்களை இணைத்துக் குறிப்பிடும் மரபானது பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகளில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய ஆவணங்களிலிருந்து சாதியடையாளங்களை நீக்குதல் என்பது சிங்களச்சமூகத்தின் இளையதலைமுறையினரிடையே சாதாரணமாக நிகழ்ந்து வருகிறது. ஆவணங்களின் இடையீடு இல்லாத நிலையில் சாதி அடையாளம் என்பது பிற வகிபாகங்களிலும், செயற்பாடுகள் மற்றும் கடப்பாடுகளிலும், கட்டுப்பாடுகளிலும் நடத்தைகளிலும் குறியீடுகளிலும் தங்கியுள்ளது. இதனால்தான் இந்த அடையாளங்கள் கிராமப் புறத்திலும், நகரப் புறத்திலும் வேறுபட்ட அர்த்தங்களைப் பொதுநிலையில் தருவதாக வாதிடமுடியும்.

காலனியக் கல்வியும், கிறிஸ்தவ மதமும், புதிய தொழில் வாய்ப்புகளும் சாதியச் சமூகத்தில் சமத்துவத்திற்குப் பதிலாகப் பாகுபாடுகளை மேலும் சிக்கலாக்கியுள்ளன. உயர் சாதிகளுக்கு அனுகூலமாக இருந்த சமூக, பொருளாதார நிலைபரங்களும், அவர்கள் 50%க்கும் மேலாகக் காணப்பட்டதும் இம்மாற்றங்களினூடு அவர்கள் அந்தஸ்து நிலையில் உயர வழிவகுத்துள்ளது. இதனால் நவீனத்துவத்தால் ஏற்படுவதாக இருந்த கிடைநிலையான வளர்ச்சிக்குப் பதிலாகச் செங்குத்தான வளர்ச்சியே ஏற்பட்டது. இதில் இலங்கையைப் பொறுத்தமட்டில் கரவா சாதியின் மேல்நோக்கிய அசைவியக்கம் புறநடைகளாகும். நவீனத்து வத்தின் கிடையாக்கத்திற்கும் உள்ளூர் பண்பாட்டு தகவமைத்தல் கோலத்தினால் விளைந்த செங்குத்தாக்கமும் உருவாக்கிய இழுவையின் அல்லது முறிவின் பின்னணியில்தான் சாதிக் கட்டுப்பாடு இறுக்கங்கள் அதிகமாக இருந்த யாழ்ப்பாணத்திலும் தொடர்ச்சியான சாதி எதிர்ப்புப் போராட்டங்கள் வலுப்பெற்றன.

இலங்கையில் 1980களில் வலுப்பெற்ற இன முரண்பாட்டினாலும் திறந்த பொருளாதாரம், இலவசக் கல்வி, இலவச சுகாதார சேவை மற்றும் அரசினால் அனுசரணை வழங்கப்பட்ட பிற சமூக நலத் திட்டங்கள் தாழ்த்தப்பட்ட சமூகங்களின் நிலைமாற்றத்தில் குறிப்பிட்ட அளவு செல்வாக்குச் செலுத்தி இருப்பதை இன்று உணர முடிகிறது. எனினும் இவை பொருளாதார ரீதியாக நலிவுற்றோரை இலக்காகக் கொண்டவையே ஒழிய சாதியை அடிப்படையாகக் கொண்டவையல்ல.

தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தமட்டில் நாட்டுக்குள்ளும் நாட்டுக்கு வெளியேயும் நிகழ்ந்த தொடரான புலப்பெயர்வுகளும், பாரம்பரிய ஊர்கள் இராணுவ முன்னெடுப்புகளால் முற்றாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடுங்கப்பட்டதும், பாரம்பரிய குடித்தொகையிலும், குடிப்பரம்பலிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. ஊருக்கு அடுத்த நிலையில் இருந்த குறிச்சிகள், வட்டாரங்கள் மற்றும் சொந்தக்காரச் சாதிகளின் இடவமைவு ரீதியான குழப்பம் அல்லது ஒன்று கலத்தல் பொதுநிலையின் முன்னைய சாதிய வாழ்க்கை தொடரப்பட முடியாத ஒன்றாக ஆக்கியுள்ளன. பெருமளவு மேற்சாதியினரின் வெளிநாடுகளை நோக்கிய புலப்பெயர்வு உருவாக்கிய வெற்றிடத்தை நிரப்புவதற்காக அடுத்தநிலையில் உள்ள சாதியினர் போட்டி போட்டுக் கொண்டுள்ளனர். அதேவேளை சிங்கள, பௌத்த ஆதிக்கத்திற்கு எதிராக எழுந்த தமிழ்த் தேசியவாதப் போராட்டத்தில் தமிழ் இன அடையாளம் முன்நிறுத்தப்பட சாதிய அடையாளமும் மற்றைய அடையாளங்களுடன் பின்னுக்குத் தள்ளப்பட்டது. இந்தப் பின்னணியில் பொது நிலையில் சாதியை அனுஷ்டித்தல் என்பது பிரச்சினைக்குரியதொன்றாகவே பார்க்கப்பட்டது. அத்துடன் இக்காலத்தில் வலுப்பெற்றிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் குடிமைத் தொழிலை அதிகாரபூர்வமாகத் தடை செய்தனர். இந்த மாற்றங்கள் சாதியை வெளித்தெரியாத ஒரு நிலைக்கு மாற்றியுள்ளது என்றாலும் சாதியை இல்லாதொழிக்கவில்லை. சாதி, திருமணம் போன்ற அந்தரங்கமான இடங்களில் மிகவும் வலிமையுடன் ஒரு தீர்ப்புக் காரணி யாகத் தொடர்ந்து இருப்புச் செய்கின்றது. எனினும் கடந்த முப்பதாண்டு கால சமூக, பொருளாதார மாற்றங்கள் அடுத்தடுத்த சாதியினருக்கிடையில் திருமண உறவு வைத்துக் கொள்ளும் நிர்ப்பந்தங்களையும் உருவாக்கியுள்ளது. இதனடிப்படையில் சில பாரிய சாதிகள் (mega caste) உருவாகியுள்ளதாகப் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவதானித்துள்ளார்.

இன்று, சாதி புலம்பெயர் சூழலிலும் நடுகை செய்யப்பட்டுள்ளது. முதல் தலைமுறையினரிடம் பெறும் முக்கியத்துவத்தை அது இரண்டாம், மூன்றாம் தலைமுறைப் புலம்பெயர் தமிழரிடமும் பெறுமா? என்பது எம்முன்னுள்ள கேள்வியாகும். இது பற்றிய குறிப்பிடத்தக்க சில ஆய்வுகள் புலம்பெயர் நாடுகளில் நடைபெற்று வருகின்றன.

உள்நாட்டில் ஆதிக்க சாதி அங்கத்துவர்களின் எண்ணிக்கைக் குறைவும், உள்நாட்டி லும், வெளிநாட் டிலும் கீழ்நிலைப்படுத்தப்பட சாதியினருக்குக் கிடைத்துவரும் பொருளாதார வளமும், கல்வியும் குலத்தொழிலை இல்லாதொழித்ததுள்ளது அல்லது பணத்திற்காக வழங்கப்படும் ஒரு சேவையாக மாற்றியுள்ளது. ஆதிக்க சாதிகள் முன்னைய பொருளாதார, சமூகப் பிணைப்புகளையும் முன்னுரிமையையும் இழந்துள்ளதால் அவர்கள் தமது நிலையைத் தக்கவைக்க ஆற்றிவந்த வகிபாகங்களும், கடப்பாடுகளும் கைவிடப்பட்டுள்ளன. அதேவேளை அரச மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பொருளாதார உதவிகளும், புதிய தொழில் வாய்ப்பு களும் பிற்படுத்தப்பட்ட சாதியினரை ஆதிக்க சாதிகளின் பிடியில் இருந்து விலகி இயங்க வழியேற் படுத்தியுள்ளன. மேலும் இந்தச் சுதந்திரமானது அவர்களின் பண்பாட்டிலும் வெளிப்படத் தொடங்கியுள்ளது. தமது சாதிசார் தெய்வ வழிபாடுகள், சடங்குகள், கலை வெளிப்பாடுகள் என்பவற்றைக் கைவிட்டு, ஆதிக்க சாதிகளினால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவற்றை தமதாக வலிந்து தழுவிக் கொள்ளும் போக்கு இதனால் முனைப்புப் பெற்றுள்ளது. தமது கோயில்களை ஆகம மயமாக்கல், உயர்சாதியினரின் கோயில்களைப்போல வடிவமைத்துக் கொள்ளல், விரதங்களின் அனுஷ்டிப்பு, திருவிழாக் களின் ஒழுங்கமைப்பு என்பவற்றில் கடும் பிரயத்தனங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. இதைப்போலவே திருமண மற்றும் சாவுவீட்டுச் சடங்குகளிலும் தகவுபடுத்தல்கள் நிகழ்கின்றன. இந்த மாற்றங்கள் சாதியைப் பெயரினாலோ, பண்பாட்டு அடையாளத்தி னாலோ அல்லது தொழிலினாலோ மட்டும் வேறு பிரித்தறிய முடியாத ஒன்றாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றியுள்ளன. இன்று தாழ்த்தப்பட்ட சமூகங்களினாலான ஒரு மத்திய தர வர்க்கம் வலிமை யடைந்து வருவது கண்கூடு. இது தனது சாதி அடையாளங்களை மேற்சாதியினரின் அடை யாளங்களாக மாற்றுவதால், மேற்சாதி அடையாளங்கள் என்று கூறப்பட்டவை வர்க்க அடையாளங்களாக மாறியுள்ளன. இவ்வாறு வர்க்க அடையாளத்தினுள் வரமுடியாத சில மேற்சாதி அடையாளங்கள் கைவிடப்பட்டுள்ள உதாரணங்களும் உண்டு. இந்த இடத்தில் கிறிஸ்தவ அமைப்புகளின் மதமாற்றச் செயற்பாடுகள் குறிப்பாகச் சிறுசபைகளின் சாதி ரீதியாக பிற்பட்டோரை மையமாகக் கொண்டவை. இவை சாதிக் கடப்பிற்கு எவ்வாறு உதவியுள்ளன என்பது விரிவாக ஆராயப்பட வேண்டியது. இது பற்றிய ஓர் ஆய்வுக்கட்டுரை பனுவல் இதழ் 06 இல் வெளியாகியுள்ளது.

இந்த நிலை இந்திய மற்றும் தமிழக நிலவரங்களில் இருந்து வேறானவை. ஆனாலும் இன்றைய விவாதங்கள் இன்றும் இந்திய, தமிழக சட்டகத்தினுள் உள்ளூர் சாதியமைப்பை நோக்குவதும் முப்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைகளில் இருந்து நோக்குவதும் தொடரப்படுகிறது. இந்த நோக்குதல்கள் சமூக அசைவியக்கத்திற்கு எதிரானவை என்பதுடன் காலனித்துவம் செய்ததைப்போல சாதியை மாறாத திட்பமான ஒன்றாக மாற்ற/காட்ட அவை முனைகின்றன. இது சாதியின் இன்றைய வடிவத்தை சரிவரப் புரிந்து கொள்ளலில் தடையை ஏற்படுத்துவதாக உள்ளது. அடுத்து கடந்த முப்பது ஆண்டுகளில் சாதிபற்றிய காத்திரமான ஆய்வுகள் எதுவும் இலங்கையில் இருந்து வெளிவரவில்லை என்பதும் மிகுந்த கவனத்திற்குரிய ஒரு விடயமாகும். இதே காலப்பகுதியில் தாழ்த்தப்பட்ட சாதியினரிடம் இருந்து பல்கலைக்கழகம் செல்வோரது எண்ணிக்கை தொடர்ச்சியான அதிகரிப்பைக் காட்டுவது இன்னொரு முக்கியமான விடயமாகும். பொதுநிலையில் சாதியம் பற்றி இருக்கும் மௌனம் என்பது கல்விசார் கற்கைகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றதா என்ற கேள்வி இங்கு தவிர்க்கவியலாது மேல் எழுகிறது. சமூக ஊடாட்டத்தைப் புரிந்துகொள்ளல் என்பதற்கும், பண்பாட்டு வரலாற்றைப் பதிவு செய்யவும், சமூக நலத்திட்டங்களை மதிப்பிடவும் சாதி அரசியலுக்கு அப்பாற்பட்ட நிதானமான திறந்த சாதியின் நிலைமாற்றம் பற்றிய ஆழமான ஆய்வுகள் வேண்டப் படுகின்றன.

இந்த அடிப்படைகளின் மேல் பனுவலின் ஏழாவது இதழ் சாதியம் பற்றிய நான்கு கட்டுரைகளை உள்ளடக்கி வெளிவருகிறது. யாழ்ப்பாணத்தில் சாதியம் என்ற மைக்கல் பாங்கின் கட்டுரை 1960இல் எழுதப்பட்டது. இது இன்றைய சாதியத்தின் மாறுபடும் மற்றும் மாறுபடாத பண்புகளை இனங்காணுதலில் முக்கியமான ஓர் ஆவணமாகும். எனவே இதை மொழிபெயர்த்துள்ளோம். பரம்சோதி தங்கேஷின் யாழ்பபாணச் சமூகத்தில் புலப்பெயர்வு, பணவருவாய் மற்றும் சாதி, வகுப்பு, மத அடையாளங்களின் இயங்குநிலை என்ற கட்டுரையானது, சமகால யாழ்ப்பாணத்தில் சாதி நடவடிக்கைகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் பற்றிய கள ஆய்வுத் தகவல்களின் முன்வைப்பானது. ஒருவகையில் முன்னைய கட்டுரையின் பின்புலத்தில் சமூக மாற்றம் பற்றியும் மீள்வடிவமைக்கப்படும் சாதிய செயற்பாடுகளினதும் சில முக்கியமான அவதானிப்புகளை உள்ளடக்கியுள்ளது.

மூன்றாவதாக விஜயா ராமசாமியின் "இடைக்கால தமிழகத்தில் கலைஞர்களின் சமூக பொருளாதார வாழ்க்கை : ஒரு வரலாற்றுப் பார்வை" என்ற கட்டுரையானது தமிழகத்தில் சோழ மற்றும் விஜயநகர ஆட்சிக் காலங்களின்போது கைவினைஞர் சாதிகளில் சமூகநிலை, அந்தஸ்து, அடையாளம், அங்கீகாரம் போன்றவை பற்றி இலக்கிய மற்றும் வரலாற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரங்களினூடு எடுத்துக் கூறுகிறது. ஒருவகையில் கைவினைஞர் சாதிகளின் இரண்டகத் தனமான இருப்பை எடுத்துக்காட்டும் இக்கட்டுரை, அவர்களிடம் இருந்த விசேட தொழில் விற்பன்னத்தனத்தின் அடிப்படையில் நிகழ்ந்த மேல்நிலையாக்கத்தையும் அது கொணர்ந்த உட்பிரிப்புகளையும், அங்கீகாரங்களையும், அந்தஸ்து மாற்றங்களையும் மிகவும் நுட்பமாக எடுத்துக் காட்டுகின்றது.

பிறைஸ் ரயனின் சிங்களச் சாதியத்தின் குணாம்சம் பற்றிய கட்டுரையானது, சிங்களச் சாதியம் எவ்வாறு தென்னிந்திய சாதி முறைமையுடனும் தமிழர்களின் சாதி முறைமையுடனும் மாறுபடும் கருத்தாக்கத்தினையும் ஒன்றுபடும் செயற்பாடுகளையும் கொண்டுள்ளது என்பதை விளக்குகிறது. அதேவேளை இந்த ஒற்றுமைகளும், வேறுபாடுகளும் வரலாற்று ரீதியாக சிங்களச் சாதி அமைப்பினுள் எவ்வாறு உருவாயின என்பது பற்றியும் இக்கட்டுரை விரிவாக ஆராய்கின்றது. அவரது பல தரிசனங்கள் தமிழ்ச் சாதியம் பற்றி ஏற்கனவே எழுதப்பட்டவற்றை மீள வாசிக்க உதவியாக அமையும்.

இறுதியாக இடம்பெற்றுள்ள நூல் விமர்சனம் பிரதான கட்டுரைகள் பேசாத, ஆனால் மிகவும் முக்கியமான தமிழக சாதி அரசியல் பற்றிப் பேசுவதினூடு எமது சாதி பற்றிய இந்தச் சிறிய தொகுப்பிற்கு முழுமையை வழங்குகின்றது.

இந்த இதழின் உருவாக்கத்தில் பலவழிகளில் உதவிய விமலராணி விமலதாஸ், கலாநிதி குணசேகரன், ச. கார்மேகம் கலாநிதி ரகுபதி மற்றும் பேராசிரியர் ரு. சேரன் என்போருக்கும் கட்டுரை ஆசிரியர்களுக்கும், மொழிபெயர்ப்பாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் சாதியம்[1]

மைக்கல் பாங்ஸ்
தமிழில்: சாமிநாதன் விமல்
தா. சனாதனன்

**அறிமுகம்:**

யாழ்ப்பாணத் தீபகற்பம் எனப்படுவது இலங்கையின் வடக்கு முனைப் பகுதியாகும். வரண்ட சுண்ணாம்புக் கற்படிவால் நில உருவாக்கம் பெற்ற இப்பிரதேசத்தில் மழைக் காலங்களைத் தவிர ஏனைய காலங்களில் மேற்பரப்பில் நீர் இல்லை. என்றாலும் கிணற்று நீர் தாராளமாகவுள்ளது. இங்கு மழைநீரை நம்பியே நெற்பயிர்ச் செய்கை நடைபெறுகிறது. கிணற்று நீர்ப்பாசனம் மூலம் தோட்டப் பயிர்ச்செய்கை (புகையிலை, வெங்காயம், மிளகாய் போன்றவை) மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் பெருமளவு பனந் தோப்புகளும், சிறியளவு தென்னந்தோப்புகளும் உண்டு. இவை நீர்ப்பாசனம் இல்லாமல் மேற்கொள்ளப்படுபவை யாகும். யாழ்ப்பாணத்திற் சுருட்டு உற்பத்திக்கு மேலதிகமாகச் சில வாகனத் திருத்துமிடங்கள், ஒரு சீமெந்து தொழிற்சாலை, ஒரு தேங்காய் எண்ணெய் உற்பத்திச்சாலை ஆகியவை தவிர வேறு குறிப்பிடத்தக்க தொழிற்றுறைகள் எதுவும் இல்லை. ஆயினும் யாழ்ப்பாணமானது உலகத் தொடர்பிலிருந்து விடுபட்ட ஓர் இடமல்ல. இங்கு வாழ்வோர் கல்வியறி வுள்ளவர்கள். இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கும், மிகவும் சமீப காலம் வரை மலாயா விற்கும், படித்த மனித வளத்தை இப்பிரதேசம் ஏற்றுமதி செய்தது.

வரலாற்று ரீதியாக யாழ்ப்பாணம், தென்பகுதியிற் சிங்கள பௌத்த இலங்கையுடனும், வடக்கில் தமிழ் இந்து இந்தியாவுடனும் தொடர்பு கொண்டுள்ளது. தற்போது மொழி, பண்பாடு மற்றும் மதம் ஆகியவற்றில் உயர்ந்த இடத்தை இந்துமதம் கொண்டிருந்தாலும், இது எப்பொழுதும் அவ்வாறாக இருந்ததொன்றல்ல. இராணுவ ரீதியான மற்றும் பண்பாட்டு ரீதியான போராட்டங்கள் வடபுலத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இரண்டு பக்கமும் ஆட்டிப் படைத்தது. சில விடயங்களைப் பொறுத்தமட்டில் யாழ்ப்பாணமானது ஒரு சிறு பிளவுருவான பிரதேசமொன்றாகும் என்பது ஆச்சரியத்திற்குரிய விடயமல்ல. சாதிப் புாகுபாட்டின் மாற்றங்களை ஆராய்வது இந்த வெளியீட்டின் நோக்கம் என்பதாலும், சாதாரணமாக இந்தியத் துணைக் கண்டத்தை வரையறுக்கும் நிறுவனமாகச் சாதி இருக்கும் காரணத்தினாலும், எனது முயற்சியானது யாழ்ப்பாணத்துச் சாதி முறைமையைத் தென்னிந்தியாவுடன், சுட்டிப்பாகப் பாக்குநீரிணைக்கப்பால், இருபத்தெட்டு மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ள தஞ்சாவூரின் சாதி அமைப்புடன் ஒப்பிட்டு முரண்படுமாற்றை ஆராய்வதாகும். யாழ்ப்பாணப் பண்பாட்டில் அனைத்தும் பிரத்தியேகமாக இந்தியமூலத்தைக் கொண்டன என்று நான் கருதுவதாக இது அர்த்தமாகாது. தமிழ் – சிங்கள பண்பாட்டு, சமூக ஒழுங்கமைப்பானது, அதிகரிக்கும் பண்பாட்டுப் பிரிவினையை இன்று கொண்டிருப்பினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறானதொரு கூர்மையான பிரிவு எப்பொழுதும் நிலவியது என்று எண்ணுவது வரலாற்றைப் பிற்போக்காக வாசிக்கும் ஒரு நடவடிக்கையாகும்.

**யாழ்ப்பாணத்தின் பல்வேறுபட்ட சமூக அடுக்கமைவு முறைகள்**

யாழ்ப்பாணச் சூழலிற் சாதியம் என்று என்னாற் கருதப்படுவது எது என்பதைத் தெளிவுபடுத்த, பல இந்து சமூகங்களுக்குப் பொருத்தமானதாகக் காணப்படும் கீழ்வரும் விஷேடமான பண்புகள் யாழ்ப்பாணத்துச் சமூகத்திலும் நிலவுகிறது என்று கூறுவதே போதுமானது எனக் கருதுகிறேன்.

01. பெயரிடப்பட்ட புற மணத்தடை அடுக்கமைவுகள் பலவுள்ளன.
02. தீட்டு எனப்படும் கருத்தாக்கம் காணப்படுகிறது.
03. இந்த அடுக்கமைவுகளைப் பொருளாதார, அரசியல் மற்றும் சமயம் என்ற தளங்களில் ஒன்றாக இணைக்கும் கூட்டுச் சார்புநிலை கொண்ட முறையான அமைப்பொன்று (சடங்கு சேவை) உள்ளது.
04. பெயரிடப்பட்ட அடுக்கமைவுகள் வரிசை நிலைப்படுத்தப்பட்டுள்ளன. வரிசை நிலை வித்தியாசத்தைக் குறியீடு செய்யப் பல்வகையான சம்பிரதாய நடத்தைகள் காணப்படுகின்றன.

மேற்கத்தேய அர்த்தத்திலான சமூக வர்க்கம் என்பது யாழ்ப்பாணத்தில் ஒப்பீட்டளவிற் சமீப காலத்தில் தோன்றியதொன்றாகும். மேலும் அது நகரம்சார் தோற்றப்பாடுகளில் ஒன்றாகும். பொருளாதார மற்றும் கல்விசார் வேறுபாடுகள் சாதிய வேறுபாட்டுடன், நெருங்கிய தொடர்புபட்டிருப்பதால் உண்மையில் கிராமங்களில் "வர்க்கம்" என்பது இருப்புச் செய்யவில்லை.

யாழ்ப்பாணத்திற் சாதியத்திற்கும், வர்க்கத்திற்குமிடையிலான கூர்மையான வேற்றுமை கீழ்வரும் நிலைபரத்தால் தெளிவுபடுத்தப்படலாம். சமூகவியல் வர்க்கத்தை எப்பொழுதும் பிரமிட் மாதிரியாகவே முதல் நிலைப்படுத்துகிறது. அதன் பிரகாரம் "மேல்" வர்க்கத்தைச் சார்ந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறைந்தளவிலும், "கீழ்" வர்க்கத்தினர் அதிகளவிலும் காணப்படுவர். ஆயினும், யாழ்ப்பாணச் சாதிகளின் புள்ளிவிபர மாதிரியானது மணல் நாழிகை போன்றது. அதாவது உயர் சாதியினராகக் கருதப்படுபவர்கள் (வெள்ளாளர்) எண்ணிக்கையிலும் உயர்வாகவே காணப்படுகின்றனர்[2].

சமூகக் கட்டுப்பாட்டில் இந்த வித்தியாசத்தின் பெறுபேறானது தெளிவானதாகும். அரசியல் ரீதியாக ஆதிக்கக் குழுவாகத் தன்னுடைய நிலையைப் பராமரித்துக் கொள்ளல் என்பது எண்ணிக்கையிற் பெரிதாக உள்ள ஒரு சாதிக்குக் கடினமானதல்ல. அதேவேளை பொருளாதார மற்றும் அரசியல் அதிகாரத்தின் உரித்துடைமையை மட்டுபடுத்தும் ஒரு நிபந்தனையாக மட்டுமே சாதியுள்ளது. உயர் சாதி என்பது "மேல்" வர்க்கம் என்பதைப்போல அதிகாரத்துடன் ஒத்தகருத்துக் கொண்டதல்ல.

வர்க்க மற்றும் சாதி முறைமைகளுக்கு மேலாக யாழ்ப்பாணத்தில் மூன்றாவது சமூக அடுக்கமைவு முறையொன்றுமுண்டு. இது ஒரே சாதியைச் சேர்ந்த அங்கத்தவர்களிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவுகின்றது. இந்த முறைமையானது சாதியின் பண்பைப் பயன்படுத்துகின்றது. இருப்பினும், சம்பாதித்துக்கொண்டுள்ள செல்வம், அதிகாரம் என்பவற்றின் அடிப்படையாக ஈட்டப்பட்ட ஸ்தானத்தைப் படிநிலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவே, படிவரிசையில் ஏறிச்செல்வதற்கும், இந்த இன்றியமையாதவையைச் சம்பாதித்தலுக்குமிடையில் எப்போதும் ஒரு கால இடையீடு காணப்படுகிறது. இந்த மூன்றாவது சமூக அடுக்கு முறைமையில் ஒவ்வொரு சாதியும் பெயரிடப்படாத புனைவான, அகமணக்கட்டுடைய அலகுகளாக உள்ளார்ந்து பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் பல்வேறு கிராமங்களிற் சிதறிவாழும் கணிசமான குழுக்களை உள்ளடக்கியது. இவை இடுகுறிப்பெயர்கள் மட்டுமல்லாமல் உள்ளூர் இனப் பொதுவியல்பான பெயர்களும் அற்றவையாகும். ***"என்னுடைய சொந்தக் காரர்"*** என்ற வெளிப்பாடு ***"எனது உறவினர்"*** என நேரடியாக அர்த்தம் தரும். அது ***"எனது சாதியைச்"*** சார்ந்தவர்களைக் குறிக்கப் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. இங்கு சாதி என்பது ***"சொந்தக்காரர"*** சாதியைக் குறிக்கவேயொழிய வெள்ளாள என்றோ அல்லது பள்ளர் என்றோ பெயரிடப்பட்ட சாதிகளைக் குறிக்கவல்ல.

**யாழ்ப்பாணத்துச் சாதி முறை**

சாதி முறையை முழுமையாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கிராமம் யாழ்ப்பாணத்தில் இல்லை. கீழ்வரும் பகுப்பாய்வு பிரதானமாகச் சிறுப்பிட்டி எனப்படும் கிராமத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், இதில் யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளில் இருந்து திரட்டப்பட்ட தகவல்களும் உள்ளடங்கியுள்ளன. சாதாரண சாதிகளுக்கிடைப்பட்ட உறவிற்கு அனைத்து சாதிகளும் ஒரே கிராமத்தினுள்ளடங்கியிருப்பது வழமையானது. சாதிகளுக்கிடையான தொடர்புகள் மற்றும் படிநிலைகள் இதனால் ஏதோ ஒரு தனிக்கிராமத்தினுள் ஆய்வுக்குட்படுத்தப்பட முடியாத நிலைமை காணப்படுகிறது.

யாழ்ப்பாணத்திற் குறைந்தபட்சம் நாற்பத்திமூன்று[3] சாதிகள் காணப்படுகின்றன. பதினேழுக்கு மேற்பட்ட சாதிகள் கொண்ட எந்த ஒரு கிராமமும் இல்லை. மற்றும் பதினெட்டுக் கிராமங்கள் ஒரேயொரு சாதியை மட்டும் கொண்டுள்ளன. பெரும்பாலான சாதிகள் சிறியன என்பதுடன் சில கிராமங்களிலேயே காணப்படுகின்றன, ஆக, பதினேழு சாதிகளே பதினொன்றுக்கு மேற்பட்ட கிராமங்களிற் காணப்படுகின்றன. சிறுப்பிட்டியில் முக்கிய சாதிகளாகப் பிராமணர்கள் (பூசகர்கள்), அரசியல் ரீதியாக மேலாண்மையான சாதியினரான வெள்ளாளர்கள் (நிலச் சொந்தக்காரர்கள்) சிறிய நிலக்குத்தகையாளர்களும் முன்னர் சிறைப்பிடிக்கப்பட்ட அடிமைகளுமான கோவியர்கள் (வெள்ளாளரின் பணியாட்கள்), நாவிதர்கள், வண்ணார் மற்றும் முன்னர் சிறைப்பிடிக்கப்பட்ட அடிமைகளான பள்ளர் (நிலமற்ற கூலிகள்) என்பன காணப்படுகின்றன. இந்த வகுப்புப் பிரித்தலில் நான் "முக்கியமான" என்பதை இணைத்துள்ளது அவை; பெரிய சாதிகள் என்றல்லாமல் மற்றைய சாதிகளின் சார்பிற் குறித்த தேவையை நிறைவேற்றுவதால், சாதிகளுக்கிடையிலான உறவிற் குறிப்பிடும்படியான பாத்திரத்தை வகிப்பதால் ஆகும்.

இவ்வர்த்தத்தில் "முக்கியமற்ற" ஏனைய சாதிகளும் சிறுப்பிட்டியிலுள்ளன. அவை பற்றி நான் விரிவாகக் கலந்துரையாடவில்லை. தனக்காரர், யானைப் பாகர்கள் போன்றவை சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைமையில் தமது வகிபாகத்தை இழந்துவிட்டன – எண்ணெய் வார்ப்பவர்கள் போன்றவை மிகவும் சிறப்புத் தேர்ச்சியானவை. இதனால் அவற்றின் சாதிகளுக்கிடையிலான தொடர்புகள் மட்டுப்படுத்தப்பட்ட வர்த்தக ரீதியான உறவுகளுக்குள் எல்லைப்படுத்தப் பட்டுள்ளன. சாதிய தொழில்சார் முக்கியத்துவத்தினாற் பண்டாரங்கள், நட்டுவர்கள் (கோயில் இசைக் கலைஞர்கள்) மற்றும் துரும்பர்கள் (பள்ளர், நளவர் மற்றும் பறையர்களின் சலவைத் தொழிலாளிகள்) போன்ற ஒப்பீட்டளவிற் சிறியசாதிகள் மூன்றையும் எனது கலந்துரையாடலில் உள்ளடக்கியுள்ளேன். இன்னொரு கிராமத்தில் இவர்கள் தட்டார், கொல்லர், தச்சர், நளவர் (இப்போ நிலமற்ற கூலிகள், முன்னர் சிறைப்பிடிக்கப்பட்ட அடிமைகள்), பறையர் (சாவு வீட்டில் பறை அறைபவர்கள், பிராமணர் அல்லாதவர்களின் கோயில்களிற் பறை அறைபவர்கள், துணி வியாபாரிகள், மூடை சுமப்போர், தோல் வேலை செய்பவர்கள், ஒருபோதும் அடிமைகள் அல்லாதவர்) போன்றவை "முக்கிய" சாதிகளாகக் கணிப்பிடப்படலாம். இந்தப் பட்டியலினுள் சிறியதும், பெரியதுமான பல மீன்பிடித்தொழில் செய்யும் சாதிகள் உள்ளடக்கப்படவில்லை. இவைபற்றி இங்கு ஒருபோதும் பேசப்படவில்லை. சில ஊர்களில் தச்சரும், கொல்லரும் விருந்து மற்றும் திருமணம் கலக்கும் சாதிகளாக உள்ளனர்.

பெரும்பாலான சந்தர்ப்பத்தில் ஒத்த பெயர்கொண்ட சாதிகளும், தொழில்களும் தென்னிந்தியாவிலும் காணக்கிடக்கின்றன. எனினும் கோவியர், நளவர், துரும்பர் என்ற சாதிகள் தென்னிந்தியச் சாதியமைப்பினுள் இல்லை. சிங்களச் சாதிகள் வேறு பெயர்களைக் கொண்டிருந்தாலும், தமிழ் வெள்ளாளச் சாதியைச் சிங்கள கொய்கம சாதியுடன் ஒத்ததாகச் சிங்களவரும், தமிழரும் பெரும்பாலும் இனங் காண்கிறார்கள். இலங்கைத் தமிழருள் கோவியரும், துரும்பரும் யாழ்ப்பாணத்தில் மட்டுமேயுள்ளனர். எனினும் நளவர் புத்தளத்திலும் உள்ளனர் (தம்பையா: 1954)

இந்தியாவில் உள்ளதுபோலவே யாழ்ப்பாணத்திலும் சாதிகள் படிநிலை வரிசை கொண்ட அலகுகளாக உள்ளன. இந்தப் படிநிலை வேறுபாடுகள் பல குறியீட்டுத்தன்மை கொண்ட வேற்றுமைகளால் வெளிப்படுத்தப்படுகின்றன. உண்மையான அதிகாரத்திலும், செல்வத்திலும் வேறுபாடுகள் உள்ளன. தென்னிந்தியாவில் உள்ளதைப் போன்ற யாழ்ப்பாணத்துச் சாதியத்தின் வேறுபிரித்தறியும் பண்புகள் பற்றி விரிவான பகுப்பாய்வை மேற்கொள்ளல் பிரயோசனமாக அமையும் என நான் கருதவில்லை. யாழ்ப்பாணத் தமிழர்களுக்குப் பெரும்பாலும் தனித்துவமான பண்புகளே இங்கு கவனத்திற் கொள்ளப்படும்.

**01. விதவை மறுமணம்**

பிராமணர்களைத் தவிர மற்றைய சாதிகளைப் பொறுத்தவரையில் விதவைகள் மறுமணம் செய்து கொள்வதில் எவ்வித் தடையுமில்லை என்பதுடன், விதவையாக இருக்கும் பெண் சீலம் நிறைந்தவளாகக் கொள்ளப்படுவதுமில்லை. பிராமணர்களின் சம்பிரதாயமானது பிராமணர் அல்லாதோராற் பிரத்தியேகமானதொன்றாகப் புகழத்தக்க தல்லாததாகவும், விரும்பத்தகாததாகவுமே நோக்கப்படுகிறது. இதைப்போலவே முப்பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொருநாள் சாவுத்துடக்கை அனுஷ்டித்தல் என்பதற்கும் கிட்டத்தட்ட அனைத்துச் சாதியினரும் எந்த முக்கியத்துவமும் கொடுப்பதில்லை. வர்ணக் கருத்துநிலையைத் தெரிந்த சிறிய எண்ணிக்கையினர் – இச்சம்பிரதாயங்கள் தாங்கள் சூத்திரர் என்பதை எடுத்துக் காட்டுவதாக மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்கிறார்கள். இது தமது அந்தஸ்தைக் குறைப்பதாக அவர்கள் கருதுவதில்லை. மேலும் தங்களைவிடக் குறைவான நாட்கள் மரணத் தீட்டைக் கடைப்பிடிப்பவர்களை (பிராமணர்கள், பண்டாரங்கள் மற்றும் நட்டுவர்கள்) உயர் வரிசையில் இருப்பவர்களாகவோ அன்றி அதிகம் தூய்மையானவர்களாகவோ கருதுவதுமில்லை. பூணூல் அணிந்தாலும் அணியாவிட்டாலும், அதற்குச் சாதிப் படிநிலையில் எந்த முக்கியத்துவமும் கிடையாது. உண்மையிற் பிராமணர்களும், குடிபெயர்ந்த கைவினைஞர்களின் சாதியில் உள்ள சில அங்கத்தவர்களும் மட்டுமே அதை அணிந்து கொள்கிறார்கள்.

### 2. வண்ணார்களின் கோவில் நுழைவு

வண்ணார்களைக் (தீண்டத் தகுந்த சாதியினருக்குச் சலவை செய்பவர்கள்) கோவிலுக்குள் நுழைவதை அனுமதிக்கும் அதேவேளை, நாவிதர்கள் (அம்பட்டர்) எனப்படும் முடிவெட்டும் தொழில் செய்பவர்களை அனுமதிக்காமையும் சாதிப் படிநிலையிற் காணப்படும் அசாதாரண பண்பாகும். இது யாழ்ப்பாணத்தவர் நன்கு அறிந்துள்ள சாதாரண தென்னிந்திய விதிமுறையைத் தலைகீழ் ஆக்குதல் ஆகும். வண்ணார்கள் கோவிலினுள் வெள்ளைகட்ட வேண்டியிருப்பதால் அவர்கள் கோவிலுக்குள் நுழைவது அத்தியாவசிய மானது என்ற தர்க்கத்தினூடு அவர்கள் இதனை நியாயப்படுத்துகின்றனர். ஆயினும், சலவை செய்தல் என்பது பொதுவாகவே மிகவும் தீட்டான தொழிலாகவே கருதப்படுகிறது. மாதவிலக்குத் துணிகளைச் சலவை செய்வது இதற்குக் காரணமாகும். தஞ்சாவூரிலும், இந்தியாவின் பிற இடங்களிலும் உள்ளதுபோல யாழ்ப்பாணத்திலும் வண்ணாருக்கும், நாவிதர்களுக்குமிடையில் எதிர் எதிர்ப்போட்டி நிலவுகிறது. ஒருவருக்கொருவர் சந்தேகப்படுவதாக அவர்களின் குறிப்பான படிநிலை உள்ளது. தான் மற்றவரைவிட உயர்ந்தவர் அலலது சம அந்தஸ்துள்ளவர் என்று இரு சாதியினரும் உரிமை கோருகின்ற அதேவேளை, மற்றைய சாதியினர் இதுபற்றி முடிவுக்கு வரமுடியாதுள்ளனர். இந்தச் சந்தர்ப்ப சூழ்நிலையில் எந்தச் சாதி உள்ளூரில் அனுசரிக்கப்படுகிறது என்பது தன்னிச்சையானது என்பதுடன், விசேடமாகக் கட்டமைப்பு ரீதியில் முக்கியத்துவமற்றது. இன்றைய பின்னணியில் யாழ்ப்பாணத்து வண்ணார்கள் செல்வந்தச் சாதியாக உருவாகி வருகின்ற அதேவேளை, நாவிதர்கள் ஏழ்மை நிலையில் தொடர்ந்தும் இருக்கிறார்கள். எனவே, நாவிதர்களுக்குமேல் வண்ணார்களின் படிநிலையை, தலைகீழாக மாற்றுவது என்பது சாத்தியமாகாது.

### 3. காணப்படக்கூடாத ஒரு சாதி

பள்ளர், நளவர் மற்றும் பறையர் என்ற தீண்டத்தகாத சாதிகளுக்கப்பால், யாழ்ப்பாணத்தில் துரும்பர்கள் என்ற கண்ணிற்படக்கூடாத, தீண்டப்படாதவர்களின் துணிகளைச் சலவை செய்யும் ஒரு சாதியும் உள்ளது. இதையொத்த சாதியொன்று தமிழ்நாட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் முன்பிருந்ததாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது. (கியுரன் 1946:199) பாரம்பரியத்தில் துரும்பர் சாதியைச் சார்ந்த ஒருவர் பகல் வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே திரிவது அனுமதிக்கப்படவில்லை. இரவிற்கூட ஒரு பனையோலையைத் தமக்குப் பின்னால் இழுத்துச் செல்ல வேண்டியிருந்தது. சிலரின் கருத்தின்படி, இது அவர் எங்கு இருக்கிறார் என்பதை ஓசையின் வழியாக அறிவித்தலாகும்; இன்னும் சிலரின் கருத்தின்படி அவர் சென்ற வழியை அவர் வரைய வேண்டும். இதனால் அவருடைய காலடிகள் பட்ட இடத்தை அடுத்தநாள் உயர் சாதியினர் தவிர்த்துக் கொள்ளலாம் என்பதாகும். துரும்பர்கள் மங்கிய வெளிச்சமுள்ள வேளையில் வேகமாக நடமாடுதல் வரவேற்கப்படும். அத்துடன் பல வெள்ளாளருக்கு அவர்களின் இருப்புப்பற்றிக் கூடத் தெரியாது. எவ்வாறாயினும் அவர்கள் இன்று தீண்டத்தகுந்த சாதியினருடன் தொடர்புகளைக் கொண்டுள்ளனர். இவர்கள் செவெனி மனிதர், மற்றவர்களைக் கூலிக்காகக் கொலை செய்பவர்கள் அல்லது காயப்படுத்துபவர்கள் என அஞ்சத்தக்க விதத்தில் அறியப்படுகின்றனர். செவெனி மனிதர்களுக்குப் பெயர்போன இன்னொரு குழு முஸ்லிம்களாகும். இவ்விரு குழுக்களும் நடைமுறையிற் சமூக முறைமைக்கு வெளியேயுள்ளனர்.

### 4. கோவிய, வெள்ளாளப் படிநிலையிலுள்ள மதம்சார் - மதம்சாராப் பிரிவு

கோவியர்களும் வெள்ளாளர்களும் தமக்கிடையே அரிதான விநோதமான அந்தஸ்துறவைக் கொண்டுள்ளார்கள். பொதுவாக வெள்ளாளர்கள் மிகவும் உயர்ந்த சாதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும், மதம்சாரா அர்த்தத்தில் அது நிச்சயமானது எனினும், அவர்கள் முன்பு கோவியர்களை வீட்டு அடிமைகளாகக் கொண்டிருந்ததால் வெள்ளாளரின் சடங்குச் சமநிலையில் உள்ளவர்களாகக் கோவியர்களை அனைவரும் ஏற்றுக் கொள்கிறார்கள். கோவியர்கள் சமைத்த உணவை வெள்ளாளர் உண்பார்கள். கோவியர்கள் வெள்ளாளரின் சேவகர்களாக அமர்த்தப்படலாம். வெள்ளாளரின் திருமணங்களிற் கோவியர் உணவு சமைப்பர். முன்பு வெள்ளாளர்கள் கோவியப் பெண்களை வைப்பாட்டிகளாக வைத்திருந்தனர். இவ்வாறான உறவுகளால் பிறந்த பிள்ளைகள் பலர் தற்போது வெள்ளாளர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள அதேவேளை, மற்றவர்கள் கோவியர்களாகத் தொடர்ந்தும் உள்ளனர். வெள்ளாளர் கோவியரின் திருமணங்களுக்கு விருந்தாளிகளாகச் செல்வர். அங்கு உணவு உண்பர். வெள்ளாளரின் மரணச் சடங்கின்போது கோவியர்கள் பிணத்தைச் சுடலைக்குக் காவிச் செல்வர். கோவியரின் சாவுச் சடங்கில் இறந்த கோவியரின் சேவையைப் பெற்ற வெள்ளாளர் இறுதி ஊர்வலம் புறப்பட முன்னர் பிணத்தைத் தமது கைகளால் தொடுவர். இது கோவியர்கள் வெள்ளாளருடன் மதம்சார்ந்து சரிநிகராகவும், மதம்சாராவெளியில் தாழ்ந்தவர்களாகவும் உள்ளதை எடுத்துக்காட்டுகிறது. பிணத்தைத் தொடுவதினூடாக வெள்ளாளர்கள் தாங்கள் கோவியர்களுடன் சடங்கு ரீதியாகச் சமநிலையில் உள்ளமையை உறுதியாகக் கூறுகிறார்கள் அல்லது ஒப்புக் கொள்கிறார்கள். பிணத்தைக் காவிச் செல்லாதிருப்பதன் மூலம் மதம்சாரா உலகில் தமது மேன்மைச் சிறப்பை வலியுறுத்துகிறார்கள்.

இந்தச் சடங்கு ரீதியிலான சமநிலையானது தற்போது கோவியர்களின் பிறப்புத் தொடர்பான ஒரு தொன்மத்தால் "விளக்கப்படுகிறது" அதன்படி கோவியர்கள் வெள்ளாளரால் கவரப்பட்டு அடிமைகளாக்கப்பட்ட சிங்கள கொய்கம சாதியினரின் வழித்தோன்றல்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவியர்கள் வெள்ளாளருக்கு அடிமைகளாக இருந்த காலத்திலிருந்தே இப்புனித மற்றும் பொதுநிலைப்பட்ட படிநிலையின் எதிர்நிலைப்பாடானது இருப்புச் செய்துள்ளதை இப்பேற்பட்ட கதைகள் எடுத்துக்காட்டுகின்றன. ஏனைய எல்லா அடிமைச் சாதிகளும் தீண்டத்தகாதவர்களாவர். இன்று வரிசையில் வெள்ளாளர்களுக்குமேல் பிராமணர்களை நிலைப்படுத்தும்போது கோவியர்கள் வெள்ளாளரை அடுத்தும் அல்லது பிராமணரை வெள்ளாளருக்குக் கீழே நிலைப்படுத்தும்போது பிராமணர்களுக்கு அடுத்ததாகவும் கோவியர்கள் படிநிலைப்படுத்தப்படுகின்றனர்.

## 5. பிராமணர்களின் இருமனப்போக்கான நிலைப்பாடு

சாதிய முறையின் உச்சியில் எப்பொழுதும் பிராமணரே உள்ளனர் என்ற இந்து சாதியம் பற்றிய இலக்கியங்களின் உலகப் பொதுவான கற்பிதத்தின் அடிப்படையில் மேற்கூறப்பட்டது ஆச்சரியமளிப்பதாக இருக்கலாம். எவ்வாறாயினும் இவ்வாறான புறநடைகள் தெரிந்த விடயம்தான். மலபாரிலுள்ள தாழ்ந்த சாதிக் குறிச்சன் தமது வீட்டினுள் பிராமணர் நுழைந்தால் அது அசுத்தமாவதாகக் கருதுகின்றனர் என்று கியுட்டன் (1946: 79) எடுத்துக் காட்டுகின்றார். மேலும், பிணங்களை எரிப்பதுடன் சம்பந்தப்பட்ட தொழிலைப்புரியும் மகாபிராமணர்கள் உயர்ந்த சாதியினராக அல்லாமல் 'தாழ்ந்த' சாதியினராகவே கொள்ளப்படுகின்றனர். தீண்டத்தகாதவர்களுக்குப் பூசகர்களாகச் செயற்படுபவர்கள் யாழ்ப்பாணத்தில் மிகவும் தாழ்ந்த அந்தஸ்துள்ள குழுவாக, ***காகா*** (காகம்) பிராமணர்கள் என அழைக்கப்படுகின்றனர். இதைப்போலவே யாழ்ப்பாணத்திலும், தென்னிந்தியாவின் சில பாகங்களிலுமுள்ள பறையர்கள் தாங்கள் "சாதாரண" பிராமணர்களிலும் சடங்கு ரீதியாக மேல் நிலையானவர்கள் என உரிமை கோருகின்றனர். இவை விசேட சந்தர்ப்பங்கள் என்றாலும், சுத்தம் மற்றும் "அசுத்தம்" என்பன அவற்றின் சடங்குப் பண்பில் "புனிதத்தின்" கூறுகள் என்ற எடுகோளை (றட்கிலிவ் – பிறவுண் 1939) வெளிக்காட்டுகின்றன என்பதில் சந்தேகம் இல்லை.

யாழ்ப்பாணத்து வெள்ளாளர், பிராமணர்களுக்குமேல் படிநிலையில் வைக்கப்பட வேண்டும் என்ற வாதமானது வேறுவகையானது. யாழ்ப்பாணத்திற் பிராமணர்கள் மிகவும் அரிதாகக் காணப்படுகின்றனர் என்பதுடன், சில புறநடைகளைத் தவிரப் பெரும்பாலும் அவர்களின் தொழின்மைசார் பணி கோயில் பூசை ஆகும். இப்புறநடைகள் இந்தியாவிலிருந்து அண்மையிற் புலம்பெயர்ந்தவர்களாகும். பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளிற் போர்த்துக்கேயர்களால் செய்யப்பட்ட நாடுகடத்தல்களும், மதரீதியான அடக்குமுறையும் பிராமணர்களின் பற்றாக்குறைவுக்கு அந்தளவு தூரத்திற்குத் தீர்மானிப்புக் காரணியாக இருந்திருக்கும் எனக் கூறமுடியாது. சில நாடு கடத்தல்கள் நடந்திருக்க வாய்ப்புண்டு எனினும் இந்தத் தோற்றப்பாட்டிற்கு நீண்ட வரலாறு காணப்படலாம். யாழ்ப்பாணத்தின் வரவேற்பற்ற கரைகளை நோக்கிக் புலம்பெயர்ந்தவர்களுக்குத் தமது சொந்த நாட்டில் அதிகம் பிடிப்பு இருந்திருக்காது என்று ஒன்றுக்கு மேற்பட்ட யாழ்ப்பாணத்தவர்கள் என்னிடம் அபிப்பிராயப் பட்டனர்.

யாழ்ப்பாணக் கோயிற் பிராமணர்களில் மிகவும் சொற்பமானவர்களைத் தவிர மற்றவர்கள் அவர்கள் சேவிக்கும் கோயில்களையோ, கோவில்களின் சொத்துக்களையோ உடைமையாகக் கொண்டவர்கள் அல்லர். அவர்கள் அக்கோயில்களின் முகாமையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களான வெள்ளாளரிடமிருந்து வேதனம் பெறும் ஊழியர்களாகும். வெள்ளாள முகாமையாளர்கள் ஒரு செயற்குழுச் சபையாக அல்லது கோவிலைத் தாபித்தவரின் வாரிசுகளின் திறமையின் அடிப்படையில் தொழிற்படுகிறார்கள். பெரும்பாலும் சமீபகாலத்தில் இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்தவர்களின் உடைமைகளே யாழ்ப்பாணத்திலுள்ள பிராமணர்களுக்குச் சொந்தமான கோயில்களாகும். அவை பிரத்தியேகமாகப் பெரும் நகரங்களிலோ அல்லது யாத்திரிகை மையங்களிலோ உள்ளன. ஊர்களிற் பொதுவாக பிராமணர்கள் சேவைசெய்யும் வெள்ளாளர்களுக்குச் சொந்தமான கோவில்களே உள்ளன. சில கோவில்களிற் பூசைகளை நடாத்தும் பரம்பரையான உரிமை பிராமணர்களுக்கு இருந்தாலும், அது வெள்ளாள முகாமையாளரின் சேவகர்கள் என்ற வகையிலாகும். அவர்களின் செல்வாக்குகள் மதம்சாரா விடயங்களின் முகாமைத்துவத்திற்கு அப்பாற் செல்வதாகவுள்ளது. குறிப்பாகத் திருவிழாக்கள் மற்றும் அவற்றின் ஒழுங்கமைப்புப் போன்ற கோவில் சம்பிரதாயங்கள் சார்ந்தவற்றில் தலையிடக்கூடிய உரிமை வெள்ளாள முகாமையாளருக்கு உண்டு என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்றாகும்.

தம்முடைய மூதாதையர்கள் பல தலைமுறைகளாகப் பூசை செய்ததன் காரணத்தால் கோவிலில் உரிமைகோரி பிராமணர்களால் தொடுக்கப்பட்ட பல வழக்குகள் உள்ளன. பொதுவாக இவ்வாறான உரிமைகோரல் வழக்குகள் பிராமணர்களுக்குத் தோல்வியில் முடிந்துள்ளன. பொதுவில் வெள்ளாள சாதியைச் சார்ந்த கோவிலைத் தாபித்தவரின் வாரிசுக்கே கோவிலின் சொத்துரிமையுள்ளது என்பது நீதிமன்றத்தின் தீர்ப்பாகவுள்ளது. வெகுசனக் கருத்தும் இந்தப் பார்வைக்கு உதவுவதாகவுள்ளது. சில வழக்குகள் ஒரு குறிப் பிட்ட கோயிலிற் சேவைசெய்யும் உரிமையைப் பரம்பரை உரிமையாக ஏற்றுக்கொண்டே தீர்ப்புக்களில் முடிந்துள்ளன.

தொழில் சார்ந்து பிராமணர்களின் இந்த கீழ்நிலையான வகிபாகம் அவர்களுடைய மதம்சார் மற்றும் மதம்சாரா வரிசைப்படுத்தலில் அடையாளப்படுத்தப்பட்ட இருமை நிலையை உற்பத்தி செய்துள்ளது (ஸ்ரிவன்சன் 1954). அதிகம் புனிதமாக இருத்தல் என்ற பின்புலத்தில் புனித சட்டத்தினுள் பிராமணர்கள் வெள்ளாளர்களைவிட உயர்நிலையில் வரிசைப் படுத்தப்பட்டாலும், மதம்சாரா அர்த்தத்தில், பிராமணர்கள் வெள்ளாளர்களைவிடக் கீழ் நிலையிலேயே வரிசைப்படுத்தப்படுகிறார்கள். இவ்விரு சாதிகளின் அங்கத்தவர் களுக்கிடையில் ஒருவர் மற்றவர்மீது பரஸ்பரம் கொண்டுள்ள நடத்தை இந்த இருமை நிலையைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. எண்ணிக்கையிலும் (முழுச் சனத்தொகையில் 50% க்கு அதிகமானவர்கள்) அரசியல் அதிகாரத்தாலும், செல்வத்தினாலும் சமாளிக்க முடியாதளவு உயர்ந்த நிலையில் வெள்ளாளர்கள் இருந்தாலும், அவர்கள் பிராமணர்மீது உயர்நிலையில் உள்ளவர்களுக்குக் காட்டும் மரியாதையான பண்பிணக்கத்தைக் காட்டுகிறார்கள். இதற்குச் சான்றாக; பிராமணருக்கு இருக்கை வழங்கல், பண்பட்ட வார்த்தைகளால் அவர்களை விளித்தல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். ஆயினும் இது பண்பட்ட வடிவத்தில் மட்டுமே ஆகும். பிராமணர்கள் மேலாதிக்க மனப்பான்மையை, வெள்ளாளருக்கு மேலான அணுகு முறைகளைக் கைக்கொள்வது ஒருபோதும் அனுமதிக்கப்படுவதில்லை. மறுதலையாக, பிராமணர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற பார்வையை வெள்ளாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்கள். வெள்ளாளர்களைக் குறிக்கப் பிராமணர்கள் பண்படாத வார்த்தைகளைப் பிரயோகித்தல் மிகுந்த கோபத்திற்குரியது. பிராமணர்கள் எளிமையான, பாசாங்கற்ற, சாந்தமான, கர்வமற்றவர்களாக, தம்முடைய கடமைகளை மனச்சாட்சியின் பிரகாரம் ஈடுபடுபவர்களாகவும், அரசியல் அதிகாரம் தொடர்பான அபிலாஷைகள் அற்றவர்களாகவும் இருக்க எதிர்பார்க்கப்படுகிறார்கள். அவர்கள் கோவில் செயற்பாடுகளுக்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என எதிர்பார்க்கப் படுகிறது. கோயில் பூசகர் தொழிலுக்குப் புறம்பான தொழில் செய்யும் பிராமணர்களுக்குக் கோவில் சேவிதம் செய்யும் பிராமணர்களுக்குக் கிடைக்கும் கௌரவமோ, பணிவிணக்கமோ கிடைப்பதில்லை. அவர்கள் வெள்ளாளர்களைப் போலவே கணிக்கப்படுகின்றனர். வெள்ளாளர் ஒருவர் பிராமணர்மீது சடங்கு ரீதியாகக் காட்டும் பணிவிணக்கமானது பூசகர் என்ற வகையில் அவருடைய பதவியைச் சார்ந்ததேயொழியப் பிராமணரின் சாதிக்காகவல்ல.

தவறான நடத்தைகொண்ட பிராமணர்கள்மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதில் வெள்ளாளர் தயக்கம் காட்டுவதில்லை. பூசகராகத் தற்போது வேலை செய்பவரை வெளியேற்றிப் புதிதாக ஒருவரைக் கொண்டுவருவதற்கு வெள்ளாள முகாமையாளர் முயற்சித்தமை பிராமணர்கள் கோவிலின் உரிமைகோரி நீதிமன்றங்களில் தாக்கல் செய்த வழக்குகளுக்குக் காரணமானது. கோவில் உரிமையாளருக்கு அவ்வாறு செய்ய உரிமை இருந்தாலும் பொதுவாகப் பிராமணர் சிறந்த சேவை வழங்கும்போது அது உபயோகிக்கப் படுவதில்லை. பொதுவாகத் தற்போதைய நிர்வாகி தனது வாரிசை உரிமையாளராக நியமிக்க முடியும்; பொதுவாக அந்த வாரிசு அவருடைய புதல்வர்களாகவோ அன்றி புத்திரர் இல்லாதபோது வேறு நெருங்கிய உறவினராகவோ இருப்பார்.

தங்களை நிராகரிக்கும் பிராமணர்கள்மீது சில சந்தர்ப்பங்களில் உடல் ரீதியாக அதிகாரத்தைச் செலுத்துவதிலும் வெள்ளாளர் ஈடுபடுகிறார்கள். சிறுப்பிட்டிக்கு அண்மையிலுள்ள ஓர் ஊரில் ஒரு சத்திரத்தை (வழிப்போக்கர்களுக்கு உதவுவதற்காக அமைக்கப்படும் ஓர் வகை சமய தர்ம நிறுவனம்) பிராமணர் ஒருவர் முகாமைத்துவம் செய்தார். அந்தச் சத்திரத்தின் தாபகரினால் கொடைவழங்கி நிறுவப்பட்டதாக ஒரு கனிஷ்ட பாடசாலையும் இருந்தது. இந்த நிறுவனங்கள் இணைந்து வருடாந்த விழாவொன்றை நடத்தி வந்தன. பிராமணர் இப்பாடசாலையின் மாணவர்களுக்கு இனிப்பு வழங்குவது ஒரு தாபிக்கப்பட்ட சடங்காகி இருந்தது. சில வருடங்களுக்கு முன்னிருந்த நிர்வாகி இந்தப் பழக்கத்தைக் கைவிட்டதாக மாணவர்கள் கருதினார்கள். இணைந்த நிறுவனங்களின் நிதியை அவர் தன்னுடைய சொந்தத் தேவைகளுக்காக அபகரிப்பதாகச் சந்தேகம் கொண்ட வெள்ளாளப் பையன்களின் குழுவொன்று பிராமணரை அவர் திருந்திக் கொள்வதாக வாக்குறுதி வழங்கும்வரை நையப்புடைத்தனர். அவர் அந்த வாக்குறுதியை நிறைவேற்றிக் கொண்டார்.

பிராமணர்களின்மீது வெள்ளாளரின் கட்டுப்பாட்டினை எடுத்துக்காட்டும் இன்னொரு உதாரணமும் உண்டு. ஊர்த் தலைவனை ஒத்த செல்வாக்குமிக்க வெள்ளாளரின் உதவியைப் பிராமணர் ஒருவர் தன்னுடைய பிள்ளைக்கு உரிய வரனைத் தேடிக்கொள்வதில் நாடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு உதவி நாடி வருவது அதிகாரம், செல்வாக்கு மற்றும் மதி நுட்பம் என்பனவற்றிற்கு அங்கீகாரம் வழங்கும் ஒரு புகழ்பாடும் வடிவமாகக் கருதி அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். ஒரு எல்லைவரை இது உதவி கேட்பவரை உதவி கேட்கப்பட்டவருடன் வாடிக்கையாளர் உறவில் நிலைப்படுத்துகின்றது.

யாழ்ப்பாணத்துப் பிராமணர்கள் ஒரு விதியாகத் தங்களிடம் எதிர்பார்க்கப்படும் நடத்தையுடன் இணங்குபவர்களாக உள்ளார்கள். அவ்வாறு பிராமணர்கள் எதிர்பார்க்கப்படும் நடத்தைகளை ஒழுகும்போது வெள்ளாளர்கள் தங்களைச் சேவிப்பவர்கள்மீது மிகவும் பிரியமாக இருப்பதுடன், உரிய வரிசை நிலையை வழங்கிப் புகழ்வதற்கும் விரும்புகிறார்கள். இந்த உரிமையைப் பயன்படுத்திச் சொந்தக்காரச் சாதியைப் போன்று தங்களை உயர்வரிசை நிலையில் உள்ளவராக அவர்கள் கருதுவது இதிலிருந்து துலாம்பரமாகிறது. இதனால் உயர்ந்த பிராமணர்கள் உயர்ந்த வெள்ளாளருக்கு இயல்பாகச் சேவை செய்கிறார்கள் என்று வாதிடப்படுகிறது. இதனால் வெள்ளாளருக்கும் பிராமணர்களுக்குமான உறவென்பது பொதுவாக மிகவும் சுமுகமானது; தனிப்பட்ட வெறுப்புக்கள் உள்ள அதேவேளை, தஞ்சாவூரிலும், தமிழகத்தின் பிறபாகங்களிலும் திராவிடக் கழக இயக்கத்தில் காணப்பட்டது போல "ஒரு சாதியாகப் பிராமணருக்கு" எதிரான விரோதம் இருப்பதற்குச் சுவடுகள் இல்லை. யாழ்ப்பாணத்து வெள்ளாளர்கள் இந்த இயக்கம் பற்றி அறிந்திருந்தாலும் அது அவர்களை உணர்ச்சிவசப்படச் செய்வதாக இல்லை.

### கிராமக் கட்டமைப்பு

இதுவரை நான் யாழ்ப்பாணத்துச் சாதி வரிசை நிலையை தஞ்சாவூரிற் காணப்படும் முறைமையுடன் வேறுபடுவனவற்றில் மிகவும் கவனத்தைக் கவரும் சில பண்புகளை மட்டும் விபரித்தேன், சாதிகள் அவற்றின் உள்ளக ஒழுங்கமைப்பாலும் வித்தியாசப் படுபவையாக வுள்ளன; உதாரணமாக: யாழ்ப்பாணத்துப் பிராமணர் தஞ்சாவூர் பிராமணர்களிடமிருந்து வித்தியாசப்படுவது அவர்கள் வெள்ளாளருடன் கொண்டுள்ள உறவு மற்றும் பிராமணர்களின் பொருளாதார மற்றும் தொழில்சார் வகிபாகங்களால் மட்டுமேயல்ல. அவர்கள் துணைச் சாதியமைப்புச் சார்ந்தும் வேறுபடுபவர்களாக உள்ளனர். குருக்கள் மற்றும் ஐயர் யாழ்ப்பாணத்தில் தனித்த துணைச் சாதிகளல்ல. மாறாக, கோயிற் பூசகர்களிடத்தே நிலவும் எளிமையான தொழில்சார் தரவரிசைகளாகும். தகுந்த பயிற்சியைப் பெற்ற நிலையில் ஐயர், குருக்கள் நிலையை எய்த முடியும். சாதிக்குள் நிலவும் வித்தியாசங்கள் பற்றி ஒரு பொதுக் கலந்துரையாடலுக்கு இங்கு அவகாசம் இல்லை. எனினும் வெள்ளாளர்கள் சார்ந்து இவ்விடயம் கீழே கலந்துரையாடப்படுகிறது.

யாழ்ப்பாணத்திற்கும் தஞ்சாவூருக்கும் கட்டமைப்பு ரீதியாகக் குறிப்பிடும்படியான வித்தியாசங்கள் உள்ளனவா என்ற கேள்விக்குச் சிறந்த பதிலாகக் கிராம மட்டத்தில் யாழ்ப்பாணத்துச் சமூக அமைப்புப் பற்றிச் சிலவற்றினைக் குறிப்பிடுவது அவசியம்.

கிராமம் என்று ஒரே சொல்லாற் குறிப்பிட்டாலும், யாழ்ப்பாணத்தில் தனித்துவமான மூன்று வகையான ஊர்கள் உள்ளன. யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் வடபகுதியில் அமைந்திருக்கும் ஓர் ஊரை ஆனையிறவுக்குத் தெற்கே காட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஓர் "ஊருடன்" ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இரு ஊர்களினதும் சனத்தொகையானது ஏறக்குறைய ஒரே மாதிரியான, முற்றிலும் தமிழ்பேசும் இந்துக்களாலான ஒத்த பண்பாடாக அமைந்திருந்தாலும், சமூகவியல் முழுமையில் வித்தியாசப்படுவனவாக உள்ளன. இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட இரு பிரதேசங்களின் பொருளாதாரமும் குறிப்பிடத்தக்க வித்தியாசங்களைக் கொண்டுள்ளன என்பது மட்டுமல்லாமல், ஆனையிறவிற்குத் தெற்கே கிராமவாசிகள் குளத்து நீர்ப்பாசனத்தை நம்பி வாழ்பவர்கள் என்பதுடன், அவர்கள் சமூகக் கட்டமைப்புச் சார்ந்தும் வித்தியாசப்படு பவர்களாகவே உள்ளனர். பிரதானமாக மூன்று வகையான ஊர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளன. அவை கீழ்வருமாறு:

01. ஒரு சாதியின் ஒரு வட்டாரத்தை உள்ளடக்கிய ஊர்கள்.
02. பலசாதிகளைக் கொண்டுள்ள ஊர்கள்; அவற்றில் ஒரு சாதிக்கு ஒரு வட்டாரம் என்றமைந்தவை.
03. பல சாதிகள், அவை ஒவ்வொன்றும் பல வட்டாரங்களில் வசிப்பதாக அமைந்த ஊர்கள்.

இதில் முதலாம் வகையைச் சார்ந்த ஊர்களை ஆனையிறவிற்குத் தெற்கே பிரத்தியேகமாகக் காணக்கூடியதாக உள்ளது. இரண்டாவது வகையைத் தீபகற்பத்தின் தெற்குப் பாகத்திலும் ஆனையிறவிற்கு தெற்கிலும் காணலாம். மூன்றாம் வகையைச் சார்ந்த ஊர்கள் பிரதானமாகத் தீபகற்பத்தின் வடபாகத்திலும் யாழ்ப்பாணத்தின் மேற்குக் கடற்கரையில் உள்ள தீவுகளிலும் உள்ளன. இந்த மூவகை சார்ந்த கிராமங்களின் வரலாற்று ரீதியான வளர்ச்சியும்; அவை சூழலியலுடன் கொண்டுள்ள உறவின் தர்க்க ரீதியான தொடர் வரிசைப்படுத்தலும் இங்கு கட்டாயம் கைவிடப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வகைப்படுத்தலில் "வட்டாரம்" என்கிற சொல்லானது கீழ்வரும் அர்த்தத்திற் பயன்படுத்தப்பட்டுள்ளது. வகை 3 சார்ந்த கிராமமொன்றில் ஒரு வட்டாரமானது தெளிவாக எல்லைகளாற் பிறவட்டாரங்களில் இருந்து வரையறுக்கப்பட்ட ஒரு தனித்துவமான குடியிருப்புப் பிரதேசமாகும். ஒரு வட்டாரத்தின் குடியிருப்பாளர்கள் அனைவரும் ஒரே சாதியின் அங்கத்தவர்களுமாவர். ஒரே சாதியைச் சார்ந்தவர்களைக் கொண்ட பல வட்டாரங்கள் கொண்டதாக ஒரு கிராமம் அமைந்திருக்கும்போது இந்த வட்டாரங்கள் ஒன்றுக்கொன்று அருகில் அமைந்திருக்கலாம் அல்லது அவ்வாறு இல்லாதும் இருக்கலாம்.

ஓர் "ஊர்" என்பது குடியிருப்பிற்குரிய மற்றும் விவசாயத்திற்குரிய பிரதேசங்களை உள்ளடக்கும் ஓர் ஆட்சிப் பரப்பாகும். ஊரின் வேறுபட்ட வட்டாரங்கள் ஒரு கருவைச் சுற்றிய அணுத்துகள்கள் போலல்லாமற் சிதறுண்டதாகக் காணப்படும். இதைப்போன்றே ஒரு வட்டாரத்தின் ஆட்சிப் · பரப்பினுள் அதன் அங்கத்தவர்கள் ஒழுங்கற்றுச் சிதறுண்டு காணப்படுவர். சமூகவியல் ரீதியாக யாழ்ப்பாணத்தின் வட்டாரமானது தஞ்சாவூரின் "தெரு" என்பதுடன் பெரும்பாலும் ஒத்துக் காணப்பாட்டாலும், அது குறைந்த கட்டுக்கோப்புக் கொண்ட ஒரு குடியிருப்பாகும்.

வட்டாரங்களின் வெளிசார் பிரிப்பு என்பது ஒரு சமூகம்சார் பிரிப்பைப் பிரதிபலிக் கின்றது. ஓர் ஊரிலுள்ள வேறுபட்ட வட்டாரங்களின் அங்கத்தவர்கள் அவர்களுக்குள் சொற்ப சமூக உறவுகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இது ஒரே சாதியினரைக் கொண்ட வட்டாரங்களிற் சிறப்பாக இனங்காணக் கூடியதாகவுள்ளது. எந்தவொரு ஊரினுள்ளும் ஒவ்வொரு வட்டாரக் குழுவும் தனது சமூகப் படிவரிசையைத் தக்க வைத்துக் கொள்ளப் பிரயத்தனம் செய்கிறது. ஒத்த சாதியினரை உள்ளடக்கிய வட்டாரக் குழுக்கள் என்று வரும்போது படிவரிசை என்பது நுட்பமான விடயம் என்பதுடன், வட்டாரங்களுக் கிடையிலான சமூக உறவென்பது இறுக்கப்பட்டதொன்றாகவும் ஆகிவிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில விதிவிலக்குகளுக்கப்பால், பொதுவாக ஓர் ஊரில் உள்ள ஒரே சாதியைச் சார்ந்த ஒரு வட்டாரக் குழுக்கள் திருமண மற்றும் விருந்துக் கலப்பில் ஈடுபடா; அல்லது சிறிதளவிலான பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்கள், அத்துடன் ஒவ்வொருவரினதும் கோயில் திருவிழாக்களிற் பங்குபற்றுதல் - சில சந்தர்ப்பங்களில் வருடாந்த உற்சவங்களின் செலவின் ஒரு பகுதியை (ஓர் இரவுக்கும் பகலுக்குமான) வழங்கல் போன்றவை தவிர்ந்த எந்த சமூக உறவையும் கொண்டிரா. இப்பேற்பட்ட வட்டாரக் குழுக்கள் அந்தஸ்திற்காகப் போட்டி யிடுகின்றன என்ற வகையிலும் அத்துடன் படிவரிசையில் அதியுயர் நிலைக்கான உரிமை கோரலுடன் இணைந்த பின்வாங்குதல், விலகிக் கொள்ளுதல் என்ற வகையிலும் இந்த அணுகுமுறையானது ஆச்சரியம் தருவதாக இல்லை. இது சாதி முறைமையின் புனித பண்புடன் பொதுவாக சம்பந்தப்பட்டது.

எந்தவொரு வட்டாரத்தினைச் சார்ந்த அங்கத்தவரும் அயல் ஊரிலுள்ள ஒரே சொந்தக்காரச் சாதியைச் சேர்ந்த பிற வட்டாரங்களின் அங்கத்துவர்களுடன் திருமணம்செய்து கொள்வதுடன் நெருக்கமான உறவினையும் பேணிக்கொள்வர். எனவே, என்னால் சொந்தக்காரச் சாதி என்று அழைக்கப்பட்டது பல கிராமங்களைச் சேர்ந்த அங்கத்தவர்களின் சனத்தொகையால் உருவானதொன்றாகும். கருத்துருவ ரீதியாக இச்சொந்தக்காரச் சாதியானது மூடிய புற மணத்தடை முறைமையொன்றாகும்.

ஒவ்வொரு சொந்தக்காரச் சாதி அங்கத்தவர்களும் பொதுவாக அதே சாதிப் பெயரைக்கொண்ட ஏனைய சொந்தக்காரச் சாதியை விடவும் தன்னுடைய சொந்தக்காரக் குழுவை உயர்ந்த அந்தஸ்தில் உள்ள ஒன்றாகப் பேணிக் கொள்கின்றன.

உண்மை நிலவரங்களின்படி பார்க்கையிற் *சொந்தக்காரச் சாதிகள்* பொதுவாக இறுக்கமான புற மணத்தடையான முறைமைகளல்ல. ஏற்கனவே உறவுகளைக் கொண்டிராத வட்டாரங்களுக்கிடையில் திருணங்கள் நிகழும் அதேவேளையிற் பழைய சம்பந்தங்கள் துண்டிக்கப்படுவதாகவும் உள்ளன. இதனைவிடவும் திருமண சம்பந்தங்கள் பல திசைகளை நோக்கி நீண்டு பரவுவதாகவும் இருக்கும், எனவே, இரு வட்டாரங்கள் அவர்கள் பரஸ்பர திருமணத் தொடர்பினைக் கொண்டிருக்காவிட்டாலும் அவர்களுக்குத் தெரியாமலே இரண்டாம், மூன்றாம் அல்லது மேலும் தூரத்துத் தொடர்புகளைக் கொண்டிருப்பார்கள். இருவேறு வட்டாரங்களின் அங்கத்தவர்கள் திருமணத்தினூடு சொந்தக்காரர்கள் என்று என்னால் நிரூபிக்க முடிந்த நிலையிலும்கூட அவர்கள் ஒவ்வொருவரும் தாம்தான் மற்றவரிலும் மேலானவர் என உரிமைகோரும் ஒரு நிலவரத்தினை நான் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கோட்பாட்டின் அடிப்படையில் நிச்சயமாகத் திருமண உறவு என்பது சொந்தக்காரச் சாதியப்படி வரிசையிற் சரி நிகர்த் தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

**சாதிகளுக்கிடையிலான உறவுகள்**

ஊரின் எல்லா அங்கத்தினரையும், ஒரே சமூக முறைமையினுள் இணைக்கின்ற எந்தவொரு ஒற்றைப்பாடான கட்டமைப்பையும் யாழ்ப்பாணத்து ஊர்கள் கொண்டிருக்க வில்லை. ஒரு கிராமத்திலுள்ள ஒரே சாதியைச் சார்ந்த வட்டாரக் குழுக்கள் மற்றவற்றுடன் குறைந்தளவிலான உறவினையே கொண்டுள்ளார்கள் என்ற உண்மையானது ஊரிலுள்ள வெள்ளாளரின் வட்டாரங்களில் ஒவ்வொன்றும், வெள்ளாளரை அவர்களுக்குச் சேவிதம் செய்யும் சாதியினருடன் இணைக்கும் வேறுபட்ட சமூக உறவு வகைகளின் குவிப்பு என்பதாகும். மேலும் வெள்ளாளர்கள் தங்களுடைய ஏனைய சாதியைச் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையாட்களைத் தமது சொந்த ஊரில் இருந்தே பெறவேண்டும் என்ற அவசியம் இல்லை. சாதிகளுக்கிடையிலான பிணைப்புகள் ஊரின் எல்லைகளுக்குள் இருக்கும் அதே அளவிற்கு அதனைத் தாண்டியும் உள்ளது.

உதாரணத்திற்கு ஒரு வெள்ளாளரின் வட்டாரமானது, பள்ளரை அதே ஊரில் இருந்தும் கோவியர்களை அடுத்த கிராமத்திலிருந்தும், நாவிதர்களை மூன்றாவது ஊரில் இருந்தும் வேலைக்கு அமர்த்த முடியும். எனவே, யாழ்ப்பாணத்து ஊரானது தொடர்புமையான ஒருமைப்பாடு அற்றதாகக் காணப்படுகிறது; அது குறைந்தபட்சம் மலிநொவுஸ்கியின் அர்த்தத்தில் "ஒருமைப்படுத்தப்பட" என்று சொல்ல முடியாததாகும். இருந்தபோதும் கிராமமானது ஒரு விதத்தில் நிஜமுழுமை ஒன்றாகும். இது எளிமையான ஒரு வசதியான நிர்வாக அலகு என்பதைவிட மேலானது. யாழ்ப்பாணத்திற் சில ஊர்கள் பல நூற்றாண்டு காலப் பதிவு செய்யப்பட்ட வரலாற்றினைக் கொண்டவையாக உள்ளன. சிறுப்பிட்டி 1645 வரை நீளும் வரலாறு ஆவணங்களிற் பதிவாகியுள்ளது. குறிப்பிட்ட சில ஊர்களில் வசிப்பவர்களின் பண்புகளைக் குறிக்கும் சில பழமொழிகளும் காணப்படுகின்றன. பெரும்பாலான மக்கள் தாங்கள் ஒரு குறித்த கிராமத்தின் வழிவந்தவர்களாகவே கருதுகிறார்கள், அத்துடன் மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டால் மட்டுமேயொழிய தமது வட்டாரத்தின் பெயரை அவர்கள் குறிப்பிடுவதில்லை. வெள்ளாளர் இன்னும் ஒருபடி முன்னுக்குப்போய் தமது வட்டாரத்தினையே முழுஊராக எடுத்துரைக்கிறார்கள், அதே கிராமத்தில் இன்றும் சில வெள்ளாள வட்டாரங்கள் உள்ளன என்பதைக்கூட அவர்கள் கருத்திலெடுப்பதில்லை. உதாரணமாக: ஒரு கோவில் தேர்த் திருவிழாவின்போது ஊரின் ஒற்றுமையைக் குறிக்க எல்லோரும் இணைந்து தேர் இழுக்க வேண்டும் என்பதனை எனக்குக் கவனமாக விளங்கப்படுத்தினார்கள். இதன்போது ஏனைய வட்டார வெள்ளாளரின் முழுமையான பிரசன்னம் இன்மைபற்றி நான் விசாரித்தபோது அது தட்டிக் கழிக்கப்பட்டதுடன், தெளிவாகத் தொடர்பற்றதாகக் கருதப்பட்டது. "வட்டாரம்" என்ற சொல்லிற்கு யதார்த்தமான சொல்லொன்றின் இல்லாமை வட்டாரத்திற்கும் கிராமத்திற்குமிடையில் இப்பேற்பட்ட அடையாளப்படுத்தலைச் சாத்தியமாக்குகின்றது.

ஒட்டுமொத்த சமூக முறைமையையும் வெள்ளாள மையமாகவும் குவிப்பாகவும் பார்த்தல் என்பது வெள்ளாள சிந்தனையின் இன்னொரு பார்வையாகும். ஏனைய அனைத்துச் சாதியினரும் சேவகர்களாக, தடுத்து வைக்கப்பட்டவர்களாக, வெள்ளாளரின் துணைக்கோளாகக் கருதப்படுகிறார்கள். அல்லது அவர்கள் அவ்வாறு கட்டுப்படவில்லை என்பதன் காரணத்தினால் (உதாரணமாக மீன்பிடிப்பதைத் தொழிலாகக் கொண்ட சாதியினர்) அல்லது சமூக முறைமையிலுள்ள மாற்றங்களால் (கை வினைஞர்கள்) இந்த பொதுப் படத்தினுள் விலகலான சாதியினரைச் சம்பந்தமற்றவை என ஒதுக்கி வைக்கின்றனர்.

பாரம்பரியமாக வெள்ளாளர்களின் ஒவ்வொரு வட்டாரமும் அவர்களுக்கேயுரிய தங்கிப் பிழைக்கும் பிராமண, கோவிய, கைவினை, நாவித, வண்ணார, தீண்டத் தகாத தொழிலாள மற்றும் பறைய சாதிகளை உள்ளடக்கும் வட்டாரங்களைக் கொண்டுள்ளன. எவ்வாறாயினும் தற்போது ஒரு வெள்ளாள வட்டாரமானது அதன் பிராமணர்களை ஏனைய உறவற்றதான வெள்ளாள வட்டாரங்களுடன் பகிர்ந்து கொள்கிறது; அதாவது ஒரே பிராமணக் குடும்பம் வேறுபட்ட வெள்ளாள வட்டாரங்களில் அமைந்துள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கோவில்களிற் பூசைகள் மேற்கொள்ளமுடியும். ஒவ்வொரு வெள்ளாள வட்டாரத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் மரபு வழிவந்த வண்ணாரத் துணைக்கோள் வட்டாரத்தினாற் சேவை வழங்கப்படுகிறது. அவ்வாறான வண்ணார வட்டாரம் மரபு வழியில் ஒரு நேரத்தில் ஒரு வெள்ளாள வட்டாரத்திற்கு அதிகமாகத் தொழில் செய்வதில்லை. ஆயினும் சடங்குமயப்பட்ட சாதிக் கட்டுப்பாட்டிற்கு வெளியே அதே ஆட்கள் யாழ்ப்பாண மாவட்ட, நகரப் பிரதேசங்களில் அமைந்துள்ள ஆதாயமீட்டும் வர்த்தக ரீதியிலான சலவையகங்களை இயக்கமுடியும். ஒரு பறையர் வட்டாரமானது வழமையாக வேறுபட்ட பல வெள்ளாள வட்டாரங்களுக்குச் சேவையாற்றுகின்றது. அவ்வாறான வட்டாரங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கவேண்டியதில்லை. கோவிய மற்றும் நாவித வட்டாரங்கள் வழக்கத்தில் ஒரு வெள்ளாள வட்டாரத்திற்கே சேவை வழங்குகின்றன. அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வட்டாரங்களுக்கும் சேவைசெய்யும் சந்தர்ப்பத்தில் எல்லா வெள்ளாள வட்டாரங்களும் ஒன்றுக்கொன்று உறவுகொண்டவையாகவும், ஒன்றுக்கொன்று சமநிலைச் சொந்தக்கார அந்தஸ்து கொண்டவையாகவும் ஏற்றுக்கொள்ளப்படுவதாக உள்ளன. எவ்வாறாயினும், "குடிமைத் தொழில்" தனிப்பட்ட வெள்ளாளக் குடும்பங்களுக்கும், குறிப்பிட்ட ஏனைய சாதியைச் சார்ந்த குடும்பங்களுக்கும் இடையில் இணைப்புக்களைக் கொண்டதாகக் கருதப்பட்டாலும் அது ஈடுபடும் குழுக்களின் அளவு, வழங்கப்படும் சேவைக்கு நிலவும் கிராக்கி என்பனவற்றின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது. உதாரணமாக வண்ணாரச் சாதியானது அதிக எண்ணிக்கையிற் காணப்படுவதினால் ஒவ்வொரு வண்ணாரக் குடும்பமும் ஒரு சிறிய வெள்ளாள வாடிக்கையாளர்களின் குழுவினைக் கொண்டுள்ளது. மறுபுறத்தில் பிராமணர்கள் எண்ணிக்கையில் குறைவானவர்கள். ஓரிரு பிராமணக் குடும்பங்களே ஒரு வட்டாரத்திலுள்ள அனைத்து வெள்ளாளருக்கும் சேவையாற்றுகின்றன. இதைப்போன்றே ஒரு பறையர் வட்டாரத்தில் தொழில்செய்யும் பறையருக்கும், அவர்கள் சேவை வழங்கும் வெள்ளாளருக்குமிடையிற் குறிப்பான தனிப்பட்ட உறவுகள் காணப்படுவதில்லை என்றே கூறவேண்டும். பறையறைதல் என்பது ஒரு குழுவைச் சார்ந்த செயற்பாடாக இருக்கும் காரணத்தினால்; பறையர்களின் ஒரு சிறிய குழுவானது அந்த வட்டாரத்தின் எல்லா வெள்ளாளருக்கும் சேவை வழங்குவதாக இருக்கும். கோவியரும், நாவிதரும் ஒரு குறிப்பிட்ட குடும்பங்களுக்கோ அல்லது தனிப்பட்ட நபர்களுக்கோ சேவை வழங்கும் போக்கைக் கொண்டுள்ளனர். நிச்சயமாக வெள்ளாளருடன் இத்தகைய சேவை இணைப்புகளற்ற எல்லாச் சாதியினர் சார்ந்தும், சில அங்கத்தவர்களும் சில வேளைகளில் முழுவட்டாரக் குழுவும் காணப்படுவதுண்டு. தற்போதைய தலைச்சுமை அங்காடியார்களாகவும், வர்த்தகர்களாகவும், துணி விற்பனையில் ஈடுபடுபவர்களாவும், ஒப்பந்தக்காரர்களாகவும் தேர்ச்சிபெற்றுள்ள பறையர்களைப் பொறுத்தமட்டில் இது சுட்டிப்பான ஓர் உண்மையாகும்.

பள்ளர் மற்றும் நளவர் தனித்தனிச் சாதிகளாக இருப்பினும் அவர்கள் சமூக முறைமையினுள் மிகவும் ஒத்தநிலையுடைய வகிபாகத்தைக் கொண்டவர்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் மாற்றீடானவர்களாக இல்லாதுவிட்டாலும், அவர்கள் ஊரிற் சகவாசம் கொண்டவர்களாக இருப்பர். ஒரேநேரத்தில், ஒரே வெள்ளாளராற் பள்ளர் மற்றும் நளவர் என்ற வேலையாட்கள் ஒரு வேலைக்காக அமர்த்தப்படுதல் நிகழக்கூடியதாகவுள்ளது. முன்பு இந்த இரு குழுக்களும் வெள்ளாளரின் வீட்டு அடிமைகளாக இருப்பினும் தற்போது அவர்கள் வெள்ளாள எசமானுக்குக் கூலிக்காக வேலை செய்யும் சுதந்திரமான முகவர்களாக உள்ளனர். பள்ளர் சாதியைச் சார்ந்த அல்லது நளவர் சாதியைச் சார்ந்த ஒரு தனியாள் ஒரு வட்டாரத்தைவிட மேற்பட்ட பல வெள்ளாள எசமானர்களுக்குச் சேவை வழங்குபவராக இருக்கலாம். ஆயினும் வழக்கத்தில் ஒருவர் வெள்ளாள எசமான்களின் கட்டுப்பட்ட ஒரு வட்டத்தினுள் மட்டுமே சேவை வழங்கலாம். இதற்கு மாறுபட்டதாக ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளாளரும் குறித்த பள்ளர் வட்டாரத்திலிருந்து சிறிய எண்ணிக்கையிலான பள்ளரை மட்டுமே வேலைக்கு அமர்த்துகின்றனர். பள்ளரும் நளவரும் தினசரிக் கூலி அடிப்படையிலேயே வெள்ளாள எசமானுக்கு வேலை செய்கின்றனர். கோட்பாட்டின் அடிப்படையில் அவர்களுக்குத் தமது எசமானைத் தெரிவு செய்துகொள்ளும் உரிமை உண்டு. ஆனாலும் பெருமளவிலானவர்கள் வாடகையற்ற குடியிருப்பாளர்களாக வெள்ளாளர்களின் காணிகளில் வசிக்கும் காரணத்தினால் அவர்கள் தமது வெள்ளாள நில உரிமையாளர்களிடமிருந்தே வேலை தேடவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். சில சந்தர்ப்பங்களிற் பள்ளரும், நளவரும் வெள்ளாளரிடம் இருந்து தோட்ட நிலங்களை வாடகைக்குப் பெற்று உழைப்பு வடிவில் வாடகை செலுத்துகின்றனர். மிகச் சொற்ப அளவிற் பள்ளரும் நளவரும் நெல் வயல்களைக் குத்தகைக்கு அமர்த்தி ஒரு பங்கு விளைச்சல் முறையான வேளாண்மையை மேற்கொள்கிறார்கள்.

பல பள்ளரும், நளவரும் வெள்ளாளரிடமிருந்து பணத்தைக் கடனாகப் பெற்றிருப்பினும் இது அடிமைத்தனத்தின் அறிகுறியாகக் கருதப்படுவதில்லை. உழைப்பாளிகள் குறைவாக இருப்பதனால் வெள்ளாளர்கள் தங்களுக்குத் தேவையான நேரத்தில் பணம் கொடுத்து அவர்களது உழைப்பைப் பெறுபவர்களாக இருக்கிறார்கள். தமது தீண்டத்தகாத உழைப்பாளிகளின் பிறப்பு, திருமணம் மற்றும் பிற நிதி நெருக்கடிகளின்போது உதவி புரியவேண்டிய பாரம்பரிய கடப்பாடுகள் வெள்ளாளருக்கு உண்டு. இந்த நிதியுதவியானது தஞ்சாவூரில் இருப்பதுபோல எசமானால் தனது தீண்டத்தகாதவர்களுக்கு வழங்கப்படும் ஒரு கடனாக (கோ 1955) அல்லாமல், அது ஒரு வெள்ளாளனாற் கடப்பாட்டுடன் வழங்கப்படும் அன்பளிப்பாகவே உள்ளது. தற்போதும் தஞ்சாவூரில் நிலவுவதைப் போலல்லாமல் வெள்ளாளர்களுக்கும் அவர்களின் நிலஉரிமையற்ற உழைப்பாளிகளுக்கு மிடையில் நிலவும் பொருளாதாரத் தொடர்பு மிகவும் சமன் செய்யப்பட்டதொன்றாகவும், மிகவும் நொதுமலானதாகவும் காணப்படுகிறது.

**சாதிச் சேவைகளுக்கான கொடுப்பனவுகள்**

வெள்ளாளர்கள் பலவிதமான வழிகளில் ஏனைய சாதி அங்கத்தவர்களுக்கு அவர்களின் குலத்தொழிலுக்கான கொடுப்பனவுகளை வழங்குகின்றனர்.

பிராமணர் கோவில் நிதியத்திலிருந்து சம்பளம் பெறுகின்றனர். சிறிய கோவில்களிற் கடவுளுக்குக் காணிக்கையாக்கப்படுபவைகளையும் அவர்களால் பெற்றுக்கொள்ளமுடியும். திருமணம், திதி போன்ற குடும்பச் சடங்குகளின்போது அவர்களுக்குச் சமைக்கப்படாத உணவுப் பொருட்களும், சிலவேளைகளிற் புதிய துணிகளும் தானமாக வழங்கப்படுகிறன.

நாவிதர் தமது சேவைக்கான கொடுப்பனவாக நெல்லைப் பெறுகிறார்கள். அவர்களது சேவையானது சடங்கு ரீதியான சவரம் செய்தல் மாத்திரமல்ல, அவர்கள் அந்திமக் கிரியைகளின்போது பாடையைத் தயார் பண்ணல், திருமணத்தின்போது ஒரு சட்டரீதியான சாட்சியமாக இருத்தல் என்றதாகவும் செயற்படுகிறார்கள். புறநடையான நிகழ்வொன்றாக அவர்களுக்கு வருடந்தோறும் கொடுக்கப்படும் நெல்லுக்கு மேலதிகமாகப் பணமும் வழங்கப்படுகின்றது.

இதைப்போன்றே வண்ணாரச் சாதியினருக்கு அவர்களது சடங்கு சார்ந்த கடமைகளுக்காக நெல் கொடுப்பனவாக வழங்கப்படுகிறது. மேலும் அவர்கள் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையைப் பெறும் குடும்பங்களில் இருந்து ஒரு வருட பகிர்ந்தளிப்பாகவும் நெல்லைப் பெறுகின்றனர். பெரும்பாலான வெள்ளாளக் குடும்பங்கள் தங்களுடைய துணிகளைத் தாங்களே சலவை செய்கின்றனர். மாதவிலக்குக் கால ஆடைகள் மாத்திரமே சடங்கு நிலை வண்ணார்களினால் சலவை செய்யப்படுகின்றது. வண்ணார் எல்லா ஆடைகளையும் சலவைசெய்ய அமர்த்தப்படுகையில் அவர்களுக்கு மேலதிகமான வர்த்தக மதிப்பீட்டின் பிரகாரம் பணக் கொடுப்பனவு செய்ய வேண்டியுள்ளது. ஒரு வண்ணாரின் சடங்கு சார்ந்த கடமையின் போது அலங்கரித்தல் என்பது அடிப்படையான சடங்காகவுள்ளது. திருமணத்தின்போது நாவிதர் போலவே வண்ணாரும் ஓர் அத்தியாவசியமான சட்ட ரீதியான சாட்சியமாவார். நாவிதரும் வண்ணாரும் தங்களுக்கும் வெள்ளாளருக்குமான இணைப்பை கடமை சம்பந்தப்பட்டதாக அல்லாமல் உரிமை சம்பந்தப்பட்டதாகவே நோக்குகின்றார்கள். தமது சொந்தச் சாதியினுள் தமது உயர் சொந்தக்காரச் சாதிப் படிநிலைக்கான உரிமை கோரலின் ஒரு பகுதியினை அவர்களின் எசமானர்களின் சொந்தக்காரச் சாதியின் உயர் நிலையிருக்கான தமது உரிமைகோரலில் இருந்து உருவாக்கிக் கொள்கின்றார்கள்.

கோவியர்களும் இதே உடைமை உரிமையாண்மை மனப்பாங்கைத் தழுவிக் கொண்டுள்ளார்கள். அவர்கள் பொதுவாகவே தங்களுடைய சாதிச் சேவைகளைத் திருமணங்களின்போதும் இறுதிக் கிரியைகளின்போதும் மேற்கொள்ள விருப்பம் கொண்டுள்ளார்கள் (திருமண வீடுகளிற் சமைப்பது மற்றும் விருந்தினரை உபசரிப்பது போன்றவையும் இறுதிக் கிரியைகளின்போது பிணத்தினைச் சுடலைக்குக் காவுதல் போன்றவை இதில் உள்ளடங்கும்). இவற்றுக்காக அவர்கள் நெல்லையும் பணத்தையும் பெற்றுக்கொள்கிறார்கள். எவ்வாறாயினும் கோவியர்கள் நெல்லை வருடாந்தக் கொடுப்பனவாகப் பெறுவதில்லை. தவிர அவர்கள் வேலைக்காரர்களாக அல்லது தொழிலாளர்களாக இயங்கும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்குப் பணமும் உணவும் கொடுப்பனவாக வழங்கப்படும்.

பறையர்கள் சாவு வீட்டில் பறையறைதலுக்காக நெல், பணம் மற்றும் சிலவேளைகளிற் குடிபானங்களும் பெறுகின்ற அதேவேளை; அவர்கள் ஒவ்வொரு வெள்ளாள குடும்பத்திலும் வருடந்தோறும் வீட்டு முற்றத்தில் வெள்ளாள வம்சாவழிப் பாராயணம் செய்வதற்காக நெல்லைக் கொடுப்பனவாகப் பெறுகின்றனர். பள்ளர்களும், நளவர்களும் இறுதிக் கிரியைகளின்போது மாத்திரம் தமது சேவைகளை வழங்குகின்றனர். அதன்போது சிதையை அமைப்பதும், சடலத்தினை முழுமையாக எரியூட்டுவதைக் கவனிப்பதும் பொதுவாக அவர்களின் பொறுப்பாகும். இதற்காக அவர்கள் பணமும் குடிவகைகளும் பெற்றுக் கொள்கிறார்கள்.

இன்று கைவினைஞர் சாதிகளுடனான உறவுகள் கண்டிப்பாகவே வணிக நிலைப்பட்டனவாகவுள்ளன. எவ்வாறாயினும் பொற்கொல்லர்கள் தாலிக்கான பொன்னை உருக்கும் திருமணத்திற்கு முந்திய சடங்கிற் பங்கு கொள்கிறார்கள். தச்சர் சம்பந்தப்பட்ட சடங்குகள் வீடு கட்டும்போது உள்ளன. இச்சாதியினருக்குக் கொடுப்பனவுகள் பணமாகவே செலுத்தப்படுகிறது.

சாதிகளுக்கிடையிலான உறவின் தற்போதைய கட்டமைப்பானது 1844 ஆம் வருடத்திய அடிமைமுறை ஒழிப்பிற்கும், கடந்த நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் நிகழ்ந்த கைவினைச் சாதியினரின் விடுதலைக்கும் முன்னர் இருப்புச் செய்த சாதிகளுக்கிடையிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவின் சிதைந்த ஒரு வடிவமாகும். பிராமணர் நீங்கலாக, வெள்ளாளருக்குச் சேவைபுரியும் அனைத்துச் சாதியினரும் அடிமை மற்றும் குடிமை என்று இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். அடிமைச் சாதிகள் வீட்டு அடிமைகளாக இருந்தவர்கள். இதனுள் இப்போது மரபற்று ஒழிந்த சாதியினருக்கு மேலாகக் கோவியர்கள், நளவர். பள்ளர் என்போர் உள்ளடக்கப்பட்டிருந்தனர். குடிமைச்சாதிகளாகப் பொற்கொல்லர், கொல்லர், நாவிதர், வண்ணார் மற்றும் பறையர் என்போர் உள்ளடக்கப்பட்டிருந்தனர். குடிமைச்சாதியினர் அடிமைகளாக இருக்கவில்லை என்பதனால் அவர்கள் அடிமைகளைப்போல விற்கவும் வாங்கவும் கூடியவர்களாக இருக்கவில்லை. எவ்வாறாயினும் அவர்கள் தங்களுடைய எசமானுக்குத் தமது சாதிசார் தொழிலைச் செய்யக் கட்டுப்பட்டவர்கள்.

உழைப்பு வழங்கப்பட்ட சேவையறிதல் முறைமையின் சட்டபூர்வத் தன்மையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டதன் விளைவாக மூன்று கைவினைஞர் சாதிகள். விடுதலை பெற்றனர். எனவே மற்றைய மூன்று குடிமைச் சாதிகளும் தமது சேவைகளைத் தூக்கியெறிதலை எதுவும் தடுக்கவில்லை. அவ்வாறு செய்தல் அவர்களுக்குப் பொருளாதார அனுகூலமாக இருந்திருக்கலாம். எதிரிடையாக, கைவினைஞர்களுக்கு விடுவிக்கப் படுதலானது இலாபம் தருவதாகவும் இருந்தது.

முன்னர் நான்கு அடிமைச் சாதிகளும் ஒரே மாதிரி அணுகப்பட்டன. உதாரணமாக, அனைவரும் திருமணம் செய்துகொள்ளும்போது தமது எசமானர்களின் அனுமதியைப் பெற வேண்டியிருந்தது (இப்பழக்கம் சில ஊர்களில் இப்போதும் விடாது தொடரப்படுகிறது) அவ்வாறான அனுமதி குறித்த ஆண் அடிமையும், பெண் அடிமையும் ஒரே உரிமையாளருக்குச் சொந்தமாக இருக்கும்போதே வழங்கப்பட்டது; அவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்தில் ஆண் அடிமையின் உரிமையாளர் பெரும்பாலான பிள்ளைகளை இழக்க வேண்டியிருக்கும். அடிமைச்சொத்தினை மரபுரிமை ரீதியாகச் சொந்தம் கொண்டாடுதலைப் புறக்கணிக்கும் உரிமையினை உரிமையாளர்கள் கொண்டிருந்தனர். ஆயினும் இன்னொரு வழியில் அடிமைகள் தீண்டத்தகாதவர்கள் (பள்ளர் மற்றும் நளவர்) மற்றும் தீண்டத்தகுந்தவர்கள் என இருவேறு குழுக்களாக நடாத்தப்பட்டனர். இதில் தீண்டத் தகுந்தவர்கள் எனக் கருதப்பட்டவர்கள் மிகவும் சுதந்திரமுடையவர்களாகவும், பிறப்பின்போது பொருளாதார உதவி பெறுபவர்களாகவும், அவர்களது எசமானர்களிடமிருந்து உணவு மற்றும் நிலம் என்பனவற்றைப் பெறுபவர்களாகவும் இருந்தனர். தீண்டத்தகாத அடிமைகள் பொதுவாக உணவையும் ஆடைகளையும் தாமே தேடிக்கொள்ள வேண்டியிருந்தது. அத்துடன் அவர்களின் வெளிப்புற ஆதாயத்தின் ஒரு பகுதியினை எசமானர்களுக்கு வருடம்தோறும் கொடுக்க வேண்டியிருந்தது.

பண்டைய காலத்திலிருந்து தற்போதைய காலம்வரையிலும் விவசாய நிலங்களில் மிகவும் அதிகமானவை வெள்ளாளருக்கே சொந்தமாக இருந்தன. ஆயினும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்குச் சொத்துரிமை சட்டரீதியாக நிராகரிக்கப்பட்டு இருக்கவில்லை. பத்தொன் பதாம் நூற்றாண்டில் இருந்து திகதியிடப்பட்ட ஆரம்பகால நிலஅளவைக் காணிப் பதிவுகளிலிருந்து அடிமைச் சாதியினர் உட்பட வெள்ளாளர் அல்லாதோர் நிலவுரிமையைக் கொண்டுள்ளமை பதிவாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முடிவுரை**

யாழ்ப்பாணத்து ஊர்களையும், தஞ்சாவூர் ஊர்களையும் சாதியம் சார்ந்து ஒப்பிடுகையில் கீழ்வரும் வேறுபாடுகளை மிகத் தெளிவாக இனம் காணலாம்.

01. பிராமணர்களின் வகிபாகமானது மிகவும் வித்தியாசமானது, இவ்விடயம் பற்றிச் சில விபரிப்புகளுடன் ஏற்கனவே கலந்துரையாடினோம்.

02. ஊர் எனப்படும் பிராந்திய ரீதியான மற்றும் அரசியல் அலகின் சாதிக்குள்ளும் சாதிக்கிடையிலுமுள்ள உறவுகள் சார்ந்த வேறுபாடுகள்; தென்னிந்தியாவில் சாதிகளுக்கிடையிலான கட்டுக்கோப்புகள் ஊரினை ஒன்றாகச் சேர்ப்பதாக உள்ளது. பொருளாதார மற்றும் சடங்கு சார்ந்த கடப்பாடுகளால் ஊரின் அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் இணைக்கப்படுகின்றனர். பொதுவான சாதி அங்கத்துவத்தாலும், சாதிக்குள் உறவு முறை சம்பந்தங்களாலும் அவர்கள் வித்தியாசமான கிராமங் களுக்கிடையிற் பிணைப்புகளைத் தாபிக்கின்றதாக இருந்தாலும் தனிக் கிராமங்களைப் பிரிக்கும் போக்கை உருவாக்குகின்றன (ஸ்ரீநிவாஸ் 1952). தஞ்சாவூர் கிராமமானது இந்த வகையைச் சார்ந்ததாகத் தோன்றுகிறது.

தஞ்சாவூர் கிராமங்களைப்போல, யாழ்ப்பாணக் கிராமங்கள் சமநிலையான முறைமையினைக் கொண்டுள்ளன. அதேவேளை அவை வித்தியாசமான சமநிலையாகும். அது கிராமத்தின் எல்லைகளைத் தாண்டிய சாதிகளுக்கிடையிலான உறவுமுறைப் பிணைப்புகள் மட்டுமல்லாமற் சாதிகளுக்கிடையிலான அரசியற் கடப்பாடுகளையும் உள்ளடக்கியவை. யாழ்ப்பாணத்தில் இந்த சக்திகள் ஒன்றை ஒன்று பலதிசைகளில் குறுக்கு வெட்டுவனவாகவும் இதனால் ஒன்றை ஒன்று இரத்துச் செய்வதாகவும் உள்ளன. ஒவ்வொரு கிராமக்குழுவும் ஏனைய கிராமங்களுடன் உறவுமுறையான தொடர்பினைக் கொண்டுள்ளன. ஆயினும் அது அக்கிராமத்தின் குறித்த பகுதிகளுடன் மாத்திரமேயாகும். மேலும் கணிசமான வேறுபட்ட கிராமங்கள் இருவகையான தொடர்புகளுடனும் சம்பந்தப்பட்டிருக்கலாம். ஊரினுள் சாதிகளுக்கிடையிலான சில தொடர்புகள் காணப்படினும் இவை சம்பந்தப்பட்ட சாதியின் பகுதியினருக்கிடையிலேயே எட்டப்படுகிறது. ஒரே கிராமத்தின் வேறுபட்ட பகுதிகளுக்கிடையிற்கூடச் சாதிகளுக்கிடையிலான தொடர்புகள் நிகழலாம்.

இந்தப் பல சரிபார்த்தல் மற்றும் சமன் செய்தலின் ஒட்டுமொத்த முறைமையானது, கிராம ஒருமைப்பாட்டிற்கான பெரும்பகுதியை உற்பத்தி செய்வதில்லை. அல்லது அது அதை முற்றாகக் குழப்புவதாகவும் இல்லை. மறுபுறத்தில் இது ஒரு ஸ்திரத் தன்மையான முறைமையாகும். அதிஉயர் மட்டத்திலான கல்வியறிவு மற்றும் பல ஆயிரக்கணக்கான யாழ்ப்பாணத்து மக்கள் வயதுவந்த நிலையில் தமது வாழ்க்கையை உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்தவர்கள் என்ற உண்மைக்கு அப்பால் இலங்கையின் பிறபாகங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாணம், அதன் அதிதீவிரக் கட்டுப்பெட்டித்தனத்திற்குப் பெயர்போனது. இப்பேற்பட்ட ஆண்களும், பெண்களும் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிய பின் இலகுவாக உள்ளூர் சமூக முறைக்குள் மீண்டுவிடுகிறார்கள். அரசியல் தளத்தில் அடித்துச் செல்லுகின்ற மாற்றங்கள் மற்றும் பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்ததான ஐரோப்பிய காலனித்துவ ஆட்சி அமுல்படுத்தல் என்பதற்கப்பால் கிராமிய மட்டத்தில் சிறிய மாற்றங்களுடன் நீண்ட காலத்திற்கு யாழ்ப்பாணத்துச் சமூக முறைமைகள் நின்று நீடித்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர்களால் விட்டுச் செல்லப்பட்ட மிக அதிகளவிலான ஆவணங்களை ஆராய்வதினூடாக யாழ்ப்பாணத்தின் சாதி முறைமையில் நிர்வாக ரீதியிலான மற்றும் அரசியல் ரீதியிலான உயர் நிலையான தாக்கத்தினால் விளைந்த மாற்றங்கள் பற்றி மதிப்பீடு செய்துகொள்ள முடியும். இந்தக் காலனிய ஆட்சியாளர்கள் தாம் வந்திறங்கியபோது நடைமுறையில் இருந்த வரி சேகரிப்பின் அரசியல் அடித்தளத்தினை மாற்றுவதில் மிகவும் எச்சரிக்கையுடன் இருந்தார்கள் என்பது தெளிவு. வரி பெறுவதற்காகவும், அரசியல் அடித்தளத்தினடிப்படையிலும் சனத்தொகையைச் சாதியின் பெயரால் வகைப் படுத்தியமையை எம்மாற் காணமுடிகிறது; வரி அறவிடுதல் என்பது நிலத்தை நிர்வகித்தலுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் எல்லாக் காணிகளும் நேரடியான உரிமையாக இருந்த அதேவேளை அரசனுடைய நிலவுடைமையாகவும் இருக்கவில்லை. பல சாதிகளிடம் இருந்து பல அளவுகளில் வரி அறவிடப்பட்டது. வரி பொறுப்பு ஒரு குறிப்பிட்ட சாதியைச் சார்ந்ததான சொத்துக்களிலிருந்து தோன்றும் ஒன்றாக இருந்ததேயொழிய நிலத்தைச் சொந்தமாக்கிக் கொண்டுள்ளமை தொடர்பானதாக அமையவில்லை. மேலும் பல சாதி வரிகள் அந்தந்தச் சாதியைச் சார்ந்த உத்தியோகத்தர்களாற் சேகரிக்கப்பட்டது. இந்தச் சாதி உத்தியோகத்தர்களின் அதிகாரப் படிநிலையானது அரசனைத் தலைமையாகக் கொண்டு பிரமிட்டு வடிவுடையதான அதிகார அடுக்காக அமைந்திருந்தது. உத்தியோகத்தர் களின் பிரதேசத்து அதிகாரப்படி நிலைகளும் இருந்தன. ஆனாலும் இவை வருமானத்துடன் சிறிதளவே சம்பந்தப்பட்டிருந்ததைக் காணமுடிகிறது. இந்தநிலையில் மிகவும் கீழ் சாதிகள் அரசுடன் நேரடியான கடப்பாடு இணைப்புகளைக் கொண்டிருந்த அதேவேளை, அவர்களது எசமானர்களுடனும் உள்ளூர் இணைப்புகளைக் கொண்டிருந்தனர்.

இவ்வாறான முறைமையானது இலங்கையின் சிங்கள மக்களிடமிருந்தும், தஞ்சாவூரில் நிலவும் அதிகளவிலான "நிலப்பிரபுத்துவ" அமைப்பில் இருந்தும் கண்டிப்பாக வித்தியாசப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டிற் பிரித்தானியர்களால் அறிமுகப்படுத் தப்பட்ட நிர்வாகச் சீர்திருத்தங்களின் விளைவாக இவ்வரசியற் கட்டமைப்பின் மேல் அடுக்குத் தற்போது காணாமற் போயுள்ளது; இப்போது சாதிக் குழுக்கள் அரசுடன் நேரான கடப்பாடு கொண்டனவாக இல்லை. ஆனால் இந்த முன்னேற்றங்கள் வெள்ளாளரைக் குவிமையமாகக் கொண்ட கிராம மட்டத்திலுள்ள, (இரண்டாம் நிலையான) உள்ளூர் சாதிகளுக்கிடையிலான உறவினைப் பாதிக்காது விட்டுள்ளன. தஞ்சாவூரைவிட யாழ்ப்பாணத்து முறைமை பரந்துபட்ட நபர்களுக்கிடையிலான கடப்பாட்டினை அமுல்படுத்துகிறது. தஞ்சாவூரில் தனிநபர் அவரது ஊருக்கு அல்லது சாதிக்கு முழு அர்ப்பணிப்புக் கொண்டவராக, ஒரு நெருக்கடி நிலையில் அவருடைய பற்றுறுதிகள் பற்றிய சந்தேகம் அற்றவராகவும் உள்ளார். ஆனால், யாழ்ப்பாணத்து மனிதன் எந்தத் தெளிவான துருவநிலைகள் தோன்றுவதற்குரிய பல திசைப்பட்ட மற்றும் குறுக்குவெட்டும் இணைப்புக்களை மிக அதிகமாகக் கொண்டுள்ளான்.

வட்டாரங்களுக்கிடையிலான செயற்பாட்டின் குணவியல்பினால் அவை நிலையற்ற வையாகும். தனிப்பட்ட நிலைக்காகத் தனிநபர்கள் போர்த் தந்திரங்களில் தமது சார்பு நிலைகளைத் தொடர்ந்து மாற்றினார்கள். இது மறுபுறத்தில் வாடிக்கையாளர் – புரவலன் முறைமையுடன் சம்பந்தப்பட்டது. (இது சாதிக்குள்ளும், சாதிகளுக்கிடையிலும் செயற்பட்டது). இது தனிப்பட்ட கடப்பாடுகளின் பல்வகையான குறுக்குவெட்டும் கட்டமைப்புகளின் பகுதியுமாகும். மக்கள் எவ்வளவு இயலுமோ அவ்வளவு புரவலர்களைக் கொண்டிருக்க முயற்சிக்கும் அதேவேளை; புரவலர்களும் எவ்வளவுக்கியலுமோ அவ்வளவு வாடிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளரைக் கொண்டிருக்க முயற்சித்தனர். மறுகாப்பீடு என்பது அன்றைய விதியாகும். ஆனால், எவ்வளவு அதிகமான புரவலர்களை ஒரு மனிதன் கொண்டிருக்கிறானோ அந்தளவிற்கு அவரது பற்றுறுதிகள் முரண்படும், எந்த ஒரு போராட்டத்திலும் விருப்பார்ந்த பங்காளியாக அவர் இருப்பதற்கான சந்தர்ப்பமும் குறைவு. அவருக்கு அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டால் அவர் பெரும்பாலும் தப்பியோடுவதற்கான சாத்தியப்பாடு உண்டு. ஒரு மனிதனுக்குக் குறைந்தளவு போஷகனைக் கொண்ட தீண்டத்தகாதவர்களும், கோவியர்களும் தமது எசமானர்களின் சார்பில் சிரத்தை கொண்டவர்களாக உள்ளனர் என்பதை அவதானிக்க முடிகிறது.

தஞ்சாவூர் மற்றும் யாழ்ப்பாணச் சமூக முறைமையில் நிலவும் "சமநிலை" வகையின் எதிரெதிர்த் தன்மையை அவற்றின் "வெடிப்பு" புள்ளிகளின் குணவியல்புகளைக் கருத்திலெடுப்பதனூடு விளக்கப்படலாம். சண்டைகளையும், வன்முறையின் பயன்பாட்டை யும் தருவித்த நிலைபரங்கள் எவை? தஞ்சாவூரில் ஊர்களுக்கிடையில் சண்டை மூழுகையில் சாதியைக் கவனத்திற் கொள்ளாது ஊரின் அனைத்து அங்கத்தவரும் எதிரி ஊருக்கு எதிராகத் தமது ஊரினை ஆதரிப்பர். மறுபக்கத்தில் தஞ்சாவூரில் சாதிப் பூசல்கள் வெடிக்கையிற் சாதிகளுக்கிடையில் துருவ நிலைப்படல் இடம்பெறும். உதாரணமாக: தமது தண்டனையைப் பள்ளர்கள்மீது அமுலாக்கப் பிராமணர் எல்லோரும் ஒன்றிணைவர். அத்துடன் தண்டனைக்குரிய பள்ளனின் பிராமண எஜமான் தனது பணியாளுக்காக வாதிட்டாலும் அவர் அவனை வல்லமையுடன் பாதுகாக்கவோ, தனது சாதியினருக்கு எதிராகச் செயற்படவோ மாட்டார். ஆனால் யாழ்ப்பாணத்தில் ஊர்களுக்கிடையில் அல்லது ஓர் ஊரின் ஒரே சாதியின் இரு வட்டாரங்களுக்கிடையிற் சண்டை நடைபெறுவதில்லை. நிகழும் வன்முறையான சண்டைகள் இருவகைப்படும்.

01. ஒரே வட்டாரத்தைச் சார்ந்த இரு கோஷ்டிகளுக்கிடையிலான கோஷ்டி மோதல்கள்; இது ஒரே வட்டாரத்தினைச் சேர்ந்த, ஒரே சாதியைச் சேர்ந்த அங்கத்தவர்களுக்கிடையில் நிகழும். அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் ஏனைய சாதிகளின் அங்கத்தவர்கள் வாடிக்கையாளர், புரவலர் என்ற உறவின் அடிப்படையில் மோதலில் வந்து இணையலாம்.

02. ஒரு வெள்ளாளர் தன்னுடைய சொந்த வாடிக்கையாளன் இல்லாத பள்ளரை அல்லது தீண்டத்தகாத சாதியைச் சார்ந்த தொழிலாளர் ஒருவரைக் கண்டித்தல் காரணமாக மோதல் வெடிக்கலாம். அவ்வாறான சந்தர்ப்பத்தில் கீழ்ச்சாதி ஊழியனின் வெள்ளாள புரவலன் அவனுக்கு உதவிக்கு வருவார். அப்போது இரு வெள்ளாளத் தலைமைகளில் கோஷ்டி மோதல்களாகிக் கலப்புச்சாதி கோஷ்டிப் பூசல்களாக வடிவெடுக்கும். சாதிய கூட்டொருமையைப் புரவலனுக்கும் வாடிக்கையாளனுக்குமான கடப்பாடுகள் வழமையில் மேவிநிற்கின்றன. பள்ளர் சாதியைச் சேர்ந்த ஆணொருவர் வெள்ளாளப் பெண் ஒருத்தியுடன் பாலுறவு கொள்ளுதல் போன்ற கடுமையான பாலியல் குற்றங்களின் போது சாதிய எல்லைகளை ஒட்டி விரோதங்களின் துருவமயப்படல் நிகழ வாய்ப்புண்டு. எனினும் இங்குகூட விரோதம் வட்டாரத்திற்கு அப்பாற் செல்வதில்லை. இச்சந்தர்ப்பங் களில் ஒரு வட்டாரத்திலுள்ள வெள்ளாளர்கள் இன்னொரு வட்டாரத்திலுள்ள எல்லாப் பள்ளர்களையும் தாக்குவர். ஆனால் அதே ஊரின் அயல் வட்டாரங்கள் தங்களை இந்த மோதல்களுடன் ஈடுபடுத்திக் கொள்ளாது.

சுருக்கமாகச் சொன்னால், சாதியின் வசிப்பிடக்குழு அதாவது வட்டாரத்திலேயே யாழ்ப்பாணத்திற் பிரதேச ஒருமைப்பாட்டு உணர்வானது குவிக்கப்பட்டுள்ளது – மாறாக அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழு ஊரிலுமல்ல. எதிரிடையாகத் தஞ்சாவூரில் ஊர்களுக்கிடையிலும், ஒரே ஊரினுள் சாதிகளுக்கிடையிலும் அதிகளவு பதட்டம் காணப்படுகிறது. பல குறுக்குவெட்டான கட்டுக்களைக்கொண்ட யாழ்ப்பாணத்து முறைமையானது, கிராமங்களுக்கிடையிலும், சாதிகளுக்கிடையிலும் பதட்டத்தின் மட்டத்தினைக் குறைப்பதாக உள்ளது என்ற பார்வை, இதை உறுதிப்படுத்தவதாகத் தோன்றுகிறது. ஆயினும், இது உள்ளூர் வசிப்பிட அலகினுள் சமூகப் பதட்டத்தினை அதிகரிக்கும் தன்மை கொண்டது.

**குறிப்பு:**

இக்கட்டுரையானது ஈ. ஆர். லீச்சினால் தொகுக்கப்பட்ட Aspect of Caste in South India, Ceylon and North - West Pakistan (கேம்பிறிஜ் பல்கலைக்கழக அச்சகம், 1960) என்ற தொகுதியில் வெளிவந்த 'Caste in Jaffna' என்ற கட்டுரையின் மொழி பெயர்ப்பாகும்.

1. கல்வி அமைச்சின் மிகுதிப்படியான கல்வி மற்றும் பயிற்சிச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மானியத்தின், கேம்பிறிஜ் க்லேறே கல்லூரியில் இருந்து கிடைத்த மானியம், சர்வதேச விவகாரங்களுக்கான றோயல் நிறுவனத்தில் இருந்து கிடைத்த மானியம், ஆந்தனி வில்கின் புலமைத்துவ நிதியம் ஆகியவற்றினால் வழங்கப்பட்ட நிதியுதவிகள் இக்கட்டுரையின் கள ஆய்வுக்கான அடித்தளமாக்கியது. பொருட்களைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதற்கான நிதியுதவி கேம்பிறிஜ் திருத்துவக் கல்லூரியில் வில்லியம் வைஸ் புலமை நிதியத்தில் இருந்து பெறப்பட்டது. சிறுப்பிட்டிக் கிராமத்தில் ஒரு வருடம் கழித்த அதேநேரம், தெற்கு கிளிநொச்சிக் குடியேற்றத்தில் ஆறு மாத காலம் கழித்தேன்.
2. இந்தியாவிற்கூட ஆதிக்கம் கொண்ட சாதி, ஆகக்கூடிய எண்ணிக்கை கொண்டது. இலங்கையின் சிங்களவர்கள் தொடர்பான சாதிப் புள்ளிவிபரங்கள் பற்றாக்குறையாக உள்ளது. ஆயினும் கண்டிப் பிரதேசங்களிற் கொய்கம சாதியினர் (யாழ்ப்பாணத்தின் வெள்ளாளர் சாதியினர் போலவே சிங்களப் பிரதேசங்களில் ஆதிக்க சாதியாக உள்ள சாதி) நிச்சயமாகவே மிகவும் அதிக எண்ணிக்கை கொண்ட குழுவாகும்(பார்க்க: ரயன் 1953).
3. இந்த எண்ணிக்கைகளும், மேலும் சில விபரங்களும் யாழ்ப்பாண நகரம் நீக்கலாக யாழ்ப்பாணத்து எல்லாக் கிராமங்களிலும், கிராமத் தலைவர்களிடம் விநியோகிப்பட்ட கேள்விக்கொத்து ஒன்றின் வழியாகப் பெறப்பட்டது. அது ஒரு எழுந்தமான மாதிரியாக இல்லாமல் ஒரு முழுமையான அளவீடு ஆகும். கணக்கிலெடுக்கப்பட்ட சனத்தொகையின் 84.5%யும் கிராமங்களில் 90.0%யும் தரவுகள் உள்ளடக்கியிருந்தன 1832 குடிசனத்தொகை மதிப்பீட்டின்படி சாதியைச் சார்ந்த எந்தவொரு கேள்வியும் கேட்காத காரணத்தால் வேறு எந்தத் தரவுகளும் கிடைக்கக்கூடியதாக இல்லை.
4. நடனப் பெண்களையும், இசைக் கலைஞர்களையும் கொண்ட மிகவும் செலவு செய்து கொண்டதான வகையில் திருவிழாக்களை நடாத்தும் கோவில்களுக்கு இது புறநடையானது. இந்தவகையான விரிவான திருவிழாக்கள், பல மைல்களுக்கு அப்பால் இருந்து பெரும் சனத்திரளைக் கவரக்கூடியதாக உள்ளது. பல இளைஞர்கள் பல மைல்கள் சென்று இரவு இரவாகப் பெண் பிள்ளைகளைப் பார்க்கிறார்கள்; இசையைக் கேட்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை
Foral,-
1920, Of the Kingdom of Jaffnapatnam and the Vanny (Original Verson 1645 translated and edited by P.E. Pieris), London.

Gough, E.K.
1955, 'The Social Structure of a Tanjore Village in India's Villages (ed. Srinivas), Bengal

Hutton, J.H.
1946, Caste in India, Cambridge.

Radcliffe - Brown, A.R.
1939, Taboo (the Frazer Lecture for 1939), Cambridge.

Ryan, Bryce.
1953, The Sinhalese system in Transition Caste in Modern Ceylon, USA : Rutger University Press.

Srinivas, M.N.
1952, Religion and Society among the Coorgs of South India, Oxford: Oxford University Press.

Stevenson, H.N.C.
1954, Status Evaluation in the Hindu Caste System, in Journal of the Royal Anthropological Institute, Vol. 84.

Tambiah, H.W.
1954, The Laws and Customs of the Tamils of Ceylon, Colombo.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணச் சமூகத்தின் புலப்பெயர்வு, பணவருவாய் மற்றும் சாதி, வகுப்பு, மத அடையாளங்களின் இயங்குநிலைகள்[1]

பரம்சோதி தங்கேஸ்

## அறிமுகம்

இலங்கைத் தமிழர்களின் தற்கால வெளியூர்ப் புலப்பெயர்வு தொடர்பான கற்கைகள் புலம்பெயர்ந்த தமிழர்களின் சமூக வாழ்க்கை, புலப்பெயர்வின் போக்கு, புலப்பெயர்வுக்கான காரணங்கள், புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் அவர்களுக்கு ஏற்படும் அனுபவங்கள், தேசிய மற்றும் சர்வதேச அரசியலிற் புலம்பெயர்ந்து வாழும் தமிழரின் வகிபங்கு மற்றும் செல்வாக்கு, தாய்நாட்டுக்கான பொருளாதாரப் பங்களிப்பு, இடம்பெயர்ந்து வாழும் தமிழர்களும், தாய்நாட்டுத் தமிழர்களும் இடையிலான நாடுகடந்த சமூக வலைப்பின்னல் போன்ற விவகாரங்களைப் புரிந்துகொள்வதற்கு முயற்சிக்கின்றன (Fnglerud 1999, McDowell 1996, Danial and Thangaraj 1994, Cheran 2001, 2003; Cheran and Shrryn, 2005; Van Hear 2002). எவ்வாறாயினும், சமூக வாழ்க்கையின் முக்கிய பல நிலைகளிற் பாரிய செல்வாக்கினைச் செலுத்திநிற்கும் சமூக நிறுவனங்களான சாதி, உறவுமுறை மற்றும் வகுப்புப் போன்றவற்றின் வகிபங்கினைப் புலப்பெயர்வு வாழ்க்கையிற் பகுப்பாய்வு செய்து வெளிவந்த கற்கைகளின் போதாமை சமூக அறிவியலில் நிலவுகின்றது. வெளியூருக்குப் புலப்பெயர்வு, பணவருவாய் காரணமாக; குறிப்பாகப் பாரம்பரியமாகச் சலுகை மறுக்கப்பட்டுவந்த சாதிக் குழுக்களிடத்தே ஏற்பட்ட மேல்நோக்கிய சமூக அசைவியக்கத்தினைக் கற்பதிலுள்ள போதாமையை இக்கற்கை பூர்த்திசெய்ய விளைகின்றது.

வெளியூருக்குப் புலப்பெயர்வு, நாடுகடந்த வலைப்பின்னல், பணவருவாய் போன்றன யாழ்ப்பாணச் சமூகத்தின் உட்சமூகக் கட்டமைப்பிலும், பாரம்பரியமாகத் தொடர்ந்துவந்த சமூக வாழ்க்கையிலும் மாற்றங்கள் பலவற்றினை ஏற்படுத்தி நிற்கின்றன. யாழ்ப்பாணச் சமூகத்திற் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான மக்களிடத்தே இத்தகைய மாற்றங்களை அவதானிக்க முடிகின்றது. யாழ்.மாவட்டத்திலுள்ள மல்லாகக் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட இவ்வின வரைவியற் கற்கை கடந்த மூன்று தசாப்பதங்களாகச் சமூக இயங்கியலில் ஏற்பட்டுவரும் மாற்றங்களையும் புலப்பெயர்வுச் செயல்முறையில் சாதி, உறவுமுறை மற்றும் வகுப்பு முதலியவற்றின் வகிபங்கினையும் அடையாளம்காண முயற்சிக்கின்றது. மேலும், புதிதாகச் சம்பாதித்த பொருளாதார விருத்தியின் பலனாக ஏற்படும் புதிய செல்வந்தர்களின் உருவாக்கம், வேறுபட்ட சமூகக் குழுக்களிடையே இடம்பெறும் சாதி அடிப்படையிலான மத அடையாளங்களின் (மீள்)கட்டுமானம், (மீள்)வலிமையாக்கம் என்பன இக்கட்டுரையின் முக்கிய ஆய்வுப் பரப்புகளாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடப்பெயர்வு, பணவருவாய், சாதி:மிகச் சுருக்கமான வரலாற்று அறிமுகம்

இலங்கையிற் பிரித்தானிய ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட சமூக, பொருளாதார அபிவிருத்திகளும் அடைவுகளும் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் ஒரேமாதிரியான தாக்கத்தினைச் செலுத்தவில்லை. இவ்வபிவிருத்திகள் ஒரு பிரதேசத்தில் இருந்து இன்னொரு பிரதேசத்திற்கு வேறுபட்டுக் காணப்படுகின்றது. பிரித்தானிய ஆட்சியாளர்கள் குறிப்பிட்ட சமூக, பொருளாதார, சமயக் கருத்தியலை வளர்த்தெடுப்பதற்கும், அபிவிருத்தி தொடர்பான தமது சொந்த எதிர்பார்ப்புக்களை நிறைவுசெய்வதற்கும் இலங்கையிற் காணப்பட்ட புவியியல் அம்சங்களையும், சமூகப் பண்புகளையும் தேவையடிப்படையிற் பயன்படுத்திக் கொண்டனர். பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் குறிப்பாக யாழ். குடாநாட்டினைக் கைப்பற்றிய பின்னர், யாழ்ப்பாணத் தமிழர்களிடையே கிறிஸ்தவ சமயத்தினை அவர்களால் நிறுவப்பட்ட மிஷனறி மூலமாகப் பரப்ப முனைந்தனர். கிறிஸ்தவ மதத்திற்கு மக்களை மாற்றும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஆங்கிலக் கல்வி, நவீன கல்வி முறைகள் இவ்வாட்சியாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்டன. இருப்பினும், சலுகையளிக்கப்பட்ட சாதிக் குழுவினைப் பிரதிநித்துவப்படுத்தும் ஒரு தொகையான மக்கள் ஏற்கனவே தாம் வைத்திருந்த பணவளங்களைப் பயன்படுத்தி ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக்கொண்டனர். யாழ்ப்பாணத்தில் உள்ளூர் "உயர்" குழாத்தவர் உருவாகுவதற்கு இந்த ஆங்கில மொழிக் கல்வி துணைபோனது என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில், மத மாற்றத்தினை ஏற்றுக்கொண்ட சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்களிற் குறிப்பிட்ட சிறு தொகையான மக்களுக்கும் இலவசமாகக் கல்விபெறும் வாய்ப்புக் கிடைத்தது. இவ்வாறு ஆங்கிலக் கல்வியைக் கற்ற கணிசமான சலுகையளிக்கப்பட்ட "உயர் சாதி" மக்களுக்கும், மிகச் சிறு எண்ணிக்கையிலான கல்வி கற்ற சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குடும்பங்களுக்கும், பண்டைய யாழ்ப்பாணத் தமிழர்களின் வெளிநாடு நோக்கிய புலப்பெயர்வுக்குமிடையில் மிக நெருங்கிய தொடர்பு காணப்பட்டது.

மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிற் பிரித்தானிய ஆட்சியாளர்களால் வழங்கப்பட்ட நடுத்தர அரச தொழில்களைச் செய்வதற்கென யாழ்ப்பாணத்திலிருந்து வெளிநாடு நோக்கிய புலப்பெயர்வு பாரியளவில் இடம்பெற்றது. இருப்பிலுள்ள தகவல்களின்படி, அத்தகையதொரு யாழ்ப்பாணத்தவரின் புலப்பெயர்வு 1870களிலிருந்தே ஆரம்பிக்கின்றது (சத்தியசீலன் 2006:5). இவ்வாறு தொழில் வாய்ப்புத்தேடிப் புலம்பெயர்ந்த மக்கள் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமது பிள்ளைகளுக்கு இலங்கைக்குள்ளேயும், வெளியேயும் நல்ல கல்வி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருளாதர ரீதியான தகைமையைப் பெற்றிருந்தனர். மலாய யாழ்ப்பாணத்தவரின் (Malaya Jaffnese/ Cylonese) இளம் தலைமுறையினருக்கு இத்தகைமை மேற்கத்தேய நாடுகளுக்குக் கல்வி, வேலை வாய்ப்புத் தேடிச் செல்வதற்குச் சந்தர்ப்பத்தையும், ஆர்வத்தையும் வழங்கி நின்றது. இத்தகைய புலப்பெயர்வும்கூட ஏற்கனவே மலேசியா, பர்மா முதலிய நாடுகளில் வசிக்கும் நெருங்கிய உறவினர்களுடன் கடல்கடந்த வலைப்பின்னலை வைத்திருந்த சலுகையளிக்கப் பட்ட சில சாதி, வகுப்பினைச் சேர்ந்த மக்களிடையே அதிகம் மையங்கொண்டு காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"1911 இல், மலேசியாவில் 7000 தமிழர்கள் இருந்தனர். இந்த எண்ணிக்கை 1957இல் 25,000 ஆக அதிகரித்தது. 1903இல் ஐக்கிய மலாய அரசின் புகையிரத சேவையில் 84 சிங்களவர்களோடு ஒப்பிடும்போது 2021 யாழ்ப்பாணத் தமிழர்கள் வேலை செய்தனர். இவ்வாறு புலம்பெயர்ந்த யாழ்ப்பாணத் தமிழர்களைப் பொருளாதார மற்றும் புவியியற் காரணிகளின் அடிப்படையிலேயே விளங்கிக்கொள்ள முடிகின்றது. யாழ்ப்பாணத்தவரின் இப்புலப்பெயர்வு யாழ்ப்பாணச் சமூகத்தின் பொருளாதாரத்தை ஒரு "காசுக் கட்டளைப் பொருளாதாரம்" என்று கூறும் அளவுக்குச் செல்வாக்குச்செலுத்தி நின்றது (Cheran 2001:11)." மலாய யாழ்ப்பாணத்தவர் தாய் நாட்டுக்கு அனுப்பிய பணம் யாழ்ப்பாணத்தின் குடும்பப் பொருளாதாரம், கல்வி மற்றும் விவசாய அபிவிருத்தியில் முக்கிய தாக்கத்தினைச் செலுத்தி நின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்களால் அனுப்பப்படும் பணம் 1930களிலிருந்து அதிகரித்துச் சென்றதைச் சில குறிப்புகள் சுட்டிக் காட்டுகின்றன.

> **கிட்டத்தட்ட 1,400 மலாயன் ஓய்வூதியம் எடுப்பவர்களும், 800 விதவை ஓய்வூதியம் பெறுபவர்களும், ஏனைய 800 பேரும் திடமான பணவருவாய்ச் சீட்டினைப் பெற்றுக்கொள்ளும் இலங்கையிலுள்ள மலாயன் ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கையாகும். 1929இல் மலாயன் இலங்கையர் அமைப்பு (Malayan Ceylonese Association) உருவாகியதிலிருந்து இன்றுவரை (1961), பெற்றுக்கொள்ளப்பட்ட ஓய்வூதியப் பணத்தின் பெறுமதி 100 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும். தற்பொழுது, 5 மில்லியனுக்கும் மேலாக வருட ஓய்வூதிய வருமானமுள்ளது. இது யாழ்ப்பாணத்தின் புகையிலைப் பயிர்ச்செய்கைமூலம் பெறப்படும் வருமானத்திலும் இரண்டரை மடங்கு அதிகமாகும் ((M.C.A. Silvar Jubilee Number 1965-1966: 4).**

மலாயன் யாழ்ப்பாணக் குடிகளால் அனுப்பப்பட்ட பணம் பெரும்பாலும் சலுகையளிக்கப்பட்ட சாதிக் குழுக்களிடத்தே பொருளாதார, கல்விரீதியில் மட்டும் மேல்நோக்கி அசைவதற்குத் துணைபோகவில்லை. இப்பணவருவாய் யாழ்ப்பாணத்தின் உள்ளூர் நிலச் சந்தை, விவசாய அபிவிருத்தி, பாடசாலை மற்றும் கோயில்களின் உட்கட்டமைப்பு விருத்திகள் எனப் பலவிடயங்களிலும்கூட முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தி நின்றது. 1911 இல் வெளிவந்த இலங்கைச் சனத்தொகைக் கணக்கீட்டு அறிக்கையை (1911:67) மேற்கோள் காட்டி இம்மாற்றத்தினை ஆவணப்படுத்துகின்றார் சத்தியசீலன் (2006: 223-224).

> **கடந்த தசாப்தங்களாக யாழ்ப்பாண நிலத்தின் பெறுமதி இரண்டு மடங்காகியுள்ளது. இவ்விடயமும், மக்களிடையே ஏற்பட்ட ஏனைய பொதுவான செல்வங்களும், உள்ளூரில் உருவாகிய கைத்தொழில்கள், வியாபாரம் போன்றவற்றால் ஏற்பட்ட வளர்ச்சியல்ல. மாறாக; இலங்கையின் வேறு பிரதேசங்கள், இந்தியா, பர்மா குறிப்பாக மலாய - சிங்கப்பூர் முதலிய பகுதிகளை உள்ளடக்கிய தொடுவாய்க் குடியேற்றங்கள் (Straits settlements), ஐக்கிய மலாய அரசுகளின் (Federated Malay States) வேறுபட்ட பணியில் தொழில் புரிந்த அதிக எண்ணிக்கையான யாழ்ப்பாணத்துப் புதல்வர்களால் அனுப்பபட்ட பணத்தினாலேயே சாத்தியப்பட்டது. யாழ்ப்பாணக் கல்லூரியிலும், ஆங்கிலப் பாடசாலைகளிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட எமது புதல்வர்கள் கல்வி கற்றனர். அவர்கள் கல்வி கற்று வெளியேறியதும், ஆங்கிலக் கல்வி கற்றுத் தேர்ந்த அதிக எண்ணிக்கை யானோர் இந்நாடுகளில் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டனர். அத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான விவசாயிகள், வறிய வகுப்பினைச் சேர்ந்தோர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலாய, சிங்கப்பூர் முதலிய பகுதிகளை உள்ளடக்கிய தொடுவாய் குடியேற்றங்கள் மற்றும் ஐக்கிய மலாய அரசியல் சமுதாயங்களுக்கும் குடிபெயர்ந்து சென்றனர். இவர்கள் பணவருவாயினை ஈட்டிக்கொண்டு போதியளவு செல்வத்துடன் தாய்நாடு திரும்பினர். யாழ். மாவட்டத்தின் ஒரு கிராமமேனும் வெளியூரில் தொழில் புரிந்த உள்ளூர்வாசிகளால் நன்மையடையவில்லை என்று கூற முடியாது. யாழ்ப்பாணத்தின் புதல்வர்களாற் பல இலட்ச ரூபாய்கள் வருடாவருடம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டன. இந்நாட்டின் வளர்ச்சியடைந்த செல்வச் செழிப்பினையே இவ்விடயம் சுட்டி நிற்கின்றது.

மலாயன் யாழ்ப்பாணத்தவரால் அனுப்பப்பட்ட பணம், யாழ்ப்பாணத்தில் வீடுகள் கட்டுதல், விவசாயம் செய்வதற்கு நிலங்கள் வாங்குதல், புதிய சிறு வியாபாரங்களுக்கு முதலிடல், பிள்ளைகளுக்கு நல்ல கல்வி வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், பிள்ளைகளுக்கு; குறிப்பாகப் பெண்களுக்கு நன்கு கல்வி கற்ற துணையினைச் சீதனம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற விடயங்களினூடாக வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தப் பயன்படுத்தப்பட்டது. உண்மையில், சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழுவினர் வெளியூர் களுக்குப் புலம்பெயரும் எண்ணிக்கை மிகக் குறைவாகவும், அத்தகையதொரு குடிப்பெயர்வில் அக்கறையற்றும் இருந்தனர். எனினும் அம்பட்டர், வண்ணார், பொற்கொல்லர் போன்ற சாதிகளைச் சேர்ந்த மக்கள் மிகச் சிறிய எண்ணிக்கையில் மலேசியாவுக்கு வேலை வாய்ப்புக்காகப் புலம்பெயர்ந்து சென்றமைக்கான சாட்சியங்களும் உண்டு.[1] இவர்களது சாதித் தொழில்கள் திறன் அடிப்படையில் அமைந்த தொழில்களாக இருந்தமையால், இச்சாதிக் குழுவிலிருந்து புலம்பெயர்ந்து சென்ற மூத்த பரம்பரையினர் அதிகமாகத் தமது சாதித் தொழிலையே மலாயாவிலும் மேற்கொண்டனர். இவ்வாறு சென்றவர்களும் ஏனைய சலுகையளிக்கப்பட்ட சாதிகள்போன்று பொருளாதார ரீதியில் வசதி படைத்தவர்களாக யாழ்ப்பாணத்தில் வாழ முடிந்தது. இருப்பினும், புலம் பெயர்ந்து பணம் சம்பாதிக்கும் சலுகை அளிக்கப்பட்ட சாதியினர் யாழ்ப்பாணத்தின் சமூக, அரசியல், கல்வி போன்ற துறைகளில் ஏற்படுத்தியிருந்த செல்வாக்கினைப்போல், புலம் பெயர்ந்து பணம் சம்பாதிக்கும் சலுகை குறைக்கப்பட்ட சாதியினரால் ஏற்படுத்த முடியாது போனது.

மேற்கத்தேய நாடுகளை நோக்கி யாழ்ப்பாணத் தமிழர்களிடத்தே ஏற்பட்ட புலப்பெயர்வினை வேறுபட்ட காலச் சூழ்நிலையில் இடம்பெற்ற சமூக, அரசியல், பொருளாதார காரணிகளின் அடிப்படையில் புரிந்து கொள்ளமுடியும் என வாதிட முடியும்.[3] இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் தொடர்ச்சியாக ஏற்பட்ட இனத்துவ முரண்நிலை களான தமிழ் அடையாளங்களுக்கு எதிராகச் சிங்கள ஆதிக்க அரசினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள் மற்றும் சட்டங்கள், தமிழ் சிறுபான்மைச் சமூகத்திற்கு எதிரான வன்முறைகள், பின்னர் தமிழ் அரசியற் கட்சியினால் ஏற்படுத்தப்பட்ட தனிநாட்டுக் கோரிக்கை, தமிழீழத்தினைப் பெற்றுக் கொள்ள முன்னெடுக்கப்பட்ட ஆயுத முரண்பாடு, இந்திய அமைதி காக்கும் இராணுவத்தின் (IPKF) வருகை, தமிழ் ஆயுதக் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட கருத்தியல் முரண்பாடு, வலுப்போட்டி முதலிய பல்வேறு விடயங்கள் மேற்கத்தேய நாடுகளை நோக்கி மக்கள் புலம் பெயர்வதற்கும்; அங்கு அரசியல் தஞ்சம் கோருவதற்கும் அடிப்படைக் காரணங்களாக அமைந்தது. 1983இல் ஏற்பட்ட தமிழருக்கு எதிரான இனக் கலவரம் மற்றும் உள்நாட்டு யுத்தத்தின் தீவிரம் முதலிய வரலாற்று நிகழ்வுகளைத் தொடர்ந்து இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கத்தேய நாடுகளுக்குச் சென்று அரசியல் தஞ்சம் கோரும் மக்களின் எண்ணிக்கை பன்மடங்காக அதிகரித்தது. அத்துடன் 1980களில் சர்வதேசரீதியில், குறிப்பாக மேற்கத்தேய நாடுகளில் அகதிகள், அரசியல் தஞ்சம் கோருபவர் கள் தொடர்பாக ஏற்பட்ட கொள்கை மாற்றங்கள் இத்தகைய இடப்பெயர்வினைச் சுலபப்படுத்தியது (Cheran, 2011; McDowell, 1996 Sithamparapillai, 1989). 2010ஆம் ஆண்டில், வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களது எண்ணிக்கை ஒரு மில்லியனுக்கும் அதிகமாகவுள்ளது எனக் கணிப்பிடப்பட்டுள்ளது (ICG. 2010:2).

83 இனக் கலவரத்திற்கு முன்னர் இடம்பெற்ற மரபுரீதியான வெளிநாட்டுப் புலப்பெயர்வுகள் பொறியியலாளர், வைத்தியர், எழுதுவினைஞர் சார்ந்த தொழிலாளர்களா லேயே பெரிதும் அனுபவிக்கப்பட்டது. இந்நிலைமை கடந்த சில தசாப்தங்களாகப் பாரியளவில் அதிகரித்ததோடு, இவ்வெளியூர்ப் புலப்பெயர்வு புதியதொரு சமூகப் போக்கினையும், மரபுரீதியாகப் புலம்பெயர்ந்துவரும் நபர்களின் வகைப்பாட்டிற் பாரியதொரு திருப்பத்தினை யும் ஏற்படுத்தி நிற்கின்றது. தற்கால வெளியூர் நோக்கிய புலப்பெயர்வு நீண்ட கால யுத்தத்தினாலும், வன்முறையினாலும் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு இன்மை மற்றும் பொருளாதார இறுக்கத்திலிருந்து தப்ப விரும்பும் சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்களைச் சேர்ந்த கணிசமான எண்ணிக்கையான இளைஞர்கள், வயது வந்தோர்களிடையே பெரிதும் நடைமுறையில் வந்தது. சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்கள் சட்டரீதியாகவும், சட்டரீதியற்ற முறைகளிலும் வெளிநாடுகளிற் புகலிடம், வேலை தேடி இலங்கையைவிட்டு பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆட்பட்டு வெளியேறினர். ஆரம்ப காலங்களில் இவர்கள் தமது சொத்துக்களை விற்றும், நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து கடனாகப் பணம் பெற்றும் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றனர். இம்முயற்சிக்குப் பெரிதும் துணைபோனவர்கள் உள்ளூரிலிருந்த சட்டரீதியற்ற முகவர்களாவர். தற்பொழுதும் யாழ்ப்பாணத்து மக்களிற் பலர் வெளிநாடு செல்வதற்காகச் சொத்துக்களை விற்றல், கடனாகப் பணம்பெறுதல், சட்டரீதியற்ற முகவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல் என்பன பொதுவாகவே இடம்பெறுகின்றன.

உண்மையில், யாழ்ப்பாணத்தில் வாழும் அதிகமான இளஞர்கள் வெளிநாடுகளில் தொழில் புரிவதன் மூலமே தமது குடும்பத்தை பொருளாதாரரீதியில் முன்னேற்ற முடியும் என நம்புகின்றனர். மேற்கத்தேய நாடுகளுக்கு இடம்பெயர்ந்து செல்வதென்பது எந்த நாட்டுக்கு ஒருவரது அனுமதி கோரப்படுகின்றதோ அதற்கேற்றாற் போல் உறவினர்கள், நண்பர்கள், சட்டரீதியற்ற முகவர்கள் என ஒரு நீண்ட தொடர்பாடல் வலைப்பின்னலையும் அதிக பணத்தினையும் வேண்டி நிற்கின்றது (Khosravi, 2011). மேற்கத்தேய நாடு நோக்கிய இடப்பெயர்வில் ஏற்படும் பணப் பரிமாற்றத்தினை அழுத்திக்கூறும் முகமாக நிக்கொலஸ் வான் கியர் (2002) இலங்கைத் தமிழர்களின் அரசியற் புகலிடம் தேடிய புலப்பெயர்வினை மத்திய தர வர்க்கத்தின் யுக்தி என விபரிக்கின்றார். இருப்பினும், 1980களில் இருந்து மேற்கத்தேய நாடுகளுக்கு அதிக எண்ணிக்கையில் “கீழ்” வகுப்பினரும், தாழ்த்தப்பட்ட சாதியினரும் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர் (McDowell, 1996). எனவே, மேற்கத்தேய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள் நோக்கிய அரசியற் புகலிடம் தேடிய தமிழர்களின் புலப்பெயர்வை நெருக்கமான உறவினர்கள், நண்பர்களுடன் கொண்டிருந்த சமூகப் பிணைப்பு, சட்டரீதியற்ற முகவர்களிடம் ஏற்படுத்திய பயண ஒழுங்கு பற்றிய தொடர்பாடல் மற்றும் பொருளாதார மூலதனம் ஆகியன இணைந்து முன்னெடுத்தன எனலாம். பல சந்தர்ப்பங்களில், இடம்பெயரும் நபர் தனது குடும்பம், உறவினர், நண்பர்களிடம் வைத்திருந்த நாடுகடந்த வலைப்பின்னல் ஒருவகையான சமூக மூலதனமாக இயங்கியதுடன், காலவோட்டத்தில் இச்சமூக மூலதனம் மேற்கத்தேய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்வதற்கான பொருளாதார மூலதனத்தினை பெற்றுக்கொள்வதற்குப் பெரிதும் துணைபோனதனையும் அவதானிக்க முடிகின்றது (Boyd, 1989; Gurak and Caces, 1992).

## யாழ்ப்பாணத்திற் சாதி

யாழ்ப்பாணத்துச் சாதிகள் பற்றியும், அவற்றின் இயங்குநிலை பற்றியும் பொதுவானதொரு விளக்கத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக மிகச் சுருக்கமானதொரு அறிமுகத்தினைக் கொடுப்பது பொருத்தமாக இருக்கும். இருபது பிரதான சாதிக் குழுக்கள் யாழ்ப்பாணத்தில் இருப்பதாக அறியப்பட்டது. அவை வெள்ளாளர் (நில உரிமையாளர்/விவசாயிகள்), பிராமணர் (கோயில் பூசகர்), சைவக் குருக்கள் (பிராமணர் அல்லாத கோயில்களில் பூசகர்), பண்டாரி (பூமாலை கட்டுபவர்/கோயில் உதவியாளர்), சிற்பாசாரி (கோயில் சிற்பாச்சாரி), கோவியர் (வீட்டு வேலைக்காரர்), தட்டார் (பொற்கொல்லர்), கரையார் (ஆழ்கடல் மீனவர்), தச்சர் (மரவேலை செய்பவர்), கொல்லர் (இரும்பு வேலை செய்பவர்), நட்டுவர் (மங்கள நிகழ்வில் வாத்தியம் வாசிப்பவர்). கைக்குளர் (துணி நெசவு செய்பவர்), சாண்டார் (நல்லெண்ணெய் உற்பத்தியாளர்), குயவர் (மட்பாண்டம் செய்பவர்), முக்குவர் (ஆழமற்ற கடற் பிரதேசத்து மீனவர்), வண்ணார் (சலவைத் தொழிலாளர்), அம்பட்டர் (சிகை அலங்கரிப்பாளர்), நளவர் (கள்ளுச் சீவுபவர்), பள்ளர் (விவசாயக் கூலிகள்/கள்ளுச் சீவுபவர்), பறையர் (பறை மேளம் அடிப்பவர்) முதலியவர்களாகும் (David,1974a, 1974b; Pfaffenberger, 1982). இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் "உயர்" சாதிக்காரரான வெள்ளாளர் யாழ்ப்பாணச் சனத்தொகையில் 50% த்தினைக் கொண்டிருந்தனர் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய சாதிகளான கரையார், கோவியர், நளவர் முறையே 10%, 7%, 9% எனக் கணிக்கப்பட்டனர். இங்கு குறிப்பிடப்பட்ட ஏனைய சாதிக் குழுக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மொத்த சனத்தொகையில் 3%தினைக் கொண்டிருந்தனர் (Banks, 1960; David, 1974a, 1974b; Silva et al., 2009).

யாழ்ப்பாணச் சமூகத்திற் சாதி ஒரு அடிப்படைச் சமூக நிறுவனமாகவும், ஒழுங்கமைக்கும் தத்துவமாகவும் இருந்தது, இருந்து வருகின்றது. சமயச் சடங்குகளின் "தூய்மை" என்ற இந்து மதக் கருத்தியலில் இருந்து உருவாகிய படிநிலை ஒழுங்கு முறையின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணத்துச் சாதி முறைமையினை அடையாளம் காணமுடிகின்றது. எனினும், இந்திய சாதி முறைமையின் சமூப் படிநிலையிற் பிராமணர் "உயர்" சாதியினராகக் கருதப்பட்டதுபோல் யாழ்ப்பாணத்திற் கருதப்படவில்லை. மாறாக; விவசாய நில உரிமைகளை அதிகளவிற் கொண்டுள்ள வெள்ளாளர்களோ யாழ்ப்பாணத்தில் "உயர்" சாதி எனக் கருதப்பட்டனர். இவர்கள் மரபுரீதியாக யாழ்ப்பாணத்து விவசாயப் பொருளாதாரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மதச் சடங்குகள், அரசியல், கல்வி முதலிய விடயங்களில் மேலாதிக்க வலுவினைக் கொண்டிருந்தனர். இவ்விடயங்கள் ஏனைய, குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட சாதிக் குழுவினரைச் சமூகத்தின் பொது நீரோட்டத்திலிருந்து விலக்கின, பாகுபாட்டிற்கு உட்படுத்தின (Vegujana and Ravana, 2007; Raghunathan, 2002, Silva et al., 2009). எவ்வாறாயினும், சாதி, சமூக அந்தஸ்து முதலிய யாழ்ப்பாணத்துச் சமூகத்தின் உட்கட்டமைப்பு கோட்பாடு ரீதியாகவும், கட்டமைப்பு ரீதியாகவும் நிலைத்து நிற்கின்ற அதேவேளை, அவை காலநீட்சியிற் பல்வேறு சமூக, பொருளாதார, கல்வி, வரலாற்றுக் காரணிகளாற் சமூகரீதியாகப் பல மாற்றங்களுக்கு உள்ளாகின்றது (Thiruchandran, 1997). உண்மையில், சாதி என்ற யாழ்ப்பாணத்துச் சமூக நிறுவனம் பலவீனப்பட்டும், வன்மைபெற்றும், (மீள்)கட்டமைக்கப்பட்டும் தொடர்ந்து நிலைத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

வரலாற்றுரீதியாக, யாழ்ப்பாணச் சமூகத்தின் நுண்ணிய பொருளாதாரம் சாதியை அடிப்படையாகக்கொண்டு கட்டமைப்புரீதியாக வரையறுக்கப்பட்ட வேலைப் பிரிப்பிலேயே பெரிதும் தொடர்புபட்டு இருந்தது. பண்ணை அமைப்பைச் சுற்றி உருவாகிய சமூக இயங்குநிலை, விவசாயச் சந்தை, குடிமைசார்ந்த தொழில்கள் சாதியுடன் தொடர்புபட்ட தொழில்களாகவே வளர்ச்சியடைந்தன. மேலும், முன்னைய மிஷனறிக் கல்வி நாடுகடந்து மேற்கொள்ளும் வருமான நடவடிக்கையும், அதனோடு தொடர்புபட்ட வேலைச் சந்தையினையும் சாத்தியப்படுத்தியிருந்தது. பிரித்தானிய ஆட்சிக் காலங்களில் யாழ்ப்பாணத் தமிழர்களிற் பெருந்தொகையானோர் மலேசியா, பர்மா போன்ற நாடுகளுக்குச் சென்றமைக்கு இத்தகைய கல்வி அடைவுகளே பிரதான காரணமாக இருந்தது. யாழ்ப்பாணச் சமூகத்தின் பணவருவாயின் பாரியதொரு பங்கினை இவ்வாறு புலம்பெயர்ந்து பணம் சம்பாதிக்கும் யாழ்ப்பாண மக்கள் கொண்டிருந்தனர் என்பதை முன்னர் பார்த்தோம். தற்கால யாழ்ப்பாணச் சமூகத்தின் பொருளாதார அபிவிருத்தியில் மேற்குலகு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களினாலும் மத்திய கிழக்கு நாடுகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களினாலும் அனுப்பப்படும் பணம் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தினைச் செலுத்தி நிற்கின்றது. சாதி மற்றும் வெளிநாட்டுப் புலப்பெயர்வுடன் தொடர்புபட்ட இத்தகைய தொழில் வடிவங்களைத் தவிர, குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையிலான உள்ளூர் மக்கள் புடைவைத் தொழில், பலசரக்கு வியாபாரம், அரச தொழில்கள் போன்ற இன்னோரன்ன தொழில்களில் ஈடுபடுவதன் மூலமாகவும் தமது பொருளாதாரச் செயற்பாட்டினை முன்னெடுக்கின்றனர். நுண்ணிய பொருளாதாரம் மற்றும் அதனோடு தொடர்புபட்ட அபிவிருத்திகளில் ஏற்படும் மாற்றங்கள் காலத்துக்குக் காலம் சாதி, வேறுபட்ட சமயக் குழுக்கள், பால்நிலை முதலியவற்றின் அந்தஸ்திலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

இதற்கிடையில், யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதி, வகுப்பு, இனத்துவம் முதலிய அடையாளங்களின் இயங்கு நிலைக்கும், நெகிழ்ச்சித் தன்மைக்கும் சாதிக்கு எதிரான போராட்டங்கள் (குறிப்பாக 50 மற்றும் 60களில்), தொடர்ச்சியான இடப்பெயர்வுகள், தமிழ்த் தேசியத்தின் உருவாக்கம், விடுதலைப் போராட்டங்கள் முதலிய வரலாற்று நிகழ்வுகள் ஒன்றுடன் ஒன்று சார்ந்து இடைவினை புரிந்தும், தனித்துவமாகவும் பாரியதொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகிபங்கினை ஆற்றியுள்ளன என்பது கவனிக்கத்தக்கது (Thanges, 2006; Silva et al, 2009).

## மல்லாகம்: சாதி, சனத்தொகை மற்றும் பௌதிகக் கட்டமைப்பு

மல்லாகம் : யாழ். நகரிலிருந்து வடக்காக பத்தரை கிலோமீட்டர் தொலைவிலும் காங்கேசன்துறையிலிருந்து தெற்கு நோக்கி அண்ணளவாக நாலரைக் கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்துள்ள ஒரு கிராமமாகும். வலிகாமம் வடக்குத் தெல்லிப்பளைப் பிரதேசச் செயலகப் பிரிவின் நிர்வாகத்தின்கீழ் இக்கிராமம் உள்ளது. இக்கிராமம் மல்லாகம் தெற்கு (J/212), மல்லாகம் மத்தி (J/213), மல்லாகம் வடக்கு (J/214) ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணத்தின் ஏனைய கிராமங்களிற் பொதுவாக உள்ளது போன்று, இக்கிராமமும் சனத்தொகைக் குடியிருப்புக்கள், விவசாய நிலங்கள், குளங்கள், பாடசாலைகள், கடைகள், பொது மற்றும் சாதியடிப்படையிலான கோயில்கள், தேவாலயங்கள், பொது சமூக அமைப்புக்கள், நூல் நிலையங்கள், இலங்கை இராணுவத்தின் பாசறைகள் முதலிய பல அம்சங்களை உள்ளடக்கியுள்ளது (படம் 1, 2இனைப் பார்க்கவும்). கிராமவாசிகளையும், "உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து" இடம்பெயர்ந்து வந்து மல்லாகத்தில் அகதி முகாம்கள், உறவினர்கள் மற்றும் வாடகை வீடுகளில் வசிக்கும் இடம்பெயர்ந்த மக்களையும் உள்ளடக்கி இக்கிராமத்தின் சனத்தொகை காணப்படுகின்றது. 2007ஆம் ஆண்டில், உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுட்பட மல்லாகக் கிராமத்தின் மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை 1,532 ஆகவும் மொத்தச் சனத்தொகை 8,189 ஆகவும் இருந்தது. தும்புத் தொழிற்சாலை முகாம், நீதிவான் முகாம், ஊறணி முகாம், கோணப்புலம் முகாம் ஆகிய நான்கு உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் வசிக்கும் முகாம்களை இக்கிராமம் உள்ளடக்கி யுள்ளது (படம் – 1 இனைப் பார்க்கவும்). "உயர் பாதுகாப்பு வலயங்களிலுள்ள" வேறுபட்ட இடங்களிலிருந்து வந்த குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையிலான மக்கள் இம்முகாம்களில் வாழ்கின்றனர் (DS/AGA பிரிவு: வலி வடக்கு, தெல்லிப்பளை, 2007).

மல்லாகத்தில் மொத்தம் 11 சாதிக் குழுக்கள் அடையாளம் காணப்பட்டன. அவை: அம்பட்டர், கோவியர், நளவர், நட்டுவர், பள்ளர், பண்டாரிகள், பறையர், பிராமணர், தச்சர், வண்ணார், வெள்ளாளர் என்பனவாகும் (அட்டவணை 2டினைப் பார்க்க).

டேவிட் (1974a, 1974b), பாங்ஸ் (1960), அருமைநாயகம் (1979) மற்றும் சிவத்தம்பி (2002) முதலிய புலமையாளர்கள் யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதி முறைமையினைக் கற்றதோடு வேறுபட்ட வழிகளில் யாழ்ப்பாணச் சாதிகளை வகைப்படுத்தியுள்ளனர் (பார்க்கவும்: தங்கேஸ் 2007, 2009). மல்லாகத்தில் 31% மான சனத்தொகையினைச் சலுகையளிக்கப்பட்ட வெள்ளாள சாதியினர் கொண்டுள்ளனர். அத்துடன் சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்களான அம்பட்டர், நளவர், பள்ளர், பறையர், வண்ணார் ஆகிய சாதிகளின் மொத்த எண்ணிக்கை 58.3% ஆகும். நளவரும் (26.6%) பள்ளரும் (28.5%) சலுகை மறுக்கப்பட்ட குழுக்களிலும் மல்லாகத்தின் மொத்தச் சனத்தொகையிலும் பாரிய எண்ணிக்கையினைக் கொண்டோராகவுள்ளனர். சாதியடிப்படையிலான சனத்தொகையைத் தனித்தனியே பார்ப்போமாயின், மொத்தச் சனத்தொகையில் மல்லாகத்தில் வெள்ளாள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியினர் எண்ணிக்கையில் (31%) அதிகமாக உள்ளனர். முன்னர் குறிப்பிட்டதுபோல், 1950களில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒட்டுமொத்த சனத்தொகையில் வெள்ளாளர் 50% மாக இருந்தனர் என்பது அறியப்பட்டதொரு விடயமாகும் (Banks,1960: 67; David, 1982:47).

அட்டவணை 1: மல்லாகத்தில் சாதி, 2005

| சாதிப் பெயர்கள் | சாதித் தொழில்கள் | சனத்தொகை (%) |
|---|---|---|
| 1. வெள்ளாளர் | நில உரிமையாளர், கமக்காரர் | 31.00 |
| 2. பள்ளர்* | விவசாயக் கூலிகள், கள் சீவுபவர் | 28.50 |
| 3. நளவர்* | கள் சீவுபவர் | 26.60 |
| 4. தச்சர் | தச்சு வேலை அல்லது மர வேலை செய்பவர் | 5.03 |
| 5. கோவியர் | வீட்டு வேலைக்காரர் | 4.00 |
| 6. வண்ணார் | ஆடைகள் சுத்தம் செய்பவர், குடிமைத்தொழில் செய்பவர், கோவில்கள், இறப்பு நிகழ்ந்த வீடுகள் என்பவற்றுக்கு வெள்ளை கட்டுபவர் | 2.00 |
| 7. பண்டாரிகள் | கோவில் உதவியாளர் (பூமாலை கட்டுதல்) | 1.23 |
| 8. அம்பட்டர் | மயிர் வெட்டுபவர், குடிமைத்தொழில் செய்பவர் | 1.00 |
| 9. பிராமணர் | கோயில் பூசகர் | 0.26 |
| 10. பறையர் | நகரைச் சுத்திகரிப்பவர், இறப்பு நிகழ்ந்த வீடுகளிலும், கோயில்களிலும் பறை மேளம் அடிப்பவர் | 0.19 |
| 11. நட்டுவர் | கோயில்களிலும், வீடுகளின் மங்கள நிகழ்வுகளிலும் தவில், நாதஸ்வரம் முதலிய வாத்தியங்கள் இசைப்பவர் | 0.19 |
| மொத்தம் | | 1000.00 |

*மயிலிட்டி, ஊறணி, வயாவிளான், காங்கேசன்துறை, கட்டுவன் வேறும் பல கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்து தற்பொழுது மல்லாகத்திலுள்ள நான்கு முகாம்களில் தங்கியுள்ளோர் நளவர் மற்றும் பள்ளர் ஆகிய சாதிக் குழுக்களைச் சேர்ந்தவர்களாவர். இவர்களும் இக்கணக்கெடுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

பொது மற்றும் சாதியடிப்படையிலான இந்துக் கோயில்கள் யாழ்ப்பாணத்தின் பல கிராமங்களிலும் காணப்படும் ஒரு சாதாரண விடயம். அனைத்துச் சாதியைச் சேர்ந்த பக்தர்களும், பொது இந்துக் கோயிலுக்குச் சென்று வழிபாடாற்றுவர். மல்லாகம் பழம்பிள்ளை யார் கோயில் அத்தகைய பொது இந்துக் கோயிலுக்கான ஓர் உதாரணமாகும். இவ்வாலயத்தின் பூசை மற்றும் விழாக்களில் அனைத்துச் சாதியைச் சேர்ந்த மக்களும் வெளிப்படையாகவே பங்குபற்றுவார்கள். இருப்பினும், கோயில் நிர்வாகம் சலுகையளிக் கப்பட்ட சாதிகளின் கட்டுப்பாட்டின்கீழே உள்ளது. மறுபக்கத்தில், குறிப்பிட்ட சாதிக் குழுக்களைச் சேர்ந்த மக்கள் மட்டுமே சாதியடிப்படையிலான கோயில்களுக்குப் பொதுவாகச் செல்வதும், வழிபடுவதும் வழமை. இச்சாதியடிப்படையிலான கோயில்கள் குறிப்பிட்ட சாதிக் குழுவாலும்; அல்லது அச்சாதியைச் சேர்ந்த குடும்பத்தாலுமே நிர்வகிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இக்கோயில்கள் முழுக் கிராமத்தினது உடைமையாக அல்லாது குறிப்பிட்ட சாதிக் குழுக்களின் அல்லது ஒரு குடும்பத்தின் உடைமையாகவே கணிக்கப்படுகின்றன.

மல்லாகத்தில் வெள்ளாளர், தச்சர், வண்ணார், அம்பட்டர், நளவர், பள்ளர் முதலிய சாதிகளைச் சேர்ந்தோர் முறையே நீலியம்பனைப் பிள்ளையார் கோயில், காளிகா தேவி கோயில், பெரிய தம்பிரான் கோயில், சாளம்பை அம்பாள் கோயில், ஞான வைரவர் கோயில்[1], கோட்டைக்காடு மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி கோயில் ஆகியவற்றினைச் சொந்தமாகக் கொண்டுள்ளனர். ஒரு சாதிக் குழுவினர் ஒன்றுக்கு மேற்பட்ட சாதியடிப்படையிலான கோயில்களுக்கு உடைமையாளராகவும் உள்ளனர். உதாரணமாக, மல்லாகத்தில் வெள்ளாளர் சாதியைச் சேர்ந்தோர் நீலியம்பனைப் பிள்ளையார் கோயில், வீரபத்திரர் கோயில் மற்றும் குளமங்கால் வைரவர் கோயில் ஆகிய மூன்று கோயில்களைச் சொந்தமாகக் கொண்டுள்ளனர். சாதியடிப்படையில் கோயில்களைச் சொந்தம் பேணும் மரபு யாழ்ப்பாணத்தின் கத்தோலிக்க மதத்தவரிடத்தேயும் அவதானிக்க முடிகின்றது. அற்புத மாதா தேவாலயம், குளமங்கால் புனித பிரான்ஸிஸ் சவேரியர் தேவாலயம் முறையே நளவர், பள்ளர் சாதியினரின் பரிபாலனத்தின்கீழ் இருக்கின்றன. குறித்த இந்துக் கோயில்கள் மற்றும் கத்தோலிக்கத் தேவாலயங்களின் நிர்வாகம் குறிப்பாக இக்கிராமத்திலிருந்து வெளிநாடு களுக்கு புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடமிருந்து பணவருவாயினைப் பெற்றுக்கொள் கின்றனர். இவ்வாறு ஆலயங்களின் வளர்ச்சி வேண்டி அனுப்பப்படும் பணமாற்றீட்டுச் செயல்முறையிற் சாதியின் வகிபங்கு குறிப்பிடத்தக்க செல்வாக்கினைச் செலுத்தி நிற்கின்றது.

**சாதி, உறவுமுறை, வகுப்பு மற்றும் இடப்பெயர்வு**

யாழ்ப்பாணத் தமிழர்களின் புலப்பெயர்வினை வேறுபட்ட பல காரணிகள் தூண்டிநிற்கின்றன. தொழில், கல்வி, பாதுகாப்பு, திருமணம் முதலிய பல நோக்கங்களுக்காக உள்ளூர், சர்வதேசப் புலப்பெயர்வுகள் இடம்பெறுகின்றன. எனினும், ஒருநபரின் புலப் பெயர்வில் ஒரு காரணம் ஏனைய காரணங்களைவிட மிகுந்த ஆதிக்கம் செலுத்தி நிற்கலாம். உதாரணமாக: வேறுபட்ட காரணங்கள் வாழ்கையின் வேறுபட்ட நிலைகளில் முக்கியமானதாகக் காணப்படலாம். அல்லது ஒருவரின் புலப்பெயர்வில் உடனடிக் காரணங்களும், அதேபோல் நீண்டகால அடிப்படையிற் கருத்திற்கொண்ட காரணங்களும் காணப்படலாம். அல்லது ஒன்றுடனொன்று இணைந்த பல காரணங்கள் ஒருமித்துச் செயற்படலாம். எனவே, புலப்பெயர்வுக்கான காரணங்களை ஒரு பரந்த புரிதலுக்கு உட்படுத்தியே பரிசீலிக்க வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், இவ்விடத்தில் எனது முக்கிய நோக்கம் புலப்பெயர்வு, சாதி, உறவுமுறை, சமூக வலைப்பின்னல், பணப்பரிமாற்றம் ஆகியவற்றுக்கிடையே காணப்படும் நெருக்கமானதும், மிக முக்கியமானதுமான தொடர்பு களைப் புரிந்து கொள்வதும், விளக்கமளிப்பதுமாகவே உள்ளது. இக்கருப்பொருளை ஒரு பரந்த கலந்துரையாடலுக்கு உட்படுத்துவதற்குப் பின்வரும் கேள்விகள் வழிகாட்டிகளாக அமையும் என நம்புகின்றேன். சாதி மற்றும் உறவு முறைப்பிணைப்பு புலப்பெயர்வில் எவ்வளவு தூரம் முக்கியமானதாகவுள்ளது? சாதியும் உறவு முறையும் புலப்பெயர்வுச் செயல்நிலையின் எந்த நிலைகளில் தொடர்புபடுகின்றன? சர்வதேச வலைப்பின்னல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம் 1: மல்லாகக் கிராமத்தின் பௌதிகக் கட்டமைப்பு




மூலம்: J/212, J/213 மற்றும் J/214 முதலிய கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட ஆவணங்களின் மூலங்களிலிருந்து வடிவமைக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி, மற்றும் கிராம மட்டத்திலான சமயத் தலங்கள், சடங்குகளின் வளர்ச்சியிற் சாதி, உறவு முறையாகிய சமூக நிறுவனங்களின் வகிபங்கு எத்தகையது?

யுத்தத்தின் நேரடியான தாக்கத்தினாலும், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களாலும் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட உள்ளூர் இடப்பெயர்வுகள் சாதி, வகுப்பு, பால்நிலை என்ற பாகுபாடின்றி அனைவரையும் பொதுவாகவே பாதித்துள்ளது. ஆயினும், மக்கள்மீது ஏற்படும் யுத்தத்தின் நீண்டகாலத் தாக்கங்கள் அவர்களுக்குள்ள சமூக, பொருளாதார, அரசியற் பின்னணிகள் மற்றும் சமூக வலைப்பின்னல் என்பவற்றுக்கு ஏற்றாற்போல் வேறுபட்டுக் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள அதிகமான அகதி முகாம்களில் வசிக்கும் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் பெரும்பாலும் சலுகை மறுக்கப்பட்ட சாதிப் பின்னணிகளைக் கொண்டவர்களாகவும், நீண்டகால அடிப்படையில் உருவாகும் உள்ளூர் அகதிமுகாம்கள் வேறுபட்ட சாதிக் குழுக்களின் அடிப்படையிற் குறிப்பாக சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்களின் பின்னணிகளைக் கொண்டு உருவாகும் போக்கினைக் காண முடிகின்றது. வெள்ளாளர், ஏனைய நடுத்தர சலுகையளிக்கப்பட்ட சாதியினரும் தமது சொந்த இடங்களைவிட்டுப் புலம்பெயர்ந்த போதிலும், அவர்களிற் பெரும்பாலானோர் தமது சாதிக் குழுக்கள், உறவினர்கள், நண்பர்களுடன் வைத்துள்ள வலைப்பின்னலையும்; அவர்களிடையே காணப்பட்ட கல்வி, தொழில் மற்றும் சமூக மூலதனங்களையும் பயன்படுத்திக் கொழும்பு முதலிய பிரதேசங்களுக்கும்; வெளிநாடுகளுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம் 2: மல்லாகத்தின் இந்துக் கோயில், தேவாலயம் மற்றும் பாடசாலைகளின் அமைவிடங்கள்




*மூலம்: J/212, J/213 மற்றும் J/214 முதலிய கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட ஆவணங்களின் மூலங்களிலிருந்து வடிவமைக்கப்பட்டது.*

கும் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர் (Siddhartan, 2003). யாழ்ப்பாணத்தில் வசிக்கும் உள்ளூரில் இடம்பெயர்ந்த சலுகையளிக்கப்பட்ட சாதிக்காரர்களிற் பெரும்பாலானோர் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் வாழ்கின்றனர். அத்துடன் இவர்கள் குறைந்த வசதிகளுடனும், மட்டுப்படுத்தப்பட்ட அந்தரங்கத்துடனும், தாழ்ந்த வாழ்க்கைத் தரத்தினையும் கொண்ட அகதிகள் முகாம்களிற் பெரும்பாலும் வாழாது, தனியாக வதிவிடங்களை அமைத்தும் குடியமர்ந்துள்ளனர்.

அகதி முகாம்களிற் பஞ்சமர் சமூகத்தினைச் சேர்ந்த மக்கள், எண்ணிக்கையில் அதிகளவில் வாழ்வதற்குப் பல காரணங்கள் காணப்படுகின்றன. பின்வரும் காரணங்களைக் கொண்டு இத்தகையதொரு சமூக இயங்கியலின் பின்னணியைப் புரிந்து கொள்ளமுடியும்: (1) மரபுரீதியாக இவர்கள் தமக்கிருந்த சிறிதளவு நிலத்தினைத் தவிர வேறு நிலபுலங்களைச் சொந்தமாக வைத்திருக்கவில்லை. இதன் விளைவாக இடம்பெயரும் நிலை ஏற்படும்போது, அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் உதவியளிக்கப்படும் அகதி முகாம்களைத் தவிர வேறு இடங்களுக்குச் சென்று வாழ முடியாததொரு நிலை காணப்படுகின்றது. இலங்கைப் "பாதுகாப்புப் படையினரின்" கட்டுப்பாட்டிலிருக்கும் "உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து" அதிகளவில் இடம்பெயர்ந்து உள்ளூரில் வாழும் மக்கள் குறிப்பாக நலிவடைந்தவர்களாவர். ஏனெனில், "பாதுகாப்புப் படையினரால்" விதிக்கப்பட்ட தடைகள் காரணமாக அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்முடைய சொந்தக் கிராமங்களுக்குத் திரும்ப முடியாத நிலையிலுள்ளனர். (2)ஒடுக்கப்பட்ட சாதிப் பின்புலத்தைச் சேர்ந்த இம்மக்கள் தமது சமூகத்திற்கு அப்பாற் போதியளவு சமூக வலைப்பின்னலைக் கொண்டு காணப்படாத காரணத்தினால் இவ்வகதி முகாம்களை விட்டு வெளியேற முடியாத நிலையிலுள்ளதுடன் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளில் அதிகம் தங்கியுள்ளனர். (3)இவர்களிற் பலர் சொந்தமாகப் புதிய நிலங்களை வாங்குவதற்கோ அல்லது வேறாக வதிவிடங்களை அமைப்பதற்கோ போதியளவு வளங்களற்றுக் காணப்படுகின்றனர். (4)சிலர் போதியளவு சேமிப்பினைக் கொண்டிருக்கின்ற போதிலும், வழக்கத்திலுள்ள தொடர்ச்சியான சாதி அடிப்படையிலான பாகுபாடு காரணமாகவும்; பஞ்சமர்களைத் தமது அயலவராக ஏற்றுக்கொள்வதற்கு ஏனைய "உயர்" சாதியினரின் விரும்மின்மை காரணமாகவும்; ஏனைய சாதியினருக்கு அருகிலுள்ள நிலத்தினை வாங்குவதிற் சில சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (5) இறுதியாக, பாதுகாப்பு மற்றும் பரஸ்பர ஆதரவு போன்ற பல்வேறு காரணங்கள் காரணமாகவும் அகதி முகாம்களினுள்ளோ அல்லது அகதி முகாம்களுக்கு வெளியிலோ தமது சொந்தச் சாதியினைச் சேர்ந்த சமூகத்தோடு கூடி வாழ்வதற்கு மக்கள் விரும்புகின்றமையும் குறிப்பிடத்தக்கது (Thanges and Silva 2009:71). எனவே, உள்ளூரில் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் இரண்டு வகையான விலக்குகளுக்கு உள்ளாகின்றனர். அவை ஒன்று தாழ்த்தப்பட்ட சாதியென்ற அந்தஸ்தும், வறுமையும், மற்றையது வரையறுக்கப்பட்ட வசதிகளுடன், மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட வருமானத்துடனும் உள்ளூர் அகதி முகாம்களில் வாழுதல் என்பனவாகும்.

பெரும்பாலான யாழ்ப்பாணத் தமிழர்களின் கொழும்பு போன்ற பிரதேசங்களை நோக்கி இடம்பெறும் உள்ளூர் இடப்பெயர்வு, மேற்கத்தேய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கிய சர்வதேசப் புலப்பெயர்வு முதலியவற்றுக்கும், வெளிநாடுகளில் வசிக்கும் உறவினர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்புள்ளது. இவ்வலைப்பின்னல் சாதி, உறவுமுறை மற்றும் நட்புறவு முதலியவற்றின் அடிப்படையில் ஏற்பட்ட சமூக மூலதனத்தினாலேயே சாத்தியப்பட்டுள்ளது. கொழும்பில் நிரந்தரமாகவும், தற்காலிகமாகவும் வசிக்கும் யாழ்ப்பாணத் தமிழர்களிற் பலர் வெளிநாட்டு உறவினர்களுடன் விஸ்தரிக்கப்பட்ட சமூக, பொருளாதார வலைப்பின்னலைக் கொண்டிருக்கின்றனர். வெளிநாடுகளில் யாழ்ப்பாணத் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி நகரும் தமிழர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்படுகின்றது. இவ்வாறு வெளிநாட்டு உறவினர்களுடன் விஸ்தரிக்கப்பட்ட தொடர்பினைக் கொண்டுள்ள யாழ்ப்பாண மக்களிற் பலர், தனியாகவோ அல்லது குடும்பமாகவோ காலக்கிரமத்தில் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்லும் நோக்கத்திற்காகக் கொழும்பிற் பல மாதங்களாகவும், வருடங்களாகவும் வசித்து வருகின்றனர். உதாரணமாக: 2007ஆம் ஆண்டில் மட்டும் மல்லாகக் கிராமத்தின் J/213 பிரிவிலுள்ள 734 குடும்பங்களில் 17 குடும்பங்கள் வெளிநாட்டிலுள்ள நெருங்கிய உறவினர்களுடன் வைத்திருந்த தொடர்புகளைக்கொண்டு கொழும்புப் பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர் (தனிப்பட்ட நேர்காணல், கிராம சேவகர், பூபாலசிங்கம், 2007). இவ்வாறு கொழும்புப் பிரதேசத்திற்கு வந்தவர்களிற் பலர் வெளிநாட்டு உறவினர்களால் அனுப்பப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தினைக்கொண்டே தமது சீவியத்தை நடத்துகின்றனர். இருப்பினும் உள்ளூரில் மூன்று தசாப்தங்களாக ஏற்பட்ட ஆயுத யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின் கொழும்பை நோக்கி யாழ்ப்பாண மக்கள் புலம்பெயர்ந்து சென்று அங்கு தங்கி வாழும் போக்கிற் குறிப்பிடத்தக்களவு சரிவும் ஏற்பட்டு வருகின்றமை கவனிக்கத்தக்கது. அட்டவணை 3 மல்லாகக் கிராமத்து மக்களின் உள்ளூர் மற்றும் சர்வதேச புலப்பெயர்வினைச் சாதியடிப்படையில் விபரிக்கின்றது.

**அட்டவணை 2:**
**மல்லாகத்தின் சாதியும் உள்ளூர் மற்றும் சர்வதேசப் புலப்பெயர்வும்.** 2007

| சாதி | உள்ளூர் இடப்பெயர்வு | சர்வதேசப் புலப்பெயர்வு |
|---|---|---|
| அம்பட்டர் | 1.5% | 5.5% |
| பிராமணர் | 4.3% | .0% |
| பள்ளர் | 29.0% | 23.6% |
| பண்டாரி | 2.9% | 5.5% |
| கோவியர் | 1.5% | 0.9% |
| நளவர் | 18.8% | 8.2% |
| நட்டுவர் | .0% | 1.8% |
| தச்சர் | 10.1% | 10.0% |
| வண்ணார் | .0% | 12.7% |
| வெள்ளாளர் | 31.9% | 31.8% |
| மொத்தம் | 100.0% | 100.0% |

வெள்ளாளரிற் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மக்கள் (31.8%) வெளிநாடுகளில் வசிக்கும்பொழுது, ஒப்பீட்டுரீதியில் அதே சாதியைச் சேர்ந்த அதிக எண்ணிக்கையிலான மக்கள் (31.9%) இலங்கையின் வேறு பிரதேசங்களுக்கு குறிப்பாக, கொழும்பை அண்டிய பிரதேசங்களுக்கு உள்ளூரிற் புலம்பெயர்ந்து செல்வதை அட்டவணை 3இல் இருந்து அறிய முடிகின்றது. நளவர், பள்ளர் முதலிய சலுகை மறுக்கப்பட்ட சாதிகளிடத்தேயும் இதனை யொத்ததொரு புலப்பெயர்வு வடிவத்தினை இவ்வட்டவணைமூலம் அவதானிக்க முடிகின்றது. பள்ளர், நளவர் சாதிக் குழுவினரது சர்வதேசப் புலப்பெயர்வு முறையே 23.6%, 8.9% பெறும் அதேவேளை, அவர்களது உள்ளூர் இடப்பெயர்வு முறையே 29.0%, 18.8% ஆகிய பெறுமானங்களைப் பெறுகின்றது. மரபுரீதியாக ஒடுக்கப்பட்டு வந்த சாதிக் குழுக்களின் (பள்ளர், நளவர், வண்ணார், அம்பட்டர்) சர்வதேசப் புலப்பெயர்வு புலம்பெயர்ந்தவர்களின் மொத்தத்தில் 50 வீதமான பெறுமானத்தினை ஒட்டுமொத்தமாகப் பெறுகின்றது.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களைத் தனது புலப்பெயர்வுக்காகக் கொண்டிருக்கலாம். எனவே, சரியான ஒரு காரணத்தை பெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வது என்பது கடினமானது; சாத்தியமற்றது. தகவல் தருவோராற் கூறப்பட்ட, பொதுவாக வெளித்தெரியும் சில காரணங்களையும், இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கையினையும் களத் தரவின் அடிப்படையில் அட்டவணை 4இல் கொடுக்கப்பட்டுள்ளது. மல்லாகக் கிராமத்தில் தொழில் தேடி இடம்பெறும் உள்ளூர் மற்றும் சர்வதேசப் புலப்பெயர்வுகள் முறையே 43.1% மாகவும், 60.6% மாகவும் காணப்படுகின்றது.

அட்டவணை 3:
மல்லாகக் கிராமத்தின் உள்ளூர் மற்றும் சர்வதேசப் புலப்பெயர்வுக்கான காரணங்கள், 2007

| காரணங்கள் | உள்ளூர் இடப்பெயர்வு | | சர்வதேசப் புலப்பெயர்வு | |
|---|---|---|---|---|
| | குடும்பங்களின் எண்ணிக்கை | வீதம் (%) | குடும்பங்களின் எண்ணிக்கை | வீதம் (%) |
| தொழில் | 28 | 43.1 | 66 | 60.6 |
| திருமணம் | 13 | 20.0 | 33 | 30.3 |
| பாதுகாப்பு | 11 | 16.9 | 5 | 4.6 |
| மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வதற்கு | 8 | 12.3 | 0 | 0 |
| கல்வி | 3 | 4.6 | 4 | 3.7 |
| வேறு | 2 | 3.1 | 1 | 0.9 |
| மொத்தம் | 65 | 100.0 | 109 | 100.0 |

புலப்பெயர்வுக்கான இரண்டாவது பிரதான காரணமாகத் திருமணமுள்ளது. திருமணத்திற்கான உள்ளூர் இடப்பெயர்வு 20.0%மாக இருக்கும் அதேவேளை, திருமணத்திற்கான சர்வதேசப் புலப்பெயர்வு 30.3%மாகவுள்ளது. திருமணத்திற்கான யாழ்ப்பாணத் தமிழர்களின் சர்வதேசப் புலப்பெயர்வு, வெளிநாடுகளிலும், உள்ளூரிலும் வசிக்கின்ற பெற்றோர், உறவினர் மற்றும் திருமணத் தரகர்கள்மூலமாக ஏற்படுத்தப்படும் நிச்சயிக்கப்பட்ட திருமணம் காரணமாகவே அதிகமாக இடம்பெறுகின்றது. வெளிநாடுகளிலும், யாழ்ப்பாணத்திலும் வசிக்கும் வேறுபட்ட சாதிப் பின்னணிகளைச் சேர்ந்தவர்களிடையே ஏற்பட்ட காதல் திருமணத்தின் காரணமாகவும் யாழ்ப்பாணத் தமிழர்கள் சிலரின் சர்வதேச புலப்பெயர்வுகள் இடம்பெறுகின்றன[5]. எனினும், அதிகமான பெண்களும், சில ஆண்களும் திருமணம் செய்து தமது துணைகளுடன் கூடிவாழ்வதற்கு வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்கின்றனர். இவ்வாறு திருமணம் முடித்து வெளிநாடுகளுக்குச் செல்வோர் நீண்டகால அடிப்படையிலும், குறுகிய கால அடிப்படையிலும் கொழும்பு போன்ற பிரதேசங்களிற் வீசா கிடைக்கும்வரை வாழ்வதனைப் பொதுவாகவே அவதானிக்க முடியும். இதனால் இவர்களது புலப்பெயர்வு ஆரம்பத்தில் உள்ளூர் இடப்பெயர்வாகவும், காலக்கிரமத்திற் சர்வதேசப் புலப்பெயர்வாகவும் மாற்றமடைகின்றது. சில சமயங்களில், சர்வதேச புலப்பெயர்வுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவடையும் உள்ளூர் இடப்பெயர்வு திருமணத்திற்கான இன்றியமையாத தேவையாகவும் அமைந்துவிட்டது.

இக்கற்கைக்கான தகவல் தருபவர்களில் அதிகமானோர் தொழில், திருமணம், பாதுகாப்பு மற்றும் கல்வி முதலிய புலப்பெயர்வுடன் வெளிப்படையாகத் தொடர்புபட்ட காரணங்களைக் கூறியிருக்கின்றனர். எனினும், ஒவ்வொருவரும் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட கூட்டுக் காரணங்களைத் தமது புலப்பெயர்விற் கொண்டுள்ளனர் என்பதைத் தெளிவாகவே புரிந்து கொள்ளவேண்டும். மேலும், யாழ்ப்பாணத்தில் தொழில்வாய்ப்பின் போதாமை, பாதுகாப்பு, உயர் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் போதாமை, பொருளாதார ரீதியாகப் பலம்மிக்க திருமணத் துணைகளின் பற்றாக்குறை முதலிய காரணங்கள்; நீண்ட காலமாக இடம்பெற்ற யுத்தம் மற்றும் வன்முறையின் பாரதூரமான விளைவுகள் என்பனவும் இவ்விடத்திற் கவனிக்கத்தக்கது.

யாழ்ப்பாணத் தமிழர்களிடையே இடம்பெறும் நிச்சயிக்கப்பட்ட திருமணத்தில் திருமணம் முடிப்பவர்களது சாதிப் பின்னணிகள் மிகவும் கருசனையுடன் பார்க்கப்படுகின்றது. திருமணத் துணைகளின் சாதிப் பின்னணியை அறிந்து கொள்வதும், அவர்களது பொருளாதார அந்தஸ்தினைப் தெரிந்து கொள்வதும் நிச்சயிக்கப்படும் திருமணத்தின் முக்கிய விடயங்கள் ஆகும். வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து வாழும் யாழ்ப்பாணத் தமிழர்களிற் குறிப்பாக முதலாம், இரண்டாம் தலைமுறையினர் செய்துகொள்ளும் நிச்சயிக்கப்பட்ட திருமணத்தில் சாதிக்குக் கொடுக்கப்படும் இடம் மிகவும் முக்கியமானதாகும். யாழ்ப்பாணத்தில் வாழும் உறவினர்கள், இலங்கையின் வேறு பகுதிகளில் வாழும் உறவினர்கள் (குறிப்பாகக் கொழும்பு), சர்வதேச ரீதியில் புலம்பெயர்ந்து வாழும் உறவினர்கள் திருமணத்தை நிச்சயிப்பதிலும், அவ்வாறு நிச்சயிப்பதில் தொடர்ச்சியாக ஏற்படும் பேச்சுவார்த்தையிலும் பாரிய பங்காற்றுகின்றனர். உள்ளூர், சர்வதேசக் குடிப்பெயர்வுக்குச் காரணமாயுள்ள இத்திருமணங்கள் யாழ்ப்பாணத் தமிழர்களின் ஒரு பகுதியினரது குடிப்பெயர்வினை சாதி மற்றும் உறவுமுறை என்ற சமூக நிறுவனங்களின் வழி தூண்டி நிற்கின்றது.

மேலும், யாழ்ப்பாணத் தமிழர்களிற் பலர் தம் ஊரில் தொடர்ச்சியாகச் செய்துவந்த தொழில்களுக்கும், அவர்கள் அத்தொழிலினூடாக நல்ல பணவருவாய் பெறுவதை நோக்கமாகக்கொண்டு தெரிவுசெய்யும் வெளிநாடுகளுக்கு இடையேயும் முக்கிய தொடர்பிருப்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தில் மரவேலை, சீமெந்து வேலை, சலவைத் தொழில், ஒட்டு வேலை, பட்டடை வேலை அல்லது இரும்பு வேலை, சிகையலங்காரம் முதலிய சாதித் தொழில்களைச் செய்யும் பலர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அதிகமாக செல்கின்றனர். அந்நாடுகளில் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட அதே தொழிலைச் செய்வதற்கான வாய்ப்பும் காணப்படுகின்றது. எனவே, மத்திய கிழக்கு நாடுகளுக்கான நகர்வு யாழ்ப்பாணத்திலுள்ள அம்பட்டர், கொல்லர், தச்சர், நளவர், பள்ளர் மற்றும் வண்ணார் போன்ற நடுத்தர, சலுகை மறுக்கப்பட்ட சாதிகளின் செல்வாக்குக்கே பெரும்பாலும் உள்ளாகின்றது. இன்னொருவகையில் கூறுவதாயின், யாழ்ப்பாணத்தவர் தாம் உள்ளூரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் சாதித் தொழில்களை நல்ல வருவாயுடன் மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை மத்திய கிழக்கு நாடுகள் வழங்குவதால், குறிப்பிட்ட சாதிக் குழுவினர் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கி அதிகம் புலம்பெயர்கின்றனர். இருப்பினும், மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று தொழில்புரியும் அனைத்து யாழ்ப்பாணத் தமிழர்களின் புலப்பெயர்வு வடிவங் களுக்கும் இவ்விளக்கம் ஒத்துப்போகுமென்று கூறிவிடமுடியாது. மேலும், மேற்கத்தேய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்லும் யாழ்ப்பாணத் தமிழர்களின் புலப்பெயர்வு வடிவம் இவ்விளக்கத்திலிருந்து முற்றுமுழுதாக மாறுபட்டிருப்பதும் புரிந்து கொள்ளத்தக்கதே.

**பணவருவாயின் மூலங்களும் அதன் உபயோகங்களும்**

யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கும் இடையேயான சமூக வலைப்பின்னல்கள் தனிப்பட்ட, குடும்ப, உறவுமுறை, சாதி மற்றும் சமுதாய மட்டங்களில் இடம்பெறுகின்றன. அத்துடன் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமிழர்களுடன் பொருளாதார, அரசியல், சடங்கு மற்றும் உணர்வுரீதியான பிணைப்பினூடாக ஒருவகையான வலைப்பின்னலை விருத்திசெய் துள்ளனர். எனினும், இக்கட்டுரையிற் பொருளாதார ரீதியில் ஏற்படும் வலைப்பின்னலே அதிகம் விளக்கத்திற்குள்ளாகின்றது. முறைசார்ந்த வங்கிகள், முறைசாரா பணமாற்றீட்டு முகவர்கள், உறவினர்கள், வணிகர்கள், பொதுநல மற்றும் சடங்குசார் நிறுவனங்கள் முதலிய பல்வேறு வகைப்பட்ட தனியார், பொது நிறுவனங்கள் இலங்கைத் தமிழர்களின் சர்வதேசப் பணமாற்றீட்டு வலைப்பின்னலிற் பங்குகொள்கின்றனர். முறைசார்ந்த வங்கிகளைத் தவிர்ந்த, பணப் பரிமாற்றத்திற் பங்குகொள்ளும் ஏனைய முகவர்கள் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுடனும், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமிழர்களுடனும் தனிப்பட்டரீதியில் தொடர்புகளைக் கொண்டுள்ளனர்.

அனைத்துச் சமூக மட்டங்களிலுள்ள மக்களாலும் பெறப்படும் பணவருவாயின் மிகச் சரியான எண்ணிக்கையைப் பெறுவதென்பது பெரும்பாலும் சாத்தியமற்றதொன்றாகவே உள்ளது. சமூக, அரசியல், சட்ட, தனிப்பட்ட (பாதுகாப்பு) காரணங்களுக்காக மக்கள் ஒன்றில் புலம்பெயர்ந்து வாழும் தமது உறவினரிடமிருந்து பெறும் வருமானம் தொடர்பாகக் கூறுவதைத் தவிர்க்கின்றனர் அல்லது அவ்விடயத்தினைப் பற்றிப் பேசுவதற்கு முற்றுமுழுதான தயக்கம் காட்டுகின்றனர். பல சந்தர்ப்பங்களில், வெளிநாடுகளில் இருந்துவரும் பணத்தினைப்பற்றிய ஆவணப்படுத்தல் எதனையும் குடும்பங்களோ அல்லது சமூக அமைப்புக்களோ வைத்திருக்காமையால், பணவருவாய் பற்றிய சரியான தகவல்கள் இல்லாது போகின்றது. இவ்வாறான காரணங்களினால், பணவருவாய் மற்றும் அவற்றின் உபயோகம் தொடர்பான இருப்பிலுள்ள, அடையாளம் கண்ட தகவல்களைக் கொண்டே விளக்கங்களும், வியாக்கியானங்களும் கொடுக்கப்படுகின்றது.

புலம்பெயர்ந்து மேற்கத்தேய நாடுகளில் வாழும் மக்களிடமிருந்தும், மத்திய கிழக்கு நாடுளில் தொழில் செய்பவர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளும் பணத்தின் அடிப்படையில் முன்னிலை வகிக்கும் இருபது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையும் ஒன்றாகும் (World Bank, 2003). தமிழீழ விடுதலைப் புலிகளாற் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பாரியளவு தொகையான பணம் பயன்படுத்தப்பட்டது எனக் கூறப்பட்டது. வருடாவருடம் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களிடமிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குக் கிட்டத்தட்ட 80 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருவதாக இலங்கை அரசாங்கம் கணித்துள்ளது (Cheran 2002). மேலும், குறிப்பாக வடக்கு, கிழக்கு இலங்கையில் யுத்தம், சுனாமியாற் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கான மனிதாபிமான உதவிப் பணிகளுக்கும் குறிப்பிடத்தக்களவு தமது உதவிகளைப் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் செய்துள்ளனர். எவ்வாறாயினும், வெளிநாடு களிலிருந்து வரும் பணத்தினை உள்ளூரில் உபயோகிக்கும் முறையினைப் பகுப்பாய்வு செய்வதில் ஏற்பட்ட எனது ஆர்வம் தமிழீழ விடுதலைப் போராட்டங்களுக்காக, அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளால் அல்லது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படும் விடயங்களிற் கவனத்தைக் குவிக்கவில்லை. மாறாக, வெளிநாடுகளிலிருந்து வரும் பணத்தினைப் பயன்படுத்துவதனூடாக மல்லாகக் கிராமத்திற் குறிப்பாக, சலுகை மறுக்கப்பட்ட குழுக்களில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சமூக, பொருளாதார, பௌதிக மூலதனங்கள்; சமூக அந்தஸ்துத் தொடர்பான வளர்ச்சிகளைப் பகுப்பாய்வு செய்வதாகவே அமைகின்றது.

யாழ்ப்பாணச் சமூகத்திற்கு வெளிநாட்டுப் பணம் இரண்டு மட்டங்களில் அனுப்பப்படும் போக்கும், உபயோகிக்கப்படும் போக்குமுள்ளது. பணவருவாயின் முதலாவதும், அடிப்படையானதுமான விடயமாகக் குடும்ப அமைப்புள்ளது. இங்கு குடும்பம், உறவுமுறையாகிய நிறுவனங்கள் மிகப் பிரதான வகிபங்கினை ஆற்றுகின்றன. பணவருவாயினைப் பெற்றுக்கொள்ளும் மற்றைய மட்டம் சமூக அமைப்புக்களாகும். இவ்விரண்டாவது மட்டத்தில் இந்துக் கோயில்கள், தேவாலயங்கள், பாடசாலைகள், ஏனைய சமூக நல அமைப்புக்கள் தமது வகிபங்கினை ஆற்றுகின்றன. இரண்டாவதாக விளக்கப்பட்ட விடயத்திற் சாதிப்பின்னணி அல்லது பிணைப்பு, குறிப்பிட்ட நிறுவனத்தோடு புலம்பெயர்ந்து சென்றவர்கள் கொண்டிருந்த சிறுபராய பிணைப்பு, கடமையுணர்வுகள் முதலியன முக்கிய வகிபங்கினை ஆற்றிநிற்கின்றன.

மல்லாகத்திலுள்ள பல சாதிக் குழுக்களிற் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான மக்கள் வெளிநாடுகளிலுள்ள தமது உறவினர்களுடன் முனைப்பானதொரு வலைப்பின்ன லைக் கொண்டுள்ளதோடு, அவர்களிடமிருந்து பண உதவிகளையும் பெற்றுக் கொள் கின்றனர். யாழ்ப்பாணச் சமூகத்தின் வெளிநாட்டுப் புலப்பெயர்வு வரலாறு பூராகவும், குடும்பம் மற்றும் உறவினர்களின் வழி தாய்நாட்டை வந்தடையும் பணத்தின் பெறுமதி அதிகமாகும். இருப்பினும் இவ்வாறு வெளிநாட்டு உறவினர்களிடமிருந்து பணத்தினைப் பெறும் பலர் ஒரு சீரான கால இடைவெளியில் அப்பணத்தினைப் பெறுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 4: மல்லாகக் கிராமத்தின் பணவருவாய் மூலங்கள், 2007

| பணவருவாய் மூலங்கள் | குடும்பங்களின் எண்ணிக்கை | வீதம் (%) |
|---|---|---|
| மேற்கத்தேய நாடுகளிலுள்ள புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து (உறவினர்கள்) வரும் வருமானம் | 94 | 43.3 |
| சுயதொழில் | 60 | 27.6 |
| அரசாங்க உத்தியோகம் | 47 | 21.7 |
| மரவேலை / சீமெந்து வேலை | 41 | 18.9 |
| நாளாந்தக் கூலித் தொழில் | 41 | 18.9 |
| வணிகம் | 30 | 13.8 |
| விவசாயம் | 30 | 13.8 |
| மத்திய கிழக்கு நாடுகளில் வேலைபுரியும் உறவினர்களிடமிருந்து வரும் வருமானம் | 16 | 7.4 |
| கள் சீவுதல் | 7 | 3.2 |
| சலவைத் தொழில் | 5 | 2.3 |
| நகர சபையில் சுத்திகரிப்புத் தொழிலாளராகப் பணிபுரிதல் | 5 | 2.3 |
| முடி திருத்தும் தொழில் | 4 | 1.8 |
| மாலை கட்டி விற்றல் | 3 | 1.4 |
| கோயில் பூசகர் | 2 | 0.9 |
| (பறை) மேளம் அடித்தல் | 1 | 0.5 |
| தவில், நாதஸ்வரம் வாசித்தல் | 1 | 0.5 |
| மொத்தம் | 387 | 100.0 |

அட்டவணை 4இல் கொடுக்கப்பட்ட தரவின்படி, மல்லாகக் கிராமத்தில் வசிக்கும் குடும்பங்களில் 43.3%மானவர்கள் மேற்கத்தேய நாடுகளில் வசிக்கும் தமது உறவினர்களிடமிருந்தும், 7.4%மானவர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்புரியும் உறவினர்களிடமிருந்தும் வருமானத்தினைப் பெற்றுக் கொள்கின்றனர். ஒட்டுமொத்தமாக, மல்லாகத்தில் வசிக்கும் 50.7%மானவர்கள் வெளிநாட்டவரிடமிருந்து பணத்தினைப் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வெண்ணிக்கை மல்லாகத்தில் வசிக்கும் மக்கள் வெளிநாட்டுப் பணத்தில் முற்றுமுழுதாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ தங்கியிருப்பதைக் காட்டுகின்றது. மேலும், வெளிநாட்டுப் பணவருவாயைக் கொண்டுள்ள உள்ளூரில் வசிக்கும் குடும்பங்களை மூன்று வகைக்குள் பிரித்துப் பார்க்க முடிகின்றது: (1) வெளிநாட்டவரால் அனுப்பப்படும் பணத்தில் முற்றுமுழுதாகத் தங்கி வாழ்பவர்கள், (2) நாளாந்த செலவிற் சில விடயங்களுக்காக மட்டும் வெளிநாட்டவரின் பணத்தில் தங்கிவாழ்வபர்கள் அல்லது வெளிநாட்டவரால் அனுப்படும் பணத்தில் ஒரு பகுதியை நாளாந்த தேவைக்காகச் செலவு செய்பவர்கள் (3) வெளிநாட்டுப் பணத்தினைப் பெற்றுக் கொள்பவர்கள் ஆனால் நாளாந்தச் செலவில் அப்பணத்தில் தங்கியிருப்பதில்லை. முதலாவது வகைக்குள் உள்ளடங்குபவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டவர்களின் பணத்தினைத் தவணையடிப்படையில் எதிர்பார்த்து இருப்பவர் களாவர். இவர்கள் அப்பணத்தினைத் தமது நாளாந்த வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பயன்படுத்துகின்றனர். இரண்டாவது வகைக்குள் வரும் நபர்கள் யாழ்ப்பாணத்தில் சொந்தமாக வருமானத்தினை ஈட்டுபவர்களாவர். இருப்பினும், அவர்கள் உள்ளூரிற் சம்பாதிக்கும் பண வருவாயைக்கொண்டு குடும்ப வாழ்கையை ஓட்டுவதற்குச் சிரமப்படுகின்றனர். இதனால் அச்சிரமத்தை நிவர்த்திசெய்யும் பொருட்டு வெளிநாட்டவரால் அனுப்பப்படும் பணத்திலும் தங்கி வாழ்கின்றனர். வெளிநாட்டவர்களிடமிருந்து பணம்பெறும் மூன்றாவது வகைக்குள் உள்ளடக்கப்பட்ட மக்கள், உள்ளூர் வருமானத்தினைக் கொண்டு தமது நாளாந்த குடும்பத் தேவையினைப் பூர்த்தி செய்கின்றனர். இவர்கள் வெளிநாட்டு உறவினர்களிடமிருந்து பெறும் பணத்தினை உள்ளூரிற் செய்யும் தொழிலை மேலும் விருத்தி செய்தல், வீடுகளைத் திருத்தியமைத்தல், வாகனம் வாங்குதல், பெண்ணுக்கு (மகளுக்கு) சீதனம் கொடுத்தல் முதலிய விசேட தேவைகளுக்காக பயன்படுத்துகின்றனர். உள்ளூரிலிருந்து வெளிநாட்டு உறவினரிடம் பணம் பெறுபவர்களை இவ்வாறு மூன்று வகைக்குள் பிரித்து விளக்கம் கொடுக்க முடிகின்றபோதிலும், இவ்வகைகள் முற்றுமுழுதும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு இயங்குகின்றது எனக் கூறிவிட முடியாது. வெளிநாட்டவரால் அனுப்பப்படும் பணம் அனைத்துக் குடும்பங்களாலும், தனிநபர்களாலும் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதும் இவ்விடத்திற் குறிப்பிடத்தக்கது.

### புதிய செல்வந்தர்களின் வளர்ச்சி

வரலாற்று ரீதியாக, யாழ்ப்பாணத் தமிழர்களின் பொருளாதார வளர்ச்சி இலங்கையிலுள்ள ஏனைய இனக் குழுக்களின் பொருளாதார வளர்ச்சியிலிருந்து பாரியளவு வேறுபட்டுள்ளது. மிகச் சிறிய எண்ணிக்கையான இலங்கைக் கொழும்புத் தமிழர்கள் தெங்கு, கோப்பி மற்றும் தேயிலை போன்ற பெருந்தோட்டப் பொருளாதாரத்திற் குறிப்பிடத்தக்க தொகையினை முதலிட்டிருந்தனர் (Jayawardena 2007). யாழ்ப்பாணத்திற் கணிசமான எண்ணிக்கையான "உயர்" சாதிக் குழுக்கள் சேவைசெய்யும் சாதிக் குழுக்களின் (பள்ளர், நளவர்) உதவிகளோடு நெல், புகையிலை, வெங்காயம் மற்றும் ஏனைய விவசாய உற்பத்திகளைப் பெரும்பாலும் தமது சொந்த நிலங்களிற் செய்துவந்தனர். மரபுரீதியான யாழ்ப்பாணச் சமூகத்தில்; குறிப்பாகச் சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்கள் சாதியடிப்படையிலான தொழில்களின்மூலமாகவே தமது பிரதான வருமானத்தினை ஈட்டிக்கொண்டனர். காலனித்துவ ஆட்சிக் காலங்களில் ஏற்படுத்தப்பட்ட ஆங்கிலக் கல்வி, அரச தொழில்வாய்ப்பு முதலியன "உயர்" சாதி வெள்ளாளர்களாலேயே பெரிதும் அனுபவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் கிறிஸ்தவ மிஷனரிகளின் யாழ்ப்பாணத்திற்கான வருகைக்குப் பின்னர், மத மாற்றம் வேண்டி மேற்கொள்ளப்பட்ட பாரியதொரு திட்டத்தின்கீழ் தாழ்த்தப்பட்ட சாதியினர் கல்விசார் நன்மைகள் சிலவற்றைப் பெற்றனர். மத மாற்றத்தினூடாகச் சமூகத்தில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட செயற்பாடாகவும் இவ்விடயம் பார்க்கப்பட்டது. ஆங்கிலக் கல்வியைப் பெற்ற யாழ்ப்பாணத் தமிழர்கள் ஊதியம்பெறும் தொழில்களையும், அரசாங்கத் தொழில்களையும் பெற்றுக் கொண்டனர். இலங்கை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேசியா, பர்மா, இந்தியா போன்ற நாடுகளில் அரசாங்க சேவையில் தொழில் புரிந்தது மட்டுமல்லாது, இலங்கையில் மருத்துவம், சட்டம், பொறியியல் முதலிய துறைகளிலும், வங்கிகளிலும் தொழில் புரிந்தனர் (Jayawardena 2007:203–204). இலங்கை, காலனித்துவ மலேசியா போன்ற நாடுகளிற் காணப்பட்ட ஆங்கிலக் கல்வி, தொழில் முதலியவற்றின் மேம்பாடுகளை "உயர்" சாதி மக்களே பெரிதும் அனுபவித்தனர். இத்தகைய சந்தர்ப்பங்களை சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்களில் ஒரு சில அங்கத்தவர்கள் மட்டுமே பெறக்கூடியதாக இருந்தது என்பதை முன்னர் பார்த்தோம். இலவசக் கல்விக் கொள்கை, தாழ்த்தப்பட்ட சாதிக் குழுக்களின் வெளிநாடுகள் நோக்கிய புலப்பெயர்வு முதலிய பலவிடயங்கள், இச்சாதியைச் சேர்ந்தவர்களுக்கு கல்வி, வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்களை வழங்கி நிற்கின்றன.

மரபுரீதியாக யாழ்ப்பாணச் சமூகத்தில் வளம்மிக்க நிலபுலங்களுக்குச் சொந்தக்காரர்களாக வெள்ளாளர் அடையாளம் காணப்பட்டனர். இன்றும்கூட, தொடர்ச்சியான இடப்பெயர்வு, தாழ்த்தப்பட்ட சாதிக் குழுக்களின் மேல்நோக்கிய அசைவியக்கம் என்பவற்றுக்கு அப்பாலும், "உயர்" சாதியினர் பெரும்பாலும் தமது நிலங்களை வேறு சாதிகளுக்கு (குறிப்பாக சலுகை மறுக்கப்பட்ட சாதிகளுக்கு) விற்க விரும்புவதில்லை. "உயர்" சாதிகளுடன் மிக நெருங்கிய தொடர்பிலுள்ள நிலங்களை அல்லது "உயர்" சாதியினர் தாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்தது எனக் கருதுகின்ற நிலங்களைத் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு விற்பதற்கு ஒருவகையான மறுப்பையும், சமூகத் தடையினையும் ஏற்படுத்தி நிற்கின்றனர் (Thanges and Silva, 2009; CPA 2005). மல்லாகத்தில், கணிசமான எண்ணிக்கையான குடும்பங்கள் வெளிநாட்டில் வசிக்கும் உறவினர்களிடமிருந்து பணத்தினைப் பெற்றுக் கொள்கின்றனர் என்பதை முன்னர் பார்த்தோம். இவ்வாறு இவர்கள் பெறும் பணத்தின் பெரும்பகுதியை வீடுகளைத் திருத்தியமைக்கவும், குடும்ப சொத்துக்களை விஸ்தரிக்கவும் பயன்படுத்துகின்றனர். பரம்பரை பரம்பரையாகச் சலுகை மறுக்கப்பட்டு வந்த சாதிகளில் பலர் இவ்வாறு பெறும் பணத்தினைக்கொண்டு புதிய நிலங்களை வாங்குகின்றனர், வீடுகளைத் திருத்தியமைக்கின்றனர், புதிய வீடுகளைக் கட்டுகின்றனர். சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்களிடையே ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இப்புதிய வளர்ச்சியினால், தற்கால யாழ்ப்பாணச் சமூகத்தில் மரபுரீதியாகக் காணப்பட்ட "சாதிப் புவியியல்[5]" அல்லது சாதியை மையப்படுத்திய குறிச்சிகளிற் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

நில உடைமை மாற்றீடு என்பது சாதி, உறவு முறை, வகுப்பு ஆகிய சமூகக் கட்டமைப்புக்களினூடாகவே பெரும்பாலும் இடம்பெறுகின்றது. இருப்பினும், மரபுரீதியாக வழக்கத்திலுள்ள இந்நிலச் சந்தை தொடர்ச்சியாகப் பல சந்தர்ப்பங்களில் நடைமுறையிலுள்ள அதேநேரம், தாழ்த்தப்பட்ட சாதிக் குழுக்களின் வெளிநாடுகளுக்கான புலப்பெயர்வு, அப்புலப்பெயர்வினூடாக கிடைக்கும் பணம், கல்வி அடைவுகள், சார்புரீதியில் அதிக எண்ணிக்கையான வெள்ளாள சாதிகளின் உள்ளூர் (கொழும்பு போன்ற பிரதேசங்களுக்கு) மற்றும் வெளிநாட்டுப் புலப்பெயர்வு முதலிய இன்னோரன்ன காரணங்களால் இந்நிலச் சந்தையிற் குறிப்பிடத்தக்க மாற்றங்களும் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லாகத்திலுள்ள வெளியூர்த் தொடர்புகளைக் கொண்ட தாழ்த்தப்பட்ட சாதிகளிற் சிலர் பரம்பரை பரம்பரையாக "உயர்" சாதிகளின் உடைமையாக இருந்த நிலங்களை வாங்கியுள்ளனர்.

> **நான் ஒரு சலவைத் தொழிலாளி (வண்ணார்). எனது இரண்டு மகன்கள் லண்டனுக்கு புலம்பெயர்ந்து செல்வதற்கு முன்னர், நான் பொருளாதாரரீதியிற் குறிப்பிடத்தக்க வறியவனாகவே இருந்தேன். மகன்களிடம் இருந்துவரும் தொடர்ச்சியான பணவருவாயினால் நான் குறிப்பிடத்தக்க செல்வந்தனாகத் தற்பொழுது இருக்கின்றேன். மல்லாகத்தில் வேறுபட்ட இடங்களில் நிலங்களைக் கடந்த சில வருடங்களில் வாங்கியிருக்கின்றேன். அவற்றில் ஒரு நிலம் கே.கே.எஸ். றோட்டோரத்தில் அமைந்துள்ளது. இந்த நிலத்தை வேண்டுவதற்கு 4 மில்லியன் ரூபாக்கள் கொடுத்தேன். இந்நிலத்தை நான் வாங்கும்போது, மிகவும் போட்டி நிலவியது. இருப்பினும், குறிப்பிடத்தக்க பணத்தினை எனது மகன்மார் லண்டனில் இருந்து அனுப்பியதனால் என்னால் இந்த நிலத்தை வாங்க முடிந்தது.**[3]

சலுகையளிக்கப்பட்ட; மற்றும் தாழ்த்தப்பட்ட சாதிகளைப் பிரதிநித்துவப்படுத்தி இருந்த இக்கற்கைக்கான தகவல் தருவோர்கள், காலாகாலமாக நடைமுறையிலிருந்த நிலச்சந்தையில் இத்தகையதொரு மாற்றத்திற்கு மூலகாரணமாக உள்ளூரிள்ள மக்கள் வெளிநாட்டிலுள்ள தமது நெருங்கிய (இரத்த) உறவினர்களிடமிருந்து பெருந்தொகையான பணத்தினைப் பெறுவதனாலேயே சாத்தியமானது என்கின்றனர். எனவே, வெளிநாட்டுப் புலப்பெயர்வுகளினாற் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான உள்ளூரில் வசிக்கும் தாழ்த்தப் பட்ட சாதியினர் தம்மைப் பொருளாதாரரீதியாக வளப்படுத்துதல் என்ற விடயமும், சார்புரீதியில் அதிக எண்ணிக்கையான வெள்ளாள சாதியைச் சேர்ந்த மக்கள் கொழும்பு மற்றும் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்தல் என்ற விடயமும் இணைந்து யாழ்ப்பாணத்தில் வரலாற்று ரீதியாகத் தொடர்ந்தும் நடைமுறையிலிருந்த நிலச் சந்தையில் சில மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இந்நிலைமை, நிலச்சந்தையிற் போட்டிபோட்டு நன்மையடையக் கூடிய உள்ளூரில் வசதி படைத்தவர்களுக்கு வெளிநாடுகளில் வசிக்கும் ஊரிலில்லா வெள்ளாள நிலவுடைமையாளர்கள் தமது நிலங்களைச் சாதி வரையறைகள் கடந்தும் விற்றமைக்கான பல உதாரணங்கள் யாழ்ப்பாணத்திலுள்ளது. இப்போக்கு மரபுரீதியாக இருந்து வந்த சாதிப் புவியியலிற் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், ஊரிலில்லா வெள்ளாள நிலவுடைமையாளர்கள் தமது நிலங்களை விற்கும்போது, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமது சாதியைச் சேர்ந்தவர்களுக்கும், உறவினர்களுக்கும் முன்னுரிமை கொடுக்கும் வழக்கமும் பொதுவாக நடைமுறையிலுள்ளது.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், 1980களில் இருந்து குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் தாம் செய்யும் சாதித் தொழில்களின் வழமையான முறைகளை மாற்றியமைத்ததோடு புதிய பல தொழில்களிலும் ஈடுபடுகின்றனர். தமது சாதித் தொழில்களை நிறுவனப்படுத்துவதற்கும், தொழிலுக்குரிய நவீன பண்புகளை உள்வாங்கிக் கொள்வதற்கும், தமக்கெனச் சொந்தக் கடைகளை உருவாக்கும் போக்கு காணப்படுகின்றது. அத்துடன். பல இளம் தலைமுறையினர் சாதி அடிப்படையிலான தொழில்களைக் கைவிடும்போக்கும் இடம்பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிதாக வாங்கிய எனது காணியில் சலவைத் தொழிலைச் செய்வதற்கென ஒரு கடையை நான் கட்டினேன். முன்னர் எல்லாம் "உயர்"சாதிக்காரர்களிடமிருந்து அழுக்குத் துணிகளைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களின் வீடுகளுக்குச் செல்வேன். அவ்வாறு போவதை நான் தற்பொழுது முற்றாக நிறுத்தி விட்டேன். தற்பொழுதெல்லாம் "உயர்"சாதிக்காரர் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு எனது கடைக்கு வருகின்றனர். எனது மூன்றாவது மகன் அவ்வப்போது என் தொழிலுக்கு உதவுவான். மேலதிக வருமானத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு வாகனமும் வைத்திருக்கின்றான். இவ்வாகனம் வாங்குவதற்கும் லண்டனிலுள்ள எனது பிள்ளைகளே பண உதவி செய்தனர். எனது கடைசி மகன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற் பட்டம் பெற்றதொரு பட்டதாரி. அவர் இப்பொழுது அரசாங்க உத்தியோகம் தேடிக் கொண்டிருக்கின்றார்.**[4]

மேற்குறிப்பிடப்பட்ட பொருளாதார மாற்றங்கள் தாழ்த்தப்பட்ட சாதியினரிடையே ஏற்பட்ட வளர்ச்சியினை அதிகம் அழுத்திக் கூறுகின்றபோதிலும், இத்தகைய மாற்றங்கள் யாழ்ப்பாணத்தின் அனைத்து சாதியினரிடத்தேயும் மேற்கத்தேய நாடுகளை நோக்கிய புலப்பெயர்வு, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் உறவினர்களுக்கு அனுப்பப்படும் பணம் என்பவற்றால் பொதுவாக இடம்பெறும் மாற்றங்கள் எனலாம். எவ்வாறாயினும், இப்போக்கு மரபுரீதியான சாதி அடையாளங்களில் ஏற்படுத்திநிற்கும் செல்வாக்கு தாழ்த்தப்பட்ட சாதியினரிடத்தே முற்போக்கான பல மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது என்பது முக்கியமானதொரு விடயமாகும்.

யாழ்ப்பாண வரலாறு அறியப்பட்ட காலம் பூராகவும் சீதனம் என்ற விடயம் ஒரு முறைமையாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. மணமகனுக்கு அல்லது அவரது குடும்பத்திற்கு எவ்வளவு சொத்து கொடுக்கப்படவேண்டும் என்ற பேச்சுவார்த்தை குறிப்பாக ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட திருமணத்தின் முக்கிய விடயமாக இருந்து வருகின்றது. யாழ்ப்பாணத்தின் ஆண்ட வழிவந்த சமூக முறைமையின்கீழ் மணமகனுக்கு மணமகளால் அல்லது அவளது குடும்ப உறவினராற் பொதுவாக நிலம், வீடு, நகை, பணம் முதலியன சீதனமாகக் கொடுக்கப்படுவது வழமை. வெளிநாட்டுப் பணவருவாயினால் உருவாகிய புதிய செல்வந்தர்களினால் யாழ்ப்பாணத்துச் சீதன முறைமையிற் குறிப்பிடத்தக்க சில மாற்றங்கள் இடம்பெறுகின்றன. கடந்த இரு தசாப்தங்களாக சீதனமாகக் கொடுக்கப்படும் சொத்துக்களின் தொகை குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. குறிப்பாக மேற்கத்தேய நாடுகளில் தமது நெருங்கிய உறவினர்களிடமிருந்து பணத்தினைப் பெற்றுக் கொள்ளும் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மக்கள் தமது மகளுக்கோ அல்லா சகோதரிக்கோ சீதனமாக அதிக சொத்துக்களைக் கொடுக்கும் போக்கு அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது.

**லண்டனில் உள்ள எனது அண்ணா ஒரு புதிய வீடு கட்டுவதற்குப் பணம் அனுப்பினார். இந்த வீட்டினைக் கட்டி முடிப்பதற்கு கிட்டத்தட்ட 4 மில்லியன் ரூபாக்கள் முடிந்தது. நான் திருமணம் செய்யும்போது அந்தப் புதிய வீடும், ஒரு தொகைப் பணம் மற்றும் நகையும் சீதனமாகக் கொடுக்கப்பட்டது. எனது கணவர் ஒரு தொழிலைச் செய்வதற்கென எனது அண்ணன் ஒரு வாகனத்தினையும் வேண்டிக் கொடுத்தார்.**[5]

இப்போக்கு சீதனமாக அதிக சொத்தினை வேண்டிநிற்கும் போக்குக்கு வித்திட்டதுடன், இவ்விடயம் வெளிநாட்டுத் தொடர்புகளை வைத்திராத வறிய பல உள்நாட்டு மக்களைப் பாரியளவிற் பாதிக்கின்றது. ஆகையால் அத்தகைய பெருமளவு குடும்பங்கள் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளுக்கோ அல்லது சகோதரிக்கோ குறைந்த சீதனத்தில் ஒரு மணமகனைப் பெற்றுக் கொள்வதற்குப் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

## ஒரு வகுப்புச் சமூகத்தில் சாதி அடிப்படையிலான மத அடையாளங்களில் இயங்குநிலைகள்

யாழ்ப்பாணத்திலுள்ள சமூக அமைப்புக்களான கோயில், தேவாலயங்கள், பாடசாலைகள், வாசிகசாலைகள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் முதலியன புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடமிருந்து பணத்தினைப் பெற்றுக் கொள்கின்றன. இவ்வாறு பெறப்படும் பணவருவாயைக்கொண்டு இவ்வமைப்புக்கள் அதனது உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும், சமயச் சடங்குகளை நிகழ்த்துவதற்கும், விழாக்களைக் கொண்டாடுவதற்கும் பயன்படுத்துகின்றன. புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் தாம் பிறந்து வளர்ந்த இடம் அல்லது தமது கிராமம், சமய மற்றும் கல்விசார் அமைப்புக்களுடன் தாம் வைத்துள்ள சாதி, சிறுபராய பிணைப்புகள் இவ்வாறு பணத்தினை அனுப்பி வைப்பதற்குத் தூண்டுகோலாக இருக்கும் முக்கிய காரணிகளாகும். இத்தகைய பணம் சேகரிக்கும் முறைமை இவ்வமைப்புக்களின் அபிவிருத்திக்காகக் குறிப்பிட்ட ஒவ்வொரு காலங்களிலும் மேற்கொள்ளப்படும் பணம் சேகரிக்கும் முறைமையாக அடையாளம் காணப்படுகின்றது. இத்தகைய அபிவிருத்திகள் கோயிற் கட்டிடம் கட்டுதல், தேர் கட்டுதல், சமயச் சடங்குளைக் கொண்டாடுதல், பாடசாலை அபிவிருத்திக்காக நிலத்தினை வாங்குதல், வருடாந்த கொண்டாட்டங்களை மேற்கொள்ளுதல் போன்றவையாகக் காணப்படுகின்றன.

குறிப்பாகக் கிராம மட்டத்திலான இந்துக் கோயில்களுக்குப் பெறப்படும் பணம் சாதிப்பிணைப்பு என்ற ஐக்கியத்தின் அடிப்படையிலேயே பெரும்பாலும் இடம் பெறுகின்றது. அதாவது புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தமது சாதிக்காரர்களால் நடத்தப்படும் கோயில்களுக்கே பெரும்பாலும் பணத்தினை அனுப்பிவைக்கின்றனர். இதனால் கிராமமட்டத்திலான அதிகமான கோயில் நிர்வாகம் ஒரு குறிப்பிட்ட சாதியினை மையப்படுத்தியதாகவே உள்ளது. குறிப்பாகப் பல தாழ்த்தப்பட்ட சாதிகள் தமது இந்துக் கோயில்களை வெளிநாட்டடில் வசிக்கும் தமது சாதிக்காரர்களிடமிருந்து பெற்ற பணத்தின் மூலம் அபிவிருத்தி செய்து வருகின்றனர். இப்போக்கு குறிப்பாக 1980களைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக் கிராமங்கள் பலவற்றிலும் ஏற்பட்டு வருகின்றது. இது ஒருவகையில் தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தோர் தமது மத வழிபாட்டுக்காகச் சுதந்திரமாகச் செயற்படும் போக்கை ஊக்குவித்து நிற்பதோடு "உயர்" சாதியினரின் கோயில்களில் மதச் செயற்பாடுகளில் தங்கியிருக்க வேண்டிய தேவையினைக் குறைத்தும் நிற்கின்றது எனலாம். இவ்விடயம் தொடர்பாகப் பஸ்ரின் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "மத ஆதிக்கத்திலுள்ள சாதிப்பகைமை ஏனைய ஆலயங்களைப் பயன்படுத்துவதில் வெற்றி கொள்வதைவிட, அடக்கப்பட்ட சாதிக் குழுக்களைத் தமது சொந்த ஆலயங்களைக் கட்டுவதற்கு ஊக்குவித்தது" (1997:426). மேற்குலகு சென்று வசிக்கும் தமிழர்களின் பணவருவாய்; அடக்கப்படும், அடக்கு முறைக்குட்படுத்தும் இரு சாதிக்குழுக்களினதும் சொந்தமாக ஆலயம் கட்டும் பணியையும், ஏற்கனவே உள்ள ஆலயங்களைத் திருத்தியமைக்கும் பணியையும் மேலும் ஊக்குவித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்பதை அவதானிக்க முடிகின்றது. கிராம மட்டங்களில் நிலைமை இவ்வாறிருக்க; சலுகையளிக்கப்பட்ட சாதிக் குழுக்களின் நிர்வாக ஆளுகை காணப்படுகின்றபோதிலும், யாழ்ப்பாணத்தின் பெரும் இந்துக் கோயில்களான நல்லூர் முருகன், தெல்லிப்பளைத் துர்க்கையம்மன் போன்ற கோயில்கள் அவை தோன்றிய சாதி மூலங்களுக்கு அப்பாற்சென்று, பொதுவாகப் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் அனைத்துச் சமூக மட்டங்களிலிருந்தும் பணவருவாயைப் பெற்றுக்கொள்கின்றன.

மரபுரீதியாக வெள்ளாளர் யாழ்ப்பாணச் சமூகத்திற் சமூக, பொருளாதார, கல்வி, அரசியல் முதலிய துறைகளில் ஆதிக்கத்தினைக் கொண்டிருந்ததோடு, சமயச் சடங்குகள், சமூக நடைமுறைகள்மீதும் ஆதிக்கத்தினையும், கட்டுப்பாட்டையும் வைத்திருந்தனர். சமயச் சடங்குகளை ஆற்றுவதிற் பொருளாதாரத்தின் பங்கு இன்றியமையாதது. சமயச் சடங்குளினூடாகச் சாதி அந்தஸ்தினைப் பேணுவதில் வெள்ளாளரின் பொருளாதார அடைவுகள் பெரிதும் துணை புரிந்தன. வெள்ளாளர் யாழ்ப்பாணத்தின் பாரிய ஆகமம் சார்ந்த கோயில்களில் தமது ஆதிக்கத்தினைச் செலுத்தி வந்த அதேநேரம், சலுகை மறுக்கப்பட்ட சாதிகள் ஆகமம் சாராச் சடங்குகளை மேற்கொள்ளும் (வேள்வி, குளிர்த்தி, தீ மிதிப்பு முதலிய) சிறிய கோயில்கள் பலவற்றைக் கிராம மட்டங்களிற் கொண்டிருந்தனர். இந்நிலைமை தற்பொழுதும் யாழ்ப்பாணச் சமூகத்தில் நடைமுறையில் உள்ளது.

எவ்வாறாயினும், யாழ்ப்பாண வரலாற்றின் கடந்த மூன்று தசாப்தங்களாகக் கிராம மட்டத்திலுள்ள சாதி அடிப்படையிலான இந்தக் கோயில்கள்பல; துரிதமாக வளர்ச்சி அடைந்து வருகின்றன. முக்கியமாகப் போதுமான வசதிகளுடன் கோயில்களைப் பராமரித்தல், "உயர்வாக மதிக்கப்படும் சடங்குகளை" ஆற்றுதல் முதலியன ஒரு சமூகத்தின் அல்லது குழுவின் வளம், அந்தஸ்து, கௌரவத்தை வெளிப்படுத்தி நிற்கும் குறியீடுகள் என அனைத்துச் சாதியினரும் நம்புகின்றனர். இதனாலேயே, வெள்ளாளர் சாதியைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்தின் பாரிய கோயில்களில் தமது ஆதிக்கத்தினைப் பேணி வருகின்றனர். ஏனைய சாதிகளைச் சேர்ந்தவர்களும் தமக்கான கோயில்களை விருத்தி செய்தபோதிலும், அவை பெரும்பாலும் சிறியவையாகக் காணப்பட்டன. வரலாற்று ரீதியாக ஒவ்வொரு சாதியினரும் தமக்கான கோயில்களைக் கட்டியெழுப்பும் பண்பு சாதியடையாளங்களை வெளிப்படுத்தி நிற்பதோடு, இத்தகையதொரு வரலாற்று ரீதியான அடையாளக் கட்டுமானம் வெளிநாட்டுப் புலப்பெயர்வு, பணவருவாய் என்பனவற்றோடு மேலும் முனைப்புப் பெறுவதை யாழ்ப்பாணத்திலுள்ள பல கிராமப் புறங்களில் அதிகம் காணமுடியும். மரபுரீதியாகச் சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்களிற் பலர் செயலூக்கத்துடன் தமது சாதிக் கோயில்களை ஆகமரீதியான ஆசாரங்களுடன் அபிவிருத்தி செய்கின்றனர். இவ்விடயத் தினைச் சிவத்தம்பி பின்வருமாறு ஆவணப்படுத்துகின்றார்.

> **புதிய செல்வந்தர்கள் கிராம மட்டத்திலுள்ள வழிபாட்டுத் தலங்களை அபிவிருத்தி செய்துவரும் போக்கு மிகுந்த முனைப்பான சமூக, கலாசார அம்சத்தின் ஒரு முக்கிய விடயமாகியுள்ளது. இவர்கள் ஏற்கனவே நிறுவிய ஆலயங்களுடன் தமது உறவினைத் தொடர்ந்தும் பேணுவதோடு (இந்த உறவு சில எல்லைக்குட்பட்டிருக்கும்), சொந்தக் கோயில்களையும் அபிவிருத்தி செய்கின்றனர். என்ன இடம்பெறுகின்றதெனில்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டிலிருந்த வழிபாட்டுத் தலங்கள் முறைசார்ந்த ஆகமரீதியான கோயில்களாக மாற்றப்படுகின்றன. ஆகமம்சாரா முறையிலிருந்து ஆகமம்சார்ந்த வழிபாட்டு முறைக்கு ஏற்படும் தவிர்க்க முடியாத மாற்றத்தினை, ஆலயங்களின் கட்டுமானங்களிலும், அங்கு ஆற்றப்படும் சடங்குகளிலும் அவதானிக்க முடிகின்றது. விதிமுறைகளுடன் அதிக தெய்வங்களை வாழிபாட்டிற்காக அமர்த்துதல், விஸ்தரிக்கப்பட்ட சடங்குகள் பலவற்றை ஆற்றுவதற்காகத் தனிச்சிறப்பான உட்கட்டுமானங்களை நிறுவுதல் முதலியவையே இவ்விடயங்களாகும். யாழ்ப்பாணத்தில் இத்தகைய புதிய ஆலயங்கள் பல வழக்கத்தில் வந்துள்ளன. சிறினிவாஸ் விளக்குவதுபோல், இது உண்மையிற் சமஸ்கிருதமயமாதலின் ஒரு செயற்பாடாகும் (1995:51).

ஒரு பகுதி சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்கள் தமது வழிபாட்டுத் தலத்தின் தரத்தினை உயர்த்துவதனூடாகக் கிராமத்தில் இருக்கும் தமது சமூக அந்தஸ்தினையும் வளர்ச்சியடையச் செய்கின்றனர். இது ஒருவிதத்தில், ஆகமம்சாராத ஆலயங்களை ஆகமம் சார்ந்த வழிபாடுகள் நோக்கி உயர்த்தும் ஒரு வெளிப்படையான செயற்பாடாக இருக்கும் அதேநேரம், இன்னொருவிதத்தில், கிராமப்புறங்களிற் சமயத் தலங்களின் சாதியடிப்படை யிலான விருத்தி, சாதிரீதியான சமய அடையாளங்களை (மீள்)உற்பத்தி செய்தும், (மீள்)கட்டமைத்தும், அல்லது (மீள்)வலிமைப்படுத்தியும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விடயம் சாதியின் இயங்குநிலையில் அண்மைக் காலமாக ஏற்பட்டுவரும் மறைமுக அல்லது உடனடியாக வெளித்தெரியாத செயற்பாடாகும். சாதியடிப்படையிலான சில சமயத் தலங்கள் (குறிப்பாக சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்களின்) சடங்குரீதியாகவும், கட்டுமானரீதியாகவும் குறிப்பிட்ட வளர்ச்சியினை அடைகின்றபோதிலும், வேறுபட்ட சாதிக் குழுக்களின் சமயத் தலங்களை அந்தந்தச் சாதிகளுடன் இணைத்துப் பார்க்கும் போக்கில் மாற்றங்கள் ஏற்படாமையே இதற்கான முக்கிய காரணமாகும்.

வெளிநாட்டுப் பணவருவாயால் மல்லாகத்திலுள்ள சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழு (பள்ளர்) ஒன்றின் சாதியடிப்படையிலான ஆலயத்தின் வளர்ச்சியினை மிகச் சுருக்கமாக இவ்விடத்திற் கூறுவது மிகப் பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகின்றேன்.

கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி கோயில் மல்லாகக் கிராமத்தின் கிழக்கே அமைந்துள்ளது. இக்கோயில் பள்ளர் சமூகத்திற்குச் சொந்தமானது. இருப்பிலுள்ள தகவல்களின்படி, திரு. ஐ. அழகர் சுவாமிகள் என்பவரால் இக்கோயில் 1925ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் நிறுவப்பட்டுள்ளது. இலங்கையில் தமிழ், சிங்களச் சமூகங்களால் வழிபடப்படும் கதிர்காமம் முருகன் கோயிலுக்கு வழிபடச் சென்ற அழகர் சுவாமிகளுக்கு "முன்பின் அறிந்திராத ஒருவர் தென்பட்டு முருகனின் வேலைக் கொடுத்து "இதனை உனது கிராமத்திற்குக் கொண்டு சென்று வைத்து வழிபடு" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். பின்னர் அழகர் அவரை அங்குள்ள இடங்களில் எல்லாம் தேடிப் பார்த்தார். வேல் கொடுத்த நபரை அவராற் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனைக் கந்தனின் அருளாக எண்ணிய அழகர் சுவாமிகள்; அந்த வேலை மூல மூர்த்தியாகக்கொண்டு உருவாக்கிய ஆலயமே இந்த முருகமூர்த்தி கோயிலாகும்" என இவ்வாலய வரலாறு பதியப்பட்டுள்ளது. அத்துடன் அழகர் இக்கோயிலைப் பரிபாலிப்பதற்கு மல்லாகத்து ஏழாலையில் சைவ அபிவிருத்திச் சபை என்ற அமைப்பினையும் நிறுவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1984வரை, இக்கோயிலிற் குறிப்பிடத்தக்க உட்கட்டுமான அபிவிருத்திகள் எதுவும் இடம்பெறவில்லை. கிட்டத்தட்ட இக்கோயில் நிறுவப்பட்டு 60 ஆண்டுகளின் பின்னர், அதன் கட்டமைப்பிலும், சடங்கு முறைகளிலும் பாரிய மாற்றங்களும், முன்னேற்றங்களும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாலயத்தோடு தொடர்புபட்ட, பெரும்பாலும் ஒரே சாதியைச் சேர்ந்த, வணிகர்கள், ஆலய பரிபாலன சபை, வெளிநாடுகளிற் புலம்பெயர்ந்து வசிப்பவர்கள், இக்கிராமத்தில் வசிக்கும் புலம்பெயர்ந்தவர்களின் உறவினர்கள் முதலிய பலரது பங்களிப்புக்களும், உதவிகளும் இவ்வாலயத்தின் அண்மைக் கால அபிவிருத்திக்கு முக்கிய பங்காற்றி நிற்கின்றன. சாளம்பை முருகமூர்த்தி கோயில் தற்பொழுது ஓர் ஆகமம் சார்ந்த கோயிலுக்கு வேண்டிய கொடித் தம்பம், மூல தெய்வம், உப தெய்வங்கள், தேர், தீர்த்தக் கேணி முதலிய வசதிகளை உள்ளடக்கி யாழ்ப்பாணத்தின் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய இந்துக் கோயில்களில் ஒன்றாகக் காட்சியளிக்கின்றது.

புலம்பெயர்ந்து வாழும் ஒரே சாதியைச் சேர்ந்த மக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட பணம் இத்தகைய பாரிய அபிவிருத்திக்குத் துணைநின்றது என்பதைக் கோயில் நிர்வாகிகள் கூறுகின்றனர். கிட்டத்தட்ட 6 மில்லியனுக்கும்மேல் பணமாகப் புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ளோரிடமிருந்தும், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமது உறவினர்களிடமிருந்தும் கோயில் அபிவிருத்திக்காகப் பெறப்பட்டுள்ளது. இவை தவிர, புலம் பெயர்ந்த நாடுகளில் வசிக்கும் பல குடும்பங்கள் ஆலயத்தின் சில பகுதியைத் தாமே பொறுப்பேற்று உள்ளூரில் உள்ள உறவினர்களின் மேற்பார்வையிற் கட்டியும் கொடுத்துள்ளனர்.

எவ்வாறாயினும் இத்தகைய அபிவிருத்திகள், தாழ்த்தப்பட்ட சாதிக் குழுக் களிடத்தோ அல்லது தாழ்த்தும் சாதிக் குழுக்களிடத்தோ அனைத்துக் கிராமக் கோயில்களுக்கும், சாதி அடையாளங்களை இல்லாது செய்து; அல்லது அதனைத் தவிர்த்துச், சென்று வழிபட வேண்டும் என்ற மனப்பாங்கிற் பாரிய மாற்றங்களைக் கொண்டு வரவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

> **"நாம் எமது கோயில்களை ஆகமம் சார்ந்த கோயிலாக வடிவமைத்தபோதிலும், உயர் சாதிப் பிராமணரைக் கொண்டு சடங்குகள் ஆற்றுவதற்குத் தற்பொழுதும் சிக்கல்களை எதிர்கொள்கின்றோம். வெள்ளாளர் பொதுவாக எமது கோயில்களுக்கு வருவதைத் தவிர்க்கின்றனர். மல்லாகத்தில் எமது கோயில் பள்ளர் சாதி சமூகத்தின் ஒரு வலுவான அடையாளமாக உள்ளது."[6]**

இப்போக்கு ஒருவகையிற் சாதியடிப்படையில் தனித்து இயங்கும் கிராமப்புறக் கோயில்களிற் சாதிப் பாகுபாடுகள் இடம்பெறுவதை விளக்கி நிற்கின்றது. எவ்வாறாயினும், நாளாந்த வாழ்க்கையிலும், சமயச் செயற்பாடுகளிலும் சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளும், அடைவுகளும் அவர்களது (தாழ்த்தப்பட்ட சாதியினரின்) அடையாளங்களை முற்றிலும் வெள்ளாள சாதிகளின் அடையாளங்களாக மாற்றும் முயற்சியாகத் தெரியவில்லை. மாறாக; இம்முயற்சி அவர்களது சமூக, பொருளாதார, சமயத் தரங்களை உயர்த்துவதாகவும், சமூகத்தில் தாம் ஒழுக்கரீதியான மேலாண்மை கொண்டவர்கள் என்ற உணர்வினைப் பெற்றுக் கொள்வதற்காகவுமே இடம்பெறுகின்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலப் பகுதியிலிருந்து வேலைவாய்ப்பு, கல்வி நோக்கங்களுக்காக யாழ்ப்பாணத் தமிழர்கள் வெளிநாடுகள் நோக்கிப் புலம்பெயர்ந்தனர். மிகச் சிறிய எண்ணிக்கையான சலுகை மறுக்கப்பட்ட, நடுத்தர சாதிக் குழுக்களைத் தவிர, சலுகையளிக்கப்பட்ட வெள்ளாள சாதியைச் சேர்ந்தவர்களே இப்புலப்பெயர்விற் பெரிதும் பங்குகொண்டதோடு, அதன் நன்மைகளை அனுபவித்து வந்தனர். குறிப்பாக; 1980களின் பின்னர் ஏற்பட்ட உள்ளூர் யுத்தம், வன்முறைகளால் ஏற்பட்ட சமூக, பொருளாதார நிலைமைகள் முதலியவை வேறுபட்ட சாதி, வகுப்புப் பின்னணிகளைக் கொண்ட யாழ்ப்பாணத் தமிழர்களை வெளிநாடுகளுக்குப் புலம்பெயரும் போக்கினைத் தூண்டி நிற்கின்றன. மலேசியா, பர்மா, இந்தியா போன்ற நாடுகளுக்கு வரலாற்றுரீதியில் இடம்பெற்ற தொழில் தகைமைசார் புலப்பெயர்வு போலல்லாது, தற்காலப் புலப்பெயர்வில் யாழ்ப்பாணத்தின் அனைத்துச் சமூக மட்டங்களிலும் இப்புலப்பெயர்வின் செல்வாக்கினைக் காணமுடிகின்றது. வெளிநாட்டுத் தொடர்புகள் பொருளாதார மற்றும் தனிப்பட்ட பாதுகாப்புக்கான தவிர்க்கமுடியாத வழிகளாக அமைந்தது; சமூக, பொருளாதார, கலாசார வாழ்க்கையிலும், அபிவிருத்தியிலும் தாக்கத்தினைச் செலுத்தி நிற்கின்றது. இதனால் யாழ்ப்பாணத் தமிழர்களிடையே இடம்பெற்றுக்கொண்டிருக்கும் வெளிநாட்டுப் புலப்பெயர்வு தவிர்க்க முடியாத ஒரு செயற்பாடாகவும் உருவாகியுள்ளது.

யாழ்ப்பாண வரலாற்றின் கடந்த இரண்டரை தசாப்தங்களாக, அனைத்து சாதிக் குழுக்களிடையேயும் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையிலான மக்களின் பிரதான அல்லது உப பணவருவாய்மூலமாக வெளிநாட்டுப் பணவருவாய் உள்ளது. இக்கற்கை இடம்பெற்ற இடமான மல்லாகத்தில் 50 வீதத்திற்கு மேலானவர்கள் வெளிநாட்டுப் பணவருவாயைக் கொண்டுள்ளனர். "உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து" இடம்பெயர்ந்து உள்ளூர் அகதி முகாம்களில் வசிக்கும் அதிக சலுகை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்களுக்கு அப்பால், இன்னொரு குறிப்பிட்ட மரபுரீதியாக உரிமை மறுக்கப்பட்ட சாதிக் குழுக்களிற் கணிசமான எண்ணிக்கையானோர் வெளிநாட்டுப் பணவாய்ப்புக்களால் உள்ளூரிற் சமூக, பொருளாதார, கலாசார அந்தஸ்தில் மேல்நோக்கிய வளர்ச்சியைக் காண்கின்றனர். வெளிநாட்டுத் தமிழர்களிடமிருந்து பெறும் பணம் பெரும்பாலும் நெருங்கிய உறவினர், சாதி முதலிய நிறுவனங்களின் வழியே பரிமாற்றத்திற்குள்ளாகின்றது. இவ்வாறு பெற்ற பணம் நிலம் வாங்குதல், வீடுகளைத் திருத்தியமைத்தல்; அல்லது புதிதாகக் கட்டுதல்; கல்வி, வேலை, சமயத் தலங்கள் முதலிய விடயங்களில் தமது அந்தஸ்தினை உயர்த்துதல் முதலிய விடயங்களுக்காகவே அதிகம் முதலிடப்படுகின்றது. புலம்பெயர்ந்த தமிழர்களால் மேற்கொள்ளப்படும் இத்தகைய செல்வ வள மாற்றீடு, மரபுரீதியாக அடக்கப்பட்ட சாதிக் குழுக்களின் கணிசமான எண்ணிக்கையான மக்கள் சமூகத்திற் புதிய சமூக, பொருளாதார அந்தஸ்தினைப் பெற்றுக் கொள்வதற்குத் துணைபோகின்றது. இதன் ஒரு பகுதி அபிவிருத்தி, மாறாக, யாழ்ப்பாணக் கிராமங்களில் அனைத்துச் சாதிக் குழுக்களிடையேயும் ஏற்கனவேயுள்ள சாதியடிப்படையிலான அடையாளங்களை மேலும் (மீள்)உற்பத்தி செய்கின்றது; (மீள்) வலிமைப்படுத்துகின்றது, (மீள்)கட்டமைக்கின்றது என்பது கவனிக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கது. சாதியடிப்படையிலான கோயிலின் அபிவிருத்தியும், அக்கோயில்களுக்குக் கொடுக்கப்பட்ட அடையாளங்களும் (சாதி ஒழுங்கு அடிப்படையில்) ஆலய விருத்திக்குப் பணம் சேர்ப்பதுமுதல் மக்களின் மனப்பாங்குவரை பல்வேறு விடயங்களிலும் செயற்பட்டு வருவதனால், இத்தகையதொரு புரிதல் யாழ்ப்பாணத்தின் கிராம மட்டங்களில் இடம்பெறும் உள்ளூர் சமய அடையாளம் தொடர்பாக மேற்கொள்வது மிகவும் எளிமையானது என்பதோடு, மிக முக்கியமானதுமாகும்.

ஏற்கனவே கூறப்பட்டது போல், புலம்பெயர்ந்த யாழ்ப்பாணத் தமிழர்களிடமிருந்து வரும் பணம் குடும்பம், உறவுமுறை, சாதி மற்றும் சமூகம் ஆகியவற்றின் வழியே பரிமாற்றம் பெறுகின்றது. கோயில், தேவாலயம், பாடசாலை மற்றும் ஏனைய சமூக நிறுவனங்களின் உட்கட்டுமான வசதிகளை விருத்தி செய்வதற்காகவோ அல்லது யுத்தம், திடீர் அனர்த்தங்களால் ஏற்படும் அழிவுகளுக்காக மேற்கொள்ளப்படும் மனிதாபிமான பண உதவிகளோ; சாதி மற்றும் உறவுமுறைப் பிணைப்பு, உணர்வுசார்ந்த அல்லது சிறுபராயப் பிணைப்பு, சமூகக் கடமைகள் முதலியவற்றின் அடிப்படையிலேயே இடம்பெறுகின்றன. இவ்வாறு மேற்கொள்ளப்படும் பணஉதவிகள் புலம்பெயர்ந்து வாழும் நபர்களால்; அல்லது குடும்பங்களால் நேரடியாகவும், உள்ளூரில் வசிக்கும் உறவினர்களினூடாகவும் இடம்பெறு கின்றன. உண்மையில், வெளிநாட்டவரால் அனுப்பப்படும் பாரியளவிலான செல்வங்கள் உள்நாட்டிலுள்ள குடும்ப அங்கத்தவர்களது, அல்லது நெருங்கிய உறவினர்களது; சமூக, பொருளாதார மூலதனத்தை அபிவிருத்தி செய்வதற்காகவே பயன்படுத்தப்படுகின்றன. இந்த வகையான பண முதலீட்டுப் பழக்கங்கள் புலம்பெயர்ந்து பணம் சம்பாதிக்கும் நபர்களினது உள்நாட்டு நெருங்கிய குடும்பங்களையும், நெருங்கிய உறவினர்களையுமே சமூக, பொருளாதார ரீதியாக வலுப்படுத்தி நிற்கின்றன. இவ்வாறு புலம்பெயர்ந்தவர்களிடமிருந்து சேகரிக்கும் பணங்கள் பொதுவான தொழில் மூலதனம்சார் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படாமை யாழ்ப்பாணச் சமூகத்தின் புலப்பெயர்வு வரலாறுபூராகவும் அவதானிக்கப்பட்டதொரு முக்கிய அம்சமாகும். கடந்த மற்றும் அண்மைக் காலங்களாக இடம்பெற்றுவரும் புலம்பெயர்ந்த யாழ்ப்பாணத் தமிழர்களின் முதலீட்டு முறையிற் காணப்படும் சமூக, வரலாற்று ரீதியான இப்போக்கு யாழ்ப்பாணச் சமூகத்தை ஒரு பொதுவான அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதிற் புலம்பெயர்ந்தவர்களின் பணத்தில் மட்டும் தங்கியிருப்பதில் ஏற்படும் சாத்தியப்பாட்டினைக் கேள்விக்குள்ளாக்கின்றது. எவ்வாறாயினும், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான யாழ்ப்பாண மக்கள் வெளிநாட்டவரது பணங்களில் முற்றுமுழுதாகவோ அல்லது பகுதியாகவோ தங்கியுள்ளனர் என்பதை மறுக்க முடியாது. அத்தகையதொரு யாழ்ப்பாணச் சமூகம் பற்றிய பார்வை இவ்வாய்விலிருந்து மேலும் வெளிப்படையாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அடிக்குறிப்புகள்

1. மலேசியாவில் சலூன் வேலை செய்து பின்னர் யாழ்ப்பாணம் திரும்பிய வேலாயுதத்துடன் மேற்கொள்ளப் பட்ட நேர்காணல், 2008.
2. பார்க்க: McDowell 1996.
3. சிவகுரு, மார்கழி, 2007.
4. சிவகுரு, மார்கழி 2007.
5. செல்வி, கார்த்திகை 2007.
6. சாளம்பை முருகமூர்த்தி கோயிலின் நிர்வாகிகள், கார்த்திகை 2007

### உசாத்துணை நூல்கள்


Banks, M. 1957, *The Social Organization of the Jaffna Tamils*, Unpublished PhD Thesis, Cambridge University Press.

----------. 1960, 'Caste in Jaffna', in E.R. Leach (ed.), *Aspects of Caste in South India, Ceylon and North West Pakistan,* Cambridge University Press, Cambridge, pp. 61-77.

Bastin, R. 1997, 'The Authentic Inner Life: Complicity and Resistance in the Tamil Hindu Revival', in M. Roberts (ed.), *Sri Lanka Collective Identities Revisited*, Vol. 1, Marga Institute, Colombo, pp. 385-438.

Boyd, M. 1989, 'Family, Personal Networks in International Migration: Resent Development and New Agenda', *International Migration Review,* Vol.23, No.3, pp. 238-670.

Ceylon, *Census of Ceylon 1911*, Sri Lanka: Department of Census and Statistics.

Cheran, R. (2001) *The Sixth Genre: Memory, History and the Tamil Diaspora Imagination*, Colombo: Marga Institute.

----------. (2003) Diaspora Circulation and Transnational Network as Agents for Change in the North-East of Sri Lanka, Canada: York University.

Cheran. R & Shrryn, A. (2005) the Impact of International Informal Banking on Canada: A Case Study of Tamil Transnational Money Transfer




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Networks (Undiyal), Canada/Sri Lanka, Available at: http://www.apgml.org/ frameworks/ docs/8/Canada_Sri%20 Lanka%20%20ARS%20study%20June%202005.pdf

CPA (2005) Women's Assess to And Ownership of Land and Property in Batticaloa, Jaffna and the Vanni, Colombo: CPA.

Daniel, E.V. & Thangaraj, Y. 1994, 'Forms, Formations and Transformation of the Tamil Refugee', in E.V. Daniel & Chr. Knudser, J. (eds.), *Mistrusting refugees*, University of California Press, Los Angeles, pp.225-255.

*David, K. (1974a) "And Never the Twain Shall Meet? Mediating and Structural Approaches to Caste Ranking," in H. M. Buck and G. Yocum (eds.), Structural Approaches to South Indian Studies, Chambersburg, PA: Wilson College Press, pp. 43-80.*

----------. *(1974b) "Hierarchy and Equivalence in Jaffna, North Ceylon Normative Code as Mediators" in K. David (ed.), The New Wind: Changing Identities in South Asia, The Hague: Mouton, pp.179-226.*

Pffaffenberger, B. 1982, Caste in Tamil Culture: The Religious Foundation of Sudra Domination in Tamil Sri Lanka, Vikas Publishing House Pvt Ltd, New Delhi.

Fuglerud, Oivind. 1999, *Life on the outside: The Tamil Diaspora and long Distance Nationalism*, London: Pluto Press.

Gurak, J. and Caces, Fe. (1992) "Migration Networks and the Shaping of Migration Systems, in Kritz, Mary, Lim, Lin, and Zlotnick, Hania (eds.), *International Migration System: A Global Approach*, Oxford: Claredon Press, pp.156-176.

ICG, (2010) "The Sri Lankan Tamil Diaspora after the LTTE," *Asian Report*, No.186, Available at: http://www.crisisgroup.org /~/media/Files/asia/south-asia/sri-lanka/186%20The%20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri%20Lankan%20Tamil%20Diaspora%20after%20the%20LTTE.pdf.

Jayawardena. K. 2007, *Nobodies to Somebodies: the Rise of Colonial Bourgeiosie in Sri Lanka*, Sri Lanka: the Social Scientists' Association and Sanjiva Books.

McDowell, C. 1996, *A Tamil Asylum Diaspora: Sri Lankan Migration, Settlement and Politics in Switzerland.* Oxford: Bergham Books.

Selvy, Thiruchandran. 1997, Ideology, Caste, Class and Gender, New Delhi: Vikas Publishing House Pvt. Lid.

*Siddhartan, M.* 2003, Negotiating Tamilness: a case study of Jaffna-Tamil migrants to Colombo since 1990, in Mayer, D. Rajasingham-Senanyake and Y. Thangarajah (eds.), *Building local capacity for peace: rethinking conflict and development in Sri Lanka.* Delhi: Macmillan. Pp. 305-320.

Silva, K.T. Sivapragasam, P.P & Thanges, P (eds.), 2009, *Casteless or Caste-blind? Dynamics of Concealed Caste Discrimination, Social Exclusion and Protest in Sri Lanka,* Colombo: International Dalit Solidarity Network, Indian Institute of Dalit Studies & Kumaran Book House.

Sithamparapillai, Ç. (1989: 15/10/1989) "New Restrictions and Discrimination on the Rights of the Asylum Seekers," *Tamil Refugee,* pp. 20-2.

Sivathamby, K. 2007, 'Divine Presence and/or Social prominence: An inquiry into the Social Role of the Places of Worship Jaffna Tamil Society, in Sivathamby (ed.), *Sri Lankan Tamil Society and Politics*, Chennai: New Century Book House, Pp24-56.

Thanges, P. 2006, *Caste and Ethnicity in Jaffna: War-Induced Transformation of Identity*, Unpublished BA Dissertation, University of Peradeniya.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

----------, P. 2008, 'Caste and Social Exclusion of IDPs in Jaffna Society', in Sharya Scharenguivel (ed.), *the University of Colombo Review*, Vol.1, No.2, University of Colombo.

Van Hear, N. 2002 "Sustaining Societies under Strain: Remittances as a Form of Transnational Exchange in Sri Lanka and Ghana," in Al-Ali, N. and Koser, K. (eds), *New Approaches to Migration? Transnational Communities and the Transformation of Home*, London: Routledge, pp. 202-203

World Bank (2003) Global Development Finance: Striving for Stability Development Finance.

**தமிழ் உசாத்துணை நூல்கள்**

இரகுநாதன், ம. 2004, ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள், கொழும்பு: தென்றல் வெளியீடு.

சத்தியசீலன், ச. 2006, மலாயக் குடிபெயர்வும் யாழ்ப்பாணச் சமூகமும், ஐக்கிய இராட்சியம்: அயோத்தி நூலக சேவை.

சிவத்தம்பி, க. 2000, யாழ்ப்பாணம்: சமூகம், பண்பாடு, கருத்துநிலை, கொழும்பு: குமரன் இல்லம்

தங்கேஸ், ப. 2007, "யாழ்ப்பாணத்தில் சாதி: மரபும் மாற்றமும்", யாழ்ப்பாணச் சமூகம், கொழும்பு: மலர் வெளியீடு.

வெகுஜனன், இராவணா, 2007, சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும், இரண்டாம் பதிப்பு, சென்னை: விகாஷ் வெளியீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைக்காலத் தமிழகத்தில் கைவினைஞர்களின் சமூக, பொருளாதார வாழ்க்கை: ஒரு வரலாற்றுப் பார்வை

விஜயா இராமசாமி

விவசாய உற்பத்தி, நில உடைமை, அரசு உருவாக்கம், சாதிச் சமூகங்களின் எழுச்சி, பெருங்கோவில்களின் தோற்றம், சமூக மறுகட்டமைப்பு என இடைக்காலத் தமிழகம் சமூகவியல் ஆய்வாளர்களுக்கு ஒரு எல்லையற்ற ஆய்வு வெளியை முன்வைக்கின்றது. பல்வேறு இடைக்காலச் சமூகப் பொருளாதாரக் கூறுகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விவாதங்களை ஏற்படுத்தியபோதிலும், ஆட்சியாளர்களுடனும், சாதாரணக் குடிகளுடனும் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்த கைவினைஞர்களின் சமூக பொருளாதார வாழ்வு ஒரு முழுமையான வரலாற்றுப் புரிதலை இன்றளவும் எட்டவில்லை. இது தொடர்பான சில அடிப்படைத் தகவல்களை முன்வைப்பது பலவித புது ஆய்வுகளை ஊக்குவிக்கும் என்ற நம்பிக்கையுடன் இக்கட்டுரை தொடங்குகின்றது.

## பண்டைய தமிழகத்திற் கைவினைஞர்கள்

இலக்கிய மற்றும் தொல்பொருள் அகழ்வாராய்வின்மூலம் பெறக்கிடைத்த தரவுகள் பண்டைய தமிழகத்திற் கைவினைஞர்களின் சமூக பொருளாதார நிலையை மீட்டெடுக்க உதவுகின்றன. குறிப்பாக, பெருங்கற்கால வாழ்விடங்களில் நடத்தப்பட்ட அகழ்வாராய்வுகள் வெவ்வேறு வகையான கலைப்பாடுகள் நிறைந்த மட்பாண்டங்களை வெளிக்கொணர்ந்திருக்கின்றன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் தருகம்புலியூர், அழகிரி போன்ற இடங்களிற் செம்பு, பித்தளையினால் அமைக்கப்பட்ட பாத்திரங்களும், இரும்பினாற் செய்யப்பட்ட கருவிகளும், ஆயுதங்களும், அரிக்கமேடு (புதுச்சேரி), கொடுமணல் போன்ற இடங்களிற் பலவிதமாக உருவாக்கப்பட்ட மணிகள் பண்டைக்காலக் கைவினைஞர்களின் தொழில் தேர்ச்சியை உறுதிப்படுத்துகின்றன (Rajan 1994)[1].

இதைப் போன்று சங்ககால இலக்கியங்களில் கைவினைஞர்களைக் குறிக்கும் கொல்லர், தச்சர், கருமான் போன்ற சொற்கள் பரவலாகக் காணப்படுகின்றன. சிலப்பதிகாரம் காவிரிப் பூம்பட்டினத்தை (பூம்புகார்) வர்ணிக்கும்போது மருவூர்ப்பாக்கம் என்னும் பகுதியில் கஞ்சக்காரர் (வெண்கலம் செய்வார்) செம்பு செய்குநர், சுடுமண் பண்டங்கள் செய்யும் மண்ணீட்டாளர்கள், மரங்கொல் தச்சர், கருங்கை கொல்லர், பொன்செய் கொல்லர் என்று பலவகைக் கைவினைஞர்கள் இருந்ததாகக் குறிப்பிடுகின்றது. (சிலப்பதிகாரம் 1-5 : 28-31) (நாகசாமி 1973:231).

சங்க இலக்கியத்திலிருந்து பருத்தியை நூலாகச் செய்யும் தொழிலைப் பெண்கள், முக்கியமாகக் கைம்மைப்பெண்கள், விதவைகள் கையாண்டன (புறம்: 311: 1-2). புற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானூற்றிற் பருத்திப்பெண்டீர் பனுவலென்ன (நற்றிணை : 353: 1–2) என்று பெண்கள் நூற்ற நூலைப்பற்றி உயர்வாகப் பேசப்பட்டிருக்கின்றது. நற்றிணையும் இவ்வண்ணமே விதவைகள் நூற்கும் நூலை "ஆளில் பெண்டீர் நூற்ற" என்று மெச்சுகின்றது. புறநானூற்றிற் புலைத்தி நெய்த துணிகளைக் கலர்மண்ணிற் போட்டுச் சுத்தம் செய்ததாகக் கூறப்படுகின்றது (புறம் : 125: 1;326:5) நெய்த துணிகளுக்குக் கஞ்சி போடுவதும், சாயம் ஏற்றுவதும், புலையன் புலைத்திகளின் தொழில் என்று சில முக்கிய தரவுகள் தெரிவிக்கின்றன. நற்றிணையிற் புலைத்தி கஞ்சி ஏற்றும் வித்தையைப்பற்றிக் கூறுகையில் "அவள் பாங்கான கஞ்சி தயாரித்து, துணிகளில் இட்டு, மிச்சத்தைத் தன் நீண்ட விரல்களினால் அகற்றினாள்" என்று கூறப்படுகின்றது (நற்றிணை 90:2–4) வெளுப்புத் துணிகளைப் புலைத்தி துவைப்பதை அகநானூறு காட்சிப்படுத்துகின்றது (அகநானூறு: 34; 11–12).

தற்காலச் சமூகப் படிநிலை அமைப்பில், புலையர்கள் விளிம்புநிலையில் இருக்கின்றார்கள். கொல்லர், தச்சர், நெசவாளர் போன்ற கைவினைஞர்கள் சங்க காலச் சமுதாய அமைப்பில் எத்தகைய இடத்தைப் பெற்றிருந்தார்கள் என்பது ஒரு கேள்விக் குறி. சிலப்பதிகாரத்தில் அரச தட்டானுக்கு மிக்க மதிப்பும் செல்வாக்கும் இருந்ததாகத் தெரியவருகிறது. அரச தட்டான் அரசரின் மாளிகையின் உள்ளாலையிலும் அனுமதிக்கப்பட்டான் என்று புகார்க் காண்டம் சொல்கின்றது. ஆனால், பன்னிரெண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரையில் முற்றிலும் வேறுவிதமாகத் தட்டாரின் சமூக நிலைமை சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்த இடைக்கால உரையில் அரச தட்டான் தீண்டாச்சாதியாகக் குறிப்பிடப்படுகின்றான். சிலப்பதிகாரத்தின் புகார்க் காண்டத்திற் கோவலன்மேல் திருட்டுக் குற்றம் சாற்றிய பொற்கொல்லன் தீண்டாச்சாதி என்பதனால் இருபது அடி தூரத்தில் கோவலனைத் தொடர்ந்தான். இடைச்சங்க காலம்வரை தீண்டாமை முதலிய சாதிக் கட்டுப்பாடுகள் ஓரளவுக்கு இல்லை. ஔவையார் போன்ற விறலியர் சாதியினர் அரசருடன் சரிசமமாக உட்கார்ந்து பேசலாம்; பொது விருந்திற் கலந்து கொள்ளலாம் என்று ஔவையாரின் இலக்கியப் படைப்புகளிலிருந்து தெரியவருகின்றது (புறம் : 235). இதனால், பிற்காலச் சோழர்காலத்திற் கைவினைஞர்களின் சமூகநிலை ஓரளவு குன்றி இருக்கலாம் என ஊகிக்கலாம்.

கைவினைஞர்களின் வேலைத் திறனுக்குச் சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் இருந்ததைச் சங்க இலக்கியம் சுட்டிக்காட்டுகிறது. மரத்தச்சனை "வைகல் எண்தேர் செய்யும்" என்று புறநானூறு குறிக்கின்றது (புறம் : 87) அதாவது, ஒரே நாளில் எட்டுத் தேர்களை உருவாக்கும் திறமை படைத்தவன் என்று பொருள். தச்சர்களாற் செய்யப்பட்ட அழகிய மரத்தேர் சிறுவர்களால் தெருவில் இழுக்கப்படுவதைப் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை வருணிக்கின்றது (பெரும்பாணாற்றுப் படை; 199–200, 206). இரும்புக் கொல்லர் பற்றிய குறிப்பும் இதே இலக்கியத்தில் உள்ளது. பெருங்கதை சமணர்களால் இயற்றப்பட்ட பிற்காலச் சங்க இலக்கியம். இதில் கொல்லர் உலோகத்தைக் காய்ச்சி மலர் போடுவதைக் கரண சுத்தியுடன் ஒப்பிடுகிறது (வேலுசாமி 1979: 201) சங்க இலக்கியத்திலிருந்து பண்டைய காலக் கொல்லர் இரும்பும், எஃகும் உருவாக்கும் வழியை அறிந்திருந்தார்கள் என்று தெரியவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரைக் காஞ்சி ஆசாரி சமுதாயத்தை "எவ்வகை செய்தும் உவமை காட்டி நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கின் கண்ணுள் வினைஞர்" என அழைக்கின்றது (நாகசாமி 1973: 232) ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டாள் எனப்படும் கோதை நாச்சியார் தன் நாச்சியார் திருமொழியிற் களிமண் வார்ப்பில் தகிக்கும் உலோகம் ஊற்றுவதை ஒரு உவமையாக எடுத்துக்கொண்டு தன்னை அரக்கு வார்ப்பாகவும், அரங்கநாதனைத் தன்னில் ஊற்றப்பட்ட உலோகமாகவும் கவிதை எழுதியுள்ளாள் (Ramaswamy 1994). இதிலிருந்து ஏழாவது நூற்றாண்டில் கொல்லர்களால் வார்ப்படம் செய்யப்பட்டது என்று தெரியவருகிறது. இந்த வார்ப்புமுறை கல்வெட்டுக்களிற் கணம் என்று சொல்லப்படுகிறது. இதை மேற்கத்திய வரலாற்று ஆசிரியர்கள் "cire perdue" என்று கூறுவார்கள்.

## பல்லவர் – சோழர் காலக் கைவினைஞர்கள்

தமிழ் நாட்டின் இடைக்காலத்தில் பல்லவ அரசர்கள் முதற் பிற்காலச் சோழர்கள் வரையிலான வரலாற்றினை நோக்குங்கால், இக்காலம் ஒரு பொற்காலமாகத் திகழ்ந்திருக்கின்றது. பிரமாண்டமான கோயில்கள் கட்டப்பட்ட காலம். தமிழ் கைவினைஞர்களுக்குப் பேரும் புகழும் தேடித்தந்த காலம் (Ramaswamy 2004). கம்மாளர், கைக்கோளர் மற்றும் சாலியர் போன்ற கைவினைஞர்கள் சோழர்காலப் பொருளாதார, சமூக மற்றும் கலை, கலாசார வளர்ச்சியில் முக்கிய பங்கு பெற்றார்கள். தஞ்சாவூர், காஞ்சிபுரம், மதுரை மற்றும் பல நகரங்களிலும், தனியூர் – பிரமதேயங்களிலும் பெரிய கோயில்கள் கட்டப்பட்டன. இந்தக் கோயில்கள் பிரார்த்தனை மையங்களாக மட்டும் அல்லாமற் கலைக்கூடங்களாகவும், சமூகக் கூடங்களாகவும் அமைந்தன. கல்வெட்டுகளிலும் செப்புச் சாசனங்களிலும் இவை "திருவிடை வளாகங்கள்" என்று அழைக்கப்படுகின்றன.

பன்னிரண்டாவது நூற்றாண்டிலிருந்து கம்மாளர்களுக்கு விஸ்வகர்மா என்னும் சிறப்புப்பெயர் ஆந்திரக் கல்வெட்டுகளிலும், சோழர் காலத்துக் கற்சாசனங்களிலும் காணப்படுகின்றது (Ramaswamy 2004)[2].

அரசர்களைப் பற்றியும் ஆளும் வர்க்கத்தைப் பற்றியும் தற்காலக் கல்வெட்டுக்களிலும், இலக்கியப் படைப்புகளிலும் அதிக குறிப்புகள் உள்ளன. ஆனால், குடியானவர்களைப் பற்றியும், கைவினைஞர்களைப் பற்றியும், நெசவாளர்களைப் பற்றியும் உள்ள தகவல்கள் மிகக் குறைவு. சிற்சில கல்வெட்டுக்களில் மாத்திரம் சராசரி மனிதர்களின் வாழ்க்கையைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

கைவினைஞர்கள் எங்கு வாழ்ந்தார்கள் என்பது முக்கிய கேள்வி. பத்தாவது நூற்றாண்டைச் சேர்ந்த உத்தம சோழரின் காஞ்சிபுரம் செப்பேடு இந்தக் கேள்விக்குப் பதில் தருகிறது. இந்தக் கல்வெட்டிற் சாலியர்களுக்குகென ஒதுக்கிவிட்ட சேரிகளைப் பற்றியும், அவர்களைக் கோயில் தர்மகர்த்தாவாகவும், ஸ்தானத்தாராகவும் நியமிக்கப்பட்டதைப் பற்றியும் தகவல்கள் உள்ளன. அரசு வரிகளை வசூலிக்கும் பொறுப்பும் இவர்களுக்குத் தரப்பட்டது (Ramaswamy 2004, South Indian Inscriptions Vol.III, Pt.3, no.128, Ramaswamy 2007:53).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமடை வளாகத்தைச் சுற்றி வசித்த சமுதாயங்கள் உள்பாடி அல்லது புறம்பாடி என்று பிரிக்கப்பட்டார்கள். உள்பாடி மனைகளில் வசிப்பவர்கள் பிரமணர்கள் அல்லது கோயில் ஸ்தானத்தார் போன்றோர். ஏழைக் கைவினைஞர்கள் பொதுவாகப் புறமபாடி மக்களுடன்தான் சேர்க்கப்பட்டார்கள். சோழக் கல்வெட்டுக்களில் இவர்களைக் கீழ்கலனை என்றும் அழைப்பது உண்டு. கம்மாளச் சேரி, பறைச்சேரிக்கு அடுத்து இருப்பதாக ஒரு ராஜேந்திரசோழக் கல்வெட்டுக் கூறுகின்றது (Ramswamy 2004). மற்றொரு கல்வெட்டிற் கம்மாளச்சேரி பறைக்குளத்திற்கும், சுடுகாட்டுக்கும் இடையில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (South Indian Inscriptions, Vol-II, No.5, Ramaswamy 2004).

காஞ்சிபுரச் செப்பேட்டில் உள்ள விவரங்களும், சோழ மண்டல தஞ்சாவூர் கல்வெட்டில் உள்ள குறிப்புக்களும் முரண்பாடாக இருக்கின்றன. கம்மாளர் சோழ காலத்தின் முதற் கட்டத்தில் நெசவாள சமுதாயத்தைவிட தாழ்த்தப்பட்ட நிலையில் இருந்தனரா?

கைவினைஞர்கள் ஒரே சமுதாய வார்ப்பில் வார்க்கப்பட்டவர்களல்ல என்பதே வெவ்வேறு கல்வெட்டுக்களில் நாம் அறிந்து கொள்வது. அவர்களிடையே அதிக வேறுபாடுகள் இருந்தன. அரச குலத்திற்காக நூல் நூற்பவர்கள் பட்டுப்போன்ற உயர்ந்த ரக சேலைகளை நெசவு செய்பவர்கள் சோழ – பல்லவ காலத்துச் சமுதாயத்தில் உயர்ந்த இடம் வகித்தார்கள் என்பது கச்சி (காஞ்சிபுரம்) செப்பேட்டிலிருந்து தெரிய வருகின்றது. சாமானிய நெசவாளர்கள் கிராம சமுதாயத்திற்கு உட்பட்டவர்கள். தானியமே ஊழியமாகப் பெற்றார்கள் அல்லது ஊழியத்திற்குப் பதிலாகக் காணி நிலம் பெற்றார்கள். (Service Tenure).

கம்மாளர்களிடையே பொருளாதாரரீதியிலும், சமூகரீதியிலும் பலவிதமான வேற்றுமைகள் உண்டு. கிராம சமுதாயத்தின் அங்கத்தினர்களாகச் செயற்படும் கொல்லர், தச்சர் முதலியோர் மிக எளிமையான வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தனர். பிரம்மதேயக் கிராமங்களிலும் (கல்வெட்டுகளின் சதுர்வேதி மங்கலங்களிலும், கம்மாளச்சேரிகளிற் கொல்லர், தச்சர் மற்றும் குயவன் போன்றவர் வசித்தனர்.[3] இந்தப் பட்டியலிற் சில சமயம் தட்டான் பெயரையும் காணலாம். நெசவாளர்கள் இந்தப் பட்டியலிற் பங்கு பெறாதது குறிப்பிடத்தக்கது (Annual Report of South Indian Epigraphy (ARE), 30 of 1958, 59, Are, 7 of 1940-41).

ஆதித்ய சோழன் காலத்திலிருந்து பிரமாண்டமான கோயில்கள் கட்டப்படத் தொடங்கிவிட்டன. இவைகள் சிறப்பான கட்டடக் கலைக்குச் சான்றாக, சிற்பக்கலைக் கூடமாக இருந்த தமிழகத்தின் கலை வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டம். தற்காலச் செம்புக் கலைப் படைப்புக்களை நோக்குங்கால் அவற்றின் நுண்மையும், அழகும் அன்றுதொட்டு இன்றுமுதல் கலை வரலாற்றில் முதலிடம் பெற்றவை என்று தெரியவருகிறது. இதற்குச் செம்பியன்மாதேவி காலம் என்று கலை வரலாறு பெயர் சூட்டி உள்ளது.

கட்டிடக் கலையிற் கைதேர்ந்தவர்கள் கம்மாளர்கள். கோயில்கள் உருவாக்க, மாட மாளிகைகள் கட்ட, திருப்பணி செய்யப் பொற்கொல்லன், கருமான், மரத்தச்சர், கல்தச்சர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தபதி என்ற ஐவகைக் கைவினைஞர்கள் ஈடுபட்டார்கள். ராஜராஜசோழன் காலத்தில் இவர்களுக்குத் தனி வீதிகளும், மனைகளும் மற்றும் பல சலுகைகளும் தரப்பட்டன (South Indian Inscriptions Vol.II, Part- II, No.66). பிரகதீஸ்வர கோயிற் கல்வெட்டில் இவர்கள் பெருங்கொல்லன், பெருந்தச்சன், பெரும் தட்டான் என்று மதிப்புடன் அழைக்கப்பட்டுள்ளனர். அதேபோல் உயர்தர நெசவு செய்யும் ரத்தின தைய்யன் தவிர; துணிகளைத் தைக்கும் பெருந் துண்ணன் பற்றிய குறிப்பும் இந்த ராஜராஜசோழனின் பத்தாவது நூற்றாண்டக் கல்வெட்டில் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தரவுகளிலிருந்து என்ன தெரிகின்றது என்றால், கைவினைஞர்களிலும் படிநிலை அமைப்பு இருந்தது. கிராமத்தில் வேலைசெய்யும் சராசரித் தச்சனதும், தட்டானதும் வாழ்க்கை வறுமையிற் கழிந்தது என்றால், மதுரைக் கோயிலின் திருமடை வளாகத்தில் வாழும் பெருந்தட்டானதும், பெருந்தச்சனதும் வாழ்க்கை ஓரளவு சீராகவே அமைந்திருந்தது.

சோழர் காலத்திற் கைவினைஞரின் நிலைமையை ஆராயும்போது இத்தகைய வரிசை அமைப்பை மனதிற் கொள்வது அவசியம். இந்தப் படிஅமைப்பைப் புரிந்து கொண்டாலே கம்மாளச்சேரியில் வசிக்கும் ஏழை ஆசாரிகளுக்கும்; சலுகைகள் பல பெற்ற திருமடை வளாக ஆசாரிகளுக்கும் உள்ள வேறுபாடு ஓரளவு விளங்கும்.

## கைவினைஞர் தொழில்கள் மற்றும் பொருளாதாரப் பங்கேற்பு

திருமடை வளாகத்தின் அமைப்பும், விஸ்வகர்ம வாஸ்து சாஸ்திரத்தின்படி நகரங்களின் பொதுஅமைப்பும், கம்மாளரின் பொருளாதாரப் பங்கேற்புக்குச் சான்றாக உள்ளன. இன்றும் மதுரைபோன்ற மாநகரங்களிலும், திருவண்ணாமலை, நாச்சியார் கோவில் போன்ற நகரங்களிலும் இந்த அமைப்பை நாம் பார்க்கலாம். தொன்றுதொட்டுக் கைக்கோளத் தெரு, கம்மாளர் தெரு போன்றவை கைவினைஞர்களின் இருப்பிடமாக இருந்து வருகின்றன. தெருமுனையில் அவர்தம் சமுதாயக் குலதெய்வத்தின் கோயிலும் உள்ளது. உதாரணமாக: கைக்கோள - செங்குந்தர் வீதியில் பிள்ளையார் - முருகன் கோவில், கம்மாளர், கொல்லர் வீதிகளில் காளிகாம்பாள் கோவில் போன்றவை ஆசாரிகளால் உருவாக்கப் பட்டுள்ளன.[4]

ஏழாம் நூற்றாண்டுப் பல்லவர் காலக் கல்வெட்டொன்றில் கல்குத்திகர், சூத்திரகிரகி (கல்லை அளவு எடுப்பவர்), வர்த்தகி (கல்லைச் சீர் செய்பவர்) கல் தச்சர் மற்றும் சிற்பாசாரியின் விவரங்கள் உள்ளன (South Indian Inscriptions, Vol, XII, P.11, Ins.23, RE 105 of 1932-33) தர்மராஜா மண்டபத்துக் கல்வெட்டில் "உயர்பெரும் தக்ஷகன் கேவட பெரும் தச்சன் பய்யம் இழிப்பன்" என்று கூறப்பட்டுள்ளது. இதைத்தவிர; பெருங்கொல்லனின் பெயர் "கல்யாணி கொல்லன் சேமகன்" என்றும், "சால முக்கியன்" என்பவன் பிரதான சிற்பி என்றும் கூறப்பட்டுள்ளது. காஞ்சிபுரக் கைவினைஞர் சமூகத்தின் குருபீடம் திருவொற்றியூர் ஆசாரியர் இருக்கும் இடம் என்றும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருவாரூர் கல்வெட்டு "ஷிலா தோஷ பரீக்ஷக" என்ற ஒரு கல்தச்சரைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இதிலிருந்து எல்லாக் கற்களும் எல்லாவிதமான தச்சுக் காரியங்களிலும் உபயோகப்படுத்துவது இல்லை. சில கற்களே சில திருப்பணிகளுக்குப் பொருத்தமாகக் கருதப்பட்டன என்பது தெரிகின்றது. கற்களில் குண தோஷங்களைப் பரிசீலிப்பவன் ஷிலா தோஷ பரீக்ஷக என்று அழைக்கப்பட்டான் (South Indian Inscriptions, Vol, XVII, No 603, Stan 29) கற்களிற் பெண் ஆண் மட்டும் நபஸ்ஸகலிங்கக் கற்கள் இருந்தன (Brower 1987 (6): 1-22).

கைவினைஞர்கள் தங்கள் கலைக்கூடத்திலோ, அவர்களால் உருவாக்கப்பட்ட கோயில்களிலோ, கோயிற் சிற்பங்களிலோ தங்கள் பெயர்களைப் பொறித்து வைப்பது மிக அரிது. தஞ்சாவூர் பெரிய கோயிலில் (பிரஹதீஸ்வரர் ஆலயம்) அதை அமைத்த ஸ்தபதியின் பெயர். பெருமையாகக் குஞ்சிரமல்லன் ராஜராஜ பெருந்தச்சன் என்று பொறிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இவ்விதமான தடயங்கள் அரிது. பாதாமியின் குகைக் கோயில்களில் சிற்பங்களைச் செதுக்கிய சிற்பிகளின் பெயர்கள் உள்ளன. உதாரணமாக 11ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்றில் துர்க்கை அம்மனை வடித்த சிற்பியின் பெயர் சந்திரகீர்த்தியபட்டன் என்று கூறப்பட்டிருக்கின்றது.

இவ்விதமான கையொப்பங்கள் கல்வெட்டுகளில் மிகமிகக் குறைவு. அதிகபட்சமாகக் கல்தச்சர்களின் எச்சங்கள் கிடைப்பதுதான் வழக்கம். இந்த அடையாளங்கள் சூத்திரகிரஹிகளாற் பொறிக்கப்பட்டவை. ஆந்திரப் பிரதேசத்துக் குண்டூர் மாவட்டத்தின் அமராவதி பௌத்தக் குகைகளிற் கல்தச்சரின் அடையாளங்களுடன் தச்சரின் முழுப்பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த எச்சங்கள் ப.70.5, த.70.1 மற்றும் ச. 70.2 என உள்ளன (ARE No 21 of 1959 - 66 (3rd Century) கலை வரலாற்று ஆசிரியர்கள் இவற்றைச் சிற்பிகளின் கையொப்பத்திற்குச் சமமாகக் கருதுகின்றனர். ஏனென்றால், ஒவ்வொரு சிற்பப் பரம்பரையும் ஒரு தனிவிதமான அடையாளத்தைப் பயன்படுத்தியிருக்கின்றது. இத்தகைய எச்சங்களை நாம் முகலாய ஜம்மா மஸ்ஜிதிலும் காணலாம். குஜராத் பிரதேசத்தின் இடைக்காலக் கோட்டைச் சம்பா நீரிலும் பார்க்கலாம். மேலும், திருவண்ணாமலைக் கல்வெட்டில் ஆசாரியின் குறிப்புகளைக் கொண்டு நிலத்தை அளவு எடுத்ததாகக் கூறப்படுவது, நில விலைப் பிரமாணம் செய்யும் காலத்திலும் இந்தக் கல்தச்சர்களின் அடையாளங்கள்தான் உபயோகப்படுத்தப்பட்டன என்பதை விளக்குகின்றது (South Indian Inscriptions Vol-VIII, No.83)

திருவாரூர் கல்வெட்டிலும் (South Indian Inscriptions Vol-XVIII, No.603, Lines 4-6) உய்யன்கொண்டான் திருமலைக் (திருச்சிராப்பள்ளி) கல்வெட்டிலும் (ARE 479 of 1908) இந்தக் கல்தச்சக் கைவினைஞர் எவ்விதமான பணிகளை மேற்கொண்டனர் என்று விவரமாகக் கூறப்பட்டுள்ளது. சிற்பிகள் "திருமேனி செய்வார்" என்று சிறப்புப் பெயருடன் அழைக்கின்றனர். திருமேனி செய்யும் பணியைச் சிற்பியரும், பொற்கொல்லர்கள், கம்ஸாலி (செம்பு, வெங்கலம் முதலிய சிற்பங்கள் மற்றும் இதர பொருள்கள் உருவாக்குபவர்) போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று விதமான கம்மாளர்களும் செய்துவந்தனர். பெருந்தச்சர்கள் கோயில் ஸ்தபதிகளாக இயங்கினார்கள். விஸ்வகர்ம வாஸ்து சாத்திரம் என்ற நூலிற் கோயில்கள் எந்தெந்தத் திசையை நோக்கி இருக்கவேண்டும், மற்றக் கட்டிடங்கள் எவ்விதமாகக் கட்டப்படவேண்டும் போன்ற விவரங்கள் உள்ளன. எட்டுவிதமான மரங்கள் மட்டும் கோயில் திருப்பணியில் உபயோகப்படுத்தலாம். ஆனால் இதர கட்டடங்களில் 32 விதமான காஷ்டத்தை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று உள்ளது. கோயில் கட்டுவதற்கு வடக்கு நோக்கி வளரும் மரங்கள் உசிதமாகக் கருதப்பட்டன (விஸ்வகர்ம வாஸ்த்து சாஸ்திரம், 1990 : 6–7).

கட்டிட வேலையைத் தவிரக் கோயிற் பிரகாரத்தைச் சுற்றி உள்ள தெப்பக்குளம், ஏரிகள் முதலியனவும் கம்மாளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாற் கட்டப்பட்டவைதான். இவர்களால் வெட்டப்பட்ட வாய்க்கால், குழிகள், மடைகள் முதலியன நீர்ப்பாசனத்திற்காக உபயோகப்படுத்தப்பட்டன. அணைக்கட்டு அமைப்பதைப் பற்றிய விவரங்கள் பொருமில்லா ஏரிக் கல்வெட்டிற் பேசப்படுகின்றன (Epigraphic Indica, Vol. XIV, no.4) இந்தக் கல்வெட்டு 16ஆம் நூற்றாண்டுக்குரியது. இந்தக் கல்வெட்டை எழுதியவர் பாஸ்கர பகதூர் என்றும் தெரியவருகிறது. இதைக் கட்டுவதற்கு 1000 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். ஸ்தபதிகள் ஏரிகளின் அமைப்பை உருவாக்கினார்கள் என்றாலும், கற்களையும் களிமண்ணையும் வைத்து ஏரியை அமைத்தவர்கள் கூலியாட்கள், கம்மாளர்கள் அல்ல. அதாவது, கட்டிட வேலையில் ஈடுபட்டவர்கள் எல்லாருமே கைவினைஞர்கள் ஆகிவிடமாட்டார்கள். இந்த வேறுபாட்டைப் புரிந்து கொள்ளவேண்டியது மிக அவசியம்.

உருவச் சிலை அமைத்து வீரக்கல் நாட்டுவதும் கம்மாளச் சிற்பிகளால் செய்யப்பட்ட ஒரு முக்கிய பணி. இவ்வித நடுகற்களும், வீரக்கற்களும், பல்லவ அரசன் சிம்மவிஷ்ணு மற்றும் மகேந்திரவர்மன் காலத்திலிருந்து கிடைத்தது. மூன்றாவது நந்திவர்மனின் காலத்து வீரக்கல்லிற் பூணூல் அணிந்துள்ள ஒரு பிராமண வீரனின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது (ARE.144 of 1929). பத்தாவது நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்றிலிருந்து ஆந்திரப் பிரதேசத்திலும் வீரக்கல் உருவாக்க மரபு இருந்ததாகத் தெரியவருகிறது. சித்தூர் மாவட்டத்திற் கப்பலில் என்ற ஊரிற் கிடைக்கப்பெற்ற இந்தக் கல்வெட்டில் தெருப்பூசலில் உயிர் இழந்த ஒரு செட்டியார் உருவம் வடிக்கப்பட்டுள்ளது. அந்த உருவத்தை வார்த்த சிற்பியைப் பஹகுணதேஜ என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது (ARE 167, 168 of 1933-34).

## ஆசாரிகள் படித்தவர்களா?

ஏழாவது நூற்றாண்டிலிருந்து நமக்குக் கிடைக்கும் எண்ணற்ற கற் சாசனங்களும், செப்பேடுகளும் ஆசாரிகளால் எழுதப்பட்டவை. இந்த சாசனங்களும், கல்வெட்டுகளும் கோயிற் சுவர்களிலும், பொது இடங்களிலும் கிடைக்கப் பெற்றுள்ளன. பொதுவாகச் சாசனங்கள் எழுதும் பணி ஆலயத்தின் கைவினைஞர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. இது குறித்து ஒரு சில உதாரணங்களைக் காணலாம். கி.பி. 1123இல் எழுதப்பட்ட விக்கிரமசோழ காலக் கல்வெட்டில் (திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்கள்) கல்வெட்டைப் பொறித்தவர் மாண்புமிகு சிற்ப ஆசாரி என்று கூறப்பட்டுள்ளது (South Indian Inscriptions, Vol.V, No.456). இதே செய்தி காஞ்சிபுரம் உலகளந்த பெருமான் கோயிற் கல்வெட்டிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகிறது. கி.பி. 1268 கால இந்தக் கல்வெட்டில், கல்வெட்டியவர் பொற்கோவில் ஆசாரி என்று தெரிய வருகின்றது (South Indian Inscriptions, Vol.IV, No.353). இங்கு எழும் கேள்வி: இந்தக் கல்வெட்டுகளைப் பொறித்தவர்கள் படித்தவர்களா? அல்லது படிக்காதவர்களா என்பதுதான். கல்வெட்டு வாசகங்களை இயற்றியவர்கள் வேறு, அதற்குக் கல்லில் எழுத்து வடிவம் கொடுத்தவர்கள் வேறு. இதற்கு அநேக சான்றுகள் உள்ளன. சராசரியாகக் கல்வெட்டுகளிற் கடைசிப் பகுதியிற் கோயிற் சுவர்களில் எழுதியவர்கள், பொறித்தவர்கள் பற்றிய செய்திகள் மற்றும் கையொப்பங்கள் உள்ளன. க.இரா.சங்கரன் இத்தகைய குறிப்புகளை இடைக்காலச் சமூக ஆவணமாக வைத்துக்கொண்டு கட்டுரை எழுதியுள்ளார் (சங்கரன் 2001: 76–33). சங்கரன் கி.பி 1500க்கு உள்ளான புதுக்கோட்டை வட்டாரக் கல்வெட்டுகளை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்கின்றார். அவரின் கருத்துப்படி கையொப்பம் இட்ட சாஸனங்கள் கி.பி. 1175ஆம் ஆண்டுக்குப் பிறகே கிடைக்கின்றன. எழுதியவர்கள் பெரும்பாலும் கணக்கு அலுவலர்களாக இருக்கலாம் என்பது சங்கரனின் முடிவு. இவர்கள் நாட்டுக் கணக்கு, ஊர்க் கணக்கு மற்றும் கோயிற்கணக்கு என்று கூறப்பட்டுள்ளனர். இதன் அடிப்படையில் அவர்களுக்கிடையேயான படிநிலை அமைப்பினைப் பற்றி அறிய முடிகின்றது. சங்கரன் இவ்வலுவலர்கள் மூவேந்த வேளாண் போன்ற அரசு அலுவலர்களைப்போல் வெள்ளாள சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்கின்றார். அவரின் கூற்றின்படி, நிலவுடைமையுள்ளவரும், அரசு அமைப்பிற்குள் இருந்தவர்களுமே இக்கல்வெட்டுகளை ஆவணமாக அமைத்தார்கள். "சமூகத்தில் இத்தளத்தில் இருந்தவர்களுக்கு மட்டுமே கல்வியறிவு பெற வளமான வாய்ப்பிருக்கின்றது" என்கின்றார் சங்கரன் (சங்கரன் 2001: 77).

சங்கரனின் இந்தக் கருத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. பெரும்பாலும் இந்தக் கல்வெட்டுக்களை ஆசாரிகள் பொறித்தனர். இதற்கு ஆதாரமாகக் கல்வெட்டுக்களைப் பொறித்தவர்கள் "பொற்கோவில் ஆசாரி", "நம் கோவில் ஆசாரி" என்று மட்டும் இல்லாமல் கம்மாள சமூகத்தின் நீண்ட மெய்க்கீர்த்தி இருப்பதுதான் (Ramaswamy : 2004) இதை மூன்று பாண்டியச் செப்பேடுகள்மூலம் அறிகின்றோம். கி.பி. 946இல் எழுதப்பட்ட இந்தப் பட்டயத்திற் பொறித்தவர் பெயர் "நிரும்சேகர பெரும்கொல்லன் நக்கன்" என்று கொடுக்கப்பட்டிருக்கின்றது. மேலும், செப்பேட்டில் உள்ள கம்மாளர் பற்றிய பிரஷஸ்த்தி தன் தந்தையாரால் இயற்றப்பட்டது என்றும், தன் குடும்பம் தலைமுறை, தலைமுறையாகப் பாண்டிய மன்னர்களின் ஆதரவில் மகத்தான சிற்ப வேலை பார்த்ததாகக் கூறப்பட்டிருக்கின்றது. கல்வெட்டின் காலம் ஸ்ரீவல்லம் பாண்டியரின் புத்திரன் பராந்தக வீரநாராயணனுடைய காலம். இந்த ஆசாரி இமயமலையின் மேலும் தன் கைத்திறனை, கலைத்திறனைக் காட்டினார் என்றும் கல்வெட்டுப் புகழ்கின்றது (Ramaswamy : 2004).

சில கல்வெட்டுக்களில் ஆவணமாகக் கட்டமைத்து ஓலையில் எழுதுபவரும், அதைச் சாசனமாகப் பொறிப்பவரும் வெவ்வேறு நபர்கள் என்று தெளிவாகத் தெரிகின்றது. உதாரணமாக, புதுக்கோட்டை கல்வெட்டில் (Inscriptions of Pudukottai State : 599 vide, சங்கரன் 2011 : 80) "திருமகப் பிரசாதப்படி இக்கோயிற் கணக்கர் படி எடுத்து வாசிக்க இக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டினேன் திருவம்பல பெருமானான குலோத்துங்க சோழ ஆசாரியார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பல கல்வெட்டுகளில் ஆசாரியரைச் சிறப்பித்துப் பேசப்பட்டிருப்பதால் அவர்களும் தன் சுய திறமையினாற் கல்வெட்டில் ஆவணங்களைக் கட்டமைத்திருக்கலாம் என்று ஊகிக்கமுடிகிறது. கி.பி. 1145ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில், அதைப் பொறித்தவர், "திருபுவனமுடையான் தச்சாசரியான் உடையநாத ஆதி ஆசாரியனெழுத்து" என்று உள்ளது. இரா.சங்கரன் இந்த "உடையான்" பட்டத்திற்கு "நிலவுடைமையாளர்" என்ற விளக்கத்தை அளிக்கின்றார் (IPS 147, சங்கரன் 2001: 81) இதேபோல் கி.பி. 1294 ஆண்டைச் சார்ந்த புதுக்கோட்டைக் கல்வெட்டு ஒன்றில் ஊரிகாளி உரிமைபெற்ற நான்கு ஆசாரிகளால் கல்வெட்டு ஆவணம் அமைக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது (IPS, 406, சங்கரன் 2001: 81).

நில உரிமை உடையவர்கள் என்றால், சமூகப் படிநிலை அமைப்பில் உயர்ந்தவர்கள் என்று எண்ணிவிட முடியாது. இடைக்காலத்திற் பலவிதமான பணிசெய்யும் வர்க்கங்களுக்கும் காணி உரிமை கொடுக்கப்பட்டிருந்தது. கல்வெட்டுகளில் "தச்சுக்காணி கருமான் குண்டில்" என்று நில ஊழியம் குறிப்பிடப்பட்டுள்ளது. (Ramaswamy 2004). அதனால் நிலவுடைமையாளர்களாக இருந்ததோடு கம்மாளர் சமுதாயத்திற் சிலர் கல்வி பெற்றவர்களாகவும் இருந்தார்கள் என்று தெரிகின்றது. கையொப்பம் போடாமல் தற்குறி போட்டவர்களும் இருந்தார்கள். பெரும்பாலும் கம்மாளர் மெய்க்கீர்த்திகள் இயற்றிய ஆசாரிகள் படித்தவர்கள் என்ற முடிவுக்கு வரமுடியும்.

## அக்காசாலை கம்மட்டர்கள். ஆயுதசாலை கொல்லர்கள்:

இடைக்காலப் பொருளாதாரச் செயற்பாடுகள் எந்த அளவிற்குப் பணம் சார்ந்து இருந்தது என்பதைச் சரியாகக் கணக்கிட முடியாவிட்டாலும், பணத்தின் பயன்பாட்டை அந்தக் காலத்தில் இயங்கிய அக்காசாலைகள், தங்கசாலைகள் போன்றவற்றின் முக்கியத்து வத்திலிருந்து புரிந்துகொள்ளலாம். ரூபாய் நாணயம் செய்யும் அக்காசாலைகள் நேரிடையாக அரசனின் கண்காணிப்பில் இருந்தன. இந்த விடயம் தங்கசாலைகளின் அமைவிடத்திலிருந்து அறிந்துகொள்ளலாம். அக்காசாலையும், ஆயுதசாலையும் திருமடைவளாகத்திற்கு உட்சார்ந்து இல்லாமல் அரச மாளிகையைச் சார்ந்து இருந்தன. நாணயங்கள் செய்யும் வேலையில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்கள் சில கல்வெட்டுகளிற் கம்மாளர்கள் என்று அழைக்கப்பட்டுள்ளனர். நாணயங்கள் அரசினால் மாத்திரம் அல்லாமல் தனி நபர்களால், முக்கியமாக வியாபாரிகளாலும் செய்யப்பட்டன என்று தோன்றுகின்றது. ஆனால் எல்லாவிதமான நாணயங்களுக்கும் அரச உத்திரவாதம் தேவை.

அக்காசாலை போலவே ஆயுதசாலையும் அரசு கண்காணிப்பில் இருந்துவந்தது. ஆயுதசாலை அலலது படைவீடுகளிற் பணியாற்றும் கம்மாளர்களைப் பற்றித் திருவாரூர்க் கல்வெட்டு மிக விவரமாகக் கூறுகின்றது. (South Indian Inscriptions, Vol XVII. No.603, Line : 4-6) இந்தக் கல்வெட்டு "சல்யோத்தாரர்" என்று இவர்களைக் குறிப்பிடுகின்றது. இங்கு கத்தி, ஈட்டி, வேல், சூலம், கவசங்கள் மற்றும் பலவிதமான போர் சம்பந்தப்பட்ட பொருள்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட்டன. இந்தக் கல்வெட்டில் உள்ள மற்றொரு சிறப்பான விடயம் என்னவென்றால், இவர்கள் வில் வித்தையிற் கைதேர்ந்தவர்களாக இருந்தார்கள். "தமூர்வத்தாட்வித" அதாவது கம்மாளர் வெறும் கைவினைஞர்களாக இல்லாமற் போர்க்களத்திலும் வீரர்களாகத் திகழ்ந்தார்கள் என்பதுதான். தொறுப்பூசலிலும் இவர்கள் வீரர்களாகத் திகழ்ந்தார்கள், தொறுப்பூசலில் இவர்கள் பங்குபெற்று உயிர் இழந்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது. போர்க்களத்திற் பயன்படுத்தப்படும் இரதங்களையும் கம்மாளர்களே உருவாக்கினர். இதனால் இவர்களுக்கு இலக்கியங்களில் "ரதகாரர்" என்ற பெயரும் உண்டு. ஆனால், ரதகாரர் என்ற சிறப்புப் பெயர் என்னுடைய ஆராய்ச்சியைப் பொறுத்தவரை, கல்வெட்டுகளிற் காணப்படுவதில்லை. திருவாரூர் கல்வெட்டில், இந்த ரதங்களை அமைத்த கைவினைஞர்கள் "வாஸ்து சாஸ்திரத்தில்" நிபுணர்களாக இருந்தார்கள் என்று தனிப்பட்ட முறையிற் குறிப்பிடப்படுகின்றது. இதே சாசனத்தில் ரதகாரர்கள் குதிரைகளை மதிப்பீடு செய்வதைத் தவிரக் குதிரைப் பராமரிப்பிலும் நிபுணர்களாக இருந்தார்கள் என்றும் கூறப்படுகின்றது. இந்த விடயத்திற்கு முக்கியத்துவம் தருவதற்காக ஒரு தடவை தமிழிலும், மற்றொரு தடவை கிரந்தத்திலும் பொறிக்கப்படுகின்றது (South Indian Inscriptions, Vol XVII. No.603).

கம்மாள ரதகாரர்கள் ஆயுதசாலையில் மட்டும் இல்லாமல் திருமடை வளாகத்தை ஒட்டிய தெருவிலும் வசித்தார்கள். கோயில் திருப்பணிகளில் ரதங்கள், அதுவும் உற்சவ மூர்த்தியை ஏந்திச் சென்ற ரதங்கள் இதே கம்மாளர்களாலே தான் உருவாக்கப்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இடைக்கால வட இந்தியாவின் சமூக சூழ்நிலையிற் பேராசிரியர் ஆர்.என்.மிஸ்ரா ஒரு தனிச்சிறப்புள்ள மாற்றை முன்வைக்கின்றார். (Misra 1975: 78, Misra 2009). மரச்சட்டங்களிலிருந்து கல்வெட்டுகளுக்கு உட்புகுதல் ஒரு மகத்தான தொழில்நுட்ப மாற்றமாகக் கருதப்படுகின்றது. இதனால் மரவேலையின் முக்கியத்துவம் குறைந்து கல்வேலையின் மகத்துவம் அதிகரித்தது. அத்துடன் இரதங்கள் செய்யும் மரத்தச்சர்களின் நிலை சமூகத்தில் தாழ்ந்தது மட்டுமல்லாமல், கல்தச்சர்களின் மதிப்பு சமூகத்தில் உயர்ந்தது. ஆனால், தென்னிந்தியாவைப் பொறுத்தவரை இந்தக் கூற்றை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. விஜயநகர அரசின் பிற்காலம்வரை மதிப்பு இருந்தது. பதினேழாம் நூற்றாண்டிற் கிழக்கு இந்தியக் கம்பனி ஆதிக்கத்தின் பாதிப்பால் பஞ்ச கம்மாளர்களின் வர்க்கம் பிரிந்தது. அதனால் தென்னிந்தியக் கைவினைஞர்களைப் பொறுத்தமட்டிற் பொருளாதாரப் படிநிலையில் வெவ்வேறு தரத்தில் இருந்தாலும் சமூக ரீதியாகக் கம்மாளர்கள் தனிச்சாதியாக அல்லாமல் விஸ்வகர்மா சமுதாயமாக ஒன்றுபட்டுச் செயற்பட்டார்கள். சோழர்காலத்திலிருந்து விஜயநகர காலம்வரை இவர்கள் கூட்டாகச் செயற்பட்டார்கள். கூட்டாகவே அரசர்களிடமிருந்து சமூக மரியாதைகளையும், சலுகைகளையும் பெற்றார்கள்.

## கைவினைஞர் கூட்டமைப்புகள்

ஆசாரிகள், நெசவு செய்பவர்கள், எண்ணெய் வணிகர்கள் போன்றவர்கள் சமூகக் கூட்டமைப்புகளினுள் செயற்பட்டவர்கள். இது ஐரோப்பிய கில்டு (guild) போல் அல்லாமல் மிகவும் வேறுபட்டிருந்தது. வெறும் பொருளாதார ரீதியாக இணைக்கப்படாமல் இடைக்காலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்தியாவில், கைவினைஞர்கள் சமுதாய ஒருமைப்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். இவர்களின் கூட்டமைப்புக்கள் சங்கம் அல்லது சமயம் என அழைக்கப்பட்டன.

கம்மாளக் கூட்டமைப்புகளுக்கு "கம்மாளர் 74" என்ற பெயர் இருந்ததாகக் கல்வெட்டுகளிலிருந்து தெரியவருகின்றது. இதைப்போன்று மற்ற சாதியினருக்கும் ஓர் எண்ணிக்கை, ஒரு குல தெய்வம், மற்றும் ஒரு குருபீடம் என்பன இருந்தன. அய்யவோள் வணிகர்கள் தங்களை "ஐந்நூற்றவர்" என்று அழைத்துக்கொண்டார்கள். கல்வெட்டகளிற் காணப்படும் பெயர் "திசை ஆயிரத்து ஐநூற்றுவர்" என்பதே. இதைப்போல் "தேவகி" அல்லது எண்ணெய் வாணிபர் தங்களை "தேவகி" ஆயிரம் என்று அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். கைக்கோளர் அல்லது செங்குந்தர் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுடன் தங்கள் சமுதாயத்தைச் சேர்க்காவிட்டாலும், தங்கள் புராணங்களில் (வீர நாராயண விஜயம், செங்குந்தர் பிரபந்தத் திரட்டு போன்றவை) தங்களை வீரபாஹுவி 9000 வீரர்கள் என்று பறைசாற்றிக் கொள்கின்றார்கள்.

கைவினைஞர்களும், வணிகர்கள்போல் ஒரு குறிப்பிட்ட இடத்துடன் தங்களை இணைத்துக்கொள்கிறார்கள். உதாரணமாக: தேவகி சமுதாயத்தினர் / பெஜவாடா (தற்பொழுது விஜயவாடா) என்ற இடத்துடன் தங்களை இணைத்துக் கொள்கின்றார்கள். மேலும், கைக்கோளர் நெசவு சமுதாயம் காஞ்சிபுரத்தைத் தங்கள் குருபீடமாகக் கருதுகிறார்கள். தமிழ்நாட்டுக் கம்மாளர்கள் தங்களை மூன்று நாட்டுப் பிரிவுகளாகப் பிரித்துக் கொள்கிறார்கள். பாண்டியக் கம்மாளர், சோழக் கம்மாளர் மற்றும் கொங்குக் கம்மாளர். தமிழ் நாட்டுக் கைவினைஞர்களைப்போல் ஆந்திராவின் பஞ்சவனமுவரு மற்றும் கர்நாடகப் பிரதேசத்தின் பஞ்சாளர் இவ்விதமே வெவ்வேறு கிளை வீடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர்.

ஒவ்வொரு கைவினைஞர் சமுதாயத்திற்கும் விசேட குலதெய்வங்கள் இருந்து வந்தன. தமிழ்நாட்டுக் கைக்கோளருக்குக் காமாட்சி அம்மன், தேவாங்க மற்றும் தோகடா நெசவாளர் சமுதாயத்திற்கு (ஆந்திர – கர்நாடகப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்) சௌடேஸ்வரி அம்மன், கம்மாளர்க் காளிகாம்பா என்று தனித்தனிக் குலதெய்வங்கள் இருந்தன. சாலிய நெசவு சமுதாயம் தெலுங்குப் பிரதேசத்திலிருந்து பிற்காலச் சோழர் காலத்தில் தமிழ் நாட்டுக்குக் குடியேறியதால், இன்றும் தமிழ்ச் சாலியர் தெலுங்குச் சாலியரைப்போல் சாலிஸ்வரரைக் குலதெய்வமாக வணங்குகிறார்கள்.

கைவினைஞர்கள் சமுதாயம் விஸ்வகர்மாவைக் குலபிதாவாக வழிபட்டு வருகின்றனர். விஸ்வகர்மாவின் மூர்த்தியில் ஓர் உடலில் ஐந்து தலைகளை இணைத்து உள்ளதைக் காணலாம். அதாவது இந்த ஐந்து உருவங்கள், கைவினைஞர்களின் ஐந்து தொழிற் பிரிவுகளைக் குறிக்கும் – கொல்லன், தச்சன், சிற்பி அல்லது கல்தச்சன், தட்டான் மற்றும் கம்ஸாலி. இந்தத் தொழில்களின் ஆக்கத் தெய்வங்கள் – மனு, மாயா, சிற்பி, த்வஸ்த்ர மற்றும் விஸ்வஞான, கர்நாடகப் பிரதேசத்திற் காமடேஸ்வரா என்ற தெய்வத்தையும் வழிபட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார்கள். . கைவினைஞர் கூட்டு அமைப்புக்கள் தங்களுடைய சமுதாயச் சட்டங்களுக்கு உட்பட்டுச் செயற்பட்டன. சாதி வழக்குகள் சங்க நாட்டாண்மையின் முன் கொண்டு வரப்பட்டன. வழக்கு விசாரணை மற்றும் தண்டனை சமுதாய மண்டபங்களிலேயே நடை பெற்றன. 1584இல் திருப்பதியில் எழுதப்பட்ட கல்வெட்டு தேவாங்க நெசவாள சமுதாயத்தாற் கட்டப்பட்ட தேவாங்க பல்லாள மண்டபத்தைக் குறிப்பிடுகிறது.

இடைக்காலக் கைவினைஞர் கூட்டமைப்புக்கள் சமுதாய நீதிமன்றமாக மட்டுமல்லாமற் சமூகத்தின் பொதுநலப் பணிகளுக்கு ஒன்றுகூடிப் பொருள் உதவி செய்தன. கோயில் திருப்பணிகளுக்காக ஒன்றுகூடி மகன்மை வசூலித்து, நன்கொடைகள் அளித்தன. இந்த "மகன்மை" கொடுப்பதற்கு உடன்படாதவர்கள் "கங்கை கரையிற் காராம்பசுவைக் கொன்ற பாவிகள் ஆவர்" என்ற எச்சரிப்பும் கல்வெட்டுகளில் எழுதப்பட்டு உள்ளது.

கைவினைஞர் கூட்டமைப்புகளை நோக்கும்போது எழும் முக்கிய கேள்வி – இவர்களுக்கும் திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் போன்ற வணிக கூட்டமைப்புகளுக்கும் எவ்விதமான தொடர்பு இருந்தது? பொருளாதார ரீதியில் மட்டும் அல்லாமல் சமூக ரீதியிலும் இவர்களுக்குள் நெருங்கிய தொடர்பு இருந்ததைப் பல கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

## கைவினைஞர் பெற்ற சமூகச் சலுகைகள்

பதினொன்றாம் பன்னிரெண்டாம் நூற்றாண்டுகளிலிருந்து கைவினைஞர்கள் பொருளாதார முன்னேற்றத்திற் பங்குபெற்றார்கள். முக்கியமாகச் சிற்பியர், பொற்கொல்லர், பட்டுச் சாலியர், கைக்கோளர் என்னும் கைவினைஞர்க் குழுக்கள் அதிக ஆதாயம் பெற்றுச் சமூகத்தில் மதிப்பும், பலவிதமான சலுகைகளும் பெற்றார்கள். இந்த உயர்ந்த நிலை விஜயநகர ஆதிக்கம்வரை நீடித்தது. இவர்களின் பொருளாதார உயர்வின் பிரதிபலிப்பு இவர்களால் கோயில்களுக்கு வழங்கப்பட்ட கொடைகள் மூலம் தெரியவருகிறது. கம்மாளர்கள் தங்களின் நன்கொடையை தேவதான்யமாகவோ அல்லது பொன்னாகவோ வழங்கினர் (South Indian Inscriptions, Vol:V, No.343 (ARE 54: 407) 1894) சிலசமயம் தங்கள் தொழிலிற் கிடைக்கும் ஆதாயத்திலும் ஒரு பங்கினைக் கோவில் நற்பணிகளுக்காகச் செலவிட்டார்கள்[5] (ARE, 4 of 1899). கல்வெட்டுகளில் மகன்மை என்று குறிப்பிடப்பட்டி ருக்கின்றது. ஆலக்குடிக் கல்வெட்டில் ரதகாரர்கள் என்று கம்மாளர்கள் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த மானூர் செப்பேடு பதினெட்டாவது நூற்றாண்டைச் சார்ந்தது. அதனால் இந்தக் கட்டுரையின் காலகட்டத்திற்கு அப்பாற்பட்டது ஆனாலும், இதிற் சில விடயங்கள் கவனிக்க வேண்டியவை. கம்மாள விஸ்வகர்மாவின் மெய்க்கீர்த்தியைக் கூறிவிட்டு அவர்கள் தங்கள் சமுதாயத்திற்கு உரிய பிள்ளையார் மற்றும் முருகன் கோயில்களைக் கட்டியதாகவும், அக்கோயில் பூசைத் திருப்பணிகளுக்காக ஒரு கம்மாளக் குடிக்கு 1 பணம் வீதம் மகன்மை கொடுத்ததாகவும் தகவல் உள்ளது (ஸ்ரீதர் 2005 : 198–207).

பன்னிரெண்டாவது நூற்றாண்டிலிருந்து சோழப் பேரரசும், கொங்குநாடு போன்ற சிற்றரசுகளும் கம்மாளருக்குச் சங்கு, தண்டு போன்ற சலுகைகளைக் கொடுத்ததாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டுகள் கூறுகின்றன. நன்மைக்கும் தீமைக்கும் இரட்டைச் சங்கு ஊதவும், பேரிகை கொட்டவும், தண்டு ஏறிச்செல்லவும், கால்களில் மிதியடி போடவும், வீடுகளுக்குச் சாந்து பூசிக் கொள்ளவும் கொங்கு அரச அதிகாரிகள் அனுமதி அளித்தார்கள் (ARE 235 of 1905). இந்த சலுகைகளைப் பற்றி அநேக தென்கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்களும் முக்கியமாகப் பேரூர் (Are 562 of 1893 in South Asian Inscriptions Vol.V, No.238 : 22). கருவூர் போன்ற கோயிற் சாசனங்களும் விவரிக்கின்றன. பேரூர்க் கல்வெட்டில் அரசரின் பெயர் திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரிமைக்கொண்டான் என்று பட்டம் தரப்பட்டிருக்கிறது. இவருடைய காலத்தை நிச்சயமாகக் கூறமுடியாவிட்டாலும், பதின்மூன்றாம் நூற்றாண்டு என்று ஊகிக்கலாம்.

விஜயநகர காலத்திற் கைவினைஞர்களுக்குத் தரப்பட்ட சலுகைகள் இன்னும் விரிவுபடுத்தப்பட்டன. சங்கு, தண்டு முதலியன தவிர கருடத்வஜம் மற்றும் சாம்பரம் உபயோகிக்கும் சலுகையும் இவர்களுக்கு வழங்கப்பட்டன (ARE 65 of 1922-23, Para - 54).

இந்தக் கல்வெட்டுக்களை வாசிக்கும்போது புலனாகும் உண்மை என்ன வென்றால் பன்னிரெண்டாம் நூற்றாண்டிற்கு முன்பு கைவினைஞர் சமுதாயம் தாழ்த்தப்பட்ட நிலையில் இருந்திருக்கலாம். ஆனால், இதற்கு மேற்பட்ட காலத்தில் முக்கியமாக விஜயநகர அரசின் காலத்தில் உயர்தர நெசவாளர்கள் மற்றும் பொற்கொல்லர், சிற்பியர் போன்ற கைவினைஞர்களின் நிலைமை சீராக இருந்தது. 12ஆம் நூற்றண்டிலிருந்து 16ஆம் நூற்றாண்டுவரை சமுதாயக் கிளர்ச்சிக் காலம் என்று கூறலாம். இடங்கை வலங்கைக் கலவரங்கள் துவங்கிய காலமும் இதுதான். பக்தி இயக்கம் மும்முரமாகச் செயற்பட்ட காலகட்டமும் இந்த நூற்றாண்டுகளிலேதான்.

இந்த இரண்டு இயக்கங்களுக்கும், கைவினைஞர் சமுதாயங்களுக்கும் என்ன தொடர்பு? இதற்கு ஒரு விளக்கம் என்னவென்றால், பிற்காலச் சோழர் காலத்திலிருந்து கைவினைஞர்களிற் சில சாதிகளின் நிலைமை பொருளாதார ரீதியில் முன்னேறியது. கட்டிட வேலைகளில் மற்றும் கோயில் உருவாக்கத்தில் ஈடுபட்டோர் செல்வந்தர்களாக ஆனார்கள். ஆனால், அவர்களின் சமூகநிலை பொருளாதார நிலைக்குச் சமமாக உயரவில்லை. இவர்கள் சாதி சமூகத்திற் சரிசமமான உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராட வேண்டியிருந்தது. இந்தப் போராட்டங்கள் இரண்டுவிதமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டன. ஒன்று இடங்கை – வலங்கைச் சாதிப் படிநிலை மூலமாக, இன்னொன்று வீரசைவ மற்றும் தென்கலை வைணவ இயக்கங்கள் மூலமாக (Ramaswamy 2003).

இடங்கை – வலங்கைக் கலவரங்களில் முக்கிய பங்குபெற்றோர் நெசவாள சாதிகளும், கைவினைஞர் சாதிகளும். நெசவாளர் சமுதாயத்திற்குக் காஞ்சிபுரம் குருபீடமாகத் திகழ்ந்தது. கைக்கோளர் கச்சி என்ற காஞ்சிபுரத்தில் நிறையச் சலுகைகள் பெற்றபின் இதேபோல் மற்ற இடங்களில் (வட ஆற்காடு மாவட்டத்திற் படைவீடுபோன்ற இடங்கள்) சலுகைகள் பெற்றார்கள். திருவெண்ணைய் நல்லூர், திருத்தலூர் மற்றும் திருக்கோயிலூர் கல்வெட்டுக்கள் இந்த ஊர் கம்மாளர்கள் கச்சி அறம் வளர்த்த நாயனாரின் அனுமதியாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கு, தண்டு போன்ற சலுகைகள் பெற்றதாகக் கூறுகின்றன (Ramaswamy 2007 : 105-7). கம்மாளரின் தரம் உயர உயர அவர்களும், இந்தச் சலுகைகளுக்காகக் கைக்கோளர் போன்ற நெசவாளர் சாதிகளும் போட்டியிட்டார்கள். விஜயநகர அரசு காலத்திலிருந்து இதேபோன்ற சலுகைகளைப் பெற்றார்கள். 14ஆம் நூற்றாண்டில் ஹரிகர ராயரின் கல்வெட்டும், 15ஆம் நூற்றாண்டில் அமராவதியில் தேவராயக் கல்வெட்டும் (1437) கம்மாளருக்குச் சங்கு, தண்டு, கொடி முதலிய வரிசைகளை அளித்ததாகக் கூறுகின்றன. இதை நெசவாளச் சாதிகள் கடுமையாக எதிர்த்தார்கள் என்று தற்காலக் கல்வெட்டுக்களிலிருந்து தெரிய வருகிறது. உதாரணமாக ஒரு விருத்தாச்சல கல்வெட்டு (ARE 293 of 1928 - 29). (தென் ஆற்காடு மாவட்டம்) கைக்கோளரின் கோரிக்கையை ஏற்று நாட்டவர், பரிவட்டம், பாவாடை போன்ற கம்மாளருக்கு அளிக்கப்பட்ட சலுகைகளை ரத்துச் செய்துவிட்டார்கள் என்று அறிவிக்கின்றது.[6] பரிவட்டம் அளிப்பது கோயில் முதல் மரியாதைகளில் ஒன்று என்பதை இன்று தமிழகக் கோயில் நடைமுறைகளிற் காணலாம்.

இந்த இரண்டு போட்டியிடும் சாதிகளும் அரசியல் அட்டூழியங்களை எதிர்க்கும்போது ஒன்று சேர்ந்தார்கள். 1429ஆம் வருடம் விஜயநகர அரசுக்கு முக்கியமான காலகட்டமாகும். இந்த வருடத்தில் இரண்டாவது தேவராயராற் சுமத்தப்பட்ட வரிகளை இடங்கை – வலங்கைச் சாதியினர் ஒன்று சேர்ந்து எதிர்த்தார்கள் என்று பல கல்வெட்டுக்கள் பறைசாற்றுகின்றன (ARE 59 of 1914, Ramaswamy 2007 : 113).

ஒரு பக்கம் தங்கள் சமூக அந்தஸ்தை உயர்த்தக் கைவினைஞர்கள் சாதிக் கலவரங்களில் ஈடுபட்டார்கள் என்றால் மற்றொரு பக்கம் பக்தி இயக்கங்களிற் பங்கு பெற்றுச் சாதி வரிசைப்படுத்தலையே எதிர்த்தார்கள். இதற்கு வீரசைவம் (லிங்காயத்து இயக்கம் என்பது இதற்கு மற்றொரு பெயர்), தென் வைணவம் முதலிய இயக்கங்களில் இவர்களுடைய பங்கேற்பே தக்க சான்று (Ramaswamy 2007 : 113-114).

## அடிக்குறிப்புகள்

1. கொடுமணல் தோண்டுதலில் கிடைக்கப்பெற்ற பொருட்களைப் பற்றியும், மணிகள் உற்பத்திப் பட்டடைகள் பற்றியும் குறிப்புகள் உள்ளன.
2. முக்கியமாகச் செப்ரோலு கல்வெட்டு கி.பி 1118, நாதித்திலா கல்வெட்டு 1141 கி.பி. போன்றவை "விஸ்வகர்ம குல" என்று குறிப்பிடுகின்றன.
3. கிராம சமுதாயத்தில் கைவினைஞர்களின் இருப்பைப் பற்றி அறிய Ramaswamy 2007.
4. 2007, மாச் மாதம் நடைபெற்ற பொற்கொல்லர் மாநாட்டில் பங்கேற்கும் ஓர் அரியவாய்ப்பு எனக்குக் கிட்டியது.
5. இந்த ஆலங்குடிக் கல்வெட்டில் ரதகாரர்கள் கோயிலுக்காக மகமை கொடுத்தார்கள் என்ற குறிப்புள்ளது.
6. நொபுரு கரஷிமா, தன் புத்தகத்தில் (2001) பரிவட்டம், பாவாரை முதலியவற்றை வரிகள் என தவறுதலாகக் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Original sources:

*Annual Report of South Indian Epigraphy* (in Tamil) Published by the Archaeological Survey of India, Madras, 1887 onwards.

*Annual Report of South Indian Epigraphy* (Tamil) Published by the Archaeological survey of India, Madras, 1887 onwards.

*Bombay-Karnatak Inscriptions*, edited by R.S.Panchamukhi and B.R.Gopal, Dharwar, 1941.

*Epipgraphica Indica*, Calcutta, 1892 onwards.

*Pallava Cheppedugal Pathu* (Thirty Pallavacopper Plate Inscriptions ), Tamil Varalatru Kazhagam, Chennai, 1967.

*South Indian Inscriptions*, (in Tamil), Government Press, Madras, 1890 onwards.

*Mahabharata*, edited by V.S.Sukthankar, Bombay Oriental Research Institute, Poona, 1933.

Visvakarma Puranam (in Tamil), Mackenzie Manuscripts, Wilson Collection, No.72, Hand written Manuscript in the India Office, London.

*Visvakarama Vastushastra* (in Sanskrit), edited by K.Vasudeva Shastri, Tanjavur Saraswati Mahal Library Publication, Tanjaur, 1990.0

**English Texts**

Appadorai, A.

1936, *On Economic Condition in Southern India*, Madras: Madras University.

Brouwer Jan.

1987(a), ' A Matter of Liminalities: A Study of Women and Crafts in South India', *Man in India*.

Brouwer Jan.

1987(b), 'Riddles of Raw Materials: Aspects of the Classification of Stones and wood used by South Indian Artisans', *Man in India*.67: 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Champakalakshmi, R.

1996, *Trade, Ideology and urbanization: South India 300 BCE to 1300 CE*, Oxford University Press.

Coomaraswamy Ananda, K.

1989, *The Indian Craftsman*, . New Delhi Munshiram Manoharlal Publishers.

Habib Irfan.

1972, 'Potentialities of Change in the Economy of Mughal India, *Socialist Digest, No.6*.

Hall Kenneth.

1980, *Trade and Statecraft in the Age of Cholas*, New Delhi Abhinav Publications.

Hall Kenneth (ed).

2001, *Structure and Society in Early South India: Essays in Honour of Noboru Karashima*, New York Oxford University Press.

Heitzman James.

1997, *Gifts of Power: Lordship in an Early Indian State*, Oxford University Press.

Karashima Noboru.

2001, *History and Society in South India: The Cholas to Vijayanagara: Comprising South Indian History and Society* and *Towards a New Social Formation*, Delhi. Oxford University Press.

Misra

1978, Ancient Artists & Art Activity : Simla : Indian Institute of Advanced Study.

............

2009. Sihilpa in Indian Tradition, Simla : Indian Institute of Advance Studies.

Rajan.K

1994, Archaeology of Tamil Nadu (Kongn Country), Delhi : India Publishing Company.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ramaswamy Vijaya.

1994, 'Metallurgy and Traditional Metal Crafts in Tamil Nadu', *Indian Journal of History of Science*, 29 (3).

................

2003, Crafts and Artisans in South Indian History, Presidential Address( Medieval India), Indian History Congress, 64th Session, Mysore

................

2004, 'Vishwakarma Crafts in Early Medieval Penisular India, *Journal of the Economic and Social History of the Orient,* vol.47, part 4.

................

2007,Taxtiles and Weavers in Soth India, 2nd edition, Delhi;OUP

சங்கரன், ச.ர.

2001, கல்வெட்டில் கணக்கு (எழுத்து) அலுவலர்கள், Studies in the history of Tamil Nadu : Irrigation, society, Temple literary (Essays in Tamil and English) தஞ்சாவூர் : ஆனந்தம் வெளியீடு

வேலுசாமி. ச.

1979, "தமிழ் நாகரீகத்தின் இரும்பின் பங்கு", இரா.நாகசாமி, (தொகுப்பு), சென்னை: வரலாற்றுப்பேரவை

ஶ்ரீதர், ஶ்ரீ.

2005, தமிழக செப்பெடுகள், தமிழ்நாடு அரசயில், சென்னை : தொல்லியல்துறை

சுப்புராயலு,

2003,(2002) தமிழக கல்வெட்டு சொல்லகராதி முதல் தொகுதி, சென்னை : சாந்தி சாதனா

நாகசாமி. இரா

1973, யாவரும் கேளீர், சென்னை : வாசகர் வட்டப் பிரசுரம்

வசந்தி, சீ

2000, தமிழக அகழ்வாய்வில் சாதனைள், சென்னை : பூவழகி பதிப்பகம்

வாசுதேவ சாஸ்திரி மஹல்.த

1990, விஸ்வகர்ம வாஸ்த்து சாஸ்திரம் (சமஸ்கிருத நூல்) தஞ்சாவூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள சாதியத்தின் இயல்பு

பிறைஸ் ரயன்
தமிழில் : சாமிநாதன் விமல்
க.அருந்தாகரன்

இந்த மக்களுக்கிடையில் பல்வேறு வகைப்பட்ட பிரிவுகளையும் வகைப்படுத்தல்களையும் காணக் கூடியதாகவுள்ளது. அவை அவர்களது செல்வத்தால் அல்லது மன்னனால் வழங்கப்பெற்ற கௌரவத்தால், ஸ்தானத்தால் கிடைக்கப் பெற்றவையல்ல. மாறாக, அவை அவர்களது இரத்த மற்றும் பரம்பரையை அடிப்படையாகக் கொண்டவையாகும். இந்தக் கௌரவம் உயர்ந்ததாகவோ அல்லது தாழ்ந்ததாகவோ எதுவாக இருப்பினும் தலைமுறை தலைமுறையாக மரபுரிமையாக நீடித்திருந்தது. அவர்கள் தங்களைவிடத் தாழ்ந்த நிலையி லுள்ள எவரோடும் உண்பதையோ குடிப்பதையோ பரஸ்பர திருமணம் செய்து கொள்வதையோ தவிர்த்துக்கொள்கின்றனர். மேலாடையணிதல் அல்லது அணியாதிருத்தல், கதிரையில் அமர்தல், மரக்கட்டையில் பாயில் அமர்தல், முழங்காலுக்குக் கீழுள்ள ஆடையின் நீளம், அணியும் தலைப்பாகை/தொப்பி முதலியனவே அவர்களின் அந்தஸ்தை அல்லது படிநிலையைக் காட்டும் குறிகாட்டிகளாகும் (Knoxs 168)

சிங்களவர்கள் இனம் மற்றும் பண்பாட்டைப் போலவே சாதிய அடிப்படையிலும் இந்தியாவின் பிள்ளைகளே. மிகப் புராதன காலந்தொட்டு அவர்கள் தங்கள் சமூகத்தைச் சாதிமுறைகளின் அடிப்படையில் ஒழுங்கமைத்துக் கொண்டனர். இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து சொற்ப கடல் மைல்களினால் பிரிக்கப்பட்டுள்ள இலங்கையானது, அதன் பண்பாடு மற்றும் வரலாற்றுணர்வில் அகன்ற இந்திய இணைப்புக்குட்பட்ட பகுதியாகவே யுள்ளது, உண்மையில் அதன் வடக்குத் தீபகற்பம் இருபெரும் நீரிணைகளை இணைக்கும் பகுதியாகவுள்ளது. சாதிய நோக்குநிலையில், இலங்கையானது. துணைக் கண்டத்தைப் போலவே புராதன இழையின்மீது பிராந்திய வேலைப்பாடுகள் காட்சிப்படுத்தப்படுவதாக இருந்தாலும், அதன் அடிப்படையான ஒருமைப்பாட்டை பிரகடனப்படுத்துவதாகவே உள்ளது. சிங்களவர் தமது மூலத்தினை வடமேற்கு இந்தியாவிலிருந்து புத்தருக்கு முந்திய காலத்தில் இடம்பெற்ற படையெடுப்புக்களுடன் இனங்காண்கின்றனர். அவர்களது மிகப் புராதன வரலாறுகள் இந்திய சமூக அமைப்பை இங்கு கொண்டுவந்து மீள்பதிகை செய்யப் பெற்றமை பற்றி விபரிக்கிறது. ஆதிவாசிக்குடிகள் பற்றி அறியக்கூடியவை மிகவும் சொற்பமாக இருப்பினும் இந்த எளிமையான, வேட்டையாடும் மக்கள் சிக்கலான இந்திய சமூக அமைப்பை உள்வாங்கவில்லை என்பதை இலகுவாகப் புரிந்துகொள்ளமுடியும். பழைய மரபுக் கதைகளின்படியும் உண்மைத் தகவல்களின்படியும் இந்தியர்களின் இலங்கைக்கான குடியேற்றங்கள் கி.மு. ஆறாவது நூற்றாண்டிலேயே ஆரம்பமாகிறது. இன்று ஐதான குடியிருப்புக்களைக் கொண்டிருக்கும் வடபகுதிக் காடுகளில் கி.பி. ஆறாவது நூற்றாண்டு தொடக்கம் இந்தக் குடியேற்றங்களிலிருந்து நாகரிகம் தொடங்குகிறது. நூற்றாண்டு கால நகர்வில் இலங்கைக்கான இந்தியச் செல்வாக்குகளினதும் குடிபெயர்வுகளினதும் மூலங்கள், வடஇந்தியாவிலிருந்து தக்கணம் வரை மாறுவதைக் காணக்கூடியதாக உள்ளது. கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்குப்பின் தென்னிந்திய இளவரசர்கள் இத்தீவின் வடபகுதியில் ஆட்சியாளர் களாக ஸ்தாபிதம் பெறுவதைக் காணக்கூடியதாக உள்ளபோது கிழக்கு மற்றும் தெற்குப் பிரதேசங்களைச் சிங்களவர்கள் தமது இராசதானிகளாகப் பேணிக் கொண்டனர். இவ்விராசதானிகளிற் கடைசி இராசதானியான கண்டி 1815ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களாற் கைப்பற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது மூல இந்திய மரபுரிமையின் மாறலாகவும், மேலும் தொடர்ச்சியாக மட்டுமல்லாமல் இந்தியத் தொடர்புகளின் அருட்டுணர்வில் இருந்தும் சிங்களவர்கள் தமது தனித்துவமான வாழ்க்கை முறையை வேறுபட்டதாக உற்பத்தி செய்தார்கள். ஆரம்பத்தில், ஆரிய மொழிபேசும் வட இந்தியர்களின் செல்வாக்கு ஆதிக்க சக்தியாக இருந்தது பற்றிச் சந்தேகம் கிடையாது. அதேவேளை காலப்போக்கில் திராவிட மொழி பேசும் தென்னிந்திய மக்களின் இராணுவ மற்றும் அமைதியான படை எடுப்புக்கள் ஆதிக்க சக்தியாக இருந்தது. இத்தீவை அல்லது மிகவும் சரியாகக் கூறுவதாயின் அதன் கரையோரப் பிரதேசங்களை 16ஆம் நூற்றாண்டிற் போர்த்துக்கீசர் கைப்பற்றும் வரை சிங்களவர்கள்மீது பண்பாட்டு ரீதியாகவும், அதேநேரம் அரசியல் ரீதியாகவும் இந்தியா ஆதிக்கம் செலுத்தியது. எவ்வாறாயினும் சுயாதிபத்தியம், பகுதியான தனிமைப்படுத்தல் அத்துடன் தீவிற்குள் கொண்டுவரப்பட்ட பரந்துபட்ட இந்தியச் செல்வாக்குகள் காரணமாக இந்திய நிறுவனங்களில் இருந்து தற்புதுமையான முறையில் வேறுபடும் தனித்துவமானதும் சுயாதிபத்தியம் கொண்டதுமான ஓர் சமூகம் இந்த நூற்றாண்டு முழுவதிலும் கட்டப்பட்டது. சமூக ஒழுங்கமைப்பில் இந்தப் பகுதி ரீதியான பண்பாட்டுத் தனித்துவம் இந்நாட்களிற் சிங்களவர்களுக்கும், வடக்கு யாழ்ப்பாண தீபகற்பத்தில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்துவரும் இலங்கைத் தமிழர்களுக்கும் இடையிலுள்ள எதிர்நிலைக்குச் சான்றாகவுள்ளது. இரண்டாவதாகச் சொல்லப்பட்ட தமிழர்களின் சாதிகளும், சிங்களவர்களது சாதிகளும் மேலோட்டமாகச் சமமானவையாக இருந்தாலும், சாதிய உள்ளடக்கங்கள் உறவுகளில் தென்னிந்தியாவை ஒத்தது. சிங்களவரிடமிருந்து அடிப்படையில் வேறுபடும் ஓர் முறைமையை உருவாக்குகின்றன. இலங்கை இரு சாதிக் கட்டமைப்புக்களைக் கொண்டுள்ளது. அதாவது தமிழர்களின் சாதியமைப்புக்கள்; அது தென்னிந்தியக் கோலத்தினுள் உள்ளடக்கும் பிராந்திய வேறுபாடு என்பதைத் தவிர வேறொன்றல்ல. சிங்களவர்களின் சாதியமைப்பு வலுவிழந்த இந்திய செல்வாக்குகள் மற்றும் வரலாற்று ரீதியான நிகரற்ற நிலைமைகளிலிருந்தும் மேற்கிளம்பும் சுய உள்ளடக்கத்தைக் கொண்டதொன்றாகும்.

சாதிய மூலங்களைத் தேடுதல் என்பது 19ஆம் மற்றும் 20ஆம் நூற்றாண்டிற்கூடப் புலமையாளர்களின் வெற்று முயற்சிகளாகவே இருந்தது. எனவே, மூலங்கள் தொடர்பான முடிந்த முடிவான எண்ணற்ற கோட்பாடுகளை இங்கு முன்வைக்கப் போவதில்லை. அது எப்படியிருப்பினும் சாதி என்பது இலங்கையில் உற்பத்தியான ஒன்றல்ல. அது கருத்தாக்க ரீதியிற் பதிகை செய்யப்பட்டதாகவும், அகத்தூண்டல் மற்றும் முதிர்ச்சியினடியாக வளர்ந்த ஒன்றாகவும் உள்ளது. இந்தப் பதிகை செய்தல், மற்றும் வளர்ச்சி இதுவரை அதன் இருப்புப் பற்றிய ஆவணப்படுத்தல்களில், அரைப்புராணக் கதைகளில், கர்ண பரம்பரைக் கதைகளில், பகுப்பாய்வு செய்யப்படாத ஓலைச் சுவடிகளில், கல்வெட்டுகளில் மற்றும் மொழியியல் ரீதியாகத் தேர்ச்சிபெற்ற பழம்பொருள்களில், அறிவுடையவர்களால் எதிர்காலத்தில் வாசிக்கக் கூடியதாக இருக்கும் ஏனைய மூலாதாரங்களிலும் உள்ளன. குறித்த சில சிங்களச் சாதிகள் இந்திய மூலங்களுடன் அடையாளப்படுத்தப்படும் பல தரவுகள் தற்போது உள்ளன. இவற்றுள் ஒருசிலது தவிர ஏனையவை வரலாற்று ரீதியான ஆவணங்கள் என்பதைவிட சாதிப் பெருமையை வெளிப்படுத்தும் ஆவணங்களாகவேயுள்ளன. கியுலி நெவிலுடைய (1885-1888) புத்தகத்தில் பொய்களை அவருடைய நடுநிலையான விருப்பு வெறுப்பற்ற பார்வை தொடர்பாகச் சந்தேகம் கிடையாது. ஆயினும் வரலாற்றுரீதியான ஆவணங்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிப்படுத்தப்படுவதாக இல்லாத அவரது தத்துவார்த்தப் பொருள் விளக்கங்கள் நியாயமானவை என்பதற்கும் அப்பால் நிபுணத்துவம் சார்ந்தவை.

பதினைந்தாம் நூற்றாண்டிற்கு முற்படாத அல்லது அதற்கும் பிந்தியதான *"ஜனவம்ச"* என்ற நூல் ஒரு பௌத்த பிக்குவால் எழுதப்பட்டது. சாதிகளைப் பட்டியலிட்டுள்ளதன் மூலமும், சாதியம்பற்றிய பௌத்த மனோபாவத்தைப் பற்றியறியக் கூடியதான சில பார்வைகளை உள்ளடக்கியுள்ளதனாலும் இந்நூல் மிக முக்கியமான ஒன்றாகவுள்ளது. *நீதி நிகண்டுவ* என்ற நூலானது, இதனைவிட வித்தியாசமானதொரு நூலாகும். இது கண்டிய உயர்சாதியினரின் நிலைப்பாட்டிலிருந்து சிங்களவர்களுக்கிடையே நிலவும் சாதிமுறைமை யின் மூலங்களைப் பற்றிய பாரம்பரிய பழைய மரபுக் கதைகளைப் பிரதிபலிக்கின்றது. *நீதி நிகண்டுவ* பிரபஞ்சவியல் சார்ந்த ஒன்றாகவும், அரசின் தோற்றம்பற்றிய சமூக ஒப்பந்தக் கோட்பாடு பற்றியதாகவும் உள்ளது. ஒரு அரசனைத் தெரிவு செய்தல், மற்றும் அவனுடைய பணிக்கான வரி செலுத்துதல் என்பவற்றுடன் அதிகாரப் பிரிவு, உழைப்புப் பிரிவு என்ற இரு பிரிவுகள் தோன்றின. இதிலிருந்து நான்கு பெருஞ்சாதிகளான "புலவர்கள்" , "அரசர்கள்" , "வணிகர்கள்" மற்றும் "விவசாயிகள்" என்ற சாதிகளும் அவர்களின் உதவியாளர்கள், கைவினைஞர்கள் மற்றும் ஏனைய சேவைப் பிரிவுகளும் உருவாயின. சிங்களவர்களின் மூதாதையரான விஜயன் மற்றும் அவரது போர் வீரர்கள் இலங்கையை இந்த நான்கு சாதியினராலும் நிரப்பினர். பின்பு ஏனையவர்களும் சிறைப்பிடிக்கப்பட்டுக் கொண்டு வரப்பட்டனர். உயர்சாதிகள் இறுதியில் விவசாயிகளுடன் ஒன்றாகக் கலந்தனர்.

புராதன இந்திய அமைப்புக்களுடன் அல்லது அந்த அமைப்பென்று கருதப்படுவதுடன் வெளிப்படையான நல்லிணக்கத்தினைக் கொண்டுள்ளமையானது சாதி தொடர்பான எல்லாச் சிங்களக் கருத்துக்களுக்கும் பொதுவான சிறப்புப் பண்பாகவுள்ளது. கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த *"ரூவான்மல்"* என்ற சிங்கள அகராதி சாதிப்படி நிலையைப் பிராமணர், அரசர், வைசிகர், விவசாயிகள் மற்றும் நான்காம் இனக்குழு அல்லது சூத்திரர் என்றவாறு வரிசைப்படுத்தியுள்ளது[4]. *நீதி நிகண்டுவ* மற்றும் *ரூவான்மல் நிகண்டுவ* போலன்றி, இலங்கையின் ஜனரஞ்சக வழக்கில் இந்த நான்கு சாதிகளையும் வரிசைப்படுத்தும்போது அரசனுக்குப் புலமையாளரைவிட மேலான நிலையை வழங்கி யுள்ளது. அதாவது பிராமணர்களுக்கு மேலாக க்ஷத்திரிகர்கள் என்றவாறு. எனவே, டேவி 1816 அளவில் சிங்களவர்களை நான்கு பெரும் சாதிகளாக வரிசைப்படுத்தும்போது க்ஷத்திரிய வம்சத்திற்கு *(எக்ஷத்திரிய வன்சே)* பிராமண வம்சத்தைவிட மேல் நிலையினை வழங்கியுள்ளார். இந்த வரிசைப்படுத்தலில் மூன்றாம் நிலையினை - இடத்தை வைஸிய சாதியினருக்கு வழங்கியுள்ளது. இந்தச் சாதிக்குள் வணிகர்களுடன் விவசாயிகளும், மிகவும் கீழ்நிலையிலுள்ள சூத்திர சாதிக்குள் கைவினைஞர் மற்றும் ஏனையவர்களும் உள்ளடங்கு கின்றனர். இன்றும்கூடக் கிராமங்களில் நிலவும் ஜனரஞ்சகக் கருத்தானது க்ஷத்திரியர்களே மிகவும் உயர்ந்த அந்தஸ்தைக் கொண்டவர்கள் என்பதற்கு ஆதாரமாகவுள்ளது.

*நீதிநிகண்டுவ* நூலானது ஏனைய ஆதாரங்களிலிருந்து வேறுபடுத்தக்கூடிய சிறப்பான பண்பைக் கொண்டுள்ளது. அதாவது, விவசாயிகளும், க்ஷத்திரிய மூலத்தைக் கொண்டவர்கள் என முன்வைக்கும் கருத்தாகும். டேவி மற்றும் ஏனையவர்கள் விவசாயிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைசியர் என உறுதிபடக் கூறியுள்ளனர். விவசாயிகளின் நிலை பற்றியும் பிராமணர் மற்றும் க்ஷத்திரியர்களின் சார்புநிலை மேன்மை தொடர்பாகவும் நிலவும் இந்தக் கருத்து முரண்பாடுகள் சமகாலத்தில் அந்தஸ்துத் தொடர்பான பாசாங்குகளில் சில முக்கியத்துவம் கொண்டுள்ளன. அதேநேரம் இவை சிங்களவர்களின் சிந்தனைமீது முன்னைய இந்தியக் கருத்து வேறுபாடுகளின் செல்வாக்கைச் சுட்டிக் காட்டுவதாகவும் உள்ளது. நால் "வர்ணங்களின் அறிமுகங்கள் தொடர்பாக நாட்டார் தரவுகளிலுள்ள அடிப்படை உடன் பாடானது மகாவம்சத்தில் வரும் நேர்ப் பிரதிகளால் பகுதி ரீதியாகவே உறுதிப்படுத்தப் படுகிறது. தற்போதைய் சிங்கள அதிகாரப்படி நிலையில் அல்லது தொடக்க காலத்தில் ஐரோப்பிய நோக்குநிலையில் நிலவிய அதிகாரப்படிநிலையில், இந்தத் தரவுகளில் நேரடியாகவுள்ள இந்தியச் சாதியமைப்பின் தொல்சீர் கோட்பாடுகளும், மரபு வழுவாத் தன்மையும் முழுமையாகவே சம்பந்தமற்றவை என்பது மிக முக்கியமான உண்மையாகும்.

*நீதிநிகண்டுவ* நூலில் வரும் காரண காரிய கூற்றுக்களை அல்லது பௌத்தத்திற்கு முந்திய இந்தியாவில் தொல்சீர் பிராமணியப்படிநிலை உண்மையில் நிலவியது என்ற எடுகோளை ஏற்றுக்கொள்ளும் ஒருவர், சிங்களச் சாதி ஒழுங்கானது தொல்சீர் கட்டமைப்பின் ஒரு சீர்கேட்டை பிரதிநிதித்துவம் செய்கின்றதென்பதை ஊகித்துக் கொள்ள முடியும். நவீன காலத்து சிங்களவர்கள் பிராமணரோ க்ஷத்திரியரோ என இனங்காணக் கூடியவர்களாக இல்லை என்பதோடு, வைசிய மற்றும் சூத்திர என்ற எண்ணக் கருக்களைப் பற்றிய அரிதான புரிதலை உடையவர்களாகவே உள்ளனர். அத்தோடு மரபு நிலை நான்கு சாதி அதிகாரப் படி நிலையானது. அவர்களைப் பொறுத்தவரை புராதன காலத்து ஒரு ஞாபகமாகவே தோற்றம் தரக்கூடியது. எவ்வாறாயினும் சிங்களச் சாதியானது ஒரு செந்நெறியினதும், புராதன காலத்துக் கண்டிப்பான வரையறைகளைக் கொண்டுள்ள அதிகாரப் படிநிலையின் ஒரு மங்கலான வெளிப்பாடாக உள்ளது என நம்புவதைவிட, அது ஆதிகால இந்திய முறைமையொன்றின் நவீன வெளிப்பாடாக உள்ளதென நம்பக் கூடிய சில அடிப்படைகள் உள்ளன. பிராமணிய ஆதிக்கத்தின்கீழ் மீள்வரையறை செய்யப்பட்டதும், பளிங்குமய நிலைப்படுத்தப்பட்டதுமான வட இந்திய அடித்தளம் ஒன்றிலிருந்து சிங்களச் சமூக அமைப்பு அபிவிருத்தியடைந்தது. பௌத்த இலங்கையிற் பிராமணர் இசைவாகர் வகிபாகத்தையே கொண்டிருந்தனர்.

கிறிஸ்துவுக்கு முந்திய இந்திய மனுநீதியின் - ஸ்மிருதியின்படி அதாவது, தொல்சீர் அதிகாரப் படிநிலையின்படி ஒழுங்கமைக்கப்பட்டதாக இருந்ததென்பது மேலைத்தேயப் புலமையாளர் பலருடைய கருத்தாக இருந்தது. எவ்வாறாயினும் சிங்களவர்களின் சாதி முறையானது, இன்றைய இந்திய சமூக அமைப்பைவிடப் புராதன இந்திய சமூக அமைப்பைப் பிரதிபலிக்கின்றது என்ற சிந்தனையைத் தூண்டக்கூடிய காரணங்கள் உள்ளன[6]. புத்தர் காலத்து வடமேற்கு இந்தியச் சமூக அமைப்புமுறை தொடர்பாக விக் மேற்கொண்ட ஆய்வில், புராதன காலத்தில் தொல்சீர் "நான்கு" சாதிகளின் இருப்பைப் பற்றிய ஆழமான சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. அத்துடன் மனுநீதியில் வெளிப்படுத்தப்படும் பிராமணக் கோட் பாட்டைவிட சிங்களச் சாதியம் சார்ந்த உண்மையான கட்டமைப்பை விபரிக்கக்கூடிய ஆதாரங் களை உறுதிப்படுத்துவதாகவும் அது உள்ளது[7]. விக்கினால் விபரிக்கப்படும் புராதன கூட்டுறவு போன்ற அகமண அலகுகளையும் இலங்கையிற் காணக்கூடியதாக இருந்தது. அவை மிகவும் திட்டமிடப்பட்டதாக இருந்தமை பற்றிய சான்றுகள் மிக அரிதாகவேயுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி எண்ணிக்கைகள் வளர்ச்சியடைந்ததாயினும் அது இந்தியாவைப்போல புனித முறைப் படுத்தப்பட்ட தன்மை கொண்டதாக இருக்கவில்லை. இதன் விளைவாகப் புராதன காலத்தின் மதம் சாராத அதிகாரப் படிநிலையை தக்கவைப்பதாக அது இருந்தது.

ஜாதகக் கதைகளிலுள்ளது போலவே மகாவம்சத்திலும் சமூகக் கட்டமைப்பானது பிராமணிய முன்மாதிரியின்படி அமைந்திருந்ததாகக் கூறப்படக்கூடிய சான்றுகள் மிகவும் சொற்பமாகவே உள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது. அதேநேரம் சமூக அமைப்பானது அதிகாரப் படிநிலையால் தரப்படுத்தப்பட்ட பிரிவுகளைக் கொண்டதாகவும், குறைவான வரையறைகள் கொண்டதாகவும் இருந்தது என்பதற்குப் போதியளவு சான்றுகள் உள்ளன. புராதன இந்தியாவிற் சாதிகள் இருந்தன என்பதை விக் நிராகரிப்பதில்லை. ஆயினும் முறையாக்கப் பட்ட சாதி விதிமுறைகள் சமூக ஒழுங்கினை ஊடுருவிச் சென்றுள்ளதாக அவர் குறிப்பிடுகிறார். சிங்கள நாகரிகத்தின் வரலாற்று ரீதியான அடித்தளம் இடப்பட்ட காலப் பிரிவிலேயே ஒரு படிப்படியாய் வளரும் ஒரு நிறுவனமாகச் சாதியம் அதன் தொடக்க நிலையில் அல்லது கோட்பாட்டு நிலையில் இருந்ததாகக் குறிப்பிடலாம். முதலாவது ஐரோப்பிய அவதானிப்பாளர்களால் பதியப்பட்ட இலங்கையின் சாதியானது, தரம் தாழ்ந்து போன வடிவமல்ல; மாறாகப் பிராமணிய கட்டமைப்புப்படுத்தலின் அதிகாரம்பற்றி ஒரு போதும் அறிந்திராத, ஆயினும் இந்திய செல்வாக்கிற்கு உட்பட்டதொன்று என்பதுதான் உண்மை. அரசன் அல்லது க்ஷத்திரியன் வரிசைப்படுத்தலின் மிகவும் உச்ச இடத்தில் இருக்கிறான் என்று தற்போதைய கிராமத்துச் சிங்களவர் வாதாடும்போது, அவன் புராதன அதிகார பூர்வத்துவத்தின் மீதான மரபைச் செவிமடுக்கிறான் என்றுதான் அர்த்தம். சிங்களவர்களுடைய சாதிக் கட்டமைப்பைப் புரிந்து கொள்வதற்குத் தேவையான மிக முக்கிய காரணியாகப் பலர் முன்வைக்கும் கருத்தானது சிங்களவர்கள் பௌத்தத்தைப் பாதுகாத்தார்கள் என்பது அல்ல: மாறாக சிங்களவர்கள் பிராமணியத்தைப் பாதுகாக்க வில்லை என்பதேயாகும். இலங்கையிற் பெயரளவில் பௌத்தம் இருந்தபோதிலும் பிராமணர்கள் பூசகர்களாகவும், அரச ஆலோசகர்களாகவும் இருந்தார்கள் என்பது விவாதத்திற்கு இடமற்றதொன்றாகும். ஆயினும், பிராமணர் ஓர் ஒருங்கிணைந்த சாதியாகப் புனிதமான புலத்தின்மீது, மதம் சாரா ஒழுங்கமைப்புப்படுத்தல் அதிகாரத்தைச் செலுத்து கின்றவர்களாக இருக்கவில்லை[8].

ஜாதகக் கதைகளால் பிரதிபலிக்கப்படும் காலப்பிரிவில் இலங்கைக்கு இந்திய சமூக அமைப்பின் அறிமுகப்படுத்தலானது, அதற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்பு இலங்கைக்கு வந்த இலங்கைத் தமிழர்கள்போல இல்லாமல், சிங்களவர்களின் சமூக அமைப்புப் பிராமணிய கோலவமைப்பின்படி படிகமயமாக்கப்படவில்லை என்பதைப் பொறுத்தமட்டில் மிக முக்கியமானது.[9] இதைப்போலவே கி. மு. முதலாம் நூற்றாண்டிற் சிங்களவர்கள், பௌத்தர்களாக மாறியமை ஆழமான முக்கியத்துவத்தைக்கொண்ட ஒரு விடயமாகும். பல புலமையாளர்களைப் பொறுத்தவரை பௌத்த சமுதாயத்திற்குள் சாதி எந்தொரு வடிவத்தில் தன்னுடைய இருத்தலைக் கொண்டிருந்தாலும் அது முரணணியாகும். அதேநேரம், பௌத்தம் சாதிக் கட்டமைப்புக்கு எதிரானதொன்றாக இருக்கவில்லை அல்லது இருந்திருக்கவில்லை என்று வாதிடப்பட்டாலும், அது சாதியின் இயற்கை கடந்த மற்றும் புனிதத் தன்மை கொண்டதுமான இசைவாணை களைக் கேள்விக்கிடமற்று பலவீனப்படுத்தியதுடன், அந்த இடத்தில் சுரண்டலைத் தூண்டுவிக்கின்ற தன்மை குறைவானதான பூசகர் என்ற நிலையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட இந்து மதகுரு சாதியைப் பகுதியாக மாற்றீடு செய்தது. சிங்களவர்களின் தொடக்க காலத்து மத மாற்றமானது, அவர்களின் முந்திய சமயத்தின் சரிநுட்பமான வடிவம் எதுவாக இருந்தாலும் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருந்த இந்து தெய்வத் தொகுதியில் இருந்து வேரோடு பிடுங்கி எடுப்பதாகவோ அல்லது அவர்களைத் தடுப்பதாகவோ இருக்கவில்லை. எவ்வாறாயினும் பௌத்தத்தின் செல்வாக்கினால் சிங்களவர்கள் பகுதியாக இந்து மதத்தின் அதிகாரத்தில் இருந்து நீக்கப்பட்டார்கள்.

எனவே, இலங்கையிற் சாதியம் தாபிக்கப்படுவதன் மீதான செல்வாக்கானது நேர்மறையான காரணிகளாக இல்லாமல் எதிர்மறையான காரணிகளாகவே அணுகப்பட்டது. மிகவும் எளிமையான சமூக அமைப்பைக்கொண்ட ஒரு காலப் பிரிவிற் சிங்கள தேசியத்தின் தோற்றம், அவர்கள் பௌத்தர்களாக மதமாற்றமடைந்தமை என்பன சாதியத்தின் வளர்ச்சியைக் காரணங்காட்டி விளக்கும் மூலக்கூறுகளாக இல்லை; மாறாக, அவை பிரா மணியத்திற்கும், இந்துத்துவத்திற்கும் வெளியில் இருத்தலைக் கொண்டிருந்த சாதி முறைமை யொன்றின் ஒரு வரலாற்று ரீதியான மீள் இணக்கப்பாடு ஆகும். சிங்கள சாதியம் கட்டி அமைக்கப்படுவதற்கான வடிவமைப்பைப் பௌத்தம் செய்தது என்பதை உறுதியாகக் கூறுவது கடினமானது. அதுபோலவே இந்தச் சாதி முறைமையை ஒரு புராதன பழங்குடி, கூட்டுக் குழு, கிராம சமுதாயத்தின் ஒரு தருக்கரீதியான விரிதல் என்று கருதுவது முன்னையதிலும் கடினமானது.[10]

மேற்கத்தேய படையெடுப்பாளர்களின் முன்னணியில் இருந்தோரின் அவதா னிப்பின்படி சமூகத்தின் தாபிக்கப்பட்ட முறைமையாகச் சாதிய எண்ணக்கருவைத் தொடக்குதல் மற்றும் மீள் நடுகை செய்தல் என்றவகையில் இரு தெளிவான வரலாற்றுப் படிமுறைகள் ஒருங்கிணைகின்றன. இந்தப் படிமுறைகளாவன ஒப்பீட்டளவில் ஒன்றிணைக்கப்பட்டதும், பண்பாடுரீதியாக ஒற்றைத்தன்மை கொண்டதுமான சமூகத்திற்குள் "சிங்கள" இலங்கையை உள்ளடக்கும் அரசியல்-பொருளாதாரக் கட்டமைப்பின் வளர்ச்சியும், மற்றும் சிங்கள உடல் அரசியலுக்குள் உள்வாங்கிக் கொள்ளப்பட்டதும், தன்வயப்படுத்தப் பட்டதுமான இந்திய ஆட்சியாளர்களினதும், பழங்குடிகளினதும் ஒன்று கலத்தலுமாகும். இந்தச் செயற்பாடுகள் சாதிகளை உற்பத்தி செய்தன என்பது மாத்திரமல்ல; பொதுவாக வடஇந்திய மாதிரியைவிட தென்னிந்திய அமைப்பினதாகத் தீவின் மக்களிடம் சாதி எண்ணக்கருக்களை உட்புகுத்தவும் பணியாற்றியது.

இலங்கையின் சமூக வரலாறு புராதனமான மற்றும் வியத்தகு ஐக்கியத் தொடர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது. நிலவிய அரசியல் ஒற்றுமை குறிப்பிடத்தக்க காலப் பிரிவுகளுக்குள் அரசவைகள் மற்றும் பிராந்திய ஆட்சியாளர்கள் தனிமைப்பட்டதன் காரணமாக இல்லாமற் போனமையானது எதிர்பார்க்கக் கூடியதொன்றாகும். எவ்வாறாயினும் ஒட்டுமொத்த வரலாற்றுப் பார்வையானது, தேசியரீதியில் ஒருமைத் தன்மையின் மீள்தோற்றக் காலங்களையும், சிங்கள மாகாணங்களுக்கு இடையிலான பண்பாடுரீதியான ஒருமைப் படுத்தல் நீடித்து நிலைத்திருத்தலையும் எடுத்துக் காட்டுகிறது. ஒரு பொது அரசாட்சியைக் கோட்பாட்டுரீதியாக ஏற்றுக் கொள்ளலின் வழியாகவும் நிலத்தின் உரிமைத்துவமும், அதிகாரத்தின் இறுதி முடிவும் அரசனிடம் நிலைபெற்றதாக இருந்த ஒரு நிலப்பிரபுத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை சட்டத்தின்மீது கிராமிய சமூகத்தை ஒழுங்கமைத்துக் கொள்ளலின் வழியாகவும் இந்த ஐக்கியம் சாத்தியமானது. இந்தக் கோலத்தின் நிறைவுத் தன்மைமீது பாதிப்பு ஏற்படுவதாக அரச விசுவாசிகளுக்கும், பிரபுக்களுக்குமிடையிற் பிராந்திய மட்டத்தில் ஏற்பட்ட பிளவுகள் போலவே இராணுவ ரீதியான தமிழர்களின் ஆக்கிரமிப்புகளின் விளைவுகளும் அமைந்தன ஆயினும் எந்த வேளையிலும் பண்பாடு ரீதியானதாக அரசியல் ரீதியானதாக முழு வளர்ச்சியுற்ற சுயாட்சிக் கொள்கைகளுக்குக் காரணமாக அமையவில்லை. மத்திய காலத்திற் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையிற் சுயாட்சி பழங்குடி அரசு அபிவிருத்தி அடைந்திருந்த வடக்குக் காடுகள் மற்றும் நிலபிரபுத்துவக் கட்டமைப்பு ஒருபோதும் முழுமையாக விருத்தியடைந்திராத குறிப்பிடத்தக்களவு அரசியற் சுயாட்சியைக் கொண்டிருந்த மிகச் சமீபகாலத்திற் குடியேற்றங்கள் நிகழ்ந்த தென்மேற்குப் பிரதேசங்கள் குறிப்பிடத்தக்க மிக முக்கியமான விதிவிலக்குகள் ஆகும். பொதுவாகக் கூறுவதாக இருந்தால் ஒன்றிணைக்கப்பட்ட நிலப்பிரபுத்துவ முறைமையின் மலர்வு தென்மேற்கு மற்றும் தெற்குக் கடற்கரைப் பிரதேசங்ளைக்கொண்ட கீழ்நாட்டில் நிகழவில்லை. மாறாக, தற்போது கண்டிப் பிரதேசங்களாக அறியப்படும் பிரதேசங்களிலேயே அது நிகழ்ந்தது. இந்த வியாபிக்கும் தன்மைகொண்ட நிலப்பிரபுத்துவ முறைமையானது, சார்புடையதாக ஒன்றிணைக்கப்பட்ட பண்பாடு மற்றும் சமூக முறைமையொன்றினைக் கொண்டுவந்தது மாத்திரமல்லாமல் சாதி அதிகாரப் படிநிலை செயற்படுவதற்கான ஒரு பிரதான நிறுவன ரீதியான வரைசட்டகமாகவும் அமைந்தது. சிங்கள சமூகம் நிலப்பிரபுத்துவ ரீதியாக கட்டமைக்கப்படுதலானது, தனித்து ஒதுங்கிய சமயஞ் சாராததாக இருக்கவில்லை. பௌத்தமும், விடாப்பிடித்தன்மை கொண்ட இந்து மதமும், குறைந்தபட்சம் மனித மற்றும் நில வளங்களின் ஓர் ஒத்த ஒழுங்கமைப்பிற்குள் உள்ளூர் மட்டத்திற் பின்பற்றப்படுவதாக அமைந்தன. அது மத்திய காலத்து ஐரோப்பாவில் மதஞ்சார் மற்றும் மதஞ்சாராத உடைமையுரிமைக்கும், கொத்தடிமைக்கும் சமாந்தரமாக இருந்தமையை நினைவுக்குக் கொண்டுவருகிறது. சமய அமைப்பு, அரசியல் என்ற இரு வகையான நிலப்பிரபுத்துவ சக்திகளின் வழியாகக் குடியான சிங்களவர்கள், வகிபாகத்தினாலும், செயற்பாட்டினாலும் உற்பத்தி செய்யப்படும் பிறப்புச் சார்ந்த அந்தஸ்து என்ற நிலைகொண்ட ஒருசேவை முறைமைக்குள் கொண்டு வரப்பட்டார்கள்.

சிங்களவர்கள் அனைவரும் தமது புராதன நாகரிகத்தை இலங்கையில் தாபித்துக் கொண்டவர்களான ஆரிய மொழி பேசுகின்ற மக்களின் நேரடி வழித்தோன்றல்கள் என்ற ஜனரஞ்சக ஐதீகம் தற்போதைய இலங்கையில் நிலவுகிறது. சிங்களவர்களுடைய தோற்றம் பற்றிய சான்றுகள் மிகவும் அரிதானதாக இருக்கும் காரணத்தால் இந்தப் பார்வை யானது வரலாற்று ரீதியானது என்பதைவிட தேசியவாதம் சார்ந்தது. கிறிஸ்தவத்திற்கு முந்திய காலகட்டத்து ஆக்கிரமிப்பாளர்கள் என்ற காரணத்தால் மாத்திரமல்லாமல், பழங்குடிக் குழுமங்களின் குடிப்பெயர்வு; தமிழர் மற்றும் ஏனையோரின் படையெடுப்புகளின் எச்சங்கள் என்றவகையிற் சிங்களவர்கள் உண்மையாகவே கலப்பாகிய மக்கள் ஆவர். இலங்கைத் தீவின் உட்புறத்திற் குடியிருக்கும் கண்டிய மக்களுக்கிடையில் கூட இடைக்கிடை பழங் குடிகளின் கலப்பு என்பது குறைவானதாக இருக்கவில்லை என்று நம்புவது நியாயமான தொன்றாகும்." இலங்கையின் கீழ்நாட்டில் தென்னிந்திய மூலங்களிலிருந்து வந்து மேற் கொள்ளப்பட்ட பெருமெடுப்பிலான பிந்திய குடியேற்றங்கள் பற்றிய பல்வேறுபட்ட கண் ணோட்டங்களைக் கொண்ட சான்றுகள் உள்ளன. நாட்டின் உட்புறத்திற்கும் கடற்கரைப் பிரதேசத்திற்கும் இடையில் தற்போது நிலவும் சாதி உருவாக்கங்கள் சார்ந்த வித்தியாசங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையோரப் பிரதேசம் மீதான பெரும் ஐரோப்பிய செல்வாக்குகளின் விளைவாக்கமாக வுள்ளது. கடற்கரைப் பிரதேசமானது ஒருபோதும் நிலப்பிரபுத்துவ மன்னராட்சி முறைமைக்குள் நெருங்கிய பிணைப்பைக் கொண்டதாக இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதேநேரம் சிங்கள சமூகத்திற் பழங்குடிகளைச் சாதிகளாக நேரடியான உள் வாங்குதல் கடந்த சில நூற்றாண்டுகளாக அங்கும் இடம்பெற்று வந்தது.

சிங்களச் சாதிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்தல் என்பதற்கு மேலாக தென்னிந்தியக் குடிபெயர்வுகள் முக்கியமானவை. வடஇந்தியாவிற் சாதி ஒழுங்கமைப்புத் தொடங்கிய காலப்பிரிவில் இந்தத் தீவை வந்தடைந்த புராதன சிங்களவர்கள்போல இல்லாமல், தென்னிந்தியர்களின் வருகையானது துணைக் கண்டத்தின் சாதி என்ற நிறுவனத்தினுடைய உயர்விருத்தி நிகழ்ந்து கொண்டிருந்த காலகட்டங்களிலே நிகழ்ந்தது. பழங்குடிகள் அல்லது சாதிக் குழுமங்கள் இலங்கையிற் குடியேறியமை என்பதற்கப்பாற் சிங்கள ஆட்சியாளர்கள் அவ்வப்போது தென்னிந்தியாவின் பொருத்தமான குடும்பங் களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டார்கள். அவர்களுடன் இந்துச் செல்வாக்குகள் வந்து சேர்ந்துகொண்டன என்பதுடன், தென்னிந்தியாவின் சாதி எண்ணக்கருக்கள் மீள வலுவூட்டப்பட்டுப் புராதன சிங்கள வீரகாவியங்களில் குறைவானதாகக் குறிப்பிடப்பட்டிருந்த சமூக ஒழுங்கமைப்பின் மூலக்கூறுகள் படிகமயமாக்கப்படுவதற்கும் காரணமாயின.

நிலப்பிரபுத்துவச் சேவைகளினதும், தொழில்களினதும் அடிப்படையிற் சாதி வேறுபாடுகளின் மூலங்களைப் பற்றிப் பொருள்விளக்கம் வழங்கும் ஜனரஞ்சகமான முனைப்பு இலங்கை முழுவதிலும் உள்ளது. எவ்வாறாயினும் குடிபெயர்ந்த குழுக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற பல சிங்கள சாதிகள் முன் நிர்ணயம் செய்யப்பட்ட அந்தஸ்து களைக் கொண்டிருந்தன என்பது அதிக நிகழ்தகவுள்ள ஒரு விடயமாகும். அதேநேரம் ஏனைய சாதிகள், சிங்கள சமூகத்திற்குள் நிலவிய உழைப்புப் பிரிவுகள் மற்றும் ஏனைய பிரிவைச் சார்ந்த செயற்பாடுகளின் வழியாகத் தோன்றியவையாக இருக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் அதிகம். எனவே, குறிப்பாகக் கரையோரச் சாதிகள், இந்தியாவை மூலமாகக் கொண்ட சாதி அல்லது பழங்குடி மூலங்களைக் கொண்டுள்ளவர்கள் என்பதுடன் முன்னைய சில தொழில் சார்ந்த வகிபாகங்களையும், பூர்வ அந்தஸ்துகளையும் விடாது வைத்திருத்த லுடன் அவர்கள் தனித்தனியாகக் கூட்டமாகச் சிங்களவர்களாக்கப்பட்டவர்கள். இதற்கான ஆதாரங்கள், பொதுவாகவே காலத்தின் மூடுபனியால் உற்பத்தி மூலங்கள் இழந்த நாட்டின் உள்ளகத்திலுள்ள சாதிகளைவிடக் கரையோரப் பிரதேசங்களில் தெளிவாகக் காணக் கூடியதாக உள்ளன. நாட்டின் உட்புறத்தில் அல்லது கண்டிப் பிரதேசத்தில் எந்த அடிப்படை யிற் சாதிகள் வேறுபடுத்தப்பட்டன என்பதுபற்றி ஒருவராலும் கூறமுடியாது. இருந்தாலும் ஒரு சாதியின் மிகவும் பொதுவான பதவி நிலையானது, பாரம்பரிய நிலப் பிரபுத்துவ வகிபாகத்தால் வேறுபடுத்திக் காட்டப்படுகிறது. இந்த அர்த்தத்திற் பார்க்கும்போது பிந்திய தென்னிந்திய மூலத்தைக் கொண்டவர்களும் உள்ளடங்கலாக பல சாதிகள் அவற்றின் அடிப்படை வேறுபடுத்தும் பண்பாகச் சேவை வகிபாகத்தினை அல்லது தொழில் சார்ந்த வகிபாகத்தினை உரிமை கோருகின்றன. ரய்சிலியின் தொடக்க காலத்து வகைப்படுத்தல் முயற்சிகளின் அர்த்தத்திற் கூறுவதாக இருந்தால்; பெரும்பாலான சிங்கள சாதிகள் "செயற்பாட்டு வகை" சார்நதவர்கள் என்று எம்மாற் கூறமுடியும்.[12] ஒப்பற்ற சடங்கு ரீதியானதும் அல்லது செயற்பாட்டு வகை சார்ந்ததும் அல்லது இந்த இரண்டையும் கொண்டதுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைகளாலும், தொழில்களாலும் வேறுபாடு கண்டறியக் கூடியவர்களாகப் பல சிங்களக் குழுக்கள் உள்ளன என்பது ஏனைய வேறுபாடுகளுக்குள் எமக்குத் தெரியும் விடயமாக உள்ளது. ஆயினும் அவை தனியானதாக இவற்றால் வேறுபடுத்தக் கூடியவை அல்ல. எவ்வாறாயினும் வகிபாகத்தின் இயல்பிற்கு அந்தஸ்தை பண்பாக்குவதற்கு மேல் வகி பாகத்திற்கு அந்தஸ்தைப் பண்பாக்குவதற்கு ஒரு வரலாற்று ரீதியான அடித்தளம் கிடையாது.

குறிப்பிட்ட சாதிகளின் அந்தஸ்துகளைப் பாவம் மற்றும் புண்ணியம் என்பனவற்றின் அர்த்தத்தில் விளக்கப்படுத்துவதற்குப் பல சிங்களப் புராணக் கதைகள் முயற்சிக்கின்றன. அவ்வாறானதொரு விளக்கப்படுத்தலான *ஜனவம்ஸ* (42 நூலில்) "கருணையற்று உயிரை வாங்குபவர்கள்" என்ற பாவச்செயலால் மீனவர்களுக்கு ஒரு தாழ்ந்த நிலையை வழங்குகிறது. இந்த நியாயப்படுத்தலானது ஒப்பீட்டளவில் தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்குப் பிந்தியதாக வந்த பழங்குடியைச் சார்ந்தவர்களுக்குப் பிரயோகிக்கப்படுவதனால் பகுத்தறி வாக்கப்படுதலை வெளிப்படுத்துகின்றது. *ஜனவம்ஸத்தின்* ஒரு பிரதான கடப்பாடு இம்சைக்கு எதிரான பௌத்த தடையுத்தரவை அல்லது அதிகார ஆணையைப் பரப்புதல் ஆகும். எனவே, இன்னும் சிலருடன் மிகவும் உயர்சாதி மீனவர்களும் *ஜனவம்ஸ* ஆசிரியரின் படிப்பினையினுள் பொருந்தும்படி செய்யப்பட்டுள்ளனர். மறுபுறத்தில் உயிரை வாங்க தூண்டுதல் என்ற வகையில் மிகவும் குறைந்த அளவில் தொடர்புடையவர்களாக விவசாயிகள் இருப்பதால் அவர்களுக்கு மிகவும் உயர்ந்த அந்தஸ்தை வழங்க உரிமை கோருவதையும் சில நேரம் காணலாம். (இந்த நியாயப்படுத்தலின்படி பிச்சைக்காரர்கள், குயவர்கள் மற்றும் வண்ணார்கள் என்பவரின் நிலைகள் இன்னும் மேல் நிற்கின்றன என்பது தெளிவு.) சில குறிப்பிட்ட சாதிகள் மிகவும் பரந்துபட்டு கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக்கொண்டன என்பதைத் தவிர; சமய நடைமுறைகளிலோ அல்லது நிறுவனங்களிலோ சாதி அடிப்படையில் வேறுபடுத்தி அடையாளங்காணுதல் இருந்தமைக்கோ அல்லது சிங்களவர்களுக்குள் அந்தஸ்து நிர்ணயத்தலின்போது ஒரு காரணியாகச் சமய ரீதியான தீட்டு இருந்தமைக்கோ சான்றுகள் இல்லை. சமயம் சார்ந்த சடங்கு ஆற்றுகையும், சடங்கு சார்ந்த வகிபாகங்களும் சாதியின் செயற்பாடுகளாகத்தான் இருந்தன என்பது பற்றி சந்தேகம் கிடையாது. அதேநேரம் பாரம்பரிய சமூகத்தைப் போலவே சமகாலத்து சமூகத்திலும் சாதி மற்றும் துணைச் சாதிப் பெயர்களிற் சமயஞ்சாராத சேவைக் கடப்பாடுகளும் தெளிவானதாக உள்ளன. ஆயினும் அவை கோயில் பணியாளருக்கும், சமய குருவிற்கும் இடையில் நிலவியவை போன்ற வித்தியாசங்களே தவிர மிகவும் ஆழமான பண்பாட்டு வித்தியாசங்கள் அல்ல. சிங்கள மக்களின் பெரும்பாலான குழுக்கள் இந்திய வகிபாகத்தினையும், அந்தஸ்து வரைவிலக்கணங்களையும் பொதுவாக ஏற்றுக் கொண்டார்கள் என்பதற்கும் அவற்றைப் புதிய அதிகார சமநிலைக்கும், புதிய சமய முறைமைகள், அரசியல் மற்றும் பொருளாதார முறைமைகளுக்கும் தகுந்தவாறு மாற்றியமைத்துப் புதுப்பித்துக் கொண்டுள்ளமைக்குமான நிகழ்தகவுகள் உள்ளன. அந்த வகையில் "பெறவா" எனப்படும் முரசறைவோர் சாதியானது அந்தச் சாதியின் குறிப்பான மூலம் எதுவாக இருந்தாலும், அது இந்துப் பறையனின் தாழ்த்தப்பட்ட அந்தஸ்திற் சிலவற்றைத் தக்க வைத்துள்ளது. மேலும் இதன் பெயர் பறையர் என்பதுடன் திரிபுபட்ட நிலையிற் பகிர்ந்து கொள்ளப்பட்டாலும் பௌத்த ஆலயத்தின் ஒரு செயற்பாட்டாளர்களாக அவர்கள் உருவாகினர். யார்தான் இந்த வகிபாகத்தை நிறைவேற்றியவர் என ஒருவராலும் கூறமுடியாது; அது நிறைவேறியமை தெளிவானது. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது அந்தஸ்தினை இந்தியாவுடன் சம்பந்தப்படுத்தலினூடாகப் பெற்றுக் கொண்டமைக்கான சாத்தியப்பாடுகள் உண்டு. விவசாய சேவையின் வகை மற்றும் கொத்தடிமை மட்டத்தைச் சார்ந்து ஆதிக்க சாதிக்குள் துணைச் சாதித் தரப்படுத்தல்கள் நிகழ்ந்தன. அவ்வாறான வித்தியாசப்படுத்தல்கள் ஊகம் சார்ந்த விடயமாகும். பொருளாதார மற்றும் அரசியல் அதிகாரம் சார்ந்த வித்தியாசங்களால் ஒரு தனிக் குழுவாக வித்தியாசப்படுகின்றதைவிட, மேலான சாதிகள் ஒரு தனி இணைப்பாகிய சாதியாக மாறியது என்பதை ஏற்றுக் கொள்ளக் கூடிய தன்மை மிகவும் குறைவாகும். கத்தர எனப்படும் கண்டிய ஒரு துணைச் சாதியை எடுத்துக்கொண்டால், அவர்கள் அரசன் கட்டளையாற் உருவாகிய குறிப்பிட்ட உயர்சாதி என்பதால் கிராமத்தின் ஏனைய அங்கத்தவர்களில் இருந்து பிரிக்கப்பட்டார்கள் என்பதற்கான பெறுமதியான வரலாற்று அடித்தளம் உள்ளது.

சில சிங்கள சாதிகள் அல்லது துணைச் சாதிகள் அவர்களின் பிரதான கூட்டத்தில் இருந்து தனிமைபடுத்தலின் அல்லது குடிபெயர்தலின் வழியாக உற்பத்தியாகியவையாகும். பிராந்திய ரீதியாக ஒரு சாதியின் பெயரிடுமுறை மாறும் பல சந்தர்ப்பங்கள் உள்ளன ஆயினும், வியப்படையச் செய்யத்தக்க முறையில் ஒரே மாதிரியான அடையாளப் பெயர்களையும், மரபுகளையும்கொண்ட பல சாதிகள் இலங்கைத் தீவு முழுவதிலும் காணப் படுகின்றன. ஓரிரு சந்தர்ப்பங்களில் தூரப்பட்ட சாதிகள் தங்களுடைய உற்பத்திபற்றிய ஒத்த கதைகளையும், அந்தஸ்து நிலைகளையும் பராமரித்துக்கொண்டுவரும் அதேவேளை, ஒத்த தன்மையற்ற பெயர்களைக் கொண்டவர்களாகவும் ஒன்றுடன் மற்றது தனிமைப்பட்டு விலகி இருப்ப தாகவும் காணப்படுகின்றன. இதன்போது உற்பத்திப் பிளவுகளுக்கான சாத்தியப்பாடுகள் கவனம் எடுக்கப்பட வேண்டியவைதான் என்றாலும், அவ்வாறான சந்தர்ப்பங்கள் அரிதானவை. இலங்கையிற் சிங்களவர்களின் சாதிகளுக்கிடையில் புறமணத் தடையுடைய பிரிவுகள் குறிப்பிடும்படியாகக் குறைவானதாக இருப்பதாலும், ஒட்டுமொத்தமாக இருபதுக்கும் இருபத்தைந்திற்கும் மேற்படாத எண்ணிக்கை கொண்ட குழுக்கள் மட்டுமே சாதி அந்தஸ்து களைக் கோருவதாக இருப்பதாலும், எந்தவொரு தோற்றுவாயில் இருந்தும் பெரும் பல்கிப் பெருகுதல் இடம்பெறவில்லை என்பது கண்கூடு. எனவே, மிகவும் ஏற்றுக் கொள்ளத் தக்க கருதுகோள் யாதெனில், சிங்கள சமூகச் சூழலென்பது பழங்குடி, சாதி அல்லது ஒருவேளை துணைச் சாதிகளின் பலப்படுத்துகையாகும். இது உற்பத்திப் பிளவு என்பதைவிடப் பிரிப்பு ஆகும். இன்று சில துணைச் சாதிகளும், ஏன் சில சாதிகளும் இருப்புச் செய்யவில்லை என ஆரம்ப கால ஐரோப்பிய அவதானிகளிற் பலர் குறிப்பிட்டுள்ளது உண்மையாகும். அகமண நடைமுறையை மீறியதன் காரணமாகப் பிறந்ததாகக் கூறப்படும் ஜனரஞ்சகமான பாரம்பரியத்துடன் இணைந்த, ஒடுக்கப்பட்ட சாதியான றொடீ என்ற ஒரேயொரு சாதி மட்டுமே இந்திய முறைமையுடன் முரண்படுவது தெளிவான உண்மையாகும். சாதிப் பிரிவுகளின் பல்கிப் பிரிந்து பெருகுகின்ற உற்பத்தி சார்ந்ததான பிராமணியக் கோட்பாடானது இலங்கையைப் பொறுத்தவரை பரம்பரைக் கதையாகவோ அல்லது உண்மையுடைய ஒன்றாகவோ முக்கியத்துவம் அற்றது.

இங்கு சாதியம் என்பது அடிமைத்தனத்தில் இருந்தோ அல்லது சிறைப்பிடிப்பில் இருந்தோ தோன்றவில்லை என்பது தெளிவானது. நாட்டிற்குள் வந்த சிங்கள மக்கள் அடிநிலை மக்களைச் சந்தித்தார்கள். அவர்களைச் சுரண்டினார்கள். எனினும், அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சாதி, குழு என்றவகையில் கீழ்நிலைப்படுத்தவில்லை.[13] ஆதிவாசிகளில் ஒரு பகுதியினர் சிங்கள மக்களுடன் கலப்பாகியதுடன், இன்னொரு பகுதியினர் தூரத்துக் காடுகளுக்குப் பின்வாங்கித் தங்களுடைய ஆதிநிலை வாழ்க்கையையும் பண்பாட்டையும் நாகரிகம் அடைந்துகொண்டிருந்த படையெடுப்பாளர்களிடமிருந்து காப்பாற்றிக் கொண்டனர். பெரும்பாலான சிங்களப் பாரம்பரியங்களில் ஆதிவாசிகளான வேடர்களின் வழி வந்தோர்கள், உயர்சாதியின் ஒரு துணைக் குழுவாகவே பார்க்கப்படுகிறார்கள். புராதன இலங்கையிலும் காலனித்துவ காலப்பிரிவின் பெரும்பகுதியிலும் அடிமைத்தனம் நிலவியது என்பதற்குத் தாராளமான சான்றுகள் இருந்தாலும், இந்திய அடிமைகளை அறிமுகப்படுத்தியமையைத் தவிர அடிமைத்தனம் என்பது ஒரு கீழ்நிலைப்படுத்தலால் உருவாகியதொன்றாக இருக்கவில்லை. மேலும், இது சாதிக்கு ஒரு உடனிகழ்ச்சியான நிறுவனமாகும். கண்டிய சட்டத்தின்படி, அடிமைகளின் சாதி உரிமைகள் பாதுகாக்கப்பட்டதாகவே இருந்தன. அவர்கள் பெயரளவிலானதொரு கண்டி அடிமைத் துணைச்சாதியை விருத்திசெய்து கொண்டனர் என்றாலும்கூட; தீவின் சமூகத்திற்குள் அவர்களுடைய அந்தஸ்தானது முற்றிலும் உயர்நிலையில் இருந்தது.[14]

ஒப்பற்ற சிங்களப் பின்னணியில் அவதானிக்கும்போது சாதிக் கட்டமைப்போ அல்லது சாதி முறைமையோ இந்தியத் துணைக் கண்டத்தின் அல்லது அதன் ஏதாவதொரு பிராந்தியத் தின் நேர்பெயர்ப்பாக விருத்தியடையவில்லை என்பது வியப்பிற்குரியதொன்றல்ல. பல்வேறுபட்ட பழங்குடி மூலாம்சங்களைத் தன்வயப்படுத்திக் கொண்ட நிலப்பிரபுத்துவத் தாலும் பௌத்த சமயத்தாலும் சிங்களச் சாதியம் வரையறுக்கப்பட்டது.

சிங்களச் சாதிகள் பழங்குடிகளுடன் மிகவும் அரிதாகவே தவறாகப் புரிந்துகொள்ளும் படியாக உள்ளமையானது இந்தியாவுடன் பார்க்கும்போது முரணானதாகும். இப்பேற்பட்ட கருத்துருவ ரீதியான மேற் கவிகைப்பாட்டினைத் தமிழ் மக்கள் முழுமையாகவே சிங்கள தேசத்திற்குள் உள்வாங்கப்படாத சில பிரதேசங்களில் மட்டுமே காணமுடியும். இன்றைய நாட்களில் கூட இந்த மக்களைத் தமிழர்களாக வகைப்படுத்தக்கூடியதாக இருக்கும். அதேயளவுக்கு அவர்கள் சிங்களவர்களாகவும் பார்க்கக்கூடியவர்களாக உள்ளார்கள்.[15] சாதிகளின் வரலாற்று ரீதியான அடித்தளங்கள் பெரும்பாலும் பழங்குடி சார்ந்ததாக இருந்திருக்கலாம். ஆயினும் இன்றைய நாட்களில் இந்தியாவைப் போல பழங்குடிக்கும் சாதிக்கும் இடையில் பெரும் எல்லைப் பிரதேசம் காணப்படவில்லை. அந்தந்தப் பிராந்தியங்களுக்கிடையில் சாதி ஒழுங்கு கட்டமைப்பைச் சார்ந்த வித்தியாசங்கள் இருந்தாலும் கூடப் பழங்குடி ரீதியான ஒதுக்கப்பாடு என்பது எப்பவோ முடிந்துவிட்ட தொன்றாகும். இலங்கையின் கீழ் நாட்டில் மிகவும் பிந்திய நிகழ்வாகவுள்ள இப்பேற்பட்ட அமைப்பின் இருப்பு என்பதுகூடப் பதினேழாம் மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டுகளைச் சார்ந்த அவதானிப்பாளர்களின் விபரிப்புகளில் திறந்த ஊகங்களாகவே காணப்படுகிறது. அதாவது (தற்போதைய சமூக விஞ்ஞானத்தின்படி இல்லாமல்) "வகுப்பு" "பழங்குடி" மற்றும் "சாதி" என்பன குறைந்த சுட்டிப்பான நிலையிலே வித்தியாசப்படுத்தப்படுகின்றன.

இந்தியாவில் உபசாதி என்பது சமுதாய வாழ்க்கையில் வலுவான அலகு என்ற நிலையிலும் புறமண உறவுக்கு அல்லது ஏனைய சிறிய அலகுகளுக்குப் புறமணத் தடையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையாகவும் உள்ளது. இலங்கையில் சாதிக்குள் குடும்ப நிலைமை என்பது ஒரு முக்கியமான காரணியாக இருந்தாலும்கூட இந்தியாவில் நிலவுவதுபோல துணைச் சாதி அல்லது சாதிக்குள் சாதியின் விருத்தியோ அல்லது தக்க வைத்தலோ இலங்கையில் இல்லை. முறையான துணைச் சாதி பிரிவுகளின் பிரதான வெளிப்பாடானது கண்டி உயர்சாதி சார்ந்தவர்களுக்கிடையிலே தோன்றியமையைக் காணலாம். அவர்களுக்கிடையிலான வகிபாக வேற்றுமைகள் பிரதானமாகவே அரசனுக்கு அல்லது பௌத்த ஆலயத்திற்கு வழங்கும் சேவையை அடித்தளமாகக் கொண்டிருந்தன. மற்றும்படி பொதுவாக இந்தியாவில் காணக்கூடியதைப்போன்ற இடத்தைச் சார்ந்த அல்லது குழு நிலையாக்குதல் சார்ந்த அடித்தளங்கள் எதுவும் இருக்கவில்லை.

சாதிக்குள் அந்தஸ்து தர நிர்ணயப்படுத்தலானது சாதியின் முறையாகப் பதவி பெயரிடப்பட்ட ஒரு பகுதியின் அங்கத்துவம் என்பதைச் சார்ந்ததாக இல்லாமற் பொதுவாக குடும்பப் பெயரின் "நல்லநிலை" மற்றும் காரியப்பேறு என்பனவற்றினாலே மேற் கொள்ளப்பட்டது. சாதிக்குள் சமீபநிலையினை பெற்றுள்ள சாதிகளைக்கொண்ட சாதிக்குள் வரிசை நிலைப்படுத்தல் சார்ந்த சில வரலாற்று ரீதியானதும் சமகாலத்தைச் சார்ந்ததுமான சான்றுகள் இருந்தாலும்கூடக் கண்டியில் சில பிரதேசங்களைத் தவிர இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் இந்தியக் கண்டத்தில் குறிப்பானதாகக் காணக்கூடியது போன்ற சிக்கலா னதும் மாறக்கூடிய முறையாக்கப்பட்டதுமான உட்சாதிப் பிரிவுகளைக் காணமுடியவில்லை. மிகவும் வளர்ச்சியடைந்த துணைச்சாதி அலகுகளோ, பழங்குடி அலகுகளோ அல்லது உறவினர் அலகுகளோ இல்லாததன் காரணத்தால் சாதி அமைப்பானது, எந்தவொரு முறையான அர்த்தத்திலும் குறைவான முக்கியத்துவமே பெறுகின்றது என்பது புரிந்து கொள்ளத்தக்கது. நேரடியாகவே தமிழர்களின் கடும் செல்வாக்குக்கு உட்பட்ட தனிமைப்பட்ட பிரதேசங்களுக்கு வெளிப்புறத்தில் சாதி அல்லது மிகவும் சுட்டிப்பாக சாதிப் பஞ்சாயத்து இருந்தமைக்குச் சான்றுகள் இல்லை. நவீனகாலம் வரை சில சாதிகள் தங்களுடைய பிரதானியைக் கொண்டிருந்தாலும் தற்போது அது கிட்டத்தட்ட மறைந்து போயுள்ளது. பல சந்தர்ப்பங்களில் அது ஐரோப்பிய ஏற்பாட்டாளர்களினால் உற்பத்தி செய்யப்பட்டு வந்துள்ளது. உருவமற்ற சாதி உறவினர்களின் உள்ளூர் அங்கத்தவர்கள் ஒரு வலுவான கட்டுப்பாட்டுக் குழுவை அமைத்துக் கொள்கிறார்கள். பஞ்சாயத்திற்குச் சமீப நிலையைக் கொண்டதொன்றினை வைத்துக் கொண்டுள்ள வட மத்தியக் காடுகளுக்கு வெளிப்புறத்தில் ஒரு கூட்டுறவு அமைப்போ அல்லது பழங்குடி அல்லது சாதி அரசாங்கமோ என்று கூறக்கூடிய அல்லது அதற்கு நெருங்கியதான ஒன்றோ நிலவியமைக்கு இன்று சான்றுகள் இல்லை. நவீன காலத்தில் ஐரோப்பிய சுரண்டல்காரர்களால் தூண்டப்பட்ட அல்லது நிலைபேறுடைய தாக்கப்பட்ட பிரதேசங்களைத்தவிர ஏனைய பிரதேசங்களில் சாதி குரலோ அல்லது பெரும்பாலானோர்களுக்கான சாதிய சமாச்சாரங்களுக்கான உபகரணங்களோ கிடையாது. சிங்கள அரசர்களின்கீழ் சேவை சாதிகள் உயர்சாதி பணியாளர்களின்கீழ் பொருளாதார ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்டார்கள். இது சாதி என்பதைவிடக் கண்டிப்பாக அதிகார ஆட்சி அல்லது பண்ணைசார் தோற்றப்பாடு ஆகும். மேலதிகமாக சாதி பிரதானிகள் நியமிக்கப் பட்டார்கள் என்றாலும் இது தொடர்பாக எமது அறிவானது தெளிவற்றது.[6] சாதியானது முறையான அமைப்பின் ஒரு அலகாக அரிதாகவே இருக்கிறது என்றாலும் அது பொதுவாக சமுதாய வாழ்க்கையின் எல்லைக்கோடாக உள்ளது.

சிங்களவர்களின் உள்வாங்கும் ஆற்றல்களில் இருந்து. அனுமானிக்கும்போது சாதிகளுக்கு இடையிலான பண்பாடு ரீதியான வித்தியாசங்கள் என்பது தற்போது ஒப்பீட்டள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் முக்கியமற்றவை அல்லது தொடக்க ஐரோப்பிய அவதானிப்பாளர்கள்கூட மிகவும் கடுமையான முரண்பாடுகளைச் சுட்டிக் காட்டவில்லை. சாதியுடன் இணைந்த திறமைகளும் தனிச் சிறப்புரிமைகளும் அதேபோல அந்தஸ்தின் குறியீடு ரீதியான வெளிப்பாடுகளும் ஏனைய சில சிறப்பியல்புகளைப் போலவே பிரகடனப்படுத்தப்பட்டதாகவே இருந்தன. ஆயினும் எந்தவொரு இந்தியப் பிராந்தியத்திலும் காணக்கூடியதாக இருந்த, எடுத்துக் காட்டப்பட்ட அடிப் படையான பல்வகைப்பாடு சமீபகாலத்து இலங்கையில் காணக்கூடியதாக இல்லை. குடும்பம் சார்ந்ததொரு அடித்தளத்தைக் கொண்ட உட்புற அமைப்பு முறைமையொன்றின் எச்சமாக உள்ளதுமானதும், பண்பாடு ரீதியாக மிக முக்கியமானதாக வித்தியாசப்படுகின்றதாகவும் உள்ள மிகவும் சிறிய, கீழ்நிலை சாதியொன்று மட்டுமே இன்று உள்ளது. தென்னிந்தியாவில் காணப்படும் "வலங்கை" மற்றும் "இடங்கை" என்று அறியப்படுகின்ற சாதிகளுக்கு இடையிலான அமைப்பு பிணைப்புக்களைக் கொண்ட சாதிகள் இங்கு சுத்தமாகவே இல்லை. ஏறக்குறைய சம அந்தஸ்தைக் கொண்டவர்களைக் குறிக்க சில கீழ்நிலை சாதிகள் உறவு முறை சொற்களைப் பயன்படுத்திக் கொண்டாலும் கூட சடங்கு ரீதியானதாகவோ, முரண்பாடு ரீதியானதாகவோ அல்லது வேறு நோக்கங்களுக்காகவோ சாதிகளுக்கிடையான இணைத்துக் கொள்ளல்களை அது சுட்டிக் காட்டுவதாக இல்லை. உயர்நிலை சாதிக்கு எதிர்நிலையான தாக கீழ்நிலை சாதிகள் தங்களைப் பார்க்கும் எந்தவொரு போக்கும் சந்தேகமின்றி மிகவும் நவீன பண்பாகத்தான் உள்ளது. அதேநேரம் அது அந்தஸ்துகளைக் கடக்கும் தென்னிந்தியப் பிரிவிற்கு முழுமையாகவே சமாந்தரமற்று நிகழும் சமகாலத்து நிலைமாற்றத்தின் ஒரு பகுதியாகும்.[17] இந்து அர்த்தத்தின்படி "தீண்டத்தகாதவர்கள்" இல்லாமையானது இந்திய முறை மையுடன் முரண்படும் சிங்கள படிநிலையில் காணப்படும் மிக முக்கியமான பண்பாகும். பௌத்த சமயத்துப் புனித கருத்தாக்கத்தின்படி எந்த மனிதனும் "அசுத்தமானவன்" அல்ல. தாழ்த்தப்பட்ட, தீண்டத்தகாத குழுவொன்று இருந்தாலும் அந்தத் தீண்டாமையானது சமய ரீதியான தடையுத்தரவு அல்லது விலத்தி வைப்பு என்பதைவிட சமயஞ்சார தடைவிதிப்பின் விளைவாகும். இந்திய தர நிர்ணயங்களின் பிரகாரம் தீர்ப்பு வழங்கும்போது, இந்து எண்ணக் கருவின் இல்லாமை என்பது சிங்கள சாதி முறைமையைத் தாக்கம் குறைந்த மனித இன நலப் பற்றுடையதாக உருவாக்கியுள்ளது என்று குறிப்பிடலாம்.

சிங்கள சாதியமானது கோட்பாடு ரீதியான பிரமாணிய ஒழுங்கின்படி பார்க்கும்போது மிகவும் குறைவாகவே கட்டமைப்பு ரீதியான பொதுத்தன்மையைக் கொண்டுள்ளது என்பது தெளிவாக உள்ளது. இந்திய சாதியை ஒத்திருத்தல் என்பது அந்தக் கட்டமைப்புக்கு நெருங்கியதாக இல்லை. குறிப்பாகத் தென்னிந்தியாவுடன் அது மிகவும் சிறிய அளவிலே பொருந்துகின்றதொன்றாகும்.[18] கட்டமைப்பு ரீதியாகப் பார்க்கும்போது சிங்கள சாதி முறைமையானது தென்னிந்திய முறைமையுடன் நெருங்கியதாகவே உள்ளது. அதேநேரம் சில தென்னிந்திய சாதிகளை மறு உற்பத்தி செய்கிறது. இது இந்தியாவில் அந்த சாதிகளின் அந்தஸ்துகளை மிகவும் மேலோட்டமாக ஒத்துப்போகும் அதேவேளை, அதன் உண்மையான "வெளிப்புற" சாதிகளையோ, பழங்குடிகளையோ, சாதிகளின் இருமை அமைப்புக்களையோ கொண்டிருக்கவில்லை. இலங்கையைப் போலவே தென்னிந்தியாவிலும் சூத்திரர் என்று அழைக்கப்படும் சாதியைச் சார்ந்தவர்கள் உயர் எண்ணிக்கையிலும் உயர் அந்தஸ்திலும் காணப்படுகின்றனர். தென்னிந்தியக் கட்டமைப்பை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் சிங்கள வர்களுக்குள்கூட உயர்சாதியைச் சார்ந்தவர்கள்தான் எண்ணிக்கையிலும் அதிகளவில் உள்ளார்கள் என்பது வியப்பிற்குரியதாக அமையாது. இந்தக் கட்டமைப்பு சார்ந்த ஒற்றைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மைகள் அல்லது இன்னமும் சரியாகக் கூறுவதாக இருந்தால் தென்னிந்தியாவில் இருந்து பெற்ற இரவல்களும், மீளபதிவைப்புகளும் சாதிக் கட்டமைப்பிலும் சமூகக் கட்டுக்களிலும் ஒப்பீட்டு ரீதியில் இறுக்கத் தன்மையைப் பிரதிபலிக்கவில்லை. சிங்களச் சமூகக் கட்டுக்களில் காணப்படும் மிகவும் மிதமான தன்மையானது பல சமகாலத்து இலங்கையர்கள் பலர் சாதிய முறைமையானது சிறு துண்டுகளாக நெருங்கிக் கொண்டுள்ளதொன்றாகவும், பிரயோக ரீதியில் இன்றைய நாட்களில் சிறிதளவு முக்கியத்துவமே பெறுகின்றது என்றும் நோக்க, அணுக வழிவகுத்துள்ளது. எவ்வாறாயினும் இந்து சமூக அமைப்பின் மிகவும் உணர்ச்சி பூர்வமான பகுதிகளான பாகுபாடுகள், சமூக விலக்கல்பாடுகள், தடையுத்தரவுகள், பண்பாடு வித்தியாசங்கள் என்பனவற்றினைப் பற்றி சிங்களவர்கள் அறிந்திருந்தார்களா என்பது சந்தேகத்திற்குரியது.

சிங்களச் சாதி முறைமையானது இந்தியத் தொனிப்பொருளின்படி பார்க்கும்போது தனித்துவமான வேறுபாடானதொன்றாக இருப்பின் அதன் கருத்தாக்கத்திலும், கட்டமைப் பிலும் மற்றும் செயற்பாட்டிலும் உள்ள முக்கியமான பண்புகள் தான் எவை? இது உண்மையாகவே சாதியா? அல்லது அமெரிக்க இன உறவுகள் பற்றி ஆய்வுசெய்யும் மாணவர்களைக் கவரும் நெகிழ்ச்சியான, ஒப்புமை முறையில் பிரயோகிக்கப்படும் எண்ணக்கருவா? இந்தக் கேள்விக்கான விடையானது இலங்கையில் காணப்படும் சாதியத்தின் அடிப்படையான முறைமை எது மற்றும் "சாதி" என்பது பற்றி ஒருவர் என்ன எண்ணக்கருவைக் கொண்டுள்ளார் என்பதில் தங்கியுள்ளது. இந்துமதத்திற்கும் பிராமணியத்திற்கும் வெளியில் இந்திய எண்ணக்கருவின் அர்த்தத்தில் சாதியைக் கண்டுபிடிக்க முடியும் என்பது பற்றி சந்தேகங்கொண்ட சில புலமையாளர்களின் போக்கைச் சார்ந்த பார்வையுடன் இந்தப் பிரச்சினைகள் விசேடமாகப் பொருந்துகின்றன.[19]

இலங்கையின் சமூக அமைப்பின்மீது சாதி எண்ணக் கருவைப் பிரயோகித்தலானது புறமணத் தடையால் ஆதரவு வழங்கப்படும் பிறப்பைச் சார்ந்த அந்தஸ்துகளின் அடித்தளத்தின் மீது "மூடிய வர்க்கங்கள்" மற்றும் சலுகைகளின் பிற வெளித்தோன்றல்கள், இனங்களுக்கிடையான பிரிப்புகள் என்பனவற்றின் தோற்றப்பாடுகளை உள்ளடக்கும் எந்தவொரு வடிகட்டப்பட்ட வரைவிலக்கணங்களிலும் தங்கியிருக்கவில்லை. இந்தச் சமூகத் தொடர்புகளின் முறைமைகளின் சிலவற்றினைச் சமூகத்தின் ஒழுங்கமைப்பிலிருந்து, கிழக்கிந்தியாவை அடிப்படையாகக் கொண்டு வேறு பிரித்துக் காட்டியதினூடு கொக்ஸ் அளப்பரிய சேவை ஆற்றியுள்ளார்.[20] எளிமையானதன்மை அதன் ஒட்டுமொத்தத் தொடர்ச்சி மற்றும் கண்டத்தில் ஒன்றிணைப்பான ஆதரவு தருகின்ற நிறுவனங்களில் இருந்து வெளியில் அதன் வளர்ச்சி என்ற காரணங்களால் சிங்கள சாதி முறைமையானது இந்திய கோலவமைப்பினுள் சுவாரசியமான மாறல் ஒன்றினை வழங்குகின்றது.

சாதியம் தொடர்பாக அல்லது ஒரு சாதியைச் சார்ந்ததான திருப்திகரமான பொருள் விளக்கம் இல்லாமைக்குக் காரணம் இந்து–இந்திய வட்டகைக்குள் உள்ள சமூக அமைப்பு முறைமைகளின் உண்மையான வகை பற்றிய கருத்துடன் தொடர்புபட்டது. எந்தவொரு சரிநுட்பமான பொருள் விளக்கமும் இந்தியக் கட்டமைப்பின் சில வெளித் தோன்றல்களை உறுதிப்படுத்துவதில் தவிர்க்க முடியாதவாறு தோல்வியடைகின்றன. அதேநேரம் குணாம்சங்கள் குறிப்பான சந்தர்ப்பங்களில் காணமுடியாதிருப்பதும் இத்துடன் தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. பிராமணியக் கோட்பாட்டின் மேலோட்டமாக மறை புள்ளியில் இருந்து உண்மையைப் புரிந்துகொள்ளல் என்பது பயனற்ற போக்காக உள்ளது என்பது தெளிவு. பொருள் விளக்கம் தருவதில் உள்ள இந்தக் கடினமான நிலையைக் கூர்யே போன்ற புலமையாளர்கள் வெற்றி கொண்டுள்ளார்கள். அவர்கள் சாதியை அமைப்பு ரீதியாகப்பட்ட சிறப்பியல்புகள், சிக்கலான தன்மைகள் மற்றும் சமூகக் கட்டுக்கள் என்பவற்றின் ஒரு வலையமைப்பாகக் குறிப்பிட்டு அவற்றின் பரந்துபட்ட வரைவிலக்கணங்களையும் அவற்றின் பிரயோகங்களின் பொதுத் தன்மைகளையும் விபரிக்கின்றார்.[21]

இலங்கையில் நிறுவனரீதியான வேறுபாட்டின் குறுகிய மக்கள் வீதமும் அடிப்படையான பண்பாட்டு ஐக்கியமும், சிங்களவர்களின் சாதி முறையானது ஒப்பீடு ரீதியில் இலகுவானது என்பது போன்ற விபரிப்புரீதியான வரைவிலக்கணங்களுக்கு வழிவகுத் துள்ளது. எவ்வாறாயினும் அவ்வாறான பொழிப்புகள் நகர மற்றும் மேற்கத் தேய செல்வாக்குகளின் விளைவான தாறுமாறான பாதிப்புகளைச் சுட்டிக் காட்டுவதில் முழுமையாகவே தோல்வியடைகின்றன என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதேநேரம் சாதியத்தை அதன் சமூகம் முழுவதிலும் இயங்கிக் கொண்டிருக்கின்ற மாற்று மற்றும் எதிர் அந்தஸ்து முறைமைகளிடையேயான தரிசனத்தினுள் நிலைநிறுத்துவதிலும் தோல்வியடை கின்றது. சாதி என்பது ஒரு சமூகத்தில் நிலவும் சமூக அமைப்பின் ஒரு வடிவம் மட்டுமே ஆகும். அதேநேரம் மிகவும் சரிநுட்பமாகக் கூறுவதாக இருந்தால் அது சமூக அடுக்கமைவின் ஒரு வடிவம் ஆகும். இது இந்தியாவைப் போல இலங்கையிலும் உண்மையானதாகும்.

எமக்கு வரைவிலக்கணம் அவசியமாகத் தேவையென்றால் சாதி முறைமையை அதிகாரப் படிநிலையான பிறப்பு அந்தஸ்துகளைக் கொண்ட குழுக்களின் வழியாகச் செயற்படுகின்ற சமூகக் கட்டமைப்பு என்பதைக் கருத்திற் கொள்ளல் வேண்டும். அதே நேரம் பெரும் சமூகத்தில் ஏனைய சமூகக் குழுக்களில் இருந்து வேறுபடுகின்றமையும், சமூகத் தொலைவு மற்றும் சலுகை சார்ந்த குறியீட்டு ரீதியான வெளிப்பாடுகளையும் உள்ளடக்கிய தாக சடங்கு வகிபாகங்கள் அல்லது செயற்பாடு வகிபாகங்கள், பொதுவான புறமணத் தடை, சமுதாயம் சார்பான விடயங்கள், அக்குழுக்களின் துணை அலகுகள் என்பனவற்றினையும் அதேபோலக் கருத்திற்கொள்ளவேண்டும். கட்டமைப்பு மற்றும் செயற்பாடுரீதியான அல்லது வகிபாக உள்ளடக்கங்கள் இந்திய செல்வாக்குகளின் வீச்சு எல்லைக்குள் முடிவற்ற வேறுபாடுகளுக்கு உட்படத்தக்கவை.

சில அதிகாரப் படிநிலை கொண்டவர்களாக இருக்கும் சமுதாயம் சார்ந்த குழுக்களின் ஒழுங்கமைப்பாகச் சிங்களவர்களின் சாதிக் கட்டமைப்பு உள்ளது. இந்தக் குழுக்களும், சாதிகளும் அரிதாகத் துணைச் சாதிகளுக்கு தனிநபர்களின் நட்பு ரீதியான, சமஉரிமைகளைக் கொண்ட நடத்தைகளின் எல்லைகளை வரையறை செய்கின்றன. முழுச் சனத்தொகையின் அரைவாசிப் பகுதி எண்ணிக்கை சார்ந்து உயர்ந்த சாதியைக் கொண்டு இருக்கும்படியான தலைகீழ் தொடர்புடன் இலங்கையில் ஒரு சாதியின் அதிகாரப் படிநிலை உள்ளது. சாதி, துணைச்சாதி அல்லது சாதி முறைமையின் ஒழுங்கான அமைப்பு காணக்கூடியதாக இல்லாவிட்டாலும் அவை முறையாக, பகுதியாக நிலப்பிரபுத்துவ அதிகார ஆட்சியின்கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. சாதிகளுக்கிடையிலோ அல்லது துணைச்சாதிகளுக்கிடை யிலோ 'hypogamy' யோ அல்லது 'hypergamy'யோ அனுமதிக்கப்படவில்லை என்றதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு மச்சான் மச்சாள்களுக்கிடையேயான திருமணத்திற்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டது. சிறத்தலடைந்த நகரத்து வாழ்க்கை கொண்டவர்களுக்கு இடையில் கூட சாதி அகமணக் கட்டு என்பது பெரும்பாலும் கண்டிப்பாகத் தக்க வைக்கப்பட்டிருக்கிறது. சில சாதிகளைப் பொறுத்தவரை, பிராந்தியரீதியான ஒருமுகப்படுத்தலுக்கான போக்குக் கடுமையான முறையில் காணக்கூடியதாக இருந்தாலும் கூட, பல சாதிகள் எல்லாப் பிராந்தியங்களிலும் செறிந்து பரம்பலடைந்துள்ளன. சாதிகளுடன் இணைந்துள்ள வகிபாகங்களைத் தவிர பண்பாட்டு வித்தியாசங்கள் நிலவுவதில்லை என்றே கூறலாம். சாதிகளின் கட்டமைப்பு ரீதியான உற்பத்திகள் கலப்பானவை ஆயினும் அவற்றில் பல, இந்திய சாதி, பழங்குடி மற்றும் கூட்டுத் தொழில் அந்தஸ்து குழுக்களிலிருந்து முளைத்து சிங்கள சூழ்நிலையில் மீள் தாபிதம் செய்யப்பட்டவையாக உள்ளன.

செயற்பாடு ரீதியாக சிங்கள சாதிகள் கடந்த காலம் தொடங்கி இருந்து வருகின்றன. தற்போதுகூட அவை வித்தியாசப்படுவது தொழில் சார்ந்த அல்லது சடங்கு சார்ந்த பொறுப்புகள் அல்லது இந்த இரண்டிலுமாகும். இது அடிக்கடி ஏகபோக உரிமையின் கூட்டு மொத்தமாக்கல் ஆகும். அல்லது தனிச் சிறப்புரிமைகள் அல்லது கடப்பாடுகள் என்பன ஒரு கீழ்நிலை அங்கத்தவர்களால் உயர்சாதிக்கோ பௌத்த விஹாரைக்கோ அல்லது புராதன காலத்தில் அரசனுக்கோ ஆற்றப்படுகின்றன. ஒப்பந்த பொருளாதாரம் இல்லாத ஓர் இடத்தில் இந்த ஆற்றுகைகள் உயர்சாதியினரிடமிருந்து பதில் செயற்பாடுகளைப் பெற ஏற்புடையன. முன்னைய அரசனுக்கு வழங்கிய சேவையும், நிலப்பிரபுத்துவ எஜமானுக்கு அல்லது பௌத்த விஹாரைக்கு வழங்கிய சேவையும் தொழில் சார்ந்ததோ அல்லது சடங்கு ரீதியானதோ அது ஒரு சாதியின் தலையாய செயற்பாடு நிலையான பண்பாகவே பொதுவாகப் பார்க்கப்பட்டது. இது இன்று பல சந்தர்ப்பங்களில் பாரம்பரியத்திலும், சாதியின் பெயரிலும், சில உண்மையான நடத்தைகளிலும் பேணிப் பாதுகாக்கப்படுவதாக உள்ளது. கிராம வசிப்பிடத்தில் பௌதிக ரீதியான பாகுபாடு என்பது பொதுவானதாக இருந்தாலும் சாதி தவிர்ப்பின் சமூகக் கட்டு களானது மனித உறவுகளின் ஒட்டுமொத்த வீச்சு எல்லைமீதும் அரிதாகவே பிரயோகிக்கப் படுகிறது. அவை வீடு, குடும்பம் மற்றும் உணவு சம்பந்தப்பட்ட நிலை பரங்களிலே மிகவும் வெளியிடப்பட்டன. சாதியத்துடன் இணைந்திருந்த முன்னைய சட்டரீதியான தடைகள் நீக்கப்பட்டுள்ளன. ஆயினும் பௌத்த ஆலயத்தைச் சார்ந்த சில செயற்பாடுகளில் வெளிப் படையானதாகவும் பதவிக்கான முன்எண்ணம்சார் நியமனங்களில் மறைமுகமாகவும் சட்டத் திற்குப் புறம்பான தடைகள் நிலைத்திருந்தன. சமூக இடைவெளியின் குறியீடுகள் பிராந்தியங்களைப் பொறுத்து மிகவும் அகன்றதாக இருந்தன. ஆயினும் உயர்சாதிக்கு வணக்கத்தைத் தெரிவிக்கும் நடத்தையானது ஆடை ஆபரணங்களுக்குத் தடையிடல் மற்றும் உயர்சாதியைத் துதிக்கும் நடத்தையை வலியுறுத்தல் எனப் பரந்துபட்ட வித்தியாசமான வெளிப்பாடுகளைக் கொண்டிருந்தது.

இந்த சுருக்கமான விபரிப்பிலிருந்து இலங்கைக்கு அதிதியாக வந்து சில மாதகாலம் தங்கியிருக்கின்றவர்கள் சிங்களவரிடையில் உள்ள சாதியம் பற்றி முழுமையாகவே அறியாமற் போகலாம். இங்குள்ள தனி மாநகரமான கொழும்பில் சாதியம் என்பது அர்த்தமற்றதாகியுள்ளது என்பதை உண்மையாகவே இலகுவாக ஏற்றுக்கொள்ள முடியும். இங்கு அந்தஸ்தின் எல்லா வெளிப்படையான பாகுபாடுகளும் குறியீடுகளும் பெருமளவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமற் போயுள்ளன. ஆயினும் கிராமப்புறத்தில் சாதி என்பது எப்பொழுதும் வெளிப்படையானதாக இல்லை. இந்தியாவின் சாதியம்சார்ந்த தீண்டாமை புறக்கணிப்பின் சுற்றிவளைத்துப் பேசுதல்கள், உணவு சார்ந்த தடைகள் மற்றும் கண்ணுக்குப் புலனாகும் ஏனைய அம்சங்கள் குறைந்த வளர்ச்சியைக் கொண்டதாகவும் குறைவாகக் காட்சி தருவ தாகவும் உள்ளன. டபிள்யு.ஐ. தொமஸ்சினின் கருத்தாக்கமான விடாமுயற்சியான கோலம் என்பது சிங்களச் சூழலில் மந்தமானது. அதற்கு மேலதிகமாகச் சிங்களப் பண்பாடானது, இந்துப் பண்பாட்டை விடக் குறைந்த இறுக்கத் தன்மை கொண்டதாகவும் மிகவும் நெகிழ்ச்சித்தன்மையுடன் கட்டமைக்கப்பட்டதாகவும் உள்ளது.[23]

நிச்சயமாக, அதிக ஊடாட்டம் என்பது ஒத்த சாதிக்குள்ளேயே காணப்படுகிறது. இப்பேற்பட்ட மானிட உறவு முறைமைகளுடன் பொதுவாக இணைந்துள்ள வெளிப்படையான மனிதத் தன்மையற்ற தன்மை மற்றும் இழிவுபடுத்தல் என்பன இன்றைய இலங்கைச் சாதியத்தில் அரிதானதாகும். சாதியின் செயற்பாடு ரீதியான சில பண்புகளும் கூட்டமைப்புச் சார்ந்த சில பண்புகள்கூட, நகர சூழலில் சிதறிப் போனதாகவே உள்ளன. ஆயினும் சாதிசார் புறமணத் தடைக்கான கோரிக்கை இன்னும் இல்லாமற் போனதாக இல்லையென்றதுடன் அதன் விளைவாக அத்துடன் இணைந்துள்ள மனப்பான்மைகளின் சில முக்கியமான சிக்கலான பண்புகளும் உள்ளன. சாதியத்தின் முனைப்பற்ற நிலைமைகளை இன்னமும் உயர்த்துவதாகப் பிறப்பு அந்தஸ்துகளுக்கும் பொருளாதார நிலைக்கும் இடையில் வளரும் சமனற்ற தன்மைகளும் உள்ளன. இந்த நிலைபரமானது ஒருபுறம் பழைய சாதியத்தை மாற்றியமைக்க அல்லது அழித்து விடக்கூடியதாக உள்ள அதேவேளை, பொருளாதார நிலைமைகள் சாதிய அடுக்கமைவின்மீது கவிந்து எளிமையாக ஓர் அந்தஸ்து முறைமை யாகின்றன.

இலங்கையில் சாதியத்தின் பொதுவான அமைதியான குணாம்சமானது, நகரவாசி களால் பொதுவாகவும் அரச கொள்கையாற் குறிப்பாகவும் மிகைப்படுத்தப்படுகின்றது. மேற்கு மயமாக்கப்பட்டு மேம்பாட்டாளர்களின் பொதுப் போக்காக உள்ளது யாதெனில், சாதியானது தற்போது இருப்புச் செய்யவில்லை என்று பேசுவது அல்லது அதைத் தேசிய பெட்டகத்திலுள்ள புழுதி படிந்த ஓர் எலும்புக்கூடாக வர்ணிப்பதாகும். இது தவறான வழியைக் காட்டுவதாக அமையலாம். நகரத்து சமூகத்தின் கலப்படைந்த வர்க்கங்களுக்குள் சாதியம் சார்ந்த விடயங்களைப் பேசுதல் என்பது நல்ல இரசனை சார்ந்த தராதரங்களுக்குத் தடையாக நோக்கப்பட்டாலும், திருமணத்தை அணுகும் சந்தர்ப்பங்களிலோ அல்லது நெருங்கிய சமூக நிகழ்ச்சியொன்றிலோ குலவழிப்பட்டியல் என்பது நுண்ணாய்வு செய்யப்படுகின்றது. சாதி என்பது முக்கியமானதொன்றாக இருந்தாலும் அது பொதுப்படையாகக் காட்சிப்படுத்தப் படுவதாக இல்லை. சாதி என்பது இல்லாமற் போனதொன்றாகவே கவனிக்கப்பட வேண்டும் என்ற நிலைமைக்கு மிகவும் பலமாக ஆதரவு வழங்குகின்ற நிலைப்பாட்டை ஒத்ததாகவே அரசாங்கத்தின் கொள்கை உள்ளது. இந்தத் தனிப்பட்டதும் உத்தியோகபூர்வமானது அணுகுமுறைகளின் முடிந்த முடிவான விளைவாக உள்ளது யாதெனில், சாதிய நிலைமாற்றமான நிகழும் ஒரு காலப் பிரிவாக மிகவும் சரியாக விபரிக்கக்கூடிய – சாதியம் நொருங்கிப் போகும் ஒரு காலப் பகுதியைக் குறிப்புணர்த்தும் மௌனச் சதி ஒன்றேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டுரையானது Bryce Ryan எழுதி 1953ஆம் ஆண்டில் Rutgers University Press இனால் வெளியிடப்பட்ட Caste in Modern Ceylon: The Sinhalese system in Transition என்ற நூலில் அறிமுகக் கட்டுரையான The Nature of Sinhalese caste என்பதின் தமிழ் வடிவமாகும். இது 1981இல் மீளப்புதுப்பிக்கப்பட்டதுடன் 1993இல் மீள் பதிப்பும் செய்யப்பட்டது.

## அடிக்குறிப்புகள்:

01. மஹாவம்சம்(51) சாதிக் கோட்பாடுகளை முன்னையதாகவே அறிமுகப்படுத்தியமையைச் சான்று அளிக்கின்றன. பார்க்க: *மஹாவம்ச* (1934) .14 மற்றும் குலவம்ச.

02. 1885இல் இருந்து 1888 வரை வெளிவந்த The Taprobanian என்ற ஆய்வு இதழின் தொகுப்பாசிரியராகவும் பிரதான பங்காளியாகவும் நெவில் செயற்பட்டார். இதன் 1886, ஏப்ரல் இதழில் *ஜனவம்ச* என்ற நூலினைப் பற்றி நெவிலின் குறிப்பொன்று வெளிவந்தது. நெவில் சாதியம் பற்றிய பௌத்தக் கருத்தைக் கூறும் இந்தச் சிறுநூலை Taprobanian ஆய்வு இதழுக்காகவே மொழிபெயர்ப்புச் செய்தார். மொழி நூல்வியலுடன் கடும் சார்புடைய தன்மை கொண்டிருந்த இந்தக் குறிப்புகள் *ஜனவம்ச* நூலுடன் பார்க்கும்போது மிகவும் குறைந்தளவிலான நம்பிக்கை வழங்குவதாகவே இருந்தன. நூலாசிரியர் தன்னுடைய சிந்தனைகளுக்கான ஆதாரங்களாகத் தொல்பொருளியல் ரீதியான அல்லது வேறுவகையான ஆதாரங்களைக் காட்டாமல் சாதிப் பெயர்களின் மொழி நூல்வியல் ஒத்த தன்மைகளின் அர்த்தங்களினூடாக எம்மைப் புராதன எகிப்து வரை அழைத்துச் செல்கின்றதாகவே உள்ளது.

03. *நீதி நிகண்டுவ* அல்லது கண்டிய இராசதானியின் இறுதி நாட்களில் நிலவிய சட்டம் சார்ந்த சொற்கோவையை மொழிபெயர்த்தவர்கள் C.R.Le Mesurier மற்றும் T.B. Panabokke என்போராவர். இந்த நூலின் பிறப்புத் தொடர்பாக விவாதங்கள் இருந்தாலும் தொடக்க காலத்தில் பிரித்தானிய சிவில் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய John Armour என்பவரால் அப்போது நிலவிய சட்டம் தொடர்பான தனக்குத் தெரிந்த விடயங்களையும், கண்டிய பிரதானிகள் குழுவொன்றின் புராணக் கதைசார்ந்த அறிவையும் பொருள் விளக்கங்களையும் அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டதொன்றாக இது இருக்கலாம். மேலும் பார்க்க Hayley: 1923 Valentin: 1809, சிங்கள புராணக் கதைகளில் வரும் விபரிப்புகளின் அடித்தளத்தில் சாதியத்தின் பிறப்புப் பற்றி விபரிக்கப்பட்டுள்ளன. இதில் குறிப்பிட்டுள்ள நூல்களைத் தவிர சாதியம் பற்றிய இன்னும் பல உசாத்துணைகள் சிங்களத்தில் உள்ளன. அவை பற்றி இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்படுவதில்லை. எவ்வாறாயினும் அவை வியப்படையச் செய்யுமளவிற்குச் சிறியன. பார்க்க Ryan 1953: 332–333.

04. *ருவன்மல் நிகண்டுவ* அல்லது *நார்மரத்னமாலாவ* என்பது ஆறாம் ஸ்ரீ பராக்கிரம பாஹுவால் இயற்றப்பட்ட ஒரு சிங்கள செய்யுள் அகராதியாகும். D.P. Alwis Wijayasekara வினால் 1914இல் மொழிபெயர்க்கப்பட்டு மீள்வடிவமைக்கப்பட்டது.

05. பார்க்க Davy, 1821: 111-112.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. Hocart இந்தக் கருத்தை சாதியத்தின் பிறப்புப் பற்றி ஏற்கனவே மேற்கொண்ட பகுப்பாய் விலே முன்வைத்தார். இந்த ஆய்வானது Hocartவின் அவதானிப்புகளையோ அல்லது முடிவுரையோ ஆதாரப்படுத்துவதாக இல்லை. பார்க்க (Hocart 1938:5)

07. பிராமணிய ஐதீகத்தின் வரலாற்று ரீதியான யதார்த்தமற்ற நிலையை Fick:(1920) Rao:(1911) Senart: (1930) மற்றும் இன்னும் சிலர் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

08. Fernao De Queyroz (1687 - 1930) அவருடைய கலந்துரையாடலில் "பிராமணரை" "சிங்களவர்களிடம்" இருந்து பிரித்துக் காட்டுகிறார். அவர் அதேநேரம் நான்கு வகையான சாதிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அதாவது பிரபுக்கள், விஹார மற்றும் சமய பூசகர்கள், விவசாயிகளும் கைவினைஞர்களும் மற்றும் மகுவாஸ் (Macuaz) பெடாஸ் (Bedas) மற்றும் ஏற்கனவே குறிப்பிடப்படும் கீழ்நிலை சாதிகள்.

09. சாதியின் உண்மையான தன்மையாக இன்னமும் நூல்களில் அடிக்கடி மறுஉற்பத்தி செய்யப்படுகின்றதாக உள்ள சாதியம் தொடர்பான பிராமணியக் கோட்பாட்டை இந்தியா முழுவதிலும் வியாபித்ததாக எவராலும் கருத்து முன்வைக்க முடியாது. எவ்வாறாயினும் பிராமண அதிகாரத்தின் எழுச்சியுடன் அரசனின் நிலை கீழான வருதலானது பல்வேறு பட்ட பிராந்தியங்களிலும் பழங்குடிப் பிரதேசங்களிலும் பல்வேறுபட்ட அளவில் இந்திய அமைப்பை உறுதிப்படுத்திக் கொண்டு கோட்பாடு ரீதியான கட்டமைப்பு ஓர் இலட்சிய மாதிரி ஆகியது. தென்னிந்தியாவைப் போலவே இலங்கைத் தமிழர்களுக்கிடையிலும் பூசாரிகள் அல்லாத பிராமணர்கள் சொற்ப அளவிலே உள்ளார்கள். ஷத்திரியர்களும் வைஸியர்களும் குறைவாகவே உள்ளார்கள். இந்த எண்ணக்கருக்கள் கூட அரிதாகவே பயன்படுத்தப்படுகின்றன.

10. ஆதி சிங்கள சமூக அமைப்பைச் சார்ந்ததாகவும் நாட்டின் குடியேற்றங்களைப் பற்றியும் வீரகாவியங்களுக்கு அப்பால் மிகவும் குறைவாகவே அறியக்கூடியதாக உள்ளன. பார்க்க Tennent :(1859).

11. இந்தப் பார்வைக்கான சான்றுகள் கீழ்வரும் பல சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டுள்ளன. கண்டிப் பிரதேசம் தொடர்பாக Denham (1912) சில அவதானிப்புகளை முன் வைக்கிறார். அதேநேரம் இந்தியக் கூலிப் பணியாளர்களையும் சிறைக் கைதிகளையும் கொண்டுவந்தமை பற்றிச் சிங்கள வீரகாவியங்களில் குறிப்பிடுகின்றன. இலங்கையின் கீழ்நாடு பிரதேசத்திற்குத் தென்னிந்தியர்களினதும் ஏனையவர்களினதும் பிந்திய வருகை பற்றிய பண்பாட்டுரீதியான சான்றுகளாகச் சில கீழ்நாடுச் சிங்களச் சாதிகளுக்குள் காணப்படும் தென்னிந்தியத் தொடர்புகளைக் குறிப்பிடலாம். பதினைந்தாம் நூற் றாண்டின் நடுப்பகுதியிலும் அதற்குப் பிந்தியதுமாக மலபார் மற்றும் குரொமண்டல் கடற்கரைகளில் இருந்து இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட பெருமளவிலான கூலிப் பணியாளர்களின் வருகையைப் பற்றிய ஆவண ரீதியான உறுதிப்படுத்தல்களை Edmund Reimers (1928) முன்வைக்கிறார்.

12. பார்க்க Risley (1915) 11ஆம் அத்தியாயம்.

13. பார்க்க Tennent (1859) மேலும் ஆதிவாசிகள் பற்றி அறிய The Mahavamsa (1934) முதலாம் தொகுதியின் 3ஆவது அத்தியாயம் Seligman (1911)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. பார்க்க. Hayley (1923) இரண்டாம் அத்தியாயம் 101–102 பக்கங்களும்.

15. பார்க்க Hayley (1923) 6ஆம் அத்தியாயம்

16. பார்க்க Doyly : 1929 பக். 10–11

17. Valentyn (1726) இதில் வரும் "Naamen Der Inlandsche Bedienden Inde Dorpen op Ceylon" என்பதை சாதிகளுக்கிடையிலான அந்தஸ்து கடக்கும் கூட்டமைப்பிற்கான சான்றாகக் காட்டுகிறார். Valenty அதேவேளை தங்களுடைய விழாக்களின்போது சேர்ந்து உணவு உண்ணும் மற்றும் சேர்ந்து உணவு உண்ணாதவர்களைக் கொண்ட ஒரு கீழ்நாட்டுச் சாதியைப் பற்றிக் குறிப்பாகக் கூறுகிறார். அவ்வாறான குறிப்பான தன்மையைக் கொண்ட அனைவரும் கலந்துரையாடப்பட்ட சாதிக்குத் தாழ்ந்த நிலையில் உள்ளார்கள். மேலும் பார்க்க Valentyn (1726) அத்தியாயம் 3. அடிக்குறிப்பு 4.

18. இந்திய சாதிக் கட்டமைப்புகள் பற்றிய எந்தவொரு தொகுப்பாய்வுக் கற்கையில் இருந்தும் இதற்கான சான்றுகளைப் பெறமுடியும். இந்தியப் புலத்தைப் பற்றிய பொதுவான பல கட்டுரைகளில் இது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாகப் பார்க்கவும் Sherring (1881) Thurston (1909) Dubois (1906).

19. பிராமணரின் வகிபாகம் தொடர்பாக Max Weberரின் சிறந்த கட்டுரையை உதாரணத்திற்குப் பார்க்க.

20. Cox (1948) இந்த ஆய்விற்கு Sorokin (1947) வின் சாதிகளுக்கும் பண்ணைகளுக்கும் இடையிலான பகுப்பாய்வு விபரிப்பு மிகவும் பொருத்தமானதாக உள்ளது.

21. பார்க்க Ghurye (1932)

22. சமுதாயம் என்ற சொல்லுக்கு மேற்கத்தேய இல்லற மற்றும் தொழில் சார்ந்த பேச்சுமுறையில் இருந்து வேறுபட்டு உள்ளூர் பொருள் தரும் வேறு எந்த இடமும் இந்திய ஆசியாவிற்கு வெளியில் இல்லாமல் இருக்கலாம். இலங்கையில் சமுதாயம் என்பது இனக்குழு என்பதற்கு ஒத்த சொல்லாகும். அதேநேரம் அரை இனத்தன்மை (Quasi-racial) மற்றும் தேசிய ரீதியிலான சிறுபான்மையினரையும் குறிப்பிடுவதாக உள்ளது. அதேநேரம் அது சாதிக்கான ஒரு மங்கல வழக்குச் சொல்லாகவும் பயன்படுத்தப்படு கின்றதாக உள்ளதுடன்; பொது வாழ்க்கையையும் கூட்டொருமைப்பாட்டையும் சரியாக வெளிப்படுத்தவும் பயன்படுத்தப்படுகிறது. இது பொது விருப்பங்களை, பொது வாழ்க்கை மற்றும் பொது இரத்தத்தை உள்ளடக்குகின்றது. சமுதாயவாதம் என்ற சொல்லானது சாரமாகவும் மிகவும் பொதுவான வடிவமாகவும் உள்ளதுடன்; அது குழுசார்ந்த மனப்பான்மைகளின் வலுவான நிலையை வெளிப்படுத்துவதுடன் கூட்டு அரசியலின் மீதான விருப்பங்களையும் வெளிப்படுத்துகின்றன. அதேநேரம் சமுதாயத்திற்கு விசுவாசமாக இருக்க செயல் துணிச்சலையும் வழங்குகின்றது.

23. பார்க்க Thomas (1937) சிங்கள சமூகத்தினதும் பண்பாட்டினதும் "நெகிழ்ச்சியான கட்டமைப்புப்படுதல்" பற்றிக் கூறும்போது Embree (1950) தாய்லாந்து சமூகத்தைப் பற்றிக் கூறுகின்றவற்றை இங்கும் பிரயோகிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cox Oliver C.
1948. Caste, class and Race: A Study in Social Dynamics, New York: Doubleday

Culavamsa:
Being the more recent part of the Mahavamsa, 1930, William Geiger ( trans) London: Oxford University Press

Davy John,
1821. An Account of the Interior of Ceylon and Its Inhabitants, with Travels in That Island, London: Longman, Hurst, Rees, Orme and Brown.

Denham E.B.
1912.Ceylon at the Census of 1911, Colombo: Government Printer

De Queyros Fernao
1930. The Conquest (Temporal and spiritual) of Ceylon, translated by Father S.G. Perera Colombo: Government Printer

D' Oyly Sir John
1929, A. Sketch of the constitution of the Kandian Kingdom, Colombo: Government Printer

Dubois Abbe J.A
1906, Hindu Manners, Customs and Ceremonies, 3rd ed., Oxford : Oxford University Press.

Embree J.F.
1950, "Thailand: A Loosely Structured Social System," America, Anthropologist, Vol. 52, No. 2 (April-June)

Fick Richard,
1920, The Social Organization in Northeast India in Buddha's Time. Translated by Shishirkumar Maitra, Calcutta: University of Calcutta.

Ghurye G.S.
1932. Caste and Race in India, London, Trubner & Co. Ltd.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hayley Frederic Austin

1923, A Treatise on the Laws and Customs of the Sinhalese, including the Portions still surviving under the name Kandian Law, Colombo:H.W Cave and Co.

Hocart A.M.

'Archaeological Summary" Ceylon Journal of Science, Vol. II (December, 1928-February, 1933)

Janawamse,

1886. Hugh Neville (trans), In the Taprobanian.

Knoxs, Robert.

1681, An Historical Relation of Ceylon The Mahavamsa or The Great chronicle of Ceylon, 1934,Whilhelm Geiger (trans.). Oxford University Press, London.

Niti Nighanduwa or the Vocabulary of Law as it exited in the Last Days of the Kandian Kingdom,18 80, Translated by C.J.R. Le Mesurier and T.B. Panabokke, Colombo:Government Printer

Rao N.S.Subba,

1911. Economic and Political Conditions in Ancient India as Described in the Jatakas, Mysore: Wesleyan Mission Press,

Reimers E.

1928, "Feudalism in Ceylon" Journal of the Royal Asiatic Society (Ceylon), Vo. XXX, No. 81

Risley. Sir Herbert

1915, The People of India, 2nd ed., W. Crooke (ed), London :Thacker, Spink & Co.,

Seligman C. J. and Seliman, B. Z.,

1911, The Veddas, Cambridge University Press.

Senart Emile,

1930.,Caste in India: The Facts and the system, Sir E. Denison Ross (trns) London: Methuen and Co, Ltd.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sherring M.A
1881, Hindu Tribes and Castes, Calcutta :Thacker, Spink & Co.

Sorokin Pitirim A.
1947, Society, Culture and Personality: Their Structure and Dynamics, New York :Harper and Bross

Tennent, Sir Jomes Emerson,
1859. Ceylon; An Account of the Island, Physical, Historical and Topographical, London: Longman, Green, Longman and Roberts,

The Taprobanian,
1985-88, Hugh Neville (ed).London: Trubner and Co..

Thomas, W.I.
1937,Primitive Behavior: An Introduction to the Social Science, New York: McGraw-Hill,

Thurtson Edgar,
1909, Castes and Tribes of Southern India, Madras: Government Press,

Valentyn, Francois. Keuriyke Beschryving Van Choromandel, Pegu, Arrakan, Bengale, Mocha. Van't Nederlandsch Comptoir in Persien: en eenige fraaje Zaaken Van Persepolis Overblyszelen, Eennette Beschryving van Malakka, t Nederlands comptoir op't Eiland Ceylon, en een net Verhall Van des Zeifs Keizeren, en Zaaken, Van ouds hier Voorgevallen; Als ook Van't Nederlands Comptoir op de kust van Malabar, en van onzen Handel in Japan, en eindelyk een Beshryving Van Kaap Der Goede Hoope, en't Eyland Mauritius, Met de Zaaken tot alle de Voornoemde Ryken en Landen behoorende, Met Veele Prentverbeeldingen, en Landkaarten Opgeheldert. Amsterdam, Joanness Van Braam,

William Miller,
1809. Valentia, Viscount George, Voyages and Travels to India, Ceylon, The Red Sea, Abyssinia and Eqypt in the years 1802, 1803, 1804, 1805 and 1806, 3 vols.London

Wijayasekara, D.P. De Alwis
1914. (reviser and Translator) The Ruwanmal Nighantuwa or Narmaratna Malawa; A Poetical Lexicon of the Sinhalese Language, by His Majesty Sri Parakrama Bahu VI.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Brahmin and Non-Brahmin:
## Genealogies of the Tamil Political Present [Hardcover]

M.S.S. Pandian
Publisher: Permanent Black; 2007 edition
ISBN-10: 8178241625
ISBN-13: 978-8178241623

**புத்தகத் திறனாய்வு : இரா.திருநாவுக்கரசு**




முனைவர் எம்.எஸ்.எஸ்.பாண்டியன் இன்று தமிழ்ச் சமூகத்தின் முதன்மையான சமூகவியல் ஆய்வாளர்களுள் ஒருவர். 1990களின் தொடக்கத்தில் திரைப்பட நடிகரும், அரசியல் தலைவரும், தமிழகத்தின் முதலமைச்சருமான திரு.எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களின் திரைப்படங்களுக்கும் அவரது அரசியலுக்குமான நுட்பமான உறவை ஆய்வுக்கு உட்படுத்தி பாண்டியன் எழுதிய "Image Trap" பரவலான கவனத்தைப் பெற்றதோடு, தமிழ் நாட்டில் திரைப்படங்கள் குறித்து விரிவான சமூக, கலாசார அரசியல் பார்வைகள் கொண்ட ஆய்வுகளுக்கான அவசியத்தை அழுத்தமாக வெளிப்படுத்தியது. எனினும் தமிழ்த் திரைப்படங்களின் அரசியல்.மற்றும் சமூக, கலாசார தளங்களில் அவற்றின் தாக்கம் குறித்து மேலதிக ஆய்வுகள் தமிழகத்தின் ஆய்வு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களில் இருந்து பெரிய அளவில் வெளிவரவில்லை. இன்னமும் வெளிநாட்டினரே நமது திரைப்படங்களின் பல்வேறு பரிமாணங்கள் குறித்து ஆய்வு செய்வதில் ஆர்வமாக உள்ளனர். எனினும் பாண்டியனின் பங்களிப்பு இத்துறையில் முன்னோடியானது என்றே சொல்ல வேண்டும். அடித்தட்டு / விளிம்பு நிலை மக்கள் மத்தியில் எம்.ஜி.ஆர். கடவுளுக்கு நிகராகவே போற்றப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதன் காரணம் ஏன் என்ற பொதுப் புத்தி சார்ந்த கேள்விக்கு நவீன மார்க்சிய எழுச்சி அலையின் முதன்மையான புள்ளியாகத் திகழும் ஆண்டோனியோ கிராம்சியின் கருத்தியல் கோட்பாடுகளை மையமாகக்கொண்டு அடித்தட்டு மக்களின் பிரக்ஞை சிதிலமானது என்பதால் திரையில் காணும் பிம்பம் அந்த நடிகரின் உண்மையான ஆளுமை என்றே கற்பிதம் செய்து கொள்கிறது என்று விபரமாக பாண்டியன் தனது நூலில் முன்வைத்தார். நிச்சயம் விவாதத்திற்கும், சர்ச்சைக்குரிய தீர்மானம் என்பதில் ஐயமில்லை. எனினும், "தமிழ்நாட்டில் திரைப்படம் பற்றிப் பேசுவது, இமய மலை உச்சியில் ஐஸ்கிறீம் விற்பதற்கு ஒப்பானது" என்று பகடியாக சொல்லப்படும் நிலையில் திரைப்படம் என்றாலே தொழில் நுட்பரீதியான செய்முறை மட்டுமே என்று பொருள் கொள்ளும் தமிழ் சூழலில் திரைப்படங்களின் அரசியல், அழகியல் அம்சங்கள் முற்றாக விவாதிக்கப்படாமல் போனது சம கால தமிழகத்தின் பெரும் இழப்பு என்றே சொல்ல வேண்டும். அந்த அடிப்படையில் பாண்டியனின் பங்களிப்பு முதன்மையானது. அதற்குப் பிறகு சுமார் 15 ஆண்டுகளுக்குப் பிறகு அவரது நூல் வெளிவந்திருக்கிறது. "பிராமின் ரூ நான்–பிராமின்" இன்றைய தமிழக அரசியலின் மரபைத் தேடும் முனைப்பாக இதைக் கருதும் வகையில் வெளிவந்திருக்கும் இந்த ஆங்கில நூலைப் புதுதில்லியில் உள்ள புகழ் பெற்ற Permanent Black எனும் முன்னணிப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. ஆறு அத்தியாயங்களும் 273 பக்கங்களும் கொண்ட இந்த நூல் கண்டிப்பாக பெரிய விவாதத்தை முன்னெடுத்துச் செல்லும் என்று நம்பும் வகையில் வந்திருக்கிறது.

சுமார் பத்தாண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த ஒரு சம்பவத்தில் இருந்து இந்நூல குறித்த எனது பார்வையினை முன்வைக்க விரும்புகிறேன். புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் ஆய்வு மாணவனாக இருந்த பொழுது, இலங்கையின் "தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி" பற்றி ஆய்வு செய்து கொண்டிருந்த எனது ஈழத்து நண்பர் தனது கள ஆய்வினை இலங்கையில் முடித்துத் திரும்பிருந்தார். 1960 களின் இறுதியிலும் 1970 களின் தொடக்கத்திலும் இலங்கையில் வெளியான பல்வேறு தமிழ், ஆங்கில செய்தி ஏடுகளில் இருந்து மிகுந்த சிரமத்திற்கிடையே முக்கிய தகவல்களை நகலெடுத்து வந்து படித்துக் கொண்டிருந்தார். 1967 இல் வெளியான ஒரு செய்தி ஏட்டின் நகல் (அநேகமாக வீரகேசரியாக இருக்கலாம் என்பது எனது யூகம்) மீது எங்கள் இருவரினதும் பார்வையும் தற்செயலாக ஒரே நேரத்தில் குவிந்தது. மறைந்த சி.என்.அண்ணாதுரை அவர்களின் புகைப்படமும் அதனருகில் பெரிய எழுத்துக்களில் "தமிழ் நாட்டில் தி.மு.க. வெற்றி ஆட்சி அமைக்கிறது: தமிழ் இனம் தலை தூக்குகிறது" என்றும் இருந்தது. எங்கள் இருவரும் இயல்பான எதிர்வினையை என்றும் என்னால் நினைவு கூரமுடிகிறது. அசாதாரணமான கசப்பும் கரிப்பும் முகத்தில் மண்டியிட, பெருமூச்சுடனும் சலனமற்ற முகத்துடன் என் ஈழத்து நண்பர் முகத்தைத் திருப்பி, வெறித்தபடி ஜன்னல் வழியாக எதையோ பார்க்கத் தொடங்கினார். நானோ அச்செய்தியைப் படித்த மறு நொடியே அடக்க முடியாத அளவுக்கு சிரித்து கண்ணில் நீரே வந்துவிட்டது. அதற்குப் பிறகு ஆழமான அமைதி ஓரிரு நொடிகள் நிலவியது. இனப் பற்று, மொழிப் பற்று கொண்டுள்ள நாங்கள் இருவரும் பார்ப்பனர்கள் அல்ல. தி.மு.க. ஆட்சி – தமிழினம் தலை தூக்குகிறது என்ற செய்திக்கு எங்கள் எதிர் வினை ஏன் இவ்வாறு இருந்தது என்று தொடர்ந்து என்னையே கேட்டுக் கொள்கிறேன். என் நண்பர் இலங்கையில் பிறந்திருந்தாலும் நான் தமிழ்நாட்டில்/இந்தியாவில் பிறந்திருந்தாலும் பல்வேறு அரசியல் பின்புலங்களையும் மீறி எங்கள் இருவரினதும் எதிர் வினையும் ஒன்றிணைத்த ஊடுபாவான ஓர் அம்சம் இருக்கத்தான் செய்கிறது. விருப்பு வெறுப்பின்றி கறாராக வரலாற்றை சமூகவியல் பார்வையோடு அணுகும் போது ஒருவேளை இதற்கான பதில் கிடைக்கலாம். இதுவரை எனது தேடலில் வரலாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது எளிய சமன்பாடுகளுக்குள் அடக்கக் கூடியது அல்ல என்ற உண்மை மட்டும் புலப்பட்டிருக்கிறது.

இதனடிப்படையில் 2007 இல் வெளியான முனைவர் பாண்டியனின் இந்நூல் தமிழக வரலாற்றாய்வில் முக்கிய பங்காற்றும் என்று கூறலாம். தி.மு.க.வின் மிகத் தீவிரமான ஐம்பது வயது மதிக்கத்தக்க ஆதரவாளர் ஒருவர் தனது உடம்பெங்கும் அக்கட்சியின் தேர்தல் சின்னமான உதய சூரியனை வரைந்துகொண்டபடி இருக்கும் வண்ணப் புகைப்படம் இந் நூலின் முகப்பை அலங்கரிப்பதும், தி.மு,க.வின் தலைவர் கருணாநிதியின் மகனும் கட்சியின் அடுத்த தலைவர் என்று நம்பப்படும் மு.க.ஸ்டாலின் பின் அட்டையில் வெளியாகி இருப்பதும் இந்நூலின் பல அம்சங்களைக் கோடிட்டுக் காட்டுகின்றன. அதோடு, இவர்களை பார்ப்பனரல்லாத இயக்க செயல்பாட்டாளர்கள் என்றும் விளக்கம் தரப்பட்டுள்ளது. தமிழகத்தில் பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதோர் என்ற அரசியல் கோட்பாடு புதியதல்ல. அதன் அரசியல் வடிவம் சுயமரியாதை இயக்கம், நீதிக் கட்சி, திராவிடர் கழகம் என்று பல பரிமாணம் கண்டு பின்னர் தி.மு.க என்ற அரசியல் கட்சியாகவும் அதிலிருந்து பிரிந்து பல கட்சிகளாகவும் உருப்பெற்றது நாமறிந்த வரலாறு. இதில் யார் பார்பனர் என்ற கேள்விக்கு, காலனிய ஆட்சிக் காலத்தில் தமிழ்ச் சூழலில் நடந்த பல நிகழ்வுகளில் இருந்து கருத்தியல் ரீதியான கோட்பாட்டை பாண்டியன் உருவாக்க முயல்கிறார். அதாவது பார்ப்பனர் – பார்ப்பனரல்ல தோர் என்ற சமூக, கலாசாரப் பிரிவினை மிக மிக இயல்பான சமூகவியல் கூறு என்று உறுதியாக நிறுவ அவர் முனைகிறார். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியினால் அதிக பலன் பெற்றவர்கள் உயர்சாதி இந்துக்கள் என்பதை விட பார்ப்பனர்களே வளமும், பலமும் பெற்றார்கள் என்பதைப் பல ஆண்டுகளுக்கு முன்பே பல்வேறு மானுடவியல், சமூகவியல் அறிஞர்கள் விபரமாகவே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். காலனிய ஆட்சிக்கு முன்பிருந்த சாதிய அமைப்பு, நவீன வடிவம் பெற்றதோடு, சாதியக் கோட்பாடு அகில இந்திய வடிவம் பெற்றதும், இந்திய சமூக, கலாசார, சமய பாதுகாவலர்களாக பார்ப்பனர்கள் தாங்கள் மட்டுமே என்று அவர்களே பட்டம் சூட்டிக்கொண்டதும் பற்றி விரிவாகவே பேசப்பட்டுள்ளது. உதாரணமாக, மறைந்த பேராசிரியர் எம்.என்.ஸ்ரீநிவாஸ் கூறும் போது, "... சாதியத்தின் அடிநாதமாக விளங்கும் வர்ணக் கோட்பாடு, பிரபலமானதும், பின்னர் அது இறுகி நவீன வடிவம் பெற்றதும் பிரிட்டிஷ் ஆட்சியில்தான் அதற்குப் பல சக்திகள் உதவியுள்ளன" என்கிறார் (Srinivas 1966:6). இது எப்படி சாத்தியமாயிற்று என்று ஆராய்வது அவசியம். தங்களது சுரண்டலை மட்டுமே மையமாகக் கொண்ட ஆட்சியைத், தக்க வைக்க பிரிட்டிஷ் அரசு அனைத்து வழிகளையும் மேற்கொள்ளத் தயாராகவே இருந்தது. உதாரணமாக கிறிஸ்தவ மிஷனரி அமைப்புகளைத், தங்கள் கட்டுப்பாட்டில் சுதந்திரமாகப் பணி செய்ய வசதியாக ஆங்கில அரசு 1813 இல் Charter Act எனும் சட்டத்தையே நிறைவேற்றியது. ஆனால் மிஷனரி அமைப்புகள் சாதியை மையமாகக் கொண்ட சமூகத்தில் மாற்றங்களை மேற்கொள்ள சில நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கூறி ஆதிக்க சாதியினர் தெரிவித்த கடும் எதிர்ப்பினால் அடுத்த முப்பது ஆண்டுகளுக்குள்ளாகவே (1838) அச்சட்டத்தையே ஆங்கில அரசு ரத்து செய்தது அதோடு மிஷனரி அமைப்புகளுக்குக் கடும் கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கியது. (Jones 1999: 161). இப்படியாக தங்களது தலையிடாக் கொள்கையால் சாதியத்தைத் தூக்கிப் பிடிக்கவும் பார்ப்பன ஆதிக்கத்தை அங்கீகரிக்கவும் ஆங்கில ஏகாதிபத்திய அரசு அனைத்தையும் செய்தது. அதற்கு உறுதுணையாக இருந்தது ஐரோப்பிய அறிஞர்களால் நுட்பமாகக் கட்டமைக்கப்பட்ட இந்தியாவைப் பற்றிய பிம்பமே. ஆங்கில அரசு புதிய இந்தியாவை உருவாக்க கீழைத்தேயவியல் கோட்பாடு பெரும் துணை செய்தது என்றால் அது மிகையல்ல. அதிலும் குறிப்பாக மாக்ஸ் முல்லர் அவர்களை நாம் குறிப்பிட்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவேண்டும். இந்தியாவின் தொன்மையான இனம், ஆரிய இனம் தொன்மையான மொழி சமஸ்கிருதம் "புனித" மொழியான சமஸ்கிருதத்தை மையமாகக் கொண்ட மதமான இந்து மதம் தொன்மையான சமயம் இவற்றை எல்லாம் கட்டிக் காப்பாற்றும் போற்றுதலுக்குரிய மக்களாகவும் "இந்திய" எனும் பல்லாயிரம் ஆண்டுகள் தொன்மையான நாகரிகத்தின் பிழையற்ற நீட்சியாக இருப்பது பார்ப்பனர்களே என்று அறிவித்தார் (Muller: 2002). ஆங்கில ஏகாதிபத்திய அரசின் பல்வேறு நிர்வாக நடவடிக்கைகள் இந்தியாவின் சமூக கலாசார, கட்டமைப்பை முற்றாக மாற்றியதில் பெரும் பங்கு வகிக்கின்றன. அதிலும் குறிப்பாக மக்கள் தொகை, கணக்கெடுப்பு, பற்றி குறிப்பிட்டாக வேண்டும். அரசு எந்திரத்தின் முக்கிய கடமைகளுள் ஒன்று மக்களைத் தரப்படுத்துவது என்பதாலும், இவ்வளவு பெரிய நிலப் பரப்பையும் கற்பனைக்கு எட்டாத சமூக கலாசார வேறுபாடுகள் கொண்ட மக்கள் கூட்டத்தை ஆட்சி செய்ய அட்டவணைப்படுத்துவதும் ஆங்கில அரசுக்கு அவசியமான அம்சமானது. சிற்சில அளவிற்கு நெகிழ்ச்சித் தன்மையும், சாதிய சட்டகத்துக்குள் தமது இருப்பை இடம் மாற்றிக் கொள்ளவும் இருந்த வாய்ப்புகள் எல்லாமே காலாவதியாகிப் போனது. இது பற்றி பேராசிரியர் பெர்னாட் கோஹ்ன் மிக விரிவாகவே எழுதி இருக்கிறார் (Cohn 1987). ஒவ்வொரு ஐம்பது கிலோ மீட்டர் தொலைவிலும் நிலவிய சாதி சமய வேறுபாடுகள் எல்லாமே ஒரே சட்டகத்திற்குள் கொண்டு வரப்பட்டது. (Dirks 2002). ஆக அதுவரை சமய சடங்குகளின் வழியாகவும், கோயில்களுக்குக் கிடைத்த பெருமளவிலான நிலங்களையும் வைத்து சமூக, கலாசார, அரசியல் பொருளாதாரத் தளங்களில் கோலோச்சி வந்த பார்ப்பனர்கள், இந்தியத் துணைக் கண்டம் ஆங்கில ஆட்சியின்போது, நவீனத்துவ அரசு முறைக்கும் புதிய அரசியல் நிறுவனங்கள் உருவானபோதும் தங்கள் பலத்தையும் அதிகாரத்தையும் அப்படியே நவீனப்படுத்திக் கொண்டனர் என்பதுதான் இன்று வெளிச்சமாகி இருக்கிறது. அதன் விளைவு, உள்ளூர் வழிபாட்டு முறைகள், அவற்றிக்கு இடையே நிலவிய விவரிக்க முடியாத வேறுபாடுகள், அவற்றின் தனித்துவம் எல்லாமே மாயமாகிப் போனது. ஒரு பெரும்மக்கள் திரள் "இந்துக்கள்" என்று அறிவிக்கப்பட்டனர். இம்மக்களுக்கான குடிமை சட்டங்கள் உருவாக்கப்பட்டபோது, தங்களது தலையிடாக் கொள்கை காரணமாக பார்ப்பனர்களின் வார்த்தைகளையே இந்நாட்டின் வழக்கம் என்று ஏற்று அவற்றை சட்ட வடிவத்தில் கொண்டுவர ஆங்கில ஏகாதிபத்திய அரசு அனுமதித்தது. சட்டங்கள் அனைத்திற்கும் சம்ஸ்கிருத நூல்கள், மனு ஸ்மிருதி போன்றவை மூல நூல்களாகிப் போயின ( Galanter 1984:19) சாதியக் கொடுமைகளிலிருந்து விடுதலை என்பது கிட்டத்தட்ட சாத்தியம் இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் அடித்தட்டு மக்களிடையே மேலோங்கி இருந்தது. இது போதாதென்று ஆங்கில அரசின் உச்சக் கட்ட சுரண்டல் வேறு இவைதான் இம்மக்களைத் தேயிலைத் தோட்டங்களுக்கும் கரும்புத் தோட்டங்களுக்கும், ரப்பர் தோட்டங்களுக்கும் புலம் பெயரத் தூண்டியது எனலாம். வேறு சிலர் கிறிஸ்தவ மதத்திற்கு மாறினார்கள்.

அந்தவகையில் பார்ப்பனர்களின் நவீன அவதாரம் பற்றி முனைவர் பாண்டியன் தமிழ்ச் சூழலில் கூறிய விடயங்கள் நிச்சயம் கவனத்திற்குரியவை. தமிழகச் சூழலில் பார்ப்பனர் அல்லாதோர் என்ற அரசியல் கோட்பாட்டுக் களம் உருவான பின்னணியை விவரிக்க முனையும்போது, பார்ப்பனர்கள் இயல்பாகவே இந்நூலின் மையப் பொருளாகவும் மாறிவிடுகிறார்கள் என்று நூலாசிரியர் சொல்வது சரிதான் (பக்கம். 6). பார்ப்பனரல்லாதோர் என்ற சொல்லாடலில் தோற்றுவாய் என்ன என்று விவரமாக ஆய்வு மேற்கொள்வது அவசியமே. கீழைத்தேயவியல் முன்மொழிந்த ஆரிய – சம்ஸ்கிருத – இந்து – பார்ப்பன சொல்லாடலுக்கு எதிர்மறையாகவும், எதிர்வினையாகவும் உருவான திராவிட – தமிழ் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பனரல்லாதோர் எனும் சொல்லாடல் நவீன தமிழக வரலாற்றின் மையச் சரடு என்றே சொல்லவேண்டும். முந்தைய கோட்பாடு சாதியத்தின் நேரடிப் பிரதிபலிப்பாகவும் அதை உயர்த்திப் பிடிப்பதற்காகவும் உருவானது என்றால் பின்னது, சாதி மறுப்பின் அடையாளமாகவும் நவீன காலக் கலாசாரத்தின் குவி மையமாகவும் சித்திரிக்கப்படுவதை சமகால தமிழ் வரலாற்றை உற்று நோக்குபவர்களால் எளிதில் அவதானிக்க முடியும். இதன் தொடக்கப் புள்ளி கிறிஸ்தவ மிஷனரி அமைப்புகளே என்றால் அது மிகையல்ல. பாண்டியனும் இதை ஆமோதிக்கிறார். இராபர்ட் கால்டுவெல் (1814 – 1891) எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூல் இந்தச் சொல்லாடலுக்கு ஒரு தொடக்கப் புள்ளி எனலாம். இந்துமதம் என்பது ஒரு தனி மதம் அல்ல பல வழிபாட்டு முறைகளின் கூட்டுத் தொகை தான் என்று கால்டுவெல் குறிப்பிடும், பாண்டியன் (பக்கம் : 21), மிஷனரிகளுக்கு எதிராக உயர் சாதியினர் மேற்கொண்ட நடவடிக்கைகளை விவரிக்கிறார். மிஷனரிகள் மூலமாக உருப்பெற்ற திராவிட – தமிழ் – பார்ப்பனரல்லாதோர் எனும் சொல்லாடலின் விளைவு, பார்ப்பனர்கள் தங்களை "உண்மையான இந்துக்கள் – இந்தியர்கள்" எனும் புதிய கருத்தாக்கத்திற்கு உகந்தவர்களாக மாற்றிக் கொண்டதை நூலாசிரியர் விளக்குகிறார் (பக்கம்: 31–37) ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியில் மாறிவரும் புதிய சூழலுக்குத் தகுந்தாற் போலத் தங்களை சமூக கலாசார அரசியல் ரீதியாக தகவமைத்துக் கொள்வதில் பார்ப்பனர்கள் காட்டும் முனைப்பு அசாதாரணமானது. பாண்டியனின் விவரணம் இந்த வகையில் தமிழ்ச் சூழலில் முதன்மையானது. ஒரு புதிய சமூகமாகத் தங்களை உருமாற்றிக்கொள்ளும் பார்ப்பனர்கள் சமூக, கலாசாரத் தளங்களில் தங்களது ஆதிக்கத்தை நிலை நாட்ட மேற்கொண்ட யுக்திகள் மலைக்க வைப்பன. இன்று தமிழ் சூழலில் முற்போக்குத் தளத்திலும், லிபரல் சிந்தனைகளிலும், பழமைவாதக் கருத்துக்களிலும், நீதி பரிபாலன முறையிலும், அரசு நிர்வாகத்திலும் பார்ப்பனிய, சிந்தனைகள் நீடித்த வலுவோடு உள்ளன. இதன் பின்புலத்தை பாண்டியன் விளக்கும் முறையும் வழங்கும் தரவுகளுக்கும் மேலும் பல உத்வேகமான ஆய்வுகளுக்கு உதவிடும் என்று நம்பலாம். பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிர் வினையாக காலனிய ஆட்சியில் தோன்றிய இருவரை பாண்டியன் விரிவாக முன்வைக்கிறார். முதலில் அயோத்திதாச பண்டிதர், அடுத்தது மறைமலை அடிகள். பார்ப்பனரல்லாத இந்த இரு அறிஞர்களும் கவனம் பெறத்தக்கவர்களே.

முதலில் அயோத்திதாசரின் எழுத்துக்களைக் கடும் சிரமத்திற்கிடையே தொகுத்தளித்த ஞான.அலோசியஸ் அவர்களுக்குத் தமிழ் கூறும் நல்லுலகு பெரும் கடமைப் பட்டுள்ளது. அயோத்திதாசர் காலனிய ஆட்சியின்போது, தமிழ் – பௌத்த மீட்டுரு வாக்கத்தின் முன்னோடி மிக மோசமான சாதிய ஒடுக்குதலுக்கும் இழிவுக்கும் உள்ளான பறையர் சாதியில் பிறந்தவர். சிறந்த சித்த மருத்துவர். இன்றைய தமிழகத்தின் வட மாவட்டங்களில் பரவி இருக்கும் பறையர்கள் ஆங்கில ஆட்சியின்போது தங்கள் வாழ்வாதாரங்களுக்காக இடம் பெயர்ந்து கர்நாடகாவில் கோலார் தங்க வயல் பகுதியில் வாழ்ந்த காலங்களில் கடும் சுரண்டலுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் "ஒரு பைசா தமிழன்", "பறையன்", "தமிழன்" ஆகிய ஏடுகளை நடத்தியவர். கடந்த பத்தாண்டுகளாகத்தான் அயோத்திதாசர் என்ற அறிஞர் நம்மிடையே வாழ்ந்தார் என்பது நமக்குத் தெரியவந்தது எவ்வளவு பெரிய சோகம் என்பதை விட, இன்னும் எத்தனை பேரை மறந்து போய் இருக்கிறோம் என்று தெரியவில்லை என்று நினைக்கும் போது மனம் பெரும் பாரமாக இருப்பதைத் தவிர்க்க முடிவதில்லை. தாழ்த்தப்பட்டவர்கள், தீண்டத்தகாதவர்கள் என்றெல்லாம் சொல்லில் அடங்காத கொடுமைகளுக்குட்படுத்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலித் மக்கள் தலைவரான அயோத்திதாசர், சாதி இழிவில் இருந்து விடுபட புத்தரின் வழியே சிறந்தது என்று காட்டுகிறார். அண்ணல் அம்பேத்கார் அவர்களுக்கு முன்னரே தமிழரான அயோத்திதாசர், வெளிநாட்டுக் கல்வி ஏதும் இன்றியே தமிழின் தொன்மை என்பது பௌத்தத்தின் நீட்சியாகவே இருக்கமுடியும், இருக்க வேண்டும் என்று வாதிடுவது பெருமிதம் தருவதாகவே உள்ளது. அயோத்திதாசரின் கூற்றுப்படி, பறையர்கள் என்று இழித்துப் பேசப்படும் மக்கள் தான் உண்மையான பிராமணர்கள் இன்று நாம் கொண்டாடும் பல நிகழ்வுகள் புத்த மதத்தின் தொடர்ச்சியே என்கிறார். பொங்கல் – போகிப் பண்டிகை உண்மையில் புத்தர் மெஞ்ஞானம் பெற்றதை குறிப்பதே என்கிறார். புத்தர் துறவைத் தழுவிய நிகழ்வுதான் மகா சிவராத்திரியாகக் கருதப்படுகிறது என்றும் சொல்கிறார். அதோடு எண்ணெய் விளக்கேற்றி தீபாவளிக் கொண்டாட்டத்தை தொடக்கியதே பௌத்த குருமார்கள்தான் என்றும் சொல்கிறார். அதோடு, இன்று பிரபலமாக உள்ள உபநயனம், விரதம், யக்யானம், மடங்கள் போன்றவை அனைத்துமே பௌத்த மத சம்பிரதாயங்களின் நீட்சி என்பது அவரின் வாதம். இன்று இவை எல்லாமே பார்ப்பனர்களின் கையில் இருப்பதால் அவற்றைக் கைவிடத் தேவையில்லை. மாறாக, ஆரிய வருகைக்கு முன்பிருந்த தூய பௌத்த காலத்தின் தன்மைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று கூறுகிறார் (பக்கம். 110). ஆங்கில ஆட்சி வராமல், மொகலாய ஆட்சி தொடர்ந்திருந்தால், இன்றைய பார்ப்பனர்கள் முஸ்லிமாக மதம் மாறத் தயாராகவே இருந்திருப்பார்கள் என்று சாடும் அயோத்திதாசர், இந்த பார்ப்பனர்கள் கருணை அற்றவர்கள் தங்கள் சாதி தர்மத்தை மனு ஸ்மிருதியின்படி கடைப்பிடித்திருந்தால், குடிநீர் எடுக்க ஓர் ஏழைக்கு அனுமதி மறுப்பதை நியாயப்படுத்தி இருக்க முடியும் மாறாக இவர்கள் தங்கள் சாதி வழக்கத்தை மனு தர்மத்தின்படி கூட ஒழுங்காகச் செய்யாதவர்கள் என்கிறார் (பக்கம்: 114).

"மனு தர்மப்படியா நாங்கள் வாழ்கிறோம் அதன் பாதையில் சாதியத்தைக் கடைபிடிப்பவர்கள் நாங்கள் அல்ல.." என்று பல பார்ப்பனர்கள் குறிப்பாக சீர்திருத்தம் பேசும் பார்ப்பனர்கள் பேசுவதற்கும் அயோத்திதாசர் பேசுவதற்கும் எந்த வேறுபாடும் இல்லை என்பது பாண்டியனின் வாதம். அதேபோல் மறைமலை அடிகள் பற்றியும் தனது விமர்சனத்தை முன்வைக்கிறார். சம்ஸ்கிருத – பார்ப்பன எதிர்ப்பினை முக்கியமாக முன்வைத்து அடிகள் கட்டமைக்கும் தமிழர் வரலாறு, சைவமும் தமிழும், வேளாளர் நாகரிகமும் பின்னிப் பிணைந்தவை. படிநிலைகள் கொண்ட சாதியக் கட்டுமானத்தை மறு ஆக்கம் செய்வது போலவே அடிகளாரின் சிந்தனைகள் இருப்பது வெள்ளிடைமலை. வேளாளர்களின் உயர்நிலைக்குக் காரணம், அவர்களது நாகரிகமான வாழ்க்கை முறை, உணவுப் பழக்க வழக்கங்கள், கலாசாரரீதியில் அவர்களது உயர் சிந்தனை என்று சொல்லும் அடிகள், மற்ற சாதியினரின் தாழ்ந்த நிலைக்குக் காரணம் அவர்களது உணவுப் பழக்கம் (அதாவது புலால் உணவு உண்பது), உயிர்ப் பலி கோரும் கடவுளர் வழிபாடு, கலாசாரப் போதாமைகள் என்று பட்டியல் இடுகிறார். இதன் காரணமாகவே அவர்கள் இழிவான தொழிலுக்கு செல்ல நேர்ந்துவிட்டதாக அவர் கருத்துத் தெரிவிக்கிறார் (பக்கம்: 134). எந்த விதத்திலும் பார்ப்பனர்கள் சாதியத்தைத் தூக்கிப் பிடிப்பதைவிட அடிகள் தரும் விளக்கம் வேறுபட்டதல்ல என்று பாண்டியன் கூறுகிறார். ஆனால் இவை இரண்டிலிருந்தும் வேறுபட்ட புதிய முற்போக்கான சொல்லாடலாக நீதிக் கட்சியும், சுயமரியாதை இயக்கமும், தந்தை பெரியாரும் அவரது திராவிடர் இயக்கமும் திகழ்ந்ததாகப் பாண்டியன் முன்மொழிகிறார். ஆரிய – சம்ஸ்கிருத – பார்ப்பன எதிர்ப்பு என்ற நேர்கோட்டுப் படிமத்திற்கு அரசியல் ரீதியான வடிவம் கொடுத்ததோடு, பார்பனரல்லாத பெரும் திரளான விளிம்பு நிலை மக்கள் தங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரப்படுத்திக் கொள்வதற்கு புதிய களம் அமைத்துக் கொடுத்தது இப்புதிய சொல்லாடல்தான் என்பது அவரின் வாதம். ஆவணி அவிட்டம் எனும் நாளன்று தங்களது பூணூலை மாற்றிக் கொள்ளும் பார்ப்பனர்கள் திருச்சியின் புற நகர்ப் பகுதியில் ஆற்றின் படித்துறையை தங்கள் சாதிக்கென்று அறிவித்திருந்த நிலையை, புதிதாக உருவான ஜனநாயக அமைப்புகள் வழியாகவே நிர்மூலமாக்கியது பார்ப்பனர் அல்லாதோர் என்ற சொல்லாடல் பலம் பெற்றதாக மாறிவிட்டதன் வெளிப்பாடு அதை 1920களின் தொடக்கத்திலேயே நீதிக் கட்சியால் செய்ய முடிந்தது என்றால் அதன் பலம் எளிதாக விளங்கும் (பக்கம்: 171). புதிய சொல்லாடலில் பார்ப்பனர்களை பேசுபொருளாக உருவகப்படுத்தி, தந்தை பெரியார் சாதியக் கோட்பாட்டை உயர்த்திப் பிடிக்கும் மனு ஸ்மிருதி, இராமாயணம், பகவத் கீதை போன்ற சமய நூல்களை முற்றாக நிராகரிக்கும் உக்கிரமான பரப்புரையை முன்வைத்தார். அதன் மூலமாக, பார்ப்பனர்களின் ஆதிக்கத்திற்கு அங்கீகாரம் வழங்கிய கீழைத்தேயவியல் கொள்கைகளை அவரும் அவரது இயக்கமும் நிராகரித்த விதம் உரத்த சிந்தனை, புதிய சிந்தனை மட்டுமல்ல. அது குறித்து பாண்டியன் தரும் தரவுகள், மேலும் புதிய ஆய்வுக்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கையினை ஒளிவிடச் செய்கிறது. தாங்கள்தான் உயர்ந்தவர்கள் என்று சூத்திர சாதியினரிடமும் பார்ப்பனர்கள் உருவாக்கி வைத்திருந்த கருத்தொற்றுமையினை உடைத்தெறிந்து, சமூக அசைவியக்கத்திற்கு பல புதிய களங்களை அமைத்துக் கொடுத்தது பெரியார் மற்றும் அவரது இயக்கத்தின் மகத்தான சாதனை என்று பாண்டியன் கூறுகிறார் (பக்கம்: 205–210).

தங்களது ஏடுகள் வழியாக பெரியாரும் அவரது இயக்கத்தினரும் மேற்கொண்ட உணர்ச்சிமயமான பரப்புரை சூத்திரர் என்று சொல்லப்பட்ட பார்ப்பனரல்லாத சாதியினருக்கு புதிய பொது வெளியை உருவாக்கிக் கொடுத்தது பற்றிப் பாண்டியன் கூறும் தர்க்க ரீதியான விளக்கம் மேலும் பல ஆய்வுகளை இத்திசையில் முன்னெடுத்துச் செல்ல செயலூக்கி இருக்கும் என்று நம்பலாம்.

இன்று பொதுவான தமிழ்ச் சூழலில், ஆரம்ப கட்ட வாசிப்புக் கொண்ட நபர் கூட, திராவிட இயக்கம், தமிழின் தொன்மையான வரலாறு, பார்ப்பனர்களின் சாதியக் கட்டமைப்பு பற்றி எவ்விதமான முன்தயாரிப்பும் இல்லாமல் பேசி விவாதிக்ககூடிய நிலை என்பது நமக்கெல்லாம் பெருமை தரத்தக்கது தான். திராவிட இயக்கம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்ச் சமூகத்தோடு ஆற்றிய உரையாடல்கள் இன்று நினைக்கும்போது ஆச்சர்யமாகவும் சற்றே அதிர்ச்சியாகவும் இருக்கிறது. இந்துக் கடவுளர் என்று சொல்லப்பட்ட பெருந்தெய்வ வழிபாட்டு முறையைப் பெரியாரும் அவரது இயக்கமும் விமர்சித்த முறைமை கண்டிப்பாக முற்போக்கான கலகக் குரல்தான். இன்று சாதிரீதியான சுரண்டலுக்குட்படும் சமூகம் மட்டுமே அதன் விடுதலை பற்றி பேசியாக வேண்டும் என்ற நிலை நிச்சயமாக இல்லை. தலித் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் எல்லாம் உடனே ஊடகங்களில் வெளியாகி அதிர்வுகளை ஏற்படுத்துகிறது. இதைச் செய்பவர்கள் எத்தனை பேர் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று கேட்டால், ஆச்சர்யமான பதில்தான் கிட்டும். இன்று தலித் விடுதலை என்பது முற்போக்கான சிந்தனைகளின் தவிர்க்க முடியாத அம்சமாகிவிட்டது. பல வடஇந்திய மாநிலங்களோடு ஒப்பிட்டு பெருமை கொள்வதைவிட, முற்போக்குச் சக்திகளின் கூடாரம் என்று அவ்வப்போது வர்ணிக்கப்படும் கொல்கத்தா நகரின் இடது சாரிகள் உருவாக்கியிருக்கும் நவீன மேற்கு வங்கத்தோடு ஒப்பிட்டால் கூட நாம் பெருமையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில்தான் உள்ளோம். இது கண்டிப்பாக திராவிட இயக்கத்தின் மகத்தான பங்களிப்பு என்று வரலாறு அறுதியிட்டுக் கூறும்.

ஆனால் இன்று பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதோர் என்ற இருபடித்தான எதிர்நிலைக் கோட்பாட்டை மீறிச் செல்லவேண்டிய நிலை உருவாகி இருக்கிறது. ஏனெனில் இது சூத்திர சாதியினர் அரசு வேலை பெறுவதற்காக உருவான இயக்கம் அல்ல. மாறாக சாதி மறுப்பு, பார்ப்பன எதிர்ப்பு வழியாக ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க முனைந்த இயக்கம். பார்ப்பன எதேச்சாதிகாரம், சாதியம், ஆகிய இரு அம்சங்களின் மூலமாக படிநிலைகள் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்கி அதற்காக இந்தியாவின் வரலாற்றை மறுகற்பிதம் செய்து, நவீன அரசியல் அமைப்பிற்குள்ளாக பிற்போக்கு பார்ப்பனியத்தை புதுப்பித்துக் கொள்ள நடந்த முயற்சிக்கு எதிர்வினை திராவிட இயக்கம். அதாவது கலாசாரம் பார்ப்பனிய கோட்பாட்டின் அடிப்படையிலும், பொருளாதாரம், விவசாயம் சார்ந்த நில உடமை கோட்பாட்டின் கீழும் உருவான ஆதிக்க சக்திகள் மேற்கொண்ட முயற்சிகள் இந்திய தேசியமும் தேசம் எனும் உருவகமும் மிக மோசமான சாதிய கொடுமைக்குள் சிக்கிக் கொள்ளும் நிலை உருவானது. இதற்கு எதிராக இந்தியாவெங்கும் பல இயக்கங்கள் தோன்றியதை இன்று நாம் நினைவில் கொள்ளவேண்டும். (Aloysius 1997) அவற்றுள் திராவிடர் கழகம் முதன்மை யானது. தனது இலக்கு வெறும் சாதிய சீர்திருத்தம் மட்டும் அல்ல என்று தீர்மானமாகப் பணியாற்றிய இயக்கம். ஒரு புதிய கலாசாரத்தையும் சமூக மதிப்பீட்டையும் உருவாக்க முனைந்த இயக்கம். பெரியாருக்கு தமிழ் பற்றிய புல்லரிப்போ, மயக்கமோ இல்லை. ஆனால் அவரின் வழித்தோன்றல் என்று சொல்லிக் கொண்ட தி.மு.க.விற்கு சகிக்க முடியாத தமிழ் உயர்வு நவிற்சியில் பேசாமல் வாழ்க்கை இல்லை. பெரியார் தனது பரப்புரை வழியாகக் கட்டியமைக்க உத்தேசித்திருந்த தேசம் எப்படிப்பட்டது என்று கேட்பது அவசியம். அவரைப் பொறுத்தவரையில் இந்திய வரலாறு என்பதே, சாதியம் சார்ந்ததுதான். எனவே புதிய வரலாறு படைப்பது அவசியம். தேசியம் என்பது வெறும் கற்பிதம் அல்ல. அந்த கற்பிதம் எப்படிபட்டது என்று கேட்பதும் அவசியம். ஹிட்லருக்கும் தேசம் பற்றிய கற்பிதம் இருந்தது. அவர் உருவாக்கிய தேசம் பாசிசம் என்று இன்று வரலாறு உறுதியாகக் கூறுகிறது. அப்படி என்றால் தேசம் என்றால் என்ன? தற்காலத் தமிழ் அரசியலின் வேரைத் தேடும் பணியின் விளைவால் உருவான இந்நூல் சுட்டிக்காட்டத் தவறிய அம்சம் இதுதான்.

திராவிட இயக்கம் வெறும் பார்ப்பன எதிர்ப்பு அல்லது பெருந் தெய்வ வழிபாட்டு முறைக்கு எதிரான இயக்கம் என்று சுருக்கிவிட முடியாது. அப்படிச் செய்வது வரலாற்றுப் பிழை. சாதி எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்பு, பெருந்தெய்வ வழிபாட்டுக்கு மறுப்பு என்பதன் வழியாக தனது கலகக் குரல் வழியாக நெடிய தமிழ் வரலாற்றை மறு ஆக்கம் செய்ய இந்த இயக்கம் முனைந்தது. இதுதான் தேசம் எனும் கோட்பாடு உருவாவதன் முதற் படி. தனது சொந்த வரலாற்றை "மாற்றானாக" உருவகப்படுத்துவது (Constructing History as the Other) . அடுத்தபடியாக பொதுவெளியை உருவாக்குவது இதன் மூலமாக கலாசாரத்தை ஜனநாயகப்படுத்துவது இதற்கான தடை என்று கருதும் அத்தனை அம்சங்களையும் இந்த இயக்கம் உடைத்தெறிய முற்பட்டது. பார்ப்பனர் எதிர்ப்பு என்பது சாதிய எதிர்ப்புத்தான் சாதிய எதிர்ப்பு என்பது சாதியே முக்கியம் என்று போற்றும் சனாதன தர்மத்தை நிராகரிப்பதுதான் சனாதன தர்மத்தை நிராகரிப்பது சனாதன தர்மமே உயிர்மூச்சு என்று கொண்டாடும் பெருந்தெய்வ வழிபாட்டை மட்டுமே போற்றும் இந்து மதத்தை நிராகரிப்பதுதான் இப்படிப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மதத்தை நிராகரிப்பது இந்து மதமே இந்தியா என்று கொண்டாடும் இந்திய தேசம் எனும் கோட்பாட்டை நிராகரிப்பதுதான். படிநிலைகள் கொண்ட சாதியம் ஜனநாயக மீறல் என்றால் அது மிகை அல்ல.

ஒரு தேசம் கண்டிப்பாக ஜனநாயக மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டதாக மட்டுமே இருக்கமுடியும். ஜனநாயகம் நிச்சயமாக வலிந்து கருத்தொற்றுமைகளை ஏற்படுத்தாது மாறாக உத்வேகமான விவாதங்களையே உருவாக்கும். தேசம் என்பதும் அப்படித்தான். இதில் அயோத்திதாசருக்கும் இடமுண்டு மறைமலை அடிகளாருக்கும் இடமுண்டு இடது சாரி இயக்கங்களுக்கும் இடமுண்டு. ஒரேயொரு கொள்கை மட்டுமே பிரதானமாக ஒரு நாட்டில் நீடிக்கவேண்டும் என்று விரும்பினால் அது தேசம் அல்ல அப்படிப்பட்ட தேசம் ஒரு போதும் உருவாகாது ஒருவேளை உருவானால் கூட நிலைத்து நிற்காது. ஜனநாயகம் என்பது ஒரு மதிப்பீடுதான். அற உணர்வோடு பிணைந்த ஜனநாயகமே ஒரு தேசத்தின் அடிநாதமாக இருக்கமுடியும். காந்தி அடிகள்மீது கடும் விமர்சனத்தை முன்வைத்த பெரியார், அவர் இறந்த போது இந்த தேசத்திற்கு காந்தி தேசம் என்று பெயர் சூட்ட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தது அதனடிப்படையில் தான். பல கருத்துக்கள், சிந்தனை முறைகள், கொள்கைகள் ஆகியவற்றின் கூட்டுத் தொகைதான் தேசம். இது திடீரென்று உதிப்பது அல்ல. மாறாக நவீன காலத்தின் தவிர்க்க முடியாத பிரக்ஞை தேசியம். அதற்காகத் தோற்றிய இயக்கத்தை பார்ப்பனர் அல்லாதோர் இயக்கம் என்று மீண்டும் மீண்டும் சுருக்குவதும் ஒரு நெடிய கலக பாரம்பரியத்தை ஒற்றைச் சமன்பாட்டுக்குள் அடக்க முயல்வதும் நமது சிந்தனைகளின் போதாமையைக் காட்டுகிறது. அல்லது, தெரிந்துகொண்டே பார்ப்பனர் எதிர்ப்பு இயக்கம் என்று மட்டும் முத்திரை குத்துவதன் மூலம், தமிழ்ச் சூழலில் எழும் அனைத்து இயக்கங்களுமே திராவிட இயக்கத்தை மீறி எதுவும் செய்வதற்கில்லை என்று சொல்வது அபத்தமான வாதம். பெரியார் சர்வரோக நிவாரணி அல்ல. அதை அவரே கூட ஏற்க மாட்டார். அவர் எழுந்ததற்குப் பின்னால், கண்டிப்பாக அயோத்திதாசரின் பங்கும் இருக்கிறது. அயோத்திதாசரின் நவீனத்துவக் கருத்துக்களை பெரியார் மேலும் மேலும் செறிவூட்டுகிறார். அடுத்த தலைமுறை பெரியாரின் நவீனத்துவக் கருத்துக்களை, பெண்ணியம் குறித்த அவரது பார்வையை, சாதியம் பற்றிய நமது புரிதல்களை, தேசம் பற்றிய அவதானிப்புகளை செறிவூட்ட வேண்டும். அதை அவரது இளவல்கள் செய்யத் தவறியதுதான், மிகப்பெரிய ஒரு தேக்க நிலைக்கு இன்றைய தமிழ்ச் சூழல் தள்ளப்பட்டு இருக்கிறது. அயோத்திதாசரைத் தவிர்த்து பெரியார் இல்லை. இவர்கள் இருவரையும் தவிர்த்து இன்றைய மேம்பட்ட தமிழகம் இல்லை. ஆக, ஒருவரை மட்டும் ஏற்று மற்றொருவரை நிராகரிப்பது மிகுந்த அபத்தமான ஒன்று என்றுதான் சொல்ல வேண்டும். எப்படியாவது திராவிடர் கழகத்தை நியாயப்படுத்தியே ஆகவேண்டிய கட்டாயம் இல்லை. அதே போல், தி.மு.க.மட்டுமே பெரியாரின் கொள்கைகளுக்கான ஒரே வாரிசு என்று அறிவிக்க முனைவது போன்ற அபத்தம் வேறு எதுவும் இல்லை. இன்றைய தமிழகத்தின் அன்றாட அரசியல் தேவைகளுக்காக பெரிய தலைவரையும் அவரது இயக்கத்தையும் மிகச் சுருங்கிய பார்ப்பனர் – பார்ப்பனர் அல்லாதோர் இயக்கம் என்று மலினப்படுத்துவது வரலாற்று அநீதி என்று மட்டுமே சொல்லத் தோன்றுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்


Aloysius G.

1997, Nationalism without a Nation in India, New Delhi: Oxford University Press

Cohn Bernard S.

1987, An Anthropologist among the Historians and Other Essays, Delhi: Oxford University Press

Dirks Nicholas

2002, Castes of Mind: Colonialism and the Making of Modern India; Delhi: Permanent Black

Galanter Marc

1984, Competing Equalities, New Delhi: Oxford University Press

Jones Kenneth

1999, Socio Religious Reform Movements in British India, Cambridge University Press.

Muller Max

2002, India: what can it teach us, New Delhi : Rupa & Co

Srinivas,M.N

1966,Social Change in Modern India, Hyderabad: Orient Longman




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலைச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| அதிகார பூர்வத்துவம் | – | Authenticity |
| இசைவாணை | – | Sanction |
| இரட்டை விலக்கு | – | Double exclusion |
| இனக் குழு | – | Ethnic group |
| இனக்குழு/பழங்குடி | – | Tribe |
| உடைமை உரிமையாண்மை | – | Proprietary |
| உற்பத்திப்பிளவு | – | Fission |
| காலம்சார் தன்மை | – | Temporality |
| கூட்டுத்தொழிற் குழு | – | Guild |
| கொத்தடிமை | – | Vassalage |
| கோலம் | – | Pattern |
| சமுதாயம் | – | Community |
| சமூக மூலதனம் | – | Social Capital |
| தப்பியோடல் | – | Desert |
| செயற்பாட்டு நிலை | – | Functional |
| தொடுவாய்க்குடியேற்றங்கள் | – | Straits settlements |
| நூல் இயல் | – | Philological |
| புறமணத்தடை/அகமணம் | – | Endogamous |
| புறமணம் | – | Exogamous |
| பொருளாதார மூலதனம் | – | Financial Capital |
| மங்கல வழக்கு | – | Euphemism |
| மதம்சாராத | – | Secular |
| மரபற்று ஒழிந்த | – | Extinct |
| வகிபாகம் | – | Role |
| முரணணி | – | Paradox |
| வட்டாரம் | – | Ward |
| விடாமுயற்சி | – | Assiduous |
| விடாமுயற்சியான | – | Perseverative |
| வெளித்தெரியாத செயற்பாடு | – | Latent function |
| வெளிப்படையான செயற்பாடு | – | Manifest function |
| படிநிலை | - | Hierarchy |
| முகவர் | - | Agent |
| பொதுவெளி | - | Public Sphere |
| அடித்தட்டு / விளிம்புநிலை | - | Subaltern |
| கீழைத்தேயவியல் கோட்பாடு | - | Orientalism |
| சமூக அசைவியக்கம் | - | Social Mobility |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர் விபரம்

**பிறைசி றேயன் :** தனது கலாநிதிப் பட்டத்தை காவேட் பல்கலைக்கழகத்தில் பெற்ற இவர் 1948இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முதற் சமூகவியற் பேராசிரியராக நியமனம் பெற்றார்.

**மைக்கல் பாங் :** இலண்டன் பல்கலைக்கழகத்தில் தனது முனைவர் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட இவர் இலண்டன் வெளியுறவு அலுவலகத்தில் பணியாற்றியவர்.

**விஜயா இராமசுவாமி :** புதுதில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் வரலாற்றியல் மையத்தில் பேராசிரியராவர். Textiles and weavers in media val South India (2006), Walking Naked : Women, Society, Spirituality in South India (2007), Biography as History (2009), Historical Dictionary of Tamils (2007) என்பன இவரின் முக்கியமான நூல்களாகும்.

**தங்கேஸ் பரம்சோதி :** பேராதனைப் பல்கலைக்கழக சமூகவியற்துறைப் பட்டதாரியான இவர் சாதியின்மையா சாதிமறைப்பா (2009) என்ற கட்டுரைத் தொகுதியின் ஆசிரியர்களுள் ஒருவர்.

இரா. **திருநாவுக்கரசு: புதுதில்லி ஜவகர்லால்நேரு பல்கலைக்கழகத்தில்** கலை முதுமாணி, முது தத்துவமாணிப் பட்டங்களை சமூகவியற் துறையில் பெற்றுக் கொண்ட இவர் மதுரையில் உள்ள மனித உரிமைகள் அமைப்பு ஒன்றில் பணியாற்றுகிறார்.

**சாமிநாதன் விமல்:** ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தில் சிங்கள இலக்கியத்திற் பட்டம்பெற்ற இவர் தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறையிற் சிங்களமொழி விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.

**தா. சனாதனன்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளர். புதுதில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்ட ஆய்வை மேற்கொண்டு வருகிறார்.

**க. அருந்தாகரன்: யாழ்ப்பாணப்** பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியத்திற் பட்டம் பெற்ற இவர் தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறை விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பனுவலின் நோக்கங்கள் :**

பனுவல் சமூக பண்பாட்டு விசாரணைக்கான கூட்டிணைப்பால் வருடந்தோறும் வெளியிடப்படும் கட்டுரைகளின் தொகுதியாகும். சமூக விஞ்ஞான மற்றும் மனிதப் பண்பியல் என்று பொதுவாகக் கருதப்படும் எல்லா வகையான துறைகள் சார்ந்ததாகவும், பண்பாட்டு ரீதியான ஆய்வுகளுக்குக் கூடிய கவனத்தைச் செலுத்தும் ஆராய்ச்சி மற்றும் கோட்பாட்டு ரீதியான கருத்தாடல்களுக்கான வெளியீட்டு ஊடகமாகப் பனுவல் அமையும்.

**பனுவலுக்குக் கட்டுரைகள் சமர்ப்பிக்க வேண்டிய முறை :**

1) சமூக பண்பாட்டு விசாரணைக்கான கூட்டிணைப்பின் அழைப்பின் பெயரிற் கட்டுரையை வழங்க முடியும்.

2) எந்தவொரு நபரும் பனுவலின் நோக்கங்களுக்கும், குறிக்கோள் களுக்கும் பொருந்தி வரக்கூடிய கட்டுரைகளைச் சமர்ப்பிக்க முடியும்.

**கட்டுரை ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள்**

1) பனுவலில் வெறும் விவரண ரீதியான எழுத்துக்கள் உள்ளடக்கப் படுவதில்லை. பனுவல் கட்டுரைகளில் தகவல்கள், சமூகக் கோட்பாடு களுடன் தொடர்புபட்டனவாகவும், பகுப்பாய்வு என்ற அம்சங்களை எடுத்துக்காட்டுவதாகவும் பொதுவாக இருத்தல் வேண்டும்.

2) பனுவலிற்கான கட்டுரைகள் தமிழ்மொழியிலானதாக இருத்தல் வேண்டும். சமூக விஞ்ஞான ஆவணப்படுத்தலின்போது மேற்கோள் காட்டும் குறியீடுகள், மூலாதாரத் தகவல்கள், பிற்குறிப்புகள் ஆகியவற்றுடன் சார்ந்ததாக உள்ள சர்வதேச மட்டத்திலான கட்டுரையாக்கல் முறைகளும், தொழில்நுட்பப் போக்குகளும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். பனுவலிற்குக் கட்டுரையொன்றைச் சமர்ப்பிக்க முன்னர் பிரதான தொகுப்பாசிரியரிடமிருந்து பனுவல் கட்டுரையாக்க ஆலோசனைகள் உள்ளடங்கிய கடிதமொன்றினைப் பெற்றுக்கொள்வது நன்று. இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு Chicago Manual of Style (14வது பதிப்பு) படிக்கவும். கட்டுரையின் எழுத்து Point 11, "NC Thamarai' என்ற எழுத்து வடிவத்தில் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பனுவலிற்கான கட்டுரைகளைத் தெரிவு செய்யும் முறை**

பனுவல் வருடந்தோறும் வெளிவரும் கட்டுரைத் தொகுதியாகும் (refereed journal). பனுவலுக்காக அனுப்பப்படும் எந்தவொரு கட்டுரையும் பனுவல் தொகுப்பாசிரியர்குழுவின் ஒரு அங்கத்தவரினதும், அவர்களால் தெரிவு செய்யப்பட்ட இன்னொருவரினதும் ஆலோசனை களின்படி, திருத்தங்கள் இருப்பின் வழங்கப்பட்ட காலத்தில் அவ்வாறு செய்தல் கட்டுரையாசிரியர்களினது பொறுப்பாகும். கட்டுரையொன்று பனுவலிற் குச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அந்தக் கட்டுரையை வெளியிடப்படுமா, இல்லையா, திருத்தங்கள் செய்ய வேண்டியதாக இருப்பின் அது எவ்வாறானவை என்பது தொடர்பான தகவல்கள் பிரதான தொகுப்பா சிரியரால் உரிய எழுத்தாளர்களிடம் எழுத்து மூலமாக அறிவிக்கப்படும். இந்தச் செயற்பாடு தொடர்பாக மேலதிக விசாரணைகள் தேவை யற்றவை.

**பனுவல் முகவரி :**

பிரதான தொகுப்பாசிரியர்,
பனுவல், சமூக பண்பாட்டு விசாரணைக்கான கூட்டிணைப்பு.
பு/7 இ ஜஸ்வெல் இடம்,
மிறிஹான, நுகேகொடை,
இலங்கை.

**மின்னஞ்சல் :** colomboinst@gmail.com
www.colombointitute.org
Patithaeditor@yahoo.com

பனுவலிற்கான சகல கட்டுரைகளும் கேள்விகளும் மேற்குறிப்பிட்டுள்ள முகவரிகளுக்கு மாத்திரமே அனுப்பப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டை வடிவமைப்பு:**
*தாமோதரம்பிள்ளை சனாதனன்*

**அட்டைப்படப் புகைப்படம்:**
*'முடி திருத்துபவர்' - காலனிய காலப்புகைப்படம்*

**கணினி எழுத்து வடிவமைப்பு, அச்சுப்பதிப்பு:**
*கரிகணன் பிறிண்டேர்ஸ், இல.6அ, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு
நிறுவனம்

இலங்கையிலும் இந்தியாவிலும் திரவ நிலையிலிருந்த இன, மத, சாதி அடையாளங்களைத் திண்மநிலைப் படுத்தி மாறாத யதார்த்தமாக மாற்றியதில் காலனித்துவக் குடிசன மதிப்பீட்டைப் போலவே புகைப் படத்திற்கும் முக்கிய பங்குண்டு. இலங்கையில் புகைப்படம் முதன் முதலில் உள்ளூர்வாசிகளின் பண் பாட்டு உடற் குறிகளையும் தொழில் களையும் பதிவு செய்யவும் ஆவணப்படுத்தவுமே பயன்படுத்தப் பட்டது. காலனித்துவவாதிகள் கண்ட அல்லது காண விரும்பிய முறையில் உள்ளூர் உடல்கள் புகைப் படத்தினூடு பதிவு செய்யப்பட்டன. பின்னர் இந்தக் காலனித்துவ ஆவணங்கள் உள்ளூர் மக்களால் தமது அடையாளங்களாகக் கற்பனை செய்யவும், வடிவமைத்துக் கொள்ள வும் அடிப்படைகளாக மாறின.

சமூக
பண்பாட்டு
விசாரணை
பனுவல்

விலை: 300/=





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org